# வெள்ளிக்கிழமை குத்பாக்கள்



வெளியீடு:
இலங்கை இஸ்லாமிய நட்புறவுச் சங்கம் (இத்திஹாத்)

www.bookshia.com
knowledge enlivens the soul

# خطبات يوم الجمعة

# வெள்ளிக்கிழமை குத்பாக்கள்

# Friday Kuthbas

Published by:
**Sri Lanka Islamic Friendship Association (Ittihad)**
Meeravodai, Oddamavadi,
Sri Lanka

www.bookshia.com
knowledge enlivens the soul

Title: **Friday Kuthbas**
Published by: **Sri Lanka Islamic Friendship Association (Ittihad)**
Meeravodai, Oddamavadi,
Sri Lanka
ittihada@gmail.com
© : Publisher
First Edition: November 2009
Copies: 1000

# உள்ளடக்கம்


01. வழிகாட்டும் அருள்மறை, அல்குர்ஆன்
02. இஸ்லாமிய அழைப்புப் பணி
03. இஸ்லாம் வலியுறுத்தும் சமூக உறவுகள்
04. இஸ்லாமிய ஜிஹாதும் அதன் பண்புகளும்
05. இஸ்லாமிய சகோதரத்துவம்
06. சர்வதேச குத்ஸ் தினம்
07. இஸ்லாமும் சமாதானமும்
08. இஸ்லாமும் உடல் ஆரோக்கியமும்
09. ரமழானின் தத்துவமும் சிறப்பும்
10. மனிதாபிமானத்தை வலியுறுத்தும் இஸ்லாம்
11. ஹஜ்ஜின் ஆன்மீக, இலௌகீகப் பயன்பாடுகள்
12. இஸ்லாமியத் தண்டனைகளும் சமூகப் பாதுகாப்பும்

## குத்பா:01
## வழிகாட்டும் அருள்மறை, அல்குர்ஆன்

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ .

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ، وَاَفْضَلُ الصَّلَاةِ وَاَتَمُّ السَّلَامِ عَلَى اَشْرَفِ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِينَ مُحَمَّدٍ وَآلِهِ الطَّيِّبِينَ الطَّاهِرِينَ وَاَصْحَابِهِ الْمُنْتَجَبِينَ اِلَى قِيَامِ يَوْمِ الدِّيْنِ اَمَّا بَعْدُ فَقَدْ قَالَ اللهُ سُبْحَانَهُ وَتَعَالَى فِى قُرْآنِهِ الْكَرِيمِ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ ، «الم ذٰلِكَ الْكِتَابُ لَارَيْبَ فِيهِ هُدًى لِلْمُتَّقِينَ» صَدَقَ اللهُ الْعَلِيُّ الْعَظِيمُ وَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ ، «خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَهُ» صَدَقَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ .

அகில உலக இரட்சகன், அழியா ஆட்சியதிகாரம் கொண்டவன், எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் போற்றுகின்றேன். அல்ஹம்துலில்லாஹ். உலக மக்களை நேர்வழிப்படுத்த உதய தாரகையாய்த் தோன்றியெழுந்த உத்தம நபிகள் நாயகம் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்ந்த ஆருயிர் குடும்பத்தினர் அருமை ஸஹாபாக்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் என்றென்றும் உண்டாவதாக.

அல்லாஹ்வின் அருளைப் பெறவும், அவன் விதித்த கடமையை நிறைவேற்றவுமென அவனது இல்லத்தில் ஒன்றுகுழுமியிருக்கின்ற அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! அல்லாஹ்வினது ஏவல்களை ஏற்று அவனது

விலக்கல்களைத் தவிர்ந்து எல்லா நிலைகளிலும் தக்வாவுடனான வாழ்வைக் கடைப்பிடித்தொழுகுமாறு ஆரம்பமாக எனக்கும் அப்பால் உங்களுக்கும் நான் வசிய்யத் செய்கின்றேன். ஊசீக்கும் வநப்ஸீ பிதக்வல்லாஹ்.

அன்புக்குரிய அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

உலகின் இரண்டாவது பெரும்பான்மைச் சமூகமாக முஸ்லிம்களாகிய நாம் விளங்குகின்றோம். ஆயினும், எமது வேதமான புனித அல்குர்ஆன், உலகின் முதற்தரமான அறிவியல், ஆன்மீக வேதநூலாக, உலகப் பொதுமறையாக எல்லோராலும் போற்றப்படுவதை நாம் அறிவோம்.

எவ்வித மாற்றங்களுக்கும் திரிபுகளுக்கும் உட்படுத்தப்படாத, மிகப் பரிசுத்தமான உலகின் ஒரேயொரு இறைவேதம் புனித அல்குர்ஆன் ஒன்றுதான். அது, அகில உலக இரட்சகனான அல்லாஹ்வினால், ஜிப்ரீல் (அலை) அவர்களூடாக, எம்பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டதாகும்.

ذَلِكَ الْكِتَابُ لاَ رَيْبَ فِيهِ هُدًى لِلْمُـتَّـقِـينَ .

இது புனித வேதமாகும். இதில் எவ்வித சந்தேகமுமில்லை. இறையச்சமுள்ளவர்களுக்கு இது நேர்வழிகாட்டியாகும் (02:02) என அல்லாஹ் குர்ஆனைப் பற்றிப் பறைசாற்றுகின்றான்.

புனித அல்குர்ஆன் இவ்வுலக மக்களுக்கு நல்லுபதேசம் செய்வதற்காக அருளப்பட்டது. அது அகிலங்கள் அனைத்திற்கும் பொதுவானது. வாழ்க்கையின் எல்லாத் துறைகளுக்கும் வழிகாட்டும் ஆளுமை மிக்கது. மனிதர்களின் சிந்தனைச் செல்வாக்கிற்கு அப்பாற்பட்டது. உலகின் ஒரே இறைவனான எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பேச்சுகளால் உருவானது.

நபி (ஸல்) அவர்களின் இஸ்லாமியப் பிரசாரப் பணிக்கு உறுதுணையாய் இருந்தவற்றுள் பிரதானமானது புனித அல்குர்ஆனாகும். மாபெரும் எதிரிகளைக் கூட இஸ்லாத்தின் முன்னால் மண்டியிட வைத்தது இந்தக் குர்ஆன். நபிகளாரைக் கொல்லப் போகிறேன் என்று உருவிய வாளுடன் கொலைவெறியோடு புறப்பட்ட உமர் கத்தாப் (ரழி) உள்ளிட்ட பல இஸ்லாமிய விரோதிகளையும் இஸ்லாத்தைத் தழுவ வைத்தது இந்தக் குர்ஆன். இஸ்லாத்தை நம்ப மறுத்த காபிர்களுக்கு

இஸ்லாத்தின் யதார்த்தங்களையும் மான்மியங்களையும் தெளிவுபடுத்தியது இந்தக் குர்ஆன். மிகப் பெரும் கவிஞர்கள், மிகப் பெரும் அறிஞர்கள் எல்லாம் தமது பலவீனத்தையும் குறையையும் ஒப்புக் கொண்டு இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்து அதனைப் போற்ற வைத்தது இந்தக் குர்ஆன்

குர்ஆனின் சிறப்புகள் மிகப் பரந்தவை. அவற்றில் சிலவற்றை இங்கு நோக்குவோம்:

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اِقْرَؤُوا الْقُرْآنَ فَاِنَّهُ يَأْتِى يَوْمَ الْقِيَامَةِ شَفِيعًا لِأَصْحَابِهِ (مسلم)

“நீங்கள் குர்ஆனை ஓதுங்கள், நிச்சயமாக அது மறுமை நாளில் அதன் தோழர்களுக்கு பரிந்துரை செய்யக் கூடியதாக இருக்கும்” (ஸஹீஹ் முஸ்லிம்)

مَنْ قَرَأَ حَرْفًا مِنْ كِتَابِ اللهِ فَلَهُ حَسَنَةٌ ، وَالْحَسَنَةُ بِعَشْرِ اَمْثَالِهَا

(ترمذى)

“அல்லாஹ்வின் வேதத்திலிருந்து ஓர் எழுத்தை ஒருவர் ஓதுவாரானால், அவருக்கு ஒரு நன்மை உண்டு. அந்த ஒரு நன்மை பத்து மடங்கு கொண்டதாகும்” (திர்மிதீ)

يُقَالُ لِصَاحِبِ الْقُرْآنِ : اِقْرَأْ وَارْتَقِ وَرَتِّلْ كَمَا كُنْتَ تُرَتِّلُ فِى الدُّنْيَا ،

فَإِنَّ مَنْزِلَتَكَ عِنْدَ آخِرِ آيَةٍ تَقْرَؤُهَا (ابوداود)

“(கியாமத் நாளில்) குர்ஆனை உடையவரிடம், ‘நீர் குர்ஆனை ஓதுவீராக! அந்தஸ்தால் உயருவீராக, உலகில் எவ்வாறு அதனை நிறுத்தி அழகாக (தர்தீலுடன்) ஓதினீரோ அது போன்றே இங்கும் ஓதுவீராக. நீர் ஓதும் கடைசி ஆயத்தின் இடத்தில் உமது தங்குமிடம் உள்ளது’ எனக் கூறப்படும்” என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அபூதாவூத்)

அதாவது எவ்வளவு ஆயத்துகள் ஓதுகிறாரோ அவ்வளவு தூரத்துக்கு அவரது அந்தஸ்துகள் சுவர்க்கத்தில் உயர்த்தப்படும்.

அன்புக்குரிய அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

குர்ஆன் என்பது முஸ்லிம் சமூகத்திற்குக் கிடைத்த மிகப் பெரும் அருட்கொடையாகும். முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாக்கின்ற கௌரவப்படுத்துகின்ற மிகப் பெரும் தூணாக அது விளங்குகின்றது. எனவே முஸ்லிம் சமூகமாகிய நாம், இந்தக் குர்ஆனுக்கு சில கடமைகளை ஆற்ற வேண்டியுள்ளது. குர்ஆன், இம்மையிலும் மறுமையிலும் நன்மைகளை எமக்கு வழங்கக் கூடியதும், எண்ணற்ற ஆபத்துகள் தண்டனைகளிலிருந்து எம்மைப் பாதுகாக்கக் கூடியதுமாகும் என்ற வகையில், குர்ஆனுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளை முறையாகவும் முழுமையாகவும் செய்வது எம் அனைவரதும் பொறுப்பாகும்.

இவ்வகையில், குர்ஆனுக்கு நாம் ஆற்ற வேண்டிய முதலாவது கடமை, குர்ஆனை ஓதுவதும், குர்ஆன் ஓதுவதைச் செவிமடுப்பதுமாகும். குர்ஆனை ஓதுவதால் கிடைக்கும் நன்மைகளும் சிறப்புகளும் எண்ணிட முடியாதவை என ஹதீஸ்கள் தெரிவிக்கின்றன.

எனவே, குர்ஆனை ஓதுவதற்கென ஒவ்வொரு நாளும் நாம் நேரமொதுக்க வேண்டும். பல மணி நேரங்கள் என்றில்லாவிட்டாலும் கூட, நாளாந்தம் சில நிமிடங்களாவது தொடர்ச்சியான குர்ஆன் ஓதலுக்கென நேரமொதுக்குவது எம்மீது கடமையாகும். பணம் சம்பாதிப்பதற்கு, குடும்பங்களுடன் உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பதற்கு, களியாட்டங்களுக்கு, விளையாட்டுகளுக்கு என எமது எவ்வளவோ நேரங்களை ஒதுக்கும் நாம், உம்மைப் படைத்துப் பரிபாலிப்பவனான எல்லாம் வல்ல அல்லாஹ்வின் புனித கலாமாகிய அல்குர்ஆனை ஓதுவதற்கு நேரம் ஒதுக்க முடியாமலிருப்பது உண்மையில் மிகப் பெரும் அநீதியாகும்.

إِنَّ الَّذِينَ يَتْلُونَ كِتَابَ اللهِ وَأَقَامُوا الصَّلَوٰةَ وَأَنفَقُوا مِمَّا رَزَقْنَـٰهُمْ سِرًّا وَعَلَانِيَةً يَرْجُونَ تِجَارَةً لَنْ تَبُورَ.

“அல்லாஹ்வுடைய வேதத்தை ஓதி, தொழுகையையும் நிறைவேற்றி, நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து இரகசியமாகவும் பகிரங்கமாகவும் தர்மம் செய்கின்றர்கள் என்றுமே நஷ்டமடையாத (இலாபம் தரும்) ஒரு வியாபாரத்தை (அல்லாஹ்விடம்) ஆதரவு வைக்கின்றார்கள்” (35:29) என அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

இவ் இறைவாக்கிற்கமைய, அல்லாஹ்வின் வேத்தை எப்போதெல்லாம் ஓதுகின்றோமோ, அப்போதெல்லாம் நாம் அல்லாஹ்வுடன் நேரடித் தொடர்பில் இருக்கின்றோம். அதாவது அல்லாஹ் எம்முடன் பேசிக் கொண்டிருக்கின்றான், எமது செயலை ஆர்வத்துடன் அவதானித்துக் கொண்டிருக்கின்றான் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

அதேவேளை, எம்மில் சிலர் குர்ஆன் ஓதத் தெரியாதவர்களாக இருக்கின்றனர். குர்ஆனை ஓதுங்கள் என நாம் அவர்களுக்குக் கூறினால், எனக்கு ஓதத் தெரியாதே என்பார்கள். ஆனால், இவ்வாறு ஓதத் தெரியாதவர்கள் அதுபற்றி அலட்சியமாக இருக்கக் கூடாது. இலகுவாக குர்ஆனைக் கற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையும் ஆர்வமும் இருக்க வேண்டும். ஜிப்ரீல் (அலை) அவர்கள், முதன் முதலாக நபிகளாரிடம் வந்து ஓதுங்கள் என்று கூறிய போது, நபியவர்களும் எனக்கு ஓதத் தெரியாதே என்றுதான் கூறினார்கள். பின்னர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள். நபியவர்கள் கற்றுக் கொண்டார்கள். அதன் பின் அவர்கள் ஓதிக் காண்பித்தார்கள். இவ்வாறு நபியவர்கள் குர்ஆனை ஓதப் பழகும் போது அவர்களுக்கு வயது நாப்பது. அதற்குப் பிறகு குர்ஆன் வசனங்கள் படிப்படியாக இறங்க இறங்க அவற்றை உடனுக்குடன் அவர்கள் மனனம் செய்து கொண்டார்கள். குர்ஆன் முழுவதையும் மனனமிட்ட உலகின் முதலாவது ஹாபிஸ் நபி (ஸல்) அவர்கள்தான். இத்தனைக்கும் அவர்கள் எழுத வாசிக்கத் தெரியாத ஓர் உம்மியாகத்தான் இருந்தார்கள். எனவே, குர்ஆனை ஓதத் தெரியாது என்ற கவலையை விட்டு விட்டு, அதை ஓதப் பழகுவதற்கு முயற்சிக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.

ஆகவே நாம் குர்ஆனைக் கற்றுக் கொள்ள வேண்டும். கற்றவற்றைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்கவும் வேண்டும். இது மிகச் சிறந்த அமலென இஸ்லாம் வர்ணிக்கின்றது.

خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَهُ

“உங்களில் சிறந்தவர், குர்ஆனைக் கற்று அதனைப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பவரே!” என்பது புஹாரி கிரந்தத்தில் பதியப்பட்டுள்ள நபி (ஸல்) அவர்களின் பொன்மொழியாகும்.

குர்ஆனைக் கற்பதும், கற்றுக் கொடுப்பதும் மத்ரஸாக்களுக்குச் சென்றால்தான் சாத்தியமாகும் என்று நாம் ஒதுங்கி விடக் கூடாது. ஓதத் தெரியாமலிருந்தால், குழந்தைகள், குடும்பத்தவர்கள், நண்பர்கள் போன்றோரை ஓதச் சொல்லி நாம் செவிமடுக்கலாம்.

அல்லது குர்ஆன் பதிவு செய்யப்பட்டுள்ள கெஸட், சீடி போன்றவற்றைப் பயன்படுத்தி ஓதக் கேட்கலாம். இவ்வாறு அடிக்கடி செவிமடுத்து வரும் போது நாளடைவில் அது எமக்கு பழக்கமாகி விடும். மனப்பாடமாகவும் வந்துவிடும். காதால் கேட்டே சினிமாப் பாடல்களைப் பாடும் குழந்தைகள், பெரியோர்கள், பெண்கள் எம்மத்தியில் இல்லையா? அவ்வாறிருக்க, குர்ஆனை ஏன் எம்மால் ஓதப் பழகிக் கொள்ள முடியாது?

அத்தோடு குர்ஆன் ஓதப்படுமானால், அதைக் காது ாழ்த்திக் கேட்பது அவசியமாகும். “அல்குர்ஆன் ஓதப்பட்டால் அதனைக் காதுதாழ்த்திக் கேளுங்கள். அமைதியாக இருங்கள், அவ்வாறு செய்தால் நீங்கள் அருள்புரியப்படுவீர்கள்” (7:204) என்ற அல்லாஹ்வின் கட்டளைக்கமைய, குர்ஆன் ஓதப்படும் போது நாம் எமது வீண் பேச்சுகளையும் தேவையற்ற உரையாடல்களையும் முற்றாக நிறுத்தி, குர்ஆனின் வார்த்தைகளை மரியாதையுடன் செவிமடுக்க வேண்டும். குர்ஆன் ஓதப்படும் போதும், அதான் சொல்லப்படும் போதும் அவற்றை மதிக்காது உலக விவகாரங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது மிகப் பெரும் பாவமாகும்.

எனவே, ஓதத் தெரிந்தவர்கள் குர்ஆனை நாளாந்தம் ஓதி வரவேண்டும். தமக்குத் தெரிந்தவற்றைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்கவும் வேண்டும். தெரியாதவர்கள் அதைக் கற்றுக் கொண்டு தொடர்ந்து ஓதி வர வேண்டும். எல்லாச் சந்தர்ப்பத்திலும் குர்ஆன் ஓதப்படும் போது எமது வீண் பேச்சுகளை நிறுத்தி அதனைச் செவிமடுக்க வேண்டும். இவை எம்மீதுள்ள முக்கிய கடமைகளாகும். ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களை குர்ஆன் ஓதப் பணித்து விட்டு, அவர்கள் ஓதுவதை காது தாழ்த்திக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். நபி (ஸல்) அவர்களும், இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களை குர்ஆன் ஓதப் பணித்து விட்டு, அவர் ஓதுவதை செவிதாழ்த்தி அவதானித்துக் கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்பதாக ஹதீஸ்களில் நாம் அறிகின்றோம்.

குர்ஆன் ஓதப்படும் போது அதனைச் செவிமடுப்பது அவசியம் என்பது போலவே, குர்ஆன் பற்றிய உரைகள், குர்ஆனுக்கான விளக்கங்கள் என்பன வழங்கப்படும் போது அவற்றை அலட்சியப்படுத்துவது போல் எழுந்து செல்வதும் கேலி பேசுவதும் அத்தகைய சபைகளைக் குழப்புவதும் வெறுக்கத்தக்க செயல்களென்பதையும் நாம் கவனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

அன்புக்குரிய அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

குர்ஆனுக்கு நாம் ஆற்ற வேண்டிய மற்றொரு கடமை, அதனைப் பற்றிச் சிந்திப்பதும் அதனை ஆய்வு செய்வதுமாகும். "நீங்கள் குர்ஆனைப் பற்றிச் சிந்திக்க வேண்டாமா? அல்லது உங்களது இருதயங்களில் பூட்டுகள் போடப்பட்டுள்ளனவா?" (47:24) என அல்லாஹ் எம்மைப் பார்த்து கேள்வி எழுப்புகின்றான். எனவே, குர்ஆனை ஓதுவது எத்தகையதொரு கடமையோ, அதேபோன்று அதை ஆராய்ச்சி செய்வதும் அது பற்றிய விளக்கங்களை தேடிப் பெறுவதும் முஸ்லிம்கள் மீது கடமையாகும்.

ஆனால், துரதிஷ்டவசமாக, இக்கடமையை முஸ்லிம்களை விட முஸ்லிம் அல்லாதோரே அதிகம் செய்து கொண்டிருக்கின்றனர். மாற்று மதத்தைச் சேர்ந்த பலர், குர்ஆனை அறிந்து, ஆராய்ந்து இஸ்லாத்தை உண்மையெனக் கண்டு இஸ்லாத்தைத் தழுவியுள்ளனர். ஆனால், எமது முஸ்லிம்களில் சிலர் இன்னும் குர்ஆனை ஓதவும் தெரியாமல் இருப்பதும், தமது கொள்கைகள், இயக்கங்கள் என்பவற்றின் வெற்றிக்கு மட்டும் அதைப் பயன்படுத்தி வருவதும் கவலைப்பட வேண்டிய விடயங்களாகும்.

புனித அல்குர்ஆன் மிகப் பெரும் ஓர் அறிவுக் கருவூலமாகும். அள்ள அள்ளக் குறையாத ஞானக் களஞ்சியமாகும்.

قُلْ لَوْكَانَ الْبَحْرُ مِدَادًا لِكَلِمٰتِ رَبِّى لَنَفِدَ الْبَحْرُ قَبْلَ اَنْ تَنْفَدَ كَلِمٰتُ رَبِّى وَلَوْ جِئْنَا بِمِثْلِهِ مَدَدًا.

"(நபியே!) நீர் கூறும். என் இரட்சகனின் வாக்கியங்களுக்கு (அதைப் பற்றி எழுதுவதற்கு) கடல் யாவும் மையாக இருந்தாலும், என் இரட்சகனின் வாக்கியங்கள் (எழுதி) முடிவதற்கு முன்னதாகவே, கடல் நீர் முடிந்துவிடும். அது போன்ற (இன்னொரு கடல்) ஒன்றை நாம் உதவிக்குக் கொண்டு வந்த போதிலும் சரியே" (18:109) என்று அல்லாஹ் குறிப்பிடுகின்றான். அத்தகைய மாபெரும் பொக்கிஷம் அமானிதமாக எமக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, அந்த அமானிதத்தைப் பேணிப் பாதுகாப்பதும், அதற்குரிய கடமைகளை ஒழுங்குற நிறைவேற்றுவதும் கட்டாயமானது என்ற வகையில், அல்குர்ஆனை ஓதுவதும், அதைப் புரிந்து கொள்ள முயற்சிப்பதும், அதன் கருத்துக்களை ஆராய்ச்சி செய்வதும் எமது கடமைகளாகும்.

அன்பார்ந்த சகோதரர்களே! அல்லாஹ்வின் நல்லடியார்களே! குர்ஆனுக்கு நாம் ஆற்ற வேண்டிய மற்றொரு கடமை அதன் கட்டளைகளை விளங்கிப் பின்பற்றுவதாகும். உலக மக்கள் யாவருக்கும் ஒரு நல்லுபதேசமாகவும், இறைவனை அஞ்சக் கூடியவர்களுக்கு நேர்வழிகாட்டியாகவும் புனித அல்குர்ஆன் விளங்குகின்றது. இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமும் புனித அல்குர்ஆனாகும். எனவே, அல்குர்ஆனைப் பின்பற்றுவதன் மூலமாகத்தான் ஒரு முஸ்லிமின் சமய வாழ்வு பரிபூரணத்துவம் பெற முடியும். குர்ஆனின் கட்டளைகளை அலட்சியம் செய்கின்ற அல்லது புறந்தள்ளுகின்ற எல்லா செயற்பாடுகளும் இஸ்லாமிய விரோதச் செயல்களாகவே அமையும். இவ்வகையில், மனித சமுதாயம் அல்லாஹ்வின் அன்பைப் பெற்று, அவனுக்கு விருப்பமான வாழ்க்கையை வாழ்ந்து, அவனுடன் தமது உறவை வலுப்படுத்திக் கொள்வதற்கான பிரதான கருவியாக புனித அல்குர்ஆன் விளங்குகின்றது.

فَمَنِ اتَّبَعَ هُدَايَ فَلَا يَضِلُّ وَلَا يَشْقَى

“ஆகவே, எவர் என்னுடைய நேர்வழியைப் பின்பற்றுகிறாரோ, அவர் வழிதவறவும் மாட்டார்: நஷ்டமடையவும் மாட்டார்” (20:123) என்ற அல்குர்ஆன் வசனத்தை ஒருமுறை ஓதிக் காண்பித்த நபி (ஸல்) அவர்கள், “அல்லாஹ்வின் வேதத்தைப் பின்பற்றுபவர் இம்மையிலும் வழிகெட மாட்டார்: மறுமையிலும் நஷ்டமடைய மாட்டார்” என விளக்கிக் கூறினார்கள். (மிஷ்காத்)

எனவே, புனித அல்குர்ஆனை ஓதுவது, பார்ப்பது, தொடுவது, அதைப் பற்றிச் சிந்திப்பது, ஆராய்ச்சி செய்வது எல்லாமே அளவற்ற நன்மைகளைத் தருகின்ற நற்செயல்களாக இருக்கின்ற அதேவேளை, குர்ஆனின் கட்டளைகளைப் பின்பற்றுவதே முஸ்லிம் சமூகத்தின் பிரதானமானதும் முக்கியத்துவம் மிக்கதுமான கடமையாக அமைகின்றது.

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் மார்க்கம் பற்றிய அறிவு இல்லாமல் போகும் ஒரு காலகட்டத்தை எச்சரிக்கை செய்தார்கள். அப்போது அங்கிருந்த ஸியாத் பின் லபீத் (ரழி) எனும் ஸஹாபி, “அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் அல்குர்ஆனை ஓதிக் கொண்டிருக்கின்றோம். எங்கள் பிள்ளைகளுக்கும் ஓதிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு ஓதிக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். இவ்வாறிருக்க அல்லாஹ்வின் மார்க்கம் பற்றி அறிவு எப்படி

எம்மத்தியில் இல்லாமல் போகும்?" என்று கேட்டார். அதற்குப் பதிலளித்த நபி (ஸல்) அவர்கள், "யூதர்களும் கிறிஸ்தவர்களும் தவ்ராத்தையும் இன்ஜீலையும் எத்தனையோ முறை ஓதுகின்றார்கள் என்பதையும், பிறகு அவற்றின் அறிவுரைகளின் படி சிறிதளவும் அவர்கள் செயற்படுவதில்லை என்பதையும் நீர் பார்க்கவில்லையா?" என்று வினவினார்கள். (இப்னு மாஜா)

எனவே, அல்குர்ஆனின் கட்டளைகளை முழுமையாக விளங்கிப் பின்பற்றுவதும் நடைமுறைப்படுத்துவதுமே அல்குர்ஆன் மீதுள்ள எமது கடமையைப் பூரணப்படுத்தும் விடயங்களாகும். அதைவிடுத்து, குர்ஆனை ஓதுவது, அல்லது அதனை எழுதி உடம்பில் மாட்டிக் கொள்வது, அல்லது கரைத்துக் குடிப்பது என்பவற்றின் மூலமாக மட்டும் குர்ஆனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமையைப் பூரணப்படுத்தியவர்களாக நாம் ஆக முடியாது. அதனை எமது வாழ்வில் முழுமையாகப் பின்பற்ற வேண்டும். அது ஏவியவற்றை முறையாக நிறைவேற்ற வேண்டும். அது விலக்கியவற்றை முழுமையாகத் தவிர்ந்து நடக்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்குர்ஆனில் ஐந்து விஷயங்கள் இருக்கின்றன. 1. ஹலால். 2. ஹராம். 3. தெளிவான சட்டங்கள் (முஹ்கமாத்). 4. மறைவான விஷயங்கள் (முதஷாபிஹாதம்). 5. உதாரணங்கள் அல்லது வரலாறுகள். இவற்றில் நீங்கள் ஹலாலை ஹலாலாகக் கருதுங்கள். ஹராமை ஹராமாகக் கருதுங்கள். தெளிவான சட்டங்களின்படி செயற்படுங்கள். மறைவான விஷயங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். (அவற்றைத் துருவி ஆராயாதீர்கள்) முந்திய வரலாறுகளிலிருந்து படிப்பினை பெறுங்கள் என்று நபியவர்கள் கூறினார்கள் (மிஷ்காத்)

எனவே, அல்குர்ஆனை ஓதுபவர், வெறுமனே ஓதுவதன் மூலம் மட்டும் தனது கடமை முடிந்து விட்டது என்று எண்ணி விடக் கூடாது. அதன் சட்டதிட்டங்களை உணர்ந்து விளங்கிப் பின்பற்ற வேண்டும். உதாரணமாக, அல்குர்ஆன் கூறுகின்றது:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا إِنَّمَا الْخَمْرُ وَالْمَيْسِرُ وَالْأَنْصَابُ وَالْأَزْلَامُ رِجْسٌ مِنْ عَمَلِ الشَّيْطَانِ فَاجْتَنِبُوهُ لَعَلَّكُمْ تُفْلِحُونَ .

"விசுவாசங் கொண்டோரே! மதுவும், சூதாட்டமும், சிலைகளும், குறிபார்க்கும் அம்புகளும் ஷைத்தானின் செயல்களிலுள்ள அருவருக்கத்தக்கவையாகும். ஆகவே, இவைகளைத் தவிர்த்துக்

கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்” (05:90) என்று கூறுகின்றது.

ஒருவர் இந்த வசனம் இடம்பெறும் குர்ஆனை ஓதிக் கொண்டு, மதுபானம் அருந்திக் கொண்டிருப்பாராக இருந்தால், அவர் குர்ஆன் ஓதுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

விபசாரம் புரிய வேண்டாம் என்று அல்குர்ஆன் விலக்கியுள்ளது. பொய் கூற வேண்டாம் என்று கூறியுள்ளது. கொலை செய்ய வேண்டாம் என்று கூறியுள்ளது. புறம் கூற வேண்டாம் என்று கூறியுள்ளது. வீண் விரயம் செய்ய வேண்டாம் என்று கூறியுள்ளது. இவற்றையெல்லாம் செய்து கொண்டே ஒருவர் குர்ஆனையும் ஓதிக் கொண்டிருப்பாராக இருந்தால், அவ்வாறு ஓதுவதில் எவ்விதப் பயனும் அவருக்கில்லை.

அவ்வாறே, தொழுகையைத் தவறாது தொழ வேண்டும் என்று அல்குர்ஆன் வலியுறுத்துகின்றது. ஸக்காத் கொடுக்க வேண்டும் என்றும், நோன்பு நோற்க வேண்டும் என்றும், ஹஜ் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. ஸதகா செய்யும்படியாகத் தூண்டுகின்றது. இவை எவற்றையும் ஒருவர் செய்வதில்லை. ஆனால் குர்ஆனை மட்டும் ஓதிக் கொண்டிருக்கின்றார் என்றால் அதிலும் எவ்விதப் பயனும் இல்லை.

எனவே, இஸ்லாம் என்பது நடைமுறைக்குந்த மார்க்கம். அதன் மூலாதாரமான அல்குர்ஆன் வாழ்க்கைக்குத் தேவையான எல்லா விடயங்களையும் வழிகாட்டுகின்றது. அது மனித சமுதாயத்தின் மீது உண்மையான கரிசனையை வெளிப்படுத்தியிருக்கின்றது. மனித நேயத்தையும் மனிதாபிமானத்தையும் அது அதிகம் வலியுறுத்துகின்றது. வீணாக யாரையும் கொலை செய்ய வேண்டுமென்று அது பணிக்கவில்லை. இன்று இஸ்லாத்தின் பெயரால் இடம்பெறுகின்ற கொலைகளுக்கும் வன்முறைகளுக்கும் இஸ்லாம் பொறுப்பாக முடியாது. ஜிஹாத் என்பதைத் தவறாக விளங்கிக் கொண்டு, சில முஸ்லிம்கள், பிற மதத்தவரைக் கொலை செய்யவும், பிரச்சினையில் சம்பந்தப்படாத அப்பாவிப் பொதுமக்களைக் கொலை செய்யவும் முனைகின்றனர். இவர்களே உலகளவில் பெரும் அவப்பெயரை இஸ்லாத்திற்குத் தேடித் தந்து கொண்டிருக்கின்றனர். அப்பாவிகளைக் கடத்திச் சென்று கப்பம் கோருவதோ, அவர்களைப் பணயம் வைத்து, அல்லது கொலை செய்து தமது காரியத்தை சாதித்துக் கொள்வதையோ இஸ்லாம் அனுமதிக்கவில்லை. முஸ்லிம்களது உயிர், உடமை, மானம் என்பவற்றிற்கு அபகீர்த்தியும் அழிவும் ஏற்படுத்தப்படுகின்ற போது, அவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அன்றி,

நாடுபிடிப்புகள், நகர அபிவிருத்திகள், சொத்து சேர்ப்புகள் போன்ற வேறெந்த தேவைகளுக்கும் இஸ்லாம் போர் செய்யப் பணிக்கவில்லை. ஆனால், சின்னச்சின்ன விடயங்களுக்கெல்லாம் ஆயுதங்களைத் தூக்கவும், அழிவை ஏற்படுத்தவும் முஸ்லிம்களில் சிலர் தயாராகி விட்டதனால், எம்மத்தியில் குழப்பமும் நாசமும் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பிரச்சினை என்று வருகின்ற போது, அதனைத் தவிர்ப்பதற்காக அல்லது அதைத் தீர்ப்பதற்காக விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்ளுங்கள் என்று இஸ்லாம் எங்களுக்கு அறிவுரை பகர்ந்துள்ளது. எனவே, இஸ்லாம் புனிதமான நேர்மையான ஒரு மார்க்கம். ஜிஹாத் என்பதைச் சரியாக விளங்கிக் கொள்ளாத சிலரால் அது இன்று மாசுபடுத்தப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கைகளில் ஆயுதங்களை ஏந்திக் கொண்டு வன்முறைகளில் ஈடுபடுவோர் குர்ஆனை ஓதிக் கொண்டிருக்கின்றார்கள் என்றால் அது அவர்களுக்கு எவ்விதப் பயனும் அளிக்கவில்லை என்றே அர்த்தமாகும்.

எனவே, அல்குர்ஆனை ஓதுவது எவ்வளவு முக்கியமோ, அதை விட முக்கியமானது அதன் கட்டளைகளை அமுல்படுத்துவதாகும்.

அல்குர்ஆன் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வேதமாகும். அதைப் பயன்படுத்தி உலகின் எதனையும் நாம் வெற்றி கொள்ளலாம். அதனிடம் எவ்வளவு நன்மையைக் கேட்டாலும் அது எமக்குத் தரும். ஒவ்வொருவரும் தத்தமது அறிவு, கொள்ளளவு என்பவற்றிற்கேற்பவே குர்ஆனிடம் தேவைகளை முன்வைக்கின்றனர்.

உதாரணமாக, ஜின்களையும் பூதங்களையும் விரட்டுவதற்கு அல்குர்ஆனைப் பயன்படுத்தினால் அது அப்பயனையே தரும். நோய்க்கு வைத்தியம் செய்வதற்கு, அல்லது ஏதாவது வழக்கொன்றில் வெல்வதற்கு, அல்லது வேலை கிடைப்பதற்கு குர்ஆனைப் பயன்படுத்தினால் அப்பயனையே அது தரும். இவ் அற்ப விஷயங்களுக்கு மாற்றமாக, கண்ணியத்தையும் அறிவு விருத்தியையும் உலகின் தலைமைத்துவத்தையும், ஈருல வெற்றியையும் பெற்றுக் கொள்ள குர்ஆனை நாம் அணுகினால் அவற்றையும் நாம் அடைந்து கொள்ளலாம்.

உண்மையில், குர்ஆன் என்பது சமுத்திரத்துக்கு ஒப்பானது. அந்த சமுத்திரத்திலும் ஓரிரு துளிகளையே நாம் வேண்டி நிற்கின்றோம். ஆனால், அதுவோ முழுச் சமுத்திரத்தையும் எமக்கு வழங்கத்

தயாராக இருக்கின்றது. அதைத் தேடிப் பெறுவது எமது பொறுப்பாகும்.

எனவே, அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! அல்குர்ஆனைக் கற்று, ஓதி, பிறருக்கும் கற்றுக் கொடுப்பதுடன், அதன் கருத்துக்களை விளங்கவும் கட்டளைகளைப் பின்பற்றவும் முயற்சிப்போமாக. எல்லாம் வல்ல அல்லாஹ் எம்மனைவருக்கும் நல்லருள் புரிவானாக. ஆமீன்

## குத்பா:02
## இஸ்லாமிய அழைப்புப் பணி

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ .

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ، وَاَفْضَلُ الصَّلاَةِ وَاَتَمُّ السَّلاَمِ عَلىَ اَشْرَفِ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِينَ مُحَمَّدٍ وَآلِهِ الطَّيِّبِينَ الطَّاهِرِينَ وَاَصْحَابِهِ الْمُنْتَجَبِينَ اِلىَ قِيَامِ يَوْمِ الدِّيْنِ اَمَّا بَعْدُ فَقَدْ قَالَ اللهُ سُبْحَانَهُ وَتَعَالَى فِى قُرْآنِهِ الْكَرِيمِ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ ، « يَاأَيُّهَا الَّذِينَ آمَنُو لِمَ تَقُولُونَ مَالاَ تَفْعَلُونَ . كَبُرَ مَقْتًا عِنْدَ اللهِ اَنْ تَقُولُو مَالاَ تَفْعَلُونَ » صَدَقَ اللهُ الْعَلِيُّ الْعَظِيمُ وَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ ، « مَنْ سَلِمَ الْمُسْلِمُونَ مِنْ لِسَانِهِ وَيَدِهِ » صَدَقَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ .

*எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ். இறுதித் தூதர், அகில உலகுக்கும் அருட்கொடை, அண்ணலெம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்ந்த ஆருயிர் குடும்பத்தினர், அருமை ஸஹாபாக்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் என்றென்றும் உண்டாவதாக.*

*அல்லாஹ் விதித்துள்ள கடமையை நிறைவேற்று முகமாக அவனில்லத்தில் வந்தமர்ந்திருக்கின்ற அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! அல்லாஹ் ஏவியவற்றை ஏற்று விலக்கியவற்றைத் தவிர்ந்து எல்லா நிலைகளிலும் அவனைப் பயந்து தக்வாவோடு வாழுமாறு*

ஆரம்பமாக எனக்கும் பின்னர் உங்களுக்கும் நான் நல்லுபதேசம் செய்கின்றேன்.

அன்புக்குரிய சகோதரர்களே! பெரியோர்களே!

உலகில் அல்லாஹ்வினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே மார்க்கம் இஸ்லாம்தான். முழுமையான வாழ்க்கைத் திட்டம் என அல்குர்ஆன் புகழ்ந்துரைக்கும் ஒரே மார்க்கமும் இஸ்லாம்தான். மனித சிந்தனைகளின் எவ்விதக் கலப்புமற்ற பரிசுத்தமான, தெய்வீகமான ஒரே மார்க்கமும் இஸ்லாம்தான். ஆனால், துரதிஷ்டவசமாக இம்மார்க்கத்தைப் பற்றிய அறியாமையானது அதனைப் பிழையான ஒரு சமயமாக உலகிற்குக் காண்பித்துக் கொண்டிருக்கின்றது. இத்தகைய அறியாமையானது முஸ்லிம் சமூகத்திற்கு வெளியே மட்டுமன்றி, அதன் உள்ளேயும் மலிந்து காணப்படுவதுதான் மிகக் கவலையானதாகும். எனவே, இவ் அறியாமையைக் களைந்து, இஸ்லாத்தின் மகிமையையும் அல்லாஹ்வின் புகழையும் உலகில் மேலோங்கச் செய்வதற்கு நாம் ஆற்ற வேண்டி பணியே, இஸ்லாமிய அழைப்புப் பணி எனப்படுகின்ற இஸ்லாமிய தாவா ஆகும்.

இஸ்லாமிய அழைப்புப் பணி என்றால் என்ன என்பதை முதலில் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது இஸ்லாம் எதனை ஏவுகின்றது? எதனை விலக்குகின்றது? எதனைத் தன் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றது? என்பன போன்ற இஸ்லாத்தின் யதார்த்தங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்: அத்தகைய தூய இஸ்லாத்தின் பால் இணைந்து கொள்ளுமாறு மக்களை அழைக்க வேண்டும். இஸ்லாத்தின் பெயரால் மேற்கொள்ளப்படுகின்ற, அல்லது இஸ்லாத்தின் கட்டளைகளைப் புறக்கணித்து மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து அநாச்சாரங்களையும் பாவங்களையும் கொடுமைகளையும் இல்லாதொழிக்கப் பாடுபட வேண்டும். இஸ்லாம் ஒன்றே உண்மையான மார்க்கம் என்ற யதார்த்தத்தை உலகில் நிறுவ வேண்டும். இத்தகைய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் உண்மையான உழைப்பே இஸ்லாமிய அழைப்புப் பணியாகும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! நாங்கள் அனைவரும் முஸ்லிம்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பிறப்பால் நாம் அனைவரும் முஸ்லிம்கள். இந்த இஸ்லாத்தை அடைவதற்காக நாம் எத்தகையதொரு முயற்சியையும் எடுத்ததில்லை. உண்மையில், இஸ்லாம் எனும் இம்மார்க்கம் இறைவனருளால் இலவசமாக எமக்குக்

கிடைத்துள்ளது. எனவே பரம்பரை வழியாக எமக்குக் கிடைத்துள்ள இந்த இஸ்லாத்தைப் பாதுகாப்பதும், அதன் தூய்மையைப் பேணுவதும் மற்ற மக்களிடமும் அதனை எடுத்துச் செல்வதும் எம்மீதுள்ள முக்கிய கடமையாகும்.

إِنِّى جَاعِلٌ فِى ٱلْأَرْضِ خَلِيْفَةً

"நிச்சயமாக நான் பூமியில் எனது பிரதிநிதியை உருவாக்கப் போகின்றேன்" (02:30) எனும் அல்குர்ஆன் வசனத்தின் பிரகாரம், மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாவான். எனவே, தனது பிரதிநிதித்துவப் பணியை முழுமையாக நிறைவேற்ற வேண்டியது அவனது பொறுப்பாக இருக்கின்றது. அத்தகைய பொறுப்பின் ஓர் அங்கமாக இஸ்லாமிய அழைப்புப் பணி அமைந்துள்ளது.

அன்புக்குரிய சகோதரர்களே! பெரியோர்களே!

இஸ்லாமிய அழைப்புப் பணியென்பது மிக உன்னதமான ஒரு பணியாகும். அத்தகைய பணியில் ஈடுபடக் கூடியவர்கள் அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்கு முற்றிலும் தகுதியானவர்கள். இது ஒரு பொதுவான பணி என்ற வகையில், இதனை தனியாகவோ அல்லது கூட்டாகவோ நிறைவேற்ற முடியும். எமது நாட்டைப் பொறுத்தவரையில், இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடக் கூடிய பல நிறுவனங்களும் இயக்கங்களும் இருக்கின்றன. எல்லா இயக்கங்களும் இப்பணியை நோக்காகக் கொண்டே உருவாக்கப்படுகின்றன. இயக்கங்களின் செயற்பாடுகளும் வழிமுறைகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தாலும் கூட, எல்லா இயக்கங்களினதும் நோக்கம் அல்லது குறிக்கோள் ஒன்றுதான். அது இஸ்லாத்தைத் தூய்மைப்படுத்துவதும் மேலோங்கச் செய்வதுமாகும். மனிதர்களை தனிநபர்களாக அல்லது குழுக்களாகச் சந்தித்து இஸ்லாத்தைப் பற்றி எடுத்தியம்புவது, நன்மையை ஏவி தீமையைத் தடுப்பது, இஸ்லாமிய விளக்க உரைகள் நிகழ்த்துவது, இஸ்லாமிய நூல்கள் எழுதுவது, இஸ்லாமிய சஞ்சிகைகள் வெளியிடுவது, வானொலி, தொலைக்காட்சி, கணினி, இன்டர்நெட் போன்ற இலத்திரனியல் ஊடகங்களினூடாக இஸ்லாமிய நிகழ்ச்சிகளை நடத்துவது போன்ற பல்வேறு வழிமுறைகளை இஸ்லாமிய அழைப்புப் பணிக்காக நாம் தெரிவு செய்ய முடியும்.

இஸ்லாமிய அழைப்புப் பணியென்பது ஒவ்வொரு முஸ்லிமின் தோள் மீதும் சுமத்தப்பட்டுள்ள பாரிய பிரத்தியேகப் பொறுப்பாகும். இது எனக்குத் தேவையில்லையென்றோ, எனக்கு

அவசியமில்லையென்றோ யாரும் கூறவும் முடியாது, அப்பொறுப்பிலிருந்து ஒதுங்கி விடவும் முடியாது. ஒவ்வொரு முஸ்லிமும் எவ்வழிமுறை தனக்குச் சாத்தியமாக இருக்கிறதோ, அவ்வழிமுறையைப் பின்பற்றி தனது இஸ்லாமிய அழைப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும். தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் எனும் பிரதான கடமைகளை மேற்கொள்வதுடன், இப்பணியையும் ஒரு முஸ்லிம் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில், "உங்களுக்கு முன் வாழ்ந்த சமூகங்கள் அழிந்து போனது, இத்தகைய இஸ்லாமிய அழைப்புப் பணியை மேற்கொள்ளாத சுயநலப் போக்கின் காரணத்தினாலேயே" என நபி (ஸல்) அவர்கள் எமக்கு எச்சரித்துள்ளார்கள்.

எனவே, இஸ்லாமிய அழைப்புப் பணி எம் ஒவ்வொருவர் மீதுமுள்ள கடமை என்பதை நாம் உணர வேண்டும். "உங்களில் ஒருவர் தீய செயலைக் கண்டால் தனது கைகளினால் தடுக்கவும், அல்லது நாவினால் தடுக்கவும், அல்லது அது தீங்கானது என தன் எண்ணத்தில் இருத்திக் கொள்ளவும்" என நபியவர்கள் எமக்கு கட்டளையிட்டுள்ளார்கள். இதன்படி தீய செயல்களைத் தடுப்பதும், நற்செயல்களை ஊக்குவிப்பதும் எமது கடமையாகின்றது.

எமது நாட்டில், பல இஸ்லாமிய இயக்கங்கள் இருக்கின்றன. அவற்றினது எண்ணிக்கையின் அடிப்படையில் பார்க்கின்ற போது, நாட்டில் ஏற்பட்டு வரும் இஸ்லாமிய மறுமலர்ச்சி அல்லது எழுச்சி என்பது போதுமானதாக இல்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இதற்கான பின்னணிக் காரணங்கள் பற்றிச் சிந்திப்பதற்கு முன், இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடுவோர் எத்தகைய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பது பற்றி நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

அன்புக்குரிய சகோதரர்களே! பெரியோர்களே!

لَقَدْ كَانَ لَكُمْ فِى رَسُولِ اللهِ اُسْوَةٌ حَسَنَةٌ

"நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிலே உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது" (33:21) என்ற அல்குர்ஆன் வசனம், எமது எல்லா முயற்சிகளிலும் நபியவர்களையே நமக்கான முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. இதன்படி, இஸ்லாமிய அழைப்புப் பணியிலும் நபி (ஸல்) அவர்களையே நாம் எமது முன்மாதிரியாகக் கொள்ள வேண்டியுள்ளது.

இஸ்லாமிய அழைப்புப் பணியைப் பொறுத்த வரையில், நபி (ஸல்) அவர்கள் மிகச் சிறந்த முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அவர்கள் முஸ்லிம் சமூகத்தை மட்டுமன்றி இஸ்லாமிய அழைப்புப் பணியையும் தலைமை தாங்கி வழிநடத்தினார்கள். இஸ்லாமிய பிரசாரத்துக்காக, இஸ்லாமிய அழைப்புக்காக அவர்கள் எதிர்கொண்ட சவால்களும் வெளிப்படுத்திய பொறுமையும் மிகப் பாரியவையாகும்: வர்ணிப்புகளுக்கு அப்பாற்பட்டவையாகும்.

முதன் முதலாக வஹி இறங்கியதன் பிற்பாடு, அவ்வஹியை மக்களுக்குத் தெரியப்படுத்துமாறு அல்லாஹ் அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

يَاأَيُّهَا الْمُدَّثِّرُ ، قُمْ فَأَنْذِرْ

"போர்த்திக் கொண்டிருப்பவரே! எழுந்து (மக்களை) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக" (74:1,2) என்று அல்லாஹ் அவர்களைப் பணித்தான். இதுவே இஸ்லாமிய பிரசாரத்தை கடமையாக்கிய முதல் வசனமாகும். அதன்பிறகு, நபி (ஸல்) அவர்கள் தமது பணியை ஆரம்பித்தார்கள். தமது வபாத் வரைக்குமான சுமார் 23 வருடங்களும் அவர்கள் இப்பணியையே மேற்கொண்டார்கள். நபியவர்கள் வபாத்தாகும் போது ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் இருந்தார்கள். அதன்பின், படிப்படியாக இஸ்லாம் பரவத் தொடங்கியது. மத்திய கிழக்கிலிருந்து முழு ஆசியாவுக்கும் சென்றது. அதன் பின் ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா போன்ற கண்டங்களுக்கும் வியாபித்தது. உலகின் மிகப் பெரும் சாம்ராஜ்யமாக இஸ்லாமிய அரசு வளர்ச்சியடைந்தது. இவையனைத்திற்கும் பிரதான காரணம் என்ன? நபி(ஸல்) அவர்கள் தொடக்கி வைத்த இஸ்லாமிய அழைப்புப் பணி எனும் அந்த ஆரம்ப அடித்தளமே இஸ்லாத்தின் இப்பெரும் வளர்ச்சிக்குக் காரணம் எனில் மிகையன்று.

அறியாமை, பழிக்குப்பழி, பொறாமை, குரோதம், பெருமை, முன்கோபம் போன்ற கொடுமையான பண்புகளுடனும், விபசாரம், மது, கொலை, கொள்ளை போன்ற பெரும் பாவச் செயல்களுடனும் பின்னிப் பிணைந்து காணப்பட்ட ஒரு மாபெரும் பிற்போக்கான சமூகத்தை, நபி (ஸல்) அவர்கள் அறிவு, அறம், விட்டுக்கொடுப்பு, பொறுமை, மன்னிப்பு, பணிவு போன்ற நற்பண்புகளும், எத்தகைய பாவச் செயல்களையும் நெருங்காத நல்லொழுக்கமும் கொண்ட ஒரு முற்போக்கான சமூகமாக மாற்றியமைத்தார்கள் என்றால்,

அதற்குக் காரணம் என்ன? சந்தேகமின்றி, அவர்களது இந்த இஸ்லாமிய அழைப்புப் பணிதான்.

எனவே, நபிகளாரின் வழிமுறையை நாம் பின்பற்றி இஸ்லாமிய அழைப்புப் பணியை மேற்கொள்வோமானால், எமது முஸ்லிம் சமூகத்தை சிறந்த முறையில் சீர்திருத்தம் செய்ய முடியும்: தற்போதுள்ள எல்லா வகையான ஆபத்துகள், அவமானங்களிலிருந்தும் அதனைப் பாதுகாக்கவும் முடியும்.

ஏனெனில், இஸ்லாத்தில் குறைகாண்பதற்கும், அதனைக் கொச்சைப்படுத்துவதற்கும், அதன் சட்டதிட்டங்களை உலக வாழ்க்கைக்குப் பொருத்தமற்றது எனக் காண்பிப்பதற்கும் இஸ்லாமிய விரோத சக்திகள் மிக முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. அத்தகைய முயற்சிகளை முறியடித்து, இஸ்லாத்தையும் அதன் தூய்மையையும் பாதுகாக்கப் பாடுபடுவதும் எம்மீதுள்ள பெரும் கடமையாகும். உண்மையில், இஸ்லாம் அமைதியையும் சமாதானத்தையும் விரும்புகின்ற, வலியுறுத்துகின்ற ஒரு மார்க்கமாகும். வன்முறைகளையோ கொடுமைகளையோ அது எப்போதும் ஆதரிப்பதுமில்லை, அங்கீகரிப்பதுமில்லை. மனித நேயத்தையும் மனிதாபிமானத்தையும் சமயக் கடமைகளில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அத்தகைய இஸ்லாத்தைப் பின்பற்றுவதையிட்டு நாம் பெருமைப்பட்டுக் கொள்வதுடன், அதனை மாற்று சமூகத்தவருக்கும் தெளிவுபடுத்த வேண்டிய கடமையைக் கொண்டுள்ளோம். அதற்காக நாம் கைக்கொள்ள வேண்டிய முக்கிய வழிமுறையாக இந்த இஸ்லாமிய அழைப்புப் பணி அமைந்துள்ளது. அதிலும் நபிகளாரின் வழிமுறையை முழுமையாகப் பின்பற்றி இப்பணியை மேற்கொள்கின்ற போது, அது நிச்சயமாக எமக்குப் பெரும் நன்மையையும் பயன்பாட்டையும் தரும் என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அன்புக்குரிய சகோதரர்களே! பெரியோர்களே!

உலக வரலாற்றில் எந்தவொரு தலைவரும் வழிகாட்டியும் அறிஞரும் எட்டாத மிகப் பெரும் வெற்றியை நபியவர்கள் மிகக் குறுகிய காலத்திலேயே தமது இஸ்லாமிய அழைப்புப் பணியினூடாகப் பெற்றிருக்கின்றார்கள். நபியவர்களின் இஸ்லாமிய அழைப்புப் பணியின் வெற்றிக்கான காரணங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கு நோக்குவோம்:

நபி (ஸல்) அவர்களின் பிரசார வெற்றிக்கான காரணங்களுள் முக்கியமானது அவர்களது நல்லொழுக்க நடைமுறைகளாகும். அவர்கள் ஒரு பெரும் சமூகத்தின் தலைவர், அல்லாஹ்வின் அருள்

பெற்ற இறுதி இறைத்தூதர், மனிதர்கள் அனைவரையும் விட அறிவிலும் அந்தஸ்திலும் ஆளுமையிலும் திறமையிலும் மிகஉயர்ந்தவர். ஆனால், இவற்றுக்காகவெல்லாம் அவர்கள் எப்போதும் பெருமையடித்ததுமில்லை, மற்றவரைத் தாழ்வாக நடத்தியதுமில்லை, தம் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் படியாக எவரையும் வற்புறுத்தியதோ, துன்புறுத்தியதோ இல்லை. அவர்கள் எல்லோர் முன்னிலையிலும் பணிவுத் தன்மையுடனேயே நடந்து கொண்டார்கள். எத்தகைய இடரும் சோதனையும் வந்த போதிலும் பொறுமையோடு இருந்தார்கள். எல்லோரையும் மதித்தார்கள். எல்லோர் மீதும் அன்பு காட்டினார்கள். எவரது மனதும் புண்படும்படியாக எப்போதும் அவர்கள் நடந்து கொண்டதில்லை. தமக்கு எவ்வளவு பெரிய கொடுமை செய்தவர்களையும் பெருமனதுடன் அவர்கள் மன்னித்தார்கள். எவருடனும் கடினமாகவோ அநீதியாகவோ அவர்கள் நடந்து கொண்டதில்லை. இஸ்லாத்தை மிகக் கடுமையாக வெறுத்து வந்தவர்களும் கூட, நபிகளாரைப் பார்த்ததும், அவர்களது நல்லொழுக்கத்தினால் கவரப்பட்டு இஸ்லாத்தைத் தழுவியிருக்கின்றார்கள். அவர்கள் எப்போதும் நேர்மை தவறி நடந்ததில்லை. இவை போன்ற எண்ணற்ற நற்பண்புகளே நபிகளாரின் பிரசார வெற்றிக்கு முக்கிய காரணியாக அமைந்தன. ஏனெனில், நபியவர்கள், தமது சொல் மூலமன்றி செயல் மூலமாகவே முதலில் அழைப்பு விடுத்தார்கள். அதாவது, ஒரு கடமையைச் செய்யும்படியாக மக்களை ஏவக்கூடியவர், முதலில் அக்கடமையைத் தான் நிறைவேற்றுபவராக இருக்க வேண்டும்.

உதாரணமாக, பேங்கிலே பெருந்தொகைப் பணத்தை வைப்புச் செய்து விட்டு, மாதாந்தம் அதன் மூலம் கிடைக்கும் வட்டிப் பணத்தைக் கொண்டு பிழைப்பு நடத்தும் ஒருவர், வெளியில் வந்து வட்டி கொடுக்காதீர்கள், வட்டி வாங்காதீர்கள் என்று மக்களுக்கு அழைப்பு விடுத்தால், அவ்வழைப்பில் எந்தவொரு பயனுமில்லை: எந்தவொரு நியாயமுமில்லை. இன்னும் சொல்வதானால், இது மிகப் பாவமான ஒரு குற்றமும் கூட. ஏனெனில், அல்லாஹ் குறிப்பிடுகின்றான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُو لِمَ تَـقُولُونَ مَالاَ تَـفْعَلُونَ . كَبُرَ مَقْتًا عِنْدَ اللهِ اَنْ تَـقُولُو مَالاَ تَـفْعَلُونَ.

“ஈமான் கொண்டவர்களே! நீங்கள் செய்யாத ஒரு விடயத்தை (மற்றவர்கள் செய்யவேண்டுமென) ஏன் கூறுகின்றீர்கள்? அவ்வாறு

நீங்கள் செய்யாத ஒன்றை செய்யும்படியாகக் கூறுவது அல்லாஹ்விடத்தில் மிகப் பெரும் பாவமாகும்” (33:21)

நபியவர்கள் இதனை வலியுறுத்தி, “நீங்கள் உங்களது நாவால் அழைப்பு விடுக்குமுன், உங்களது செயலால் அழைப்பு விடுங்கள்” என்று கூறுவார்கள். ஏனெனில், வெறுமனே சொல்லிச் சொல்லி ஒரு விடயத்தைத் திணிப்பதனால் ஏற்படும் சீர்திருத்தத்தை விட, நாம் செய்து காட்டி, அதன் மூலம் மற்றவர் கவரப்பட்டு, அதனைப் பின்பற்ற அவர்கள் முனையும் போது, அதனால் ஏற்படும் சீர்திருத்தமானது மிகப் பெறுமதியானதாகவும், உறுதிமிக்கதாகவும் அமையும்.

நபிகளாரின் இஸ்லாமிய அழைப்புப் பணியின் வெற்றிக்கான மற்றொரு காரணியாகக் கொள்ளத்தக்கது அவர்களது நாவன்மையாகும். நபியவர்கள் தமது மொழியிலே நல்ல புலமை பெற்றிருந்தார்கள். அரபு நாடு முழுவதிலும் அவர்களைப் போல் தெளிவாகவும், அழகாகவும், பயனுள்ளதாகவும், சமயோசிதமாகவும் அரபியில் பேசக்கூடியவர்கள் யாருமிருக்கவில்லை. அவர்களது உரைகளெல்லாம் இரத்தினச் சுருக்கமானவையாகவே இருந்தன. அவசியம் ஏற்பட்டால் மட்டுமே அதிகம் பேசுவார்கள்.சொற்சுருக்கமும் கருத்துச் செறிவும் மிக்கதாக அவர்களது உரைகள் அமைந்திருக்கும். ஒவ்வொருவரதும் அறிவு, விளங்கும் திறன் என்பவற்றைக் கிரகித்து அவற்றுக்கேற்றாற் போல் அவர்களுடன் உரையாடுவார்கள்.

இன்றைய காலத்தில், எம்மில் சிலர், மற்றவர்களுக்கு விளங்குகின்றதோ இல்லையோ அதைப் பற்றிக் கவலையில்லை, தம்முடைய மேதாவித்தனத்தையும் பேச்சாற்றலையும் காட்ட வேண்டும் என்பதற்காக தொண்டை கிழியக் கத்துவதைப் போல் நபியவர்கள் நடந்து கொள்ளவில்லை. அவர்கள் அமைதியாகவும் நிதானமாகவுமே தமது உரைகளை அமைத்துக் கொண்டார்கள். தாம் பேசுவது மற்றவர்களுக்கு முழுமையாகப் புரிய வேண்டும் என்பதிலும் அவர்கள் அவதானமாக இருந்தார்கள்.

அன்பார்ந்த சகோதரர்களே! அல்லாஹ்வின் நல்லடியார்களே! நபிகளாரின் இஸ்லாமிய அழைப்புப் பணியின் வெற்றிக்கான மற்றொரு முக்கிய காரணம் அவர்களது பிரசார உத்திகளாகும். அதாவது எத்தகைய வழிமுறையினூடாக இப்பிரசாரத்தை மேற்கொள்வது என்ற திட்டமிடலாகும். நபிகளாரின் மிக முக்கியமான பிரசார உத்தியாக அமைந்தது புனித அல்குர்ஆனாகும். அதைப் போன்று நபிகளாரின் சமய அனுஷ்டானங்கள், பொதுவிருந்துகள், சமூகத் தலைவர்களை

மதித்து கௌரவப்படுத்தல், ஸஹாபாக்கள் மத்தியில் சமூக உணர்வை உருவாக்கி வலுப்படுத்தல் போன்றனவும் அவர்களது பிரசார உத்திகளாக அமைந்திருந்தன.

இஸ்லாத்தை வெறுத்த எத்தனையோ பெருந் தலைவர்கள், அறிஞர்கள் குர்ஆனின் முன்னால் மண்டியிட்டு இஸ்லாத்தைத் தழுவினர். வேறு சிலர் நபிகளார் மேற்கொண்ட சமய அனுஷ்டானங்களினால் கவரப்பட்டு இஸ்லாத்தைத் தழுவினர். தேவையான சந்தர்ப்பங்களில் நபி (ஸல்) அவர்கள் பொதுவிருந்துகளை ஒழுங்கு செய்து அவற்றில் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தினார்கள். சமூகத் தலைவர்களின் கௌரவத்தைப் பாதுகாத்து, அவர்களூடாகவும் இஸ்லாத்தை வளர வைத்தார்கள். தம்மைப் போலவே, தமது குடும்பத்தினரும் தமது தோழர்களும் ஈமானில் உறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதில் நபியவர்கள் மிகக் கவனமாக இருந்தார்கள். ஏனெனில், தமக்குப் பின் இஸ்லாத்தைப் பாதுகாப்பவர்களும் வளர்த்துச் செல்பவர்களும் அவர்களே என்பதை நபிகளார் நன்கு அறிந்து வைத்திருந்தவர்கள்.

எனவே, தமது குடும்பத்தினர் மற்றும் ஸஹாபாக்கள் மத்தியில் தியாக உணர்வை ஏற்படுத்தி, அதனூடாக இஸ்லாத்தை ஸ்திரப்படுத்தவும், அயல்நாடுகளுக்கு இஸ்லாமிய அழைப்பை விடுக்கவும் அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். இவற்றோடு, நபியவர்கள் தமது பிரசாரத்தை தமது மனைவி, நெருங்கிய உறவினர்கள், தோழர்கள், பொது உறவினர்கள், அதன் பின் சமூக, ஊர்த் தலைவர்கள் என்ற படிமுறையில் பிரசாரம் செய்து இறுதியிலேயே பொதுமக்கள் அனைவருக்குமான பொது அழைப்பை விடுத்தார்கள். இவ்வாறு கட்டங் கட்டமாக அவர்கள் மேற்கொண் பிரசாரச் செயற்பாடும் அவர்களது இஸ்லாமிய அழைப்புப் பணியின் வெற்றிக்கு வழிவகுத்தது எனலாம்.

அன்புக்குரிய அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! நபிகளாரின் முன்மாதிரியை அடித்தளமாகக் கொண்டு இஸ்லாமிய அழைப்புப் பணியை மேற்கொள்ள வேண்டிய கடமையும் தேவையும் எமக்கிருக்கின்றது. ஆனால், அதற்காக நாம் சில முன்னேற்பாடுகளையும் செய்து கொள்ள வேண்டியுள்ளது. அதாவது இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடும் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் பற்றிய தெளிவு எம்மிடையே இருக்க வேண்டும்.

பிரதானமாக ஓர் இஸ்லாமிய அழைப்புப் பணியாளர், தனது செயற்பாடுகளுக்கான கூலியை அல்லாஹ்விடம் மட்டுமே

எதிர்பார்க்க வேண்டும். உலகில் கிடைக்கக் கூடிய அற்பப் பணம், பொருள், பதவி, சமூக கௌரவம், தலைமைத்துவம் போன்ற எந்தவொரு தேவையை அடைவதற்கும் இந்த இஸ்லாமிய அழைப்புப் பணியைப் பயன்படுத்தக் கூடாது. சுருங்கக் கூறின், இஸ்லாமிய அழைப்புப் பணியாளர் முழுமையான இஹ்லாசும் தக்வாவும் உள்ள ஒரு நன் முஸ்லிமாக இருக்க வேண்டும். இஸ்லாத்தின் பால் பிறரை அழைக்கு முன், அந்த இஸ்லாத்தின் ஹலாலையும் ஹராமையும் பர்ழையும் சுன்னத்தையும் முழுமையாகப் பேணுபவராக இருக்க வேண்டும். அதேவேளை, பிரசாரம் பண்ண வேண்டும் என்ற நோக்கத்திற்காக அவற்றைப் பின்பற்றவும் கூடாது. அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிதல் என்ற நோக்கத்திற்காக மட்டுமே இஸ்லாத்தைப் பின்பற்ற வேண்டும். நபிகளாரின் நல்லொழுக்க நடைமுறைகளைப் பேணுபவராகவும் குர்ஆனுக்குரிய கடமைகளை சிறப்பாகச் செய்பவராகவும் அவர் இருக்க வேண்டும்.

எவ்வாறிருந்த போதும், எமது நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலை, இஸ்லாமிய அழைப்புப் பணிக்கு ஆரோக்கியமானதொரு எதிர்காலத்தை உருவாக்குவதாக இல்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும். இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடுவோர், அதே பணியைச் செய்யும் மற்றொரு சாராரை அற்பக் காரணங்களுக்காக நிராகரிப்பதையும் அவர்களுடன் சண்டையிடுவதையும் கடுமையாக விமர்சிப்பதையும் நாம் பார்க்கின்றோம்.

مَنْ سَلِمَ الْمُسْلِمُونَ مِنْ لِسَانِهِ وَيَدِهِ

“எவரது கையிலிருந்தும் நாவிலிருந்தும் பிற முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெற்றார்களோ அவரே உண்மை முஸ்லிம்” (புஹாரி) என்ற நபியவர்களின் வாக்கைப் புறக்கணித்து, நாம் எமக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அது மட்டுமன்றி, இஸ்லாமிய அழைப்புப் பணியானது இன்று பல்வேறு உலக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு பணியாக மாற்றப்பட்டிருக்கிறது. பல அழைப்புப் பணியாளர்கள் மறுமையில் தாம் வெற்றி பெற வேண்டும் என்பதை மறந்து இவ்வுலகில் வெற்றி பெறவேண்டுமென்பதையே அதிகம் விரும்புவது போல் நடந்து கொள்கின்றனர். அது மட்டுமன்றி, இஸ்லாமிய அழைப்பின் பெயரால் பல சமூக உள்ளக முரண்பாடுகளும் தோற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால், இத்தகைய இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடுவோர் இஸ்லாத்தின்

மகிமையைப் பாதுகாக்க விரும்புகின்றார்களா? அல்லது தமது மகிமையைப் பாதுகாக்க விரும்புகின்றார்களா? என்றொரு கேள்வி எம்மத்தியில் எழுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. இஸ்லாத்தின் மகிமையைப் பாதுகாக்கும் நோக்கமிருந்தால், அதற்காக உழைக்கும் அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். இஸ்லாம் தூய்மையானது. அசுத்தங்களால் அதை வாழவைக்க வேண்டிய தேவையொன்று அதற்கில்லை. எனவே, இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபட ஒருவர் விரும்பினால், அதற்குதவியாக குர்ஆனும் சுன்னாவும் இருக்கின்றன. இஸ்லாமிய பிரசாரத்துக்கான மூலவளங்களை அவற்றிலிருந்து தாராளமாக ஒருவர் பெற்றுக் கொள்ள முடியும். எமக்கிடையே கருத்தியல் சார்ந்த சின்னச்சின்ன வேறுபாடுகள் இருக்கலாம். அதில் தவறில்லை. ஆனால், அந்த சின்னச் சின்ன வேறுபாடுகளைக் கொண்டு பெரும் பெரும் பிளவையும் சமூக முரண்பாட்டையும் நாம் ஏற்படுத்தி விடக்கூடாது. லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்ற ஈமானின் முதற் படியை எம்மில் யாரும் நிராகரிப்பதில்லை. இந்தப் பிரதானமான பிரமாண்டமான ஒற்றுமையொன்றே, எம்மிடையிலுள்ள எல்லா முரண்பாடுகளையும் களைந்து விடுவதற்குப் போதுமானதாகும் என்பதை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும்.

எனவே, அன்புக்குரிய இஸ்லாமிய சகோதரர்களே! பெரியோர்களே! இஸ்லாமிய அழைப்புப் பணி அல்லாஹ் எமக்கு விதித்துள்ள, எமக்குத் தனித்துவமான சிறப்பைத் தருகின்ற ஒரு பணியென்பதை நாம் உணர்ந்து, அப்பணியை மேற்கொள்வதற்கான தகுதிகளை எம்மில் வளர்த்துக் கொள்ளவும், அப்பணியைச் சிறப்பாகச் செய்யவும், அப்பணிக்காக தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் விட்டுக்கொடுப்புகளையும் புரிந்து லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்ற திருக்கலிமாவின் அடிப்படையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு, பலமான தூய்மையான ஒரு முஸ்லிம் சமூகத்தையும் முஸ்லிம் உலகையும் கட்டியெழுப்புவோமாக. எல்லாம் வல்ல அல்லாஹ் எம்மனைவருக்கும் நல்லருள் புரிவானாக. ஆமீன்

## குத்பா:03
## இஸ்லாம் வலியுறுத்தும் சமூக உறவுகள்

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ .

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ، وَاَفْضَلُ الصَّلاَةِ وَاَتَـمُّ السَّـلاَمِ عَلىَ اَشْرَفِ الْاَنْـبِـيَاءِ وَالْمُرْسَلِينَ مُحَمَّدٍ وَآلِهِ الطَّيِّـبِينَ الطَّاهِرِينَ وَاَصْحَابِهِ الْمُـنْـتَجَبِينَ اِلىَ قِيَامِ يَوْمِ الدِّيْنِ اَمَّا بَعْدُ فَـقَدْ قَالَ اللهُ سُبْحَانَهُ وَتَعَالَى فِى قُرْآنِهِ الْكَرِيمِ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ ، «يَااَيُّهَا النَّاسُ اِنَّا خَلَقْنكُمْ مِنْ ذَكَرٍ وَاُنْثَى وَجَعَلْنكُمْ شُعُوبًا وَقَبَائِلَ لِتَعَارَفُوا اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللهِ اَتْـقاكُمْ» صَدَقَ اللهُ الْعَلِيُّ الْعَظِيمُ ، وَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ ، « اَلْمُسْلِمُ مَنْ سَلِمَ الْمُسْلِمُونَ مِنْ لِسَانِهِ وَيَدِهِ » صَدَقَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ .

*எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ். இறுதித் தூதர், அகில உலகுக்கும் அருட்கொடை, அண்ணலெம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்ந்த ஆருயிர் குடும்பத்தினர், அருமை ஸஹாபாக்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் என்றென்றும் உண்டாவதாக.*

*அல்லாஹ் விதித்துள்ள கடமையை நிறைவேற்று முகமாக அவனில்லத்தில் வந்தமர்ந்திருக்கின்ற அல்லாஹ்வின்*

நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! அல்லாஹ் ஏவியவற்றை ஏற்று விலக்கியவற்றைத் தவிர்ந்து எல்லா நிலைகளிலும் அவனைப் பயந்து தக்வாவோடு வாழுமாறு ஆரம்பமாக எனக்கும் பின்னர் உங்களுக்கும் நான் நல்லுபதேசம் செய்கின்றேன்.

அன்புக்குரிய சகோதரர்களே! பெரியோர்களே!

உலகிலுள்ள பல்வேறு சமயங்களுள் அல்லாஹ்வினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு சமயம் இஸ்லாமாகும். கலப்படமற்ற பரிசுத்தமான இறைகட்டளைகளால் உருவாக்கப்பட்டுள்ளமையே இஸ்லாம் இச்சிறப்பையும் தனித்துவத்தையும் பெறுவதற்குக் காரணமாகின்றது. இஸ்லாம் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமயமாக இருப்பதனால், இஸ்லாத்தைப் பின்பற்றுகின்ற முஸ்லிம் சமூகமும் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உலகின் ஒரேயொரு சமூகமாக விளங்குகின்றது.

எந்தவொரு சமூகமும் பல்வேறு அடிப்படைகளிலான இனங்களையும் குழுக்களையும் பிரிவுகளையும் கொண்டிருப்பது போலவே, முஸ்லிம் சமூகத்தினுள்ளும் சில வகுப்புகளையும் பிரிவுகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் நாம் அவதானிக்கின்றோம். அல்லாஹ்தஆலா திருமறையில் குறிப்பிடுகின்றான்:

يَاأَيُّهَا النَّاسُ اِنَّا خَلَقْنٰكُمْ مِنْ ذَكَرٍ وَاُنْثٰى وَجَعَلْنٰكُمْ شُعُوبًا وَقَبَائِلَ لِتَعَارَفُوا اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللهِ اَتْقَاكُمْ

“மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் மற்றும் ஒரு பெண்ணிலிருந்து படைத்தோம். இன்னும் நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் கண்ணியமிக்கவர் உங்களில் மிகவும் இறையச்சமுள்ளவரே” (49:13)

எனவே, முஸ்லிம்களுக்குள்ளே உறவு ரீதியாக, தொழில் ரீதியாக, பொருளாதார ரீதியாக, குடும்ப ரீதியாக, பிரதேச ரீதியாக என பல்வேறு குழுக்களையும் வகுப்புகளையும் நாங்கள் பார்க்கின்றோம். இத்தகைய வகுப்புகள் இருப்பதில் தவறில்லை எனக் கருதும் இஸ்லாம், ஒவ்வொரு முஸ்லிம் வகுப்புகளுக்கிடையிலும் ஒற்றுமையும் சகோதரத்துவ உணர்வும், பாசப்பிணைப்பும், விட்டுக் கொடுப்பும், அன்பும், புரிந்துணர்வும்

இருக்க வேண்டும் என்பதை அழுத்தமாக வலியுறுத்துகின்றது. இவ்வகையில், இஸ்லாம் சமூக உறவை கண்டிப்பாக வலியுறுத்தும் ஒரு சமயமாக விளங்குவதை நாம் அவதானிக்கலாம்.

அல்குர்ஆனின் அநேக வசனங்கள் "மனிதர்களே!" என்றும், "ஈமான் கொண்டவர்களே!" என்றும் அழைப்பதை நாம் காண்கிறோம். ஓரிடத்திலே அல்லாஹ் குறிப்பிடுகின்றான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا قُوا أَنْفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا

"ஈமான் கொண்டவர்களே! நீங்கள் உங்களையும் உங்களது குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்" (66:06) என்று குறிப்பிடுகின்றான்.

மற்றோர் இடத்தில் அல்லாஹ் குறிப்பிடுகின்றான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا أَوْفُوا بِالْعُقُودِ

"ஈமான் கொண்டவர்களே! நீங்கள் உங்களது உடன்படிக்கைகளை பரிபூரணமாக நிறைவேற்றுங்கள்" என்று குறிப்பிட்டுள்ளான்.

இவ்வாறான வசனங்களில் அல்லாஹ் ஒருமையாக அல்லாமல் பன்மையாக முஸ்லிம்களை அழைத்திருப்பது, முஸ்லிம் சமூகம் கூட்டாக இயங்க வேண்டும் என்பதையும் அவர்களுக்கிடையே பரஸ்பர ஒற்றுமையும் புரிந்துணர்வும் என்றென்றும் இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

அன்புக்குரிய அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே!

முஸ்லிம்கள் இணைந்த, ஒற்றுமைப்பட்ட ஒரு சமூகமாக வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தும் இஸ்லாம், அத்தகைய நிலையை ஏற்படுத்துவதற்காக தனது கட்டளைகள் அனைத்திலும் இந்த எண்ணக்கருவைப் பின்புலமாகக் கொண்டுள்ளதை நாம் அறிய முடிகின்றது. இவ்வகையில், முஸ்லிம்களின் சமூக உறவைப் பலப்படுத்துவதற்காக இஸ்லாம் முன்வைத்துள்ள சட்டதிட்டங்களை நாம் சுருக்கமாக நோக்குவோம்.

இஸ்லாத்தின் பிரதான கடமைகள் அனைத்தும் முஸ்லிம்களுக்கிடையே சமூகப் பிணைப்பை ஏற்படுத்தும் குறிக்கோளை சிறப்பாகக் கொண்டிருக்கின்றன. அதாவது, தொழுகை, ஹஜ் ஆகிய கடமைகள் கூட்டாக நிறைவேற்றப்படுகின்றன. முஸ்லிம்கள் தமக்கிடையே புதிய உறவுகளையும் அறிமுகங்களையும் ஏற்படுத்திக் கொள்வதற்கும், ஏற்கனவே உள்ள உறவுகளை புதுப்பிப்பதற்கும் அல்லது பலப்படுத்திக் கொள்வதற்கும் இவை மிகவும் உதவியாக அமைகின்றன. இக்கடமைகளுக்காக மனிதன் தனது வீட்டை விட்டு வெளியேறும் போது, தனது சமூகத்துடன் அவன் இணைந்து செயலாற்றச் செல்கின்றான் என்பது புலனாகின்றது. அதேவேளை, ரமழான் மாதத்து நோன்பு குறித்த காலத்தில் நிறைவேற்றப்படக் கூடிய ஓர் அமலாக இருப்பதனால், இக்காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமை வலியுறுத்தப்படுகின்றது. அத்துடன் ஏழை, பணக்காரன் என்ற இரு வகுப்பாரிடையேயும் புரிந்துணர்வும் பாசப்பிணைப்பும் ஏற்படுவதற்கு வழியேற்படுகின்றது. ஸக்காத்தைப் பொறுத்தவரையில், அது முஸ்லிம்களின் சமூக வாழ்க்கைக்கு மிகப் பெரும் உந்து சக்தியாக அமைந்துள்ளது. ஏனெனில், இவ்வமலை நிறைவேற்றுவதனூடாக, ஏழை-பணக்காரன் என்ற பாகுபாடு அகற்றப்படுகின்றது. பொருளாதார சமத்துவம் ஏற்படுகின்றது. கொடுப்பவனுக்கும் வாங்குபவனுக்கும் இடையே நல்லுறவு ஏற்படுகின்றது. அது தனிநபரிலிருந்து தொடங்கி குடும்பம், தூரத்து உறவுகள் என்று தொடர்கின்றது. இதனால், முஸ்லிம் சமூகம் வலுவுள்ள ஒரு சமூகமாக மாறும் மகிழ்ச்சிகரமான நிலை தோன்றுகின்றது.

அல்குர்ஆன் கூறுகின்றது:

اِنَّ اللهَ يَأمُرُ بِالْعَدْلِ وَالْإحْسَانِ وَإيْتَاءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ .

“(விசுவாசிகளே!) நீங்கள் நீதி செலுத்தும்படியாகவும் நன்மை செய்யும் படியாகவும் பந்துக்களுக்கு உதவி செய்யும் படியாகவும் நிச்சயமாக அல்லாஹ் (உங்களை) ஏவுகிறான். மானக்கேடான காரியங்கள், பாபம், அக்கிரமம் ஆகியவைகளிலிருந்து (உங்களை) அவன் தடை செய்கிறான். (இவைகளை) நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுமாறும் அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான்” (16:90)

اَلَّذِينَ يَسْتَمِعُونَ الْقَوْلَ فَيَتَّبِعُونَ اَحْسَنَهُ اُولَئِكَ الَّذِينَ هَدَاهُمُ اللهُ وَاُولَئِكَ هُمْ اُولُوا الْأَلْبَابِ .

"அவர்கள் (எத்தகையோரென்றால், நம்முடைய) வசனங்களைச் செவியுற்று, அதிலுள்ள நல்லவைகளைப் பின்பற்றியும் நடக்கின்றனர். நிச்சயமாக அல்லாஹ் நேரான பாதையில் செலுத்தியது இத்தகையோரைத்தான். இவர்கள்தாம் (உண்மையில்) அறிவுடையோருமாவர்" *(39:18)*

*சமூகத்துடன் இணைந்து வாழும் மனிதன் எப்போதும் நல்லொழுக்கமும், நற்பண்பும் உடையவனாக இருக்க வேண்டும் என்பதை இவ்வசனங்கள் வலியுறுத்துகின்றன. ஏனெனில், நற்பண்பாடுகள் உடைய மனிதனே சமூகத்துக்குப் பயனுள்ளவனாக இருக்க முடியும். தீய பழக்க வழக்கங்களுள்ள மனிதனால் சமூகத்துக்கு எவ்விதப் பயனும் விளையப் போவதில்லை.*

*அன்புக்குரிய அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே!*

*ஒவ்வொரு முஸ்லிமும் தான் சார்ந்துள்ள சமூகத்தின் மீது பற்றும் பாசமும் உள்ளவனாக இருக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் முக்கிய கட்டளையாகும். நபி (ஸல்) அவர்கள் இது பற்றிக் கூறும் போது,*

مَنْ اَصْبَحَ وَلَمْ يَهْتَمَّ بِاُمُورِ الْمُسْلِمِينَ فَلَيْسَ مِنَّا

*"முஸ்லிம்களது நிலைமைகள் தொடர்பில் அக்கறையில்லாது தனது நாளை ஆரம்பிப்பவர் எம்மைச் சார்ந்தவர் அல்லர்" என்றார்கள். (அபூதாவூத்)*

*எனவே, ஒவ்வொரு முஸ்லிமுக்கும் தனது சமூகம் சார்ந்த பொறுப்புக்கள் உள்ளன. தன் சமூகத்தை கல்வி, அரசியல், பொருளாதார ரீதியாக அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டிய கடமையும் இருக்கின்றது. அத்தகைய பொறுப்புகளிலிருந்தும் கடமைகளிலிருந்தும் அவன் விலகியிருக்க முடியாது, ஒதுங்கி வாழ முடியாது. தன்னால் முடியுமான ஏதோ ஒரு வழிமுறையைப் பயன்படுத்தி, இப்பொறுப்பை நிறைவேற்ற அவன்*

முன்வர வேண்டும் என்று இஸ்லாம் எமக்கு வலியுறுத்தியிருக்கின்றது.

முஸ்லிம்களிடையே சமூக உறவை ஏற்படுத்த விழைந்த இஸ்லாம், ஒரு முஸ்லிமின் அடிப்படைத் தகுதி பற்றிக் குறிப்பிட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

اَلْمُسْلِمُ مَنْ سَلِمَ الْمُسْلِمُونَ مِنْ لِسَانِهِ وَيَدِهِ

“எந்த முஸ்லிமினது கையிலிருந்தும் நாவிலிருந்தும் பிற முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெற்றார்களோ அவரே உண்மை முஸ்லிம்” (புஹாரி) என்றார்கள்.

இதன் மூலம் ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு எவ்வகையிலும் தீங்கிழைக்கக் கூடாது என்பதை இஸ்லாம் இங்கே வலியுறுத்துகின்றது. இந்தத் தீங்கு சொல் ரீதியாகவோ, செயல் ரீதியாகவோ இடம்பெறக் கூடாது என்பதையும் இஸ்லாம் தெளிவுபடுத்தியுள்ளது. எனவே, முஸ்லிம்கள் மற்ற முஸ்லிமுக்கு எப்பபோதும் உதவி புரிபவர்களாகவும், அவர்களது நலன்களில் அக்கறை எடுத்துக் கொள்பவர்களாகவும் இருக்க வேண்டும். இதையேதான் புனித அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

تَعَاوَنُوا عَلَى الْبِرِّ وَالتَّـقْوَى وَلاَ تَعَاوَنُوا عَلَى الْإِثْمِ وَالْعُدْوَانِ

“நன்மைக்கும் இறையச்சத்திற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் துணையாக இருங்கள்: பாவத்திற்கும் பகைமைக்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் துணையாக இருக்க வேண்டாம்” என்று அல்குர்ஆன் கூறுகின்றது.

எனவே, முஸ்லிம்கள் நல்ல விஷயங்களின் போது தங்களுக்குள் உதவியாக இருக்கும் அதேவேளை, ஒருவர் ஒரு தீய செயலில் ஈடுபடும் போது, அதற்கு உதவியாக இல்லாமல் அதைத் தடுத்து நிறுத்த முயல வேண்டும். இவ்வாறு எல்லா முஸ்லிம்களும் நடந்து கொள்கின்ற போது உண்மையில் மிகக் காத்திரமான ஒரு சமூக ஒற்றுமையும் பலமான உறவும் அங்கே ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

அது மட்டுமன்றி, ஒவ்வொரு தனி மனிதனுக்கிடையிலும் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ஸலாம் கூறும் வழிமுறையை இஸ்லாம் அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு முஸ்லிம்

மற்ற முஸ்லிமைக் காணுகின்ற போது, "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று கூறிக் கொள்ள வேண்டும். இது சுன்னத்தாகும். அதனைக் கேட்பவர், "வஅலைக்குமுஸ்ஸலாம்" என்று கூற வேண்டும். இது பர்ழாகும். இது பற்றி ஒரு ஹதீஸ் குறிப்பிடுகின்றது.

سُئِلَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : اَيُّ اْلاِسْلاَمِ اَفْضَلُ قَالَ تُطْعِمُ الطَّعَامَ وَتَقْرَءُ السَّلاَمَ عَلَى مَنْ عَرَفْتَ وَمَنْ لَمْ تَعْرِفْ .

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம், "இஸ்லாத்தின் நற்செயல்களில் எது சிறந்தது?" எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள், "(மக்களுக்கு) நீர் உணவளிப்பதும், நீர் அறிந்தவருக்கும் அறியாதவருக்கும் ஸலாம் உரைப்பதுமாகும்" என்று கூறினார்கள். எனவே, நாம் எம்மிடையே ஸலாம் கூறும் வழக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். நமக்குத் தெரிந்தவர்களுக்கு மட்டுமன்றி, நமக்கு அறிமுகமில்லாதவர்களைக் கண்டாலும் அவர்களுக்கும் ஸலாம் கூற வேண்டும். இதன் மூலம் நல்லதொரு சமூக உறவு எம்மிடையே மலரும். ஸலாம் சொல்வது மட்டுமன்றி, மற்றவர்களைக் காணும் போது எமது முகத்தில் புன்முறுவல் செய்வதும் ஒரு நன்மையான செயலாகும். நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்:

تَبَسُّمُكَ فِى وَجْهِ اَخِيكَ صَدَقَةٌ

"உங்களது சகோதரரது முகத்தைப் பார்த்து நீங்கள் புன்முறுவல் செய்வதும் ஒரு ஸதக்காவாகும்" (திர்மிதீ)

எம்மில் சிலர், தமக்குக் கோபமானவர்களை நேரில் காண வேண்டி ஏற்பட்டால், வெடுக்கென முகத்தைத் திருப்பிக் கொள்வதையும், கோபம் கொப்பளிக்க முறைத்துப் பார்ப்பதையும் நாம் காண்கின்றோம். இன்னும் சிலர் கோபத்தின் உக்கிரத்தினால் பிறரது முகத்தில் காறித் துப்புவதையும் அறிந்திருக்கின்றோம். இவையெல்லாம் மிக மோசமான பழக்கங்களாகும். இவை இஸ்லாத்திற்கு முற்றிலும் முரண்பட்ட பழக்கங்களாகும். இஸ்லாம் என்ன கூறுகின்றது, மற்ற முஸ்லிமைக் கண்டால் அவரது முகத்தைப் பார்த்து புன்முறுவல் செய்யுங்கள், அவருக்கு ஸலாம் கூறுங்கள் என்று கூறுகின்றது. இவற்றை எம்மால் செய்ய முடியாதென்றால் நாம் அமைதியாக இருந்து விடுவதில்

தவறில்லை. அதை விட்டு, நடுவீதியில் நின்று கொண்டு சண்டை பிடிப்பதும், தூசண வார்த்தைகளைப் பாவித்து சண்டை பிடிப்பதும், அடிதடியில் இறங்குவதும் மிகப் பிழையான செயல்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

அத்தோடு விருந்துகளை ஏற்பாடு செய்து ஏழைகளுக்கும் உறவினர்களுக்கும் உணவளிப்பதும் சமூக உறவை வலுப்படுத்துவதற்கான முக்கிய வழிமுறைகளில் ஒன்று என இஸ்லாம் எங்களுக்குக் காட்டித் தருகின்றது. நபி (ஸல்) இஸ்லாமியப் பிரசாரத்தை ஆரம்பித்த முதற் காலகட்டங்களில், இத்தகைய விருந்துகளை ஏற்பாடு செய்து அச்சபையில் வைத்தே இஸ்லாத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். இஸ்லாமிய அழைப்புக்கான சிறந்த உபாயமாக விருந்துபசாரத்தை அவர்கள் பயன்படுத்தினார்கள். நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் விருந்தாளிகளைக் கௌரவிப்பதில் மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். ஒரு விருந்தாளி இல்லாமல் எப்போதும் அவர்கள் தனித்து உணவுண்டதில்லை என்பதாக வரலாறுகளில் நாம் காண்கின்றோம். அதன் காரணமாக அல்லாஹ் அவர்களை தனது தோழராக எடுத்துக் கொண்டான். அவர்களது சிறப்புப் பெயர் ‘கலீலுல்லாஹ்’ அல்லாஹ்வின் தோழர் என்பதாகும்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! சகோதரர்களே!

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பார்கள். சமூகமின்றி மனிதன் இல்லை என்பதைப் போல், ஒவ்வொரு தனி மனிதனிலுமிருந்தே ஒரு சமூகம் உருவாகின்றது என்பதும் உண்மையாகும். ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இணையும் போது அங்கே ஒரு சிறிய குடும்பம் உருவாகின்றது. அவர்களூடாக அந்தக் குடும்பம் விருத்தியடைகின்றது. இத்தகைய பல குடும்பங்கள் இணையும் போது, ஒரு சமூகம் உருவாகி, அது வளர்ச்சியடைந்து மாபெரும் சமூகமொன்றாக விரிவடைகின்றது. இவ்வாறு விருத்தியடைந்த சமூகம் தங்களுக்குள் கூட்டிணைப்பாகவும், ஒன்றுபட்டும் செயற்பட வேண்டும் என்பதையே இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

முஸ்லிம் சமூகத்திலே வாழ்க்கை முறையின் அடிப்படையில் பல்வேறு குழுக்களை நாம் காண்கின்றோம். அவர்கள் ஒவ்வொருவருடனும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் கூறியிருக்கும் அறிவுரைகளும் கட்டளைகளும் இஸ்லாமிய சமூக உறவை பலப்படுத்தும் அம்சங்களாக விளங்குகின்றன. உதாரணமாக, பெற்றோர்-பிள்ளைகள் எவ்வாறு நடந்து கொள்வது, ஆசிரியர்-மாணவர்கள் எவ்வாறு நடந்து கொள்வது, அயலவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வது,

உறவினர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வது, அநாதைகளுடன் எவ்வாறு நடந்து கொள்வது, அகதிகளுடன் எவ்வாறு நடந்து கொள்வது, நண்பர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வது, வழிப்போக்கர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வது, கடன்கொடுத்தவரும் கடன் வாங்கியவரும் எவ்வாறு நடந்து கொள்வது, விருந்தாளிகளுடன் எவ்வாறு நடந்து கொள்வது, யாசகர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வது, நோயாளிகளுடன் எவ்வாறு நடந்து கொள்வது, குழந்தைகளுடன் எவ்வாறு நடந்து கொள்வது, முதியோருடன் எவ்வாறு நடந்து கொள்வது என எல்லா சமூகக் குழுக்களுடனும் நடந்து கொள்ளும் முறை பற்றி இஸ்லாம் விபரித்துள்ளது. இஸ்லாம் கூறியுள்ள இந்த ஒழுங்குகளை நாம் முழுமையாகக் கடைப்பிடித்து வாழ்வோமானால், அது எமது சமூகத்தை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வது மட்டுமன்றி, எம்மைப் பார்த்து ஏனைய சமூகத்தினரும் இஸ்லாத்தில் நுழைந்து கொள்வதற்கு வழியேற்படுத்தும் என்பது உறுதியாகும்.

அன்புக்குரிய அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! அல்குர்ஆன் கூறுவதைக் கேளுங்கள்:

وَاعْبُدُوا اللهَ وَلاَ تُشْرِكُوا بِهِ شَيْئًا وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا وَبِذِى الْقُرْبَى وَالْيَتمَى وَالْمَسَاكِينِ وَالْجَارِ ذِى الْقُرْبَى وَالْجَارِ الْجُنُبِ وَالصَّاحِبِ بِالْجَنْبِ وَابْنِ السَّبِيلِ وَمَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ، اِنَّ اللهَ لاَيُحِبُّ مَنْ كَانَ مُخْتَالاً فَخُورًا

“மேலும் அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள். பெற்றோர்க்கு உபகாரம் செய்யுங்கள். (அவ்வாறே) உறவினருக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும், அண்டை வீட்டினருக்கும், அந்நியரான அண்டை வீட்டினருக்கும், உங்களுடன் இருக்கக் கூடிய நண்பர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களுக்கும் (அன்புடன் உபகாரம் செய்யுங்கள்) கர்வம் கொண்டவனாக, பெருமையடிப்பவனாக இருப்பவரை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கமாட்டான்” *(04:36)*

இஸ்லாத்தின் கட்டளைகள் அனைத்தும் முழு மனித சமுதாயத்திற்கும் நன்மை பயக்கத்தக்கவையாக விளங்குகின்றன. இஸ்லாத்தின் எந்தவொரு கட்டளையும் சட்டதிட்டமும் முஸ்லிம்களையோ ஏனைய சமூகத்தினரையோ பாதிப்பனவாக இல்லை. இஸ்லாமிய சட்டங்கள் அனைத்தும் மனிதாபிமானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. உலகில் வாழும் மனிதர்கள் அனைவரும் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழ வேண்டும் என இஸ்லாம் விரும்புகின்றது. அத்தகைய ஒரு வாழ்க்கை அமைய வேண்டுமானால், மனிதர்களிடையே சிறந்த சமூகப் பிணைப்பு அவசியம் என்பதை அது வலியுறுத்துகின்றது. அத்தகைய சமூகப் பிணைப்பை ஏற்படுத்துவதற்குத் தேவையான எல்லா சட்டங்களையும் சமயக் கடமையாக அது முன்வைத்துள்ளது. இது உலகின் எந்தவொரு சமயமும் கொண்டிராத சிறப்புப் பண்பாகும்.

பெற்றோர்-பிள்ளைகள் தொடர்பு பற்றிக் குறிப்பிடும் இஸ்லாம், அது பற்றி சிறந்த கட்டளைகளை வகுத்துள்ளது. அதாவது, ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளை அன்புடன் பெற்று வளர்க்க வேண்டும், வறுமை, வாழ்க்கைக் கஷ்டம் என்ற காரணங்களுக்காக பிள்ளைகளை கொல்லக் கூடாது, அவர்களை அநாதைகளாகத் தெருவில் விட்டுவிடக் கூடாது, அவர்களுக்கு கல்வி, ஒழுக்கம், தொழில் வழிகாட்டல்கள் என்பவற்றை வழங்க வேண்டும் என்பன போன்ற கட்டளைகளை பெற்றோர்களுக்கு முன்வைத்துள்ளது. அதேபோன்று, பிள்ளைகள் தமது பெற்றோர் மீது அன்பு காட்டி அவர்களைப் பராமரிக்க வேண்டும், பெற்றோரின் மனம் புண்படும் படி எச்சந்தர்ப்பத்திலும் நடக்கக் கூடாது, அவர்களது தேவைகளை முழுமையாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்பன போன்ற கட்டளைகளை பிள்ளைகளுக்கு முன்வைத்துள்ளது.

இதுபோன்றே உறவினர்களுடன் இணைந்து வாழ வேண்டும் என்று வலியுறுத்தும் இஸ்லாம், குடும்பத்தினருடன் உறவைத் துண்டித்து வாழ்வது பெரும் பாவங்களில் ஒன்றெனவும் எச்சரிக்கை விடுக்கின்றது. குடும்ப உறவைத் துண்டித்து வாழ்பவர் சுவர்க்கம் செல்ல மாட்டார் என்பதாக நபியவர்கள் கடுமையாக எச்சரித்துள்ளார்கள். ஏனெனில், குடும்ப உறவு என்பது சமூக உறவின் முதற்படியாக அமைகின்றது. குடும்ப உறவு சீராக இருக்கும் போதே சமூக உறவும் சிறப்பாகத் தழைத்தோங்கும் என்பது நாம் அறிந்ததே. எனவேதான் குடும்ப உறவுக்கு நபியவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இவை தவிர, அயலவர்களுடன் நல்லுறவைப் பேண வேண்டுமென்றும், அநாதைகளை ஆதரிக்க வேண்டுமென்றும், அகதிகளை அரவணைக்க வேண்டுமென்றும், நல்ல நண்பர்களைத் தெரிவு செய்து அவர்களுடன் நன்மையான விடயங்களிலும் சமூகப் பொதுப் பணிகளிலும் ஈடுபட வேண்டும் என்றும், வழிப்போக்கர்கள், கடன் பெற்றவர்கள், யாசகர்கள் போன்றோருடன் இரக்கமாகவும் உபகாரமாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்றும், விருந்தாளிகளைக் கண்ணியப்படுத்த வேண்டும் என்றும், நோயாளிகளைச் சென்று சுகநலம் விசாரித்து அவர்களுக்கு ஆறுதல் கூற வேண்டுமென்றும், குழந்தைகளுடன் அன்பாகவும், முதியோருடன் மரியாதையாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்றும், மரணித்தவர்களின் இறுதிச் சடங்குகளில் பூரணமாகக் கலந்து கொள்ள வேண்டும் என்றும் - இவ்வாறு சமூக உறவைக் கட்டியெழுப்பத் தேவையான எல்லா அணுகுமுறைகளையும் இஸ்லாம் சமயக் கடமைகளாக வகுத்து வைத்துள்ளது. எனவே, இத்தகைய இஸ்லாத்தின் கட்டளைகளை நாம் சரியாகவும் முறையாகவும் பின்பற்றுவோமானால், நிச்சயமாக எம்மத்தியிலே பூரணமான ஒற்றுமையும், சகோதரத்துவமும் தழைத்தோங்கி, உலகின் மிகவும் பலம் பொருந்திய ஒரு சமூகமாக நாம் மிளிர்வோம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவற்றையே நபிகளாரின் ஹதீஸ்கள் எமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

عَنْ اَبِى عُمَارَةَ الْبَرَاءِ بْنِ عَازِبٍ رَضِىَ اللهُ عَنْهُمَا قَالَ أَمَرَنَا رَسُولُ اللهُ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: بِعِيَادَةِ الْمَرِيضِ ، وَاتِّبَاعِ الْجَنَائِزِ ، وَتَشْمِيَتِ الْعَاطِسِ ، وَنَصْرِ الضَّعِيفِ ، وَعَوْنِ الْمَظْلُومِ ، وَاِفْشَاءِ السَّلاَمِ ، وَاِبْرَارِ الْمُقْسِمِ

ஹஸ்ரத் அபூ உமாரா பராவுபின் ஆஸிப் (ரழி) அவர்க்ள அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு ஏழு விஷயங்களை ஏவினார்கள். (அவை) நோயாளியை உடல் நலம் விசாரித்தல், ஜனாஸாவை நல்லடக்கம் செய்ய பின்தொடர்ந்து செல்லல், தும்மியவருக்கு (யர்ஹமுகல்லாஹ்) என்று துஆச் செய்தல், பலவீனமானவருக்கு உதவுதல், அநீதியிழைக்கப்பட்டவருக்கு உபகாரம் புரிதல், ஸலாத்தைப் பரப்புதல், (நல்ல விஷயத்தை) சத்தியம் செய்தவருக்கு அதனை நிறைவேற்ற உதவுதல் என்பனவாகும். (புஹாரி, முஸ்லிம்)

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

சமூக உறவை வலுப்படுத்துவதற்கு எத்தகைய காரியங்களை மேற்கொள்ள வேண்டும் என்று விளக்கிய இஸ்லாம், அவ்வுறவை வலுப்படுத்த வேண்டுமானால் எத்தகைய காரியங்களை கைவிட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளது. அவை பற்றியும் நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

பொதுவாக எம்மத்தியில் ஒரு தீய பழக்கம் இருக்கின்றது. அதாவது யாராவது ஒருவருடன் எமக்குக் கோபம் இருந்தால், அவர் தனது வாழ்க்கையில் நன்றாகக் கஷ்டப்பட வேண்டும் என்று நாம் விரும்புவோம். இது கூடாத ஒரு பண்பாகும். எமது சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் கஷ்டத்திலே விழுந்து விட்டார் என்றால் நாம் அவரை அப்படியே விட்டு விடக் கூடாது. அவருக்கு உதவ வேண்டியது எமது கடமையாகும். இன்னும் சிலர், பிறர் ஏதாவது கஷ்டத்தில் விழுந்து விடுகின்ற போது, அதைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றனர், சந்தோஷப்படுகின்றனர். சிலர் வேண்டுமென்றே பிறர் மத்தியில் பிரச்சினைகளைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கின்றனர். இவ்வாறான விடயங்கள் எல்லாம் இஸ்லாத்தினால் மிகக் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ள விடயங்களாகும்.

அல்குர்ஆன் கூறுவதைக் கேளுங்கள்:

إِنَّ الَّذِينَ يُحِبُّونَ أَنْ تَشِيعَ الْفَاحِشَةُ فِى الَّذِينَ آمَنُوا لَهُمْ عَذَابٌ أَلِيمٌ فِى الدُّنْيَا وَالْآخِرَةِ

“நிச்சயமாக யார் ஈமான் கொண்ட மக்கள் மத்தியில் தீமை பரவ வேண்டுமென ஆசைப்படுகின்றனரோ, அவர்களுக்கு உலகிலும் மறுமையிலும் நோவினை தரும் கடும் வேதனை உண்டு” (24:19)

இது பற்றி மேலும் விபரித்த நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

لَاتُظْهِرِ الشَّمَاتَةَ لِأَخِيكَ فَيَرْحَمُهُ اللهُ وَيَبْتَلِيكَ

“உம் சகோதரரின் கஷ்டத்தைக் கண்டு, உம்முடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தாதீர். அப்பொழுது அல்லாஹ் அவர் மீது கிருபை

புரிவான், அவருடைய கஷ்டத்தைப் போக்கி விடுவான். உம்மைச் சோதித்து விடுவான்" (திர்மிதீ)

அதுமட்டுமன்றி, பிறரை ஏமாற்றுவது, குடும்பத்தைக் குத்திக் காட்டிப் பேசுவது, மோசடி செய்வது, புறம் பேசுவது, கோள் மூட்டுவது, பெருமையடிப்பது, அநியாயம் புரிவது முதலான விடயங்களும் சமூக உறவைப் பாதிக்கும் விடயங்களாகும். இதனால், இவ்விடயங்களையெல்லாம் இஸ்லாம் வன்மையாகக் கண்டித்துத் தடுத்துள்ளது. இத்தகைய காரியங்களில் ஈடுபடுவோரைக் கடுமையாக எச்சரித்துமுள்ளது.

மேலும், எந்தவொரு முஸ்லிமும் மற்றொரு முஸ்லிமோடு விரோதம் பாராட்டக் கூடாது என்று இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது. குறிப்பாக ஒருவர் மற்ற முஸ்லிமோடு கோபம் கொண்டு மூன்று நாட்களுக்கு மேல் பேசாதிருப்பது பெரும் குற்றமென இஸ்லாம் விளக்கியுள்ளது. எனவே, மற்ற முஸ்லிம்களோடு எப்போதும் நல்லுறவைப் பேணுவதும், பிளவுபட்டுள்ள முஸ்லிம்களை ஒன்றுபடுத்த முயற்சிப்பதும் எமது கடமையாகும். அல்குர்ஆன் இதுபற்றிக் கூறும் போது,

إِنَّمَا الْمُؤْمِنُونَ إِخْوَةٌ فَأَصْلِحُوا بَيْنَ أَخَوَيْكُمْ

"நிச்சயமாக மூமின்கள் அனைவரும் சகோதரர்களே. எனவே உங்களது சகோதரர்களுக்கு மத்தியில் நீங்கள் சமாதானம் செய்து வையுங்கள்" (49:10) என்று கூறியுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் இது பற்றிக் குறிப்பிடும் போது,

لاَتَقَاطَعُوا وَلاَ تَدَابَرُوا وَلاَ تَبَاغَضُوا وَلاَ تَحَاسَدُوا وَكُونُوا عِبَادَ اللهِ إِخْوَانًا وَلاَ يَحِلُّ لِمُسْلِمٍ أَنْ يَهْجُرَ أَخَاهُ فَوْقَ ثَلاَثٍ .

"ஒருவருக்கொருவர் உறவைத் துண்டித்துக் கொள்ளாதீர்கள், ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டாதீர்கள். ஒருவர் மற்றவர் மீது பொறாமை கொள்ளாதீர்கள். அல்லாஹ்வின் நல்லடியார்களே! நீங்கள் சகோதரர்களாக ஆகிவிடுங்கள். தம் சகோதரரை மூன்று தினங்களுக்கு மேல் வெறுத்திருப்பது ஒரு முஸ்லிமுக்கு ஆகாது" (புஹாரி, முஸ்லிம்) என்று கூறியுள்ளார்கள்.

எனவே, அன்பார்ந்த பெரியோர்களே! சகோதரர்களே! முஸ்லிம் சமூகம் உலகின் கண்ணியத்துக்கும் மறுமையின் வெற்றிக்கும் உரிய ஒரே சமூகமாகும். எனவே, அச்சமூகத்துக்கு உரியவர்களாக எம்மையும் ஆக்கி, நாம் எமக்குள்ளே நல்லுறவை வளர்த்துக் கொண்டு, மற்ற சமூகங்களுக்கு முன்னோடியாக இருந்து, அவர்களை எம்பால் ஈர்க்க முனைய வேண்டும். இதற்காக நாம் மேலதிகமாக சிரமப்பட்டுக் கஷ்டப்பட்டு காலம் கடத்த வேண்டியதில்லை. இஸ்லாம் எமக்கு அறிவுறுத்தியுள்ள ஏவியுள்ள விடயங்களை சரியாகவும் முறையாகவும் செய்தாலே போதுமானது. ஏனெனில், இஸ்லாம் எமக்கு ஏவியுள்ள எந்தவொரு விடயமும் எம்மைப் பாதிப்பவையல்ல, அவை எமக்கு நன்மையே பயப்பவை என்பதை நாம் நன்கறிந்து கொள்ள வேண்டும். இந்த நல்லறிவுடன் நாம் எமது சமூக உறவை வலுப்படுத்தவும் வளப்படுத்தவும் திடசங்கற்பம் பூணுவோமானால் நிச்சயமாக எமது சமூகம் தழைத்தோங்கும், அதன் மூலம் இஸ்லாமும் உலகில் கண்ணியம் பெறும்.

எனவே, எல்லாம் வல்ல அல்லாஹ்தஆலா, எமது முஸ்லிம் சமூகம் தமக்குள்ளே நல்லுறவை வளர்த்துக் கொள்ளவும், சமூக உறவை மேம்படுத்திக் கொள்ள வேண்டியுள்ள அதன் தேவை உணர்ந்து செயற்படவும் நல்லருள் புரிவானாக. ஆமீன்.

## குத்பா:04
## இஸ்லாமிய ஜிஹாதும் அதன் பண்புகளும்

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ .

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ، وَاَفْضَلُ الصَّلاَةِ وَاَتَمُّ السَّلاَمِ عَلىَ اَشْرَفِ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِينَ مُحَمَّدٍ وَآلِهِ الطَّيِّبِينَ الطَّاهِرِينَ وَاَصْحَابِهِ الْمُنْتَجَبِينَ اِلىَ قِيَامِ يَوْمِ الدِّيْنِ اَمَّا بَعْدُ فَقَدْ قَالَ اللهُ سُبْحَانَهُ وَتَعَالَى فِى قُرْآنِهِ الْكَرِيمِ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ ، « اُذِنَ لِلَّذِينَ يُقَاتَلُونَ بِأَنَّهُمْ ظُلِمُوا وَاِنَّ اللهَ عَلَى نَصْرِهِمْ لَقَدِيرُ ، الَّذِينَ اُخْرِجُوا مِنْ دِيَارِهِمْ بِغَيْرِ حَقٍّ اِلاَّ اَنْ يَقُولُوا رَبُّنَا اللهُ » صَدَقَ اللهُ الْعَلِيُّ الْعَظِيمُ ، وَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ ، « اِنَّ اللهَ تَعَالَى أَوْحَى اِلَيَّ اَنْ تَوَاضَعُوا حَتَّى لاَ يَبْغِيَ أَحَدٌ عَلَى أَحَدٍ وَلاَ يَفْخَرَ أَحَدٌ عَلَى أَحَدٍ » صَدَقَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ .

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ். இறுதித் தூதர், அகில உலகுக்கும் அருட்கொடை, அண்ணலெம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்ந்த ஆருயிர் குடும்பத்தினர், அருமை ஸஹாபாக்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் என்றென்றும் உண்டாவதாக.

அல்லாஹ் விதித்துள்ள கடமையை நிறைவேற்று முகமாக அவனில்லத்தில் வந்தமர்ந்திருக்கின்ற அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! அல்லாஹ் ஏவியவற்றை ஏற்று விலக்கியவற்றைத் தவிர்ந்து எல்லா நிலைகளிலும் அவனைப் பயந்து தக்வாவோடு வாழுமாறு ஆரம்பமாக எனக்கும் பின்னர் உங்களுக்கும் நான் நல்லுபதேசம் செய்கின்றேன்.

அன்புக்குரிய சகோதரர்களே! பெரியோர்களே! அல்லாஹ்வின் நல்லடியார்களே!

மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற உயர்ந்த கோட்பாட்டை இஸ்லாம் கொண்டுள்ளது. எனவே, மனிதன் இவ்வுலகில் கௌரவமாகவும் மரியாதையுடனும் வாழ வேண்டியது அவசியமாகும். இந்த அவசியத்தைக் கருத்திற் கொண்டுள்ள இஸ்லாம், மனிதனது கௌரவத்தைப் பாதிக்கின்ற எல்லா விதமான செயற்பாடுகளையும் தடைசெய்துள்ளது. அதேவேளை, மனித கௌரவத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான எல்லா விதமான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது. இவ்வகையில், மனித கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக இஸ்லாம் முன்வைத்துள்ள ஒரு எண்ணக்கருவே ஜிஹாத் ஆகும்.

இஸ்லாமிய ஷரீஆவைப் பொறுத்த வரை, ஜிஹாத் என்பது மிக உயர்ந்த ஒரு சமயக் கடமையாக மதிக்கப்படுகின்றது. அது முஸ்லிம்களின் சுயகௌரவம் எனவும், இஸ்லாத்தைப் பாதுகாக்கும் கேடயம் எனவும் புகழப்படுகின்றது. ஆனால், துரதிஷ்டவசமாக, முஸ்லிம்கள் சிலரும், முஸ்லிம்கள் அல்லாதோர் பலரும் ஜிஹாத் என்பதை இன்னும் தவறாகவே விளங்கி வைத்திருக்கின்றார்கள் என்பதுதான் கவலை தரும் விடயமாக உள்ளது.

அதாவது, ஜிஹாத் என்பது இஸ்லாமிய தீவிரவாதம் என்று முஸ்லிம்கள் அல்லாதோர் கருதிக் கொண்டிருக்கின்றனர். அதேவேளை, ஜிஹாத் என்பது முற்று முழுதான ஓர் ஆயுதப் போராட்டம் என்று முஸ்லிம்களில் சிலர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இத்தகையவர்கள்தான், தமது அறிவீனத்தினால் இஸ்லாத்திற்கு அவப் பெயரை களங்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் தமது கைகளில் உள்ள ஆயுதங்களைப் பயன்படுத்தி சின்னச்சின்ன குற்றங்களுக்கும் தண்டனை கொடுக்க முனைகின்றனர். விபசாரம் செய்வதாக அறியப்பட்டால், சம்பந்தப்பட்டவர்களை சுட்டுக் கொல்கின்றனர். கொள்ளையடிப்பதாக அறிந்தால், அவர்களையும் சுட்டுக் கொல்கின்றனர். யாராவது ஒருவருக்கு வீணாக அடித்து

விட்டதாக அறிந்தால், அவரையும் சுட்டுக் கொல்கின்றனர். எல்லாப் பிரச்சினைகளையும் ஆயுத முனையில் தீர்க்க முடியும் என்று இவர்கள் கருதுகின்றனர். இத்தகைய செயல்களை வெளியில் நின்று பார்க்கும் வேறொரு சமூகம் இஸ்லாத்தைப் பற்றி என்ன நினைக்கும்? இஸ்லாத்தின் மீது நல்லபிப்பிராயம் அச்சமூகத்துக்கு எப்படித் தோன்றும்?

எனவே, அன்புக்குரிய சகோதரர்களே! பெரியோர்களே! இஸ்லாம் என்பது சமாதானத்தை வலியுறுத்தும் மார்க்கம் என்பதை நாம் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். அந்த வழியில், ஜிஹாத் என்ற இஸ்லாமியக் கடமை வெறுமனே ஆயுதப் போராட்டத்தை மட்டும் குறிக்கவில்லை என்பதையும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஜிஹாத் என்ற அறபுச் சொல்லுக்கு முயற்சி என்பதே நேரடிய அர்த்தமாகும். நன்மையையும் பிரயோசனத்தையும் ஏற்படுத்தக் கூடிய அனைத்து மனித முயற்சிகளையும் இது குறிக்கின்றது. தனிமனித, சமூக வாழ்வில் ஏற்படுகின்ற ஆபத்துகளையும் கஷ்டங்களையும் நீக்குவதற்காக தமது சொல், செயல், சிந்தனை மூலமாக மேற்கொள்ளுகின்ற செயற்பாடுகளையும் இது குறிக்கின்றது. சமூகத்தில் மகிழ்ச்சியையும் மலர்ச்சியையும் ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற உணர்வுபூர்வமான உழைப்பையும் இது குறிக்கின்றது. சுருங்கச் சொல்வதானால், மனித சமூகத்துக்குப் பயனளிக்கக் கூடிய எல்லா விடயங்களையும் ஜிஹாத் என நாம் கூறலாம்.

இந்தப் பொதுவான, பரந்த வரைவிலக்கணத்தின் படி பார்க்கும் போது, கற்றல்-கற்பித்தல் செயற்பாடு ஒரு ஜிஹாத் ஆகும். தொழில் முயற்சிகளை மேற்கொள்வது ஒரு ஜிஹாத் ஆகும். குடும்-சமூக உறவுகளைப் பேணுவது ஒரு ஜிஹாத் ஆகும். நன்மைகளைத் தூண்டி, தீமைகளைத் தடுப்பது ஒரு ஜிஹாத் ஆகும். பிறருக்கு உதவுதல், இளைஞர்களுக்கு ஒழுக்கத்தைப் போதித்தல், முதியோருக்கு மதிப்பளித்தல், சிறுவர் மீது இரக்கம் காட்டுதல் என்பனவும் ஜிஹாத் ஆகும். கடன்பட்டோருக்கும் ஏழைகளுக்கு பொருளுதவி வழங்குதல், ஏழைச் சிறார்களின் கல்விக்கு உதவுதல், வீடு, கிணறு மற்றும் மலசலகூடம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்தல் போன்றனவும் ஜிஹாத் ஆகும். விதவைகளுக்கு வாழ்வளித்தல், அநாதைகளை ஆதரித்தல், அகதிகளை அரவணைத்தல் என்பனவும் ஜிஹாத் ஆகும். இளைஞர்-யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல்களை வழங்குதல், பாதைகள் அமைத்துக் கொடுத்தல், இல்லாதோருக்கு வீடு கட்டிக் கொடுத்தல் ஆகியனவும் ஜிஹாத் ஆகும்.

எனவே, ஜிஹாத் என்பது மிகப் பரந்த ஒரு இஸ்லாமியக் கடமை என்பதை இதன் மூலம் விளங்கிக் கொள்கின்றது. இந்த எல்லா வகையான செயற்பாடுகளின் வரிசையில் ஓர் அங்கமாகவே, முஸ்லிம்களை அழிக்க வருகின்ற ஆயுதக் குழுக்களிலிருந்து முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஆயுதப் போராட்டமும் ஒரு ஜிஹாதாக அமைகின்றது.

ஆனால், துரதிஷ்டவசமாக, நாம் முக்கியமான பலவற்றை விட்டு விட்டு ஓர் அம்சத்தை மட்டுமே ஜிஹாத் என விளங்கி அதன்படி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

இஸ்லாமிய வரலாற்றை ஆழமாக நோக்கும் போது, ஜிஹாதின் உண்மையான பரப்பு என்ன என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியும். அதாவது, நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்திற்குப் பின் மக்காவில் 13 வருடங்கள் வாழ்ந்தார்கள். இக்காலப் பகுதியில், இராணுவ முன்னெடுப்புகள் எவற்றையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. எத்தனையோ இழப்புகள், தொல்லைகள், அநியாயங்கள் நபியவர்களுக்கும் அவர்களை ஏற்றுக் கொண்ட முஸ்லிம்களுக்கு விழைவிக்கப்பட்டன. ஆனால், நபியவர்கள் பொறுமையாக இருந்ததோடு, பொறுமையாக இருக்குமாறே தமது தோழர்களுக்கும் பணித்தார்கள். நபியவர்கள், மக்காவிலிருந்து மதீனாவுக்குச் சென்று, அங்கே ஒரு முழுமையான இஸ்லாமிய சமூகக் கட்டமைப்பொன்றை உருவாக்கிய பின்பே, ஆயுதப் போராட்டத்திற்கான அனுமதி முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டது. அந்த அனுமதியும் கூட, தற்காப்புக்காக மட்டுமே யுத்தம் புரியலாம் என்ற நிபந்தனையைத் தாங்கியே வந்தது. இதன்படி மக்காவில் ஆயுதப் போராட்டத்துக்கான அனுமதி முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

எனினும், நபியவர்கள் மக்காவில் வாழ்ந்த காலப் பகுதியில் இறங்கிய அல்குர்ஆன் வசனங்கள் சில, ஜிஹாத் பற்றிய சிந்தனையைத் தோற்றுவிப்பவையாகவும், ஜிஹாதை வலியுறுத்துபவையாகவும் அமைந்திருந்தன. இதன் மூலம் ஜிஹாத் என்பது வெறுமனே ஓர் ஆயுதப் போராட்டமல்ல: அது மிகப் பரந்த ஒரு சமூகப் பணி என்பது தெளிவாகின்றது.

ஜிஹாத் என்பதை இஸ்லாம் இரண்டு வகையாக நொக்குகின்றது. 1. ஆன்மாவுடனான போராட்டம். 2. முஸ்லிம்களை அழிக்க வருகின்ற இஸ்லாத்தின் எதிரிகளுடனான போராட்டம். இவ்விரண்டிலும் ஆன்மாவுடனான போராட்டத்தையே இஸ்லாம்

முதன்மைப்படுத்துகின்றது. மக்காவில் இறங்கிய அல்குர்ஆன் வசனங்களில் வலியுறுத்தப்பட்ட ஜிஹாத் இதுவேயாகும்.

ஆன்மாவுடனான ஜிஹாத் என்பது, மார்க்க வரையறைகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதைக் குறிக்கின்றது. அதாவது இஸ்லாம் கடமையாக்கியுள்ளவற்றைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும். இஸ்லாம் விலக்கியுள்ளவற்றை முழுமையாக தவிர்ந்து கொள்ள வேண்டும். இதுவே ஆன்மாவுடனான ஜிஹாத் ஆகும். உதாரணமாக, மதுபானம் அருந்த வேண்டாம் என்று இஸ்லாம் கூறியுள்ளது. இஸ்லாத்தின் இந்தக் கட்டளைக்கு அடிபணிந்து, இரகசியத்திலும் பரகசியத்திலும் மதுபானம் அருந்தாது வாழ்பவர் உண்மையில் தனது ஆன்மாவுடனான ஜிஹாதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். அவ்வாறே தொழுகையைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது. இக்கட்டளைக்குப் பணிந்து, ஐவேளைத் தொழுகைகளையும் முறையாக ஒருவர் பேணி வருவாரானால், அவர் தூய்மையான ஒரு ஜிஹாதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார் என்பது அர்த்தமாகும். எனவே, நல்ல விடயங்களை மேற்கொள்வதும் கெட்ட விடயங்களைத் தவிர்ந்து கொள்வதும் கூட ஒரு உயர்ந்த ஜிஹாதே என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

*அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!*

தபூக் யுத்தம் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இஸ்லாமிய வரலாற்றில் மிகப் பிரபல்யமான ஒரு யுத்தம். ஏனைய யுத்தங்களை விட, அதிகமான இழப்புகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் தியாகங்களுக்கும் முஸ்லிம்கள் உள்ளாக்கப்பட்டது இந்த யுத்தத்திலேதான். யுத்தத்தில் எதிரிகளை வெற்றி கொண்ட முஸ்லிம்கள் களைத்துச் சோர்ந்து ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது, அவர்களைப் பார்த்து நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் இப்போது பங்குபற்றியது சிறிய ஜிஹாதுதான். இதைவிடப் பெரிய ஜிஹாதொன்று உங்களுக்கு முன்னால் இருக்கிறது. அதுதான் உங்களது ஆன்மாவுடனான ஜிஹாத்" என்றார்கள்.

எனவே, ஆன்மாவுடன் நாம் மேற்கொள்கின்ற ஜிஹாதே பெரிய ஜிஹாதாகும். எமது நப்ஸ் என்பது மறைமுகமாக உள்ள எமது எதிரி. அந்த மறைமுகமான எதிரியுடன் போரிடுவதென்பது உண்மையில், எமது பகிரங்கமான எதிரியுடன் போரிடுவதை விடக் கடினமானதுதான். இஸ்லாம் ஹராமாக்கிய விடயங்களைச் செய்யும் படியாக இந்த நப்சு எமக்கு ஆசையூட்டும். இஸ்லாம்

கடமையாக்கியுள்ள ஒரு விடயத்தை செய்யாது விட்டு விடும்படியாகவும் இந்த நப்ஸ் எம்மைத் தூண்டும். இஸ்லாமிய வரையறைகளைக் கொஞ்சம் மீறிப்பார்ப்போமே என்று இந்த நப்ஸ் எம்மை ஆர்வமூட்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் எமது இந்த எதிரியுடன் போரிட்டு ஜிஹாத் புரிந்து எமது ஈமானையும் இஸ்லாத்தையும் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும்.

இரண்டாவது வகையான ஜிஹாதே ஆயுதப் போராட்டமாகும். இஸ்லாமிய கட்டளையின் பிரகாரம், எதிரிகளுடனான ஆயுதப் போராட்டம் என்பது இறுதிக் கட்ட முயற்சியாகும். கண்டிப்பான பல நிபந்தனைகளுடனேயே இஸ்லாம் இவ்வகை ஜிஹாதுக்கு அனுமதியளித்துள்ளது. எடுத்ததற்கெல்லாம் ஆயுதத்தை நீட்டிச் சுட்டுவிட்டு பிறகு அது ஜிஹாத் என்று கூறிக் கொள்வது உண்மையான ஜிஹாதாகாது.

ஆயுத ரீதியான ஜிஹாதுக்கு இஸ்லாம் பல நிபந்தனைகளை முன்வைத்துள்ளது. குறிப்பாக, இவ்வகை ஜிஹாத் ஒரு தூய்மையான நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். அதாவது, எதிரிகள் முஸ்லிம்களை அழிப்பதற்கு அல்லது சிறைப்பிடிப்பதற்கு, அல்லது முஸ்லிம்களது சொத்துகளைச் சூறையாடுவதற்கு, அல்லது முஸ்லிம்களது பூமியை அபகரிப்பதற்கு வருவார்களானால், அவர்களை எதிர்த்துப் போராடுவதற்காக ஆயுதமேந்துவது கடமையாகும். இதைத் தவிர, நாடுபிடிப்பதற்காக, அல்லது பிற சமூகத்தாரின் பொருளாதாரங்களைக் கொள்ளையிடுவதற்காக ஜிஹாதில் ஈடுபட முடியாது. அவ்வாறே மனிதர்களை அடிமைப்படுத்துவதற்காக, அல்லது அவர்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்காக ஜிஹாதில் ஈடுபட முடியாது. ஜிஹாதின் பெயரால் இவ்வாறான குற்றங்களைப் புரிவது மிகப் பெரும் பாவமாகும் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

தமது உயிர்களையும் உடமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கு இராணுவ முன்னெடுப்பைத் தவிர வேறு வழியில்லை என்ற நிர்ப்பந்தமான இறுதிக் கட்டத்திலேயே இவ்வகை ஜிஹாத் அனுமதிக்கப்படும் என்ற நியதி, மனித வாழ்க்கை மீதான இஸ்லாத்தின் அக்கறையை நன்கு தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளது.

புனித அல்குர்ஆன் கூறுகின்றது:

اُذِنَ لِلَّذِينَ يُقَاتَلُونَ بِأَنَّهُمْ ظُلِمُوا وَاِنَّ اللهَ عَلَى نَصْرِهِمْ لَقَدِيرُ ، الَّذِينَ اُخْرِجُوا مِنْ دِيَارِهِمْ بِغَيْرِ حَقٍّ اِلاَّ اَنْ يَقُولُوا رَبُّنَا اللهُ

"(நிராகரிப்போரால்) அநீதிக்குட்படுத்தப்பட்டவர்களுக்கு (அவர்களை எதிர்த்து) யுத்தம் செய்ய அனுமதியளிக்கப்பட்டு விட்டது. நிச்சயமாக அல்லாஹ் இவர்களுக்கு உதவி செய்ய பேராற்றலுடையோனாக இருக்கின்றான். இவர்கள் (எத்தகையோரென்றால்) நியாயமின்றித் தங்கள் வீடுகளிலிருந்து (விரோதிகளால்) துரத்தப்பட்டார்கள். எங்களுடைய இறைவன் அல்லாஹ் ஒருவன்தான் என்று கூறியதுதான் இவர்கள் செய்த குற்றம்" *(22:39,40)*

அல்லாஹ் ஒருவன் என்பதை ஏற்று கலிமாக் கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமையினால், ஒரு சமூகம் தங்களது பிரதேசத்திலிருந்து துரத்தப்படுவார்களாயின், அத்தகைய அநீதியை எதிர்த்துப் போராடுவது அச்சமூகத்தார் மீது கடமையாகும். இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் எதிர்த்துப் போராடாதிருப்பது பெரும் பாவமாகும். எவ்வாறு, அநீதியாக ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பது பாவமாகுமோ, அவ்வாறே அவசியமான நேரத்தில் யுத்தம் புரியாது அவமானப்பட்டுக் கொண்டிருப்பதும் பாவமாகும் என்பதை இஸ்லாம் எமக்குச் சொல்லிக் காட்டுகின்றது. இதிலிருந்து விளங்குவது என்னவென்றால், ஒவ்வொரு மனித சமூகமும் கௌரவத்தோடும் சுயமரியாதையோடும் வாழ வேண்டும் என்பதாகும். அத்தகைய வாழ்க்கைக்குப் பங்கம் ஏற்படுகின்ற போது, அதை நீக்கப் பாடுபடுவது அவசியமாகும்.

அல்குர்ஆன் மற்றோர் இடத்தில் இவ்வாறு கூறுகின்றது:

وَقَاتِلُوا فِى سَبِيْلِ اللهِ الَّذِينَ يُقَاتِلُونَكُمْ وَلاَ تَعْتَدُوا اِنَّ اللهَ لاَ يُحِبُّ الْمُعْتَدِينَ .

"அல்லாஹ்வுடைய பாதையில் (நீங்கள் செல்வதைத் தடுத்து) உங்களை எதிர்த்தோருடன் நீங்களும் யுத்தம் புரியுங்கள். ஆனால், நீங்கள் வரம்பு மீறிவிட வேண்டாம். ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுவோரை நேசிப்பதில்லை" *(2:190)*

இங்கு வரம்பு எனக் கூறப்பட்டுள்ளதன் பொருள், தம்மைத் தாக்கும் தீயவர்களைத் தடுத்து நிறுத்தக் கூடிய அளவுக்கு மட்டுமே பலவந்தம் பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதாகும். பிரயொகிக்கப்படும் பலவந்தம் பழிவாங்கும் நோக்குடனோ, ஏகாதிபத்தியவாத ஆக்கிரமிப்பொன்றைத் திணிக்கும் நோக்குடனோ வரம்பு மீறிச் செல்லக் கூடாது.

இந்த விடயத்தில் நபி (ஸல்) அவர்கள் மிகவும் கண்டிப்புடன் கட்டளையிட்டிருக்கின்றார்கள். அதாவது, முஸ்லிம்களை அழிக்க வருகின்ற எதிரிகளுடன் போரில் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்திய நபியவர்கள், அத்தகைய போர் நடவடிக்கையின் போது, நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்குவிதிகளைத் தெளிவாக விபரித்துக் கூறியுள்ளார்கள். அதாவது போர்க்குற்றங்களில் ஈடுபடக் கூடாது என அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள். தமது துரப்புகளைப் போருக்கு அனுப்பும் சந்தர்ப்பங்களில் நபியவர்கள் பொதுவான அறிவுறுத்தல் விடுப்பார்கள்:

“அல்லாஹ்வின் பெயரால், அல்லாஹ்வின் காரியத்துக்காக, அல்லாஹ்வின் உதவியுடன் செல்லுங்கள். நீங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று அல்லாஹ் விரும்புகின்றானோ அவ்வாறே நடந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் கட்டளைகளுக்குத் துரோகமிழைக்காதீர்கள். பொய்யுரைக்காதீர்கள், எவரையும் கொடுமைப்படுத்தாதீர்கள். வயது முதிர்ந்தோர், உடல் நலிந்தோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் மீது கருணை காட்டுங்கள். தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் மட்டும் ஒரு மரத்தை வெட்டி வீழ்த்துங்கள். மிகக் குறைந்த ரத்திலிருந்து மிக உயர்வான தரம் வரையிலுமுள்ள அனைத்துக் கைதிகளுக்கும் புகலிடமளியுங்கள். அந்தச் சத்தியத்தைப் பின்பற்றுபவர் உங்கள் சகோதரர் ஆகிவிடுகின்றார். அவர் மறுப்புத் தெரிவித்தால், சமாதானம் ஏற்பட்டவுடன் தனது வீட்டுக்குச் செல்வதற்கு அவரை விடுவியுங்கள். எல்லா நேரங்களிலும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ்வின் உதவிக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். உங்கள் நடத்தை தொடர்பாக, அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுங்கள்”

போரில் ஈடுபடக் கூடிய எந்தவொரு குழுவும் கடைப்பிடிக்க வேண்டிய அற்புதமான உபதேசங்கள் இவை. இந்த உபதேசங்களினூடாக, யுத்தம் சம்பந்தமான இஸ்லாத்தின் கோட்பாடுகள் எவ்வளவு புனிதத்துவமும் மனிதாபிமானமும் கொண்டவை என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடிகின்றது. எந்தவொரு யுத்தமும் அநீதியாக இடம்பெறக் கூடாது என்பதை

வலியுறுத்தும் இஸ்லாம், எந்தவொரு யுத்தத்திலும் அநீதி இடம்பெறக் கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றது.

நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரழி) அவர்களிடம் யுத்த உபதேசம் செய்தார்கள்: “போரை ஆரம்பித்து வைக்கும் ஆக்கிரமிப்பாளராக ஒரு போதும் இருக்காதீர்கள். தொடக்கத்தில் உங்கள் எதிரியை உண்மையான அல்லாஹ்வின் பால் திரும்புமாறு அழைப்பு விடுங்கள். அல்லாஹ் உங்கள் மூலமாக ஓர் ஆணையேனும் விசுவாசத்தின் பாதையில் பிரவேசிக்கச் செய்தால், அது சூரியன் தனது ஒளியைப் பாய்ச்சும் அனைத்துப் பொருட்களும் உமக்குச் சொந்தமாக இருப்பதிலும் பார்க்க மேலானதாகும்” என்றார்கள்

எனவே, யுத்தம் செய்து மனிதர்களை அடிமைப்படுத்துவதை விட, கொள்கையினூடாக அவர்களை ஒரே சமூகத்தினராக மாற்ற வேண்டும் என்பதையே இஸ்லாம் விரும்புகின்றது. ஏனெனில், யுத்தம் போன்ற வன்முறைச் செயல் ளைவ ிட, அன்பும் அஹிம்சையும் மனிதர்களுக்கு அதிக பயன்தருபவை என்ற கொள்கையை இஸ்லாம் கொண்டுள்ளது.

ஹஸ்ரத் அலீ (ரழி) அவர்கள், சிப்பீன் யுத்தத்திற்குச் செல்லத் தயாராக இருந்த தமது துரப்புக்களைப் பார்த்து இறுதிக் கட்டளை பிறப்பித்தார்கள்: “உங்களது எதிரி போர்க்களத்தில் பின்வாங்னி ஓடினால், அவனைத் துரத்திச் செல்ல வேண்டாம். கொலை செய்யவும் வேண்டாம். தம்மைக் காத்துக் கொள்ளும் சக்தியை இழந்தவர்கள், அல்லது போர்க்களத்தில் காயமுற்று வீழ்ந்தோர் ஆகியோர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளக் கூடாது. பெண்கள் கண்ணியப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் அச்சப்படும் விதத்திலோ அல்லது தொல்லைப்படும் விதத்திலோ காரியங்கள் ஆற்றக் கூடாது”

எனவே, இந்த ஹதீஸ்களின் பிரகாரம், நாம் இஸ்லாத்தைப் பற்றியும் அதன் போர்க் கொள்கைகள பற்றியும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. அதாவது, இஸ்லாத்தை உலக மக்களின் பால் தொண்டாற்றச் செய்வதே ஜிஹாதின் நோக்கமாகும். இதன்படி ஜிஹாத் என்பது பூமியில் சமாதானத்தை மலரச் செய்ய வேண்டும். சண்டைகளையும் அக்கிரமங்களையும் இல்லாதொழிக்க வேண்டும். உலகில் சமாதானத்தையும் அமைதியையும் நீதியையும் நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியே உண்மையான ஜிஹாத் ஆகும்.

அன்பார்ந்த இஸ்லாமிய சகோதரர்களே! பெரியோர்களே! அல்லாஹ்வின் நல்லடியார்களே! இஸ்லாத்தில் சமாதானம் என்பது முக்கியமானதாக வலியுறுத்தப்பட்டுள்ளது. சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஒருவர் தனது சொந்த நலன்களையும் விட்டுக் கொடுக்க முன்வர வேண்டுமென இஸ்லாம் முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. அல்குர்ஆன் இதுபற்றிக் கூறும் போது,

وَاِنْ طَائِفَتَانِ مِنَ الْمُؤْمِنِينَ اقْتَتَلُوا فَأَصْلِحُوا بَيْنَهُمَا فَاِنْ بَغَتْ اِحْدَيهُمَا عَلَى الْاُخْرَى فَقَاتِلُوا الَّتِى تَبْغِى حَتَّى تَفِىءَ اِلَى اَمْرِ اللهِ فَإِنْ فَاءَتْ فَأَصْلِحُوا بَيْنَهُمَا بِالْعَدْلِ وَاَقْسِطُوا اِنَّ اللهَ يُحِبُّ الْمُقْسِطِينَ .

“விசுவாசிகளிலுள்ள இரு வகுப்பார் தங்களுக்குள் சச்சரவு செய்து கொண்டால், இரு வகுப்பாருக்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். பின்னர் அவர்களில் ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பரின் மீது வரம்பு மீறி அக்கிரமம் செய்தால், அவ்வாறு அக்கிரமம் செய்தவர்களுடன் அல்லாஹ்வின் கட்டளை வரும் வரை நீங்கள் எதிர்த்துப் போராடுங்கள். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையின் பால் திரும்பிவிட்டால் நியாயமான முறையில் அவ்விரு வகுப்பாருக்குமிடையில் சமாதானம் செய்து வையுங்கள். இதில் நீங்கள் நியாயமாக நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதவான்களை நேசிக்கின்றான்” *(49:09)*

சமாதானத்தை உண்டாக்கப் பாடுபடுபவர்கள் மீது அல்லாஹ்வின் ஆசி உண்டென்பதை இந்த வசனம் தெளிவுபடுத்துகின்றது. அதுமட்டுமன்றி, அநீதியிழைத்தோருக்கு எதிராக போர் செய்ய நேரிட்டாலும் முஸ்லிம் போராளிகள் சமாதானத்தை உண்டாக்குபவர்களாகவே இருக்க வேண்டும், மாறாக அநீதியை அடக்குவதாகக் கூறிக் கொண்டு மற்றொரு அநீதியை இழைக்கக் கூடாது என்பதையும் இவ்வசனம் எமக்கு வலியுறுத்துகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்:

اِنَّ اللهَ تَعَالَى أَوْحَى اِلَيَّ اَنْ تَوَاضَعُوا حَتَّى لاَ يَبْغِيَ أَحَدٌ عَلَى أَحَدٍ وَلاَ يَفْخَرَ أَحَدٌ عَلَى أَحَدٍ

“நீங்கள் பணிவோடு நடந்து கொள்ளுங்கள். உங்களில் ஒருவர் மீது மற்றவர், அநியாயம் செய்ய வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றவர் மீது பொறாமை கொள்ள வேண்டாம்” (முஸ்லிம்)

எனவே, அன்புக்குரிய சகோதரர்களே! பெரியோர்களே! இஸ்லாமிய ஜிஹாத் என்பது மக்களுக்கு எதிராக யுத்தம் புரிவதல்ல, அது அடக்குமுறைக்கும் கொடுங்கோன்மைக்கும் அநீதிக்கும் எதிராகவே யுத்தம் புரிகின்றது. பொய்யான கருத்துக்களை வேரோடு களைந்தெறிந்து விட்டு அவற்றிற்குப் பதிலாக தூய்மை, விசுவாசம் என்பவற்றின் மகொன்னதமான கருத்துக்களை ஏற்படுத்துவதற்கு அது விழைகின்றது. நன்மைக்கும் தீமைக்கும் எதிரான ஓயாத போராட்டத்தில் பகைவர்களை இறைவனின் பக்கம் வென்றெடுப்பதே இஸ்லாத்தின் நோக்கமாகும்.

எனவே, அந்நிய சமூகத்தைச் சேர்ந்த ஒருவனை யுத்தத்தின் மூலம் வெல்வதை விட அவனை இஸ்லாத்தின் பக்கம் சேர்த்தெடுப்பதே உண்மையான வெற்றியாகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வகையில், ஜிஹாத் எனும் இஸ்லாமிய சிந்தனை தனிமனித, சமூக ரீதியான முன்னேற்றத்தினதும் அபிவிருத்தியினதும் எண்ணக்கருக்களைக் கொண்ட தூய சமூகப் பணியாகும். இப்பணியின் மூலம் சமாதானத்தையும் சமூக நல்லுறவையும் வலியுறுத்தும் இஸ்லாத்தின் அடிப்படைப்ப ண்புகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

எனவே, ஜிஹாதை இஸ்லாமிய தீவிரவாதம் என்ற சொற்திணிப்புக்குள்ளோ, முற்று முழுதான ஆயுதப் போராட்டம் என்ற தவறான புரிதலுக்குள்ளோ சிறைப்படுத்தாது, சமூக அபிவிருத்திக்கான யக்கறையை முழுமையாக உள்வசாங்கியுள்ள சிறந்த சமயப் பணியே ஜிஹாத் என்ற யதார்த்தத்தை உணர்ந்து செயலாற்றும் பரந்த மனப்பக்குவத்தையும் சிந்தனைத் தூய்மையையும் எம் உள்ளங்களில் வளர்த்துக் கொள்வோமாக.

## குத்பா:05
## இஸ்லாமிய சகோதரத்துவம்

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ .

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ . اَلْحَمْدُ لِلهِ ، اَلْحَمْدُ لِلهِ رَبِّ الْعَالَمِيْنَ ، وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ ، وَالصَّلاَةُ وَالسَّلاَمُ عَلَى اَشْرَفِ اْلاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ سَيِّدِنَا مُحَمَّدْ رَسُوْلِ الْعَالَمِيْنَ ، وَعَلَى آلِهِ الطَّيِّبِيْنَ الطَّاهِرِيْنَ وَصَحَابَتِهِ الْمُنْتَجَبِيْنَ ، اَمَّا بَعْدُ ، فَقَدْ قَالَ اللهُ تَعَالَى فِى قُرْآنِهِ الْكَرِيْمِ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ، بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ ، « وَاعْتَصِمُوا بِحَبْلِ اللهِ جَمِيعًا وَلاَ تَفَرَّقُوا ، وَاذْكُرُوا نِعْمَةَ اللهِ عَلَيْكُمْ اِذْ كُنْتُمْ اَعْدَاءً فَأَلَّفَ بَيْنَ قُلُوبِكُمْ فَأَصْبَحْتُمْ بِنِعْمَتِهِ اِخْوَانًا » صَدَقَ اللهُ الْعَلِيُّ الْعَظِيْمُ . قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ ، « مَثَلُ الْمُؤْمِنِ فِى تَوَادِّهِمْ وَتَرَاحُمِهِمْ وَتَعَاطُفِهِمْ مَثَلُ الْجَسَدِ اِذَا اشْتَكَى مِنْهُ عُضْوٌ تَدَاعَى لَهُ سَائِرُ الْجَسَدِ بِالسَّهْرِ وَالْحُمَّى » صَدَقَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ .

*எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ். இறுதித் தூதர், அகில உலகுக்கும் அருட்கொடை, அண்ணலெம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்ந்த ஆருயிர் குடும்பத்தினர், அருமை ஸஹாபாக்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் என்றென்றும் உண்டாவதாக.*

அல்லாஹ் விதித்துள்ள கடமையை நிறைவேற்று முகமாக அவனில்லத்தில் வந்தமர்ந்திருக்கின்ற அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! அல்லாஹ் ஏவியவற்றை ஏற்று விலக்கியவற்றைத் தவிர்ந்து எல்லா நிலைகளிலும் அவனைப் பயந்து தக்வாவோடு வாழுமாறு ஆரம்பமாக எனக்கும் பின்னர் உங்களுக்கும் நான் நல்லுபதேசம் செய்கின்றேன்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

உலகில் எத்தனை சமூகங்கள் இருந்தாலும், பொருளாதாரத்திலும் அதிகாரத்திலும் அவை எவ்வளவு உயர்ந்திருந்தாலும், அல்லாஹ் கௌரவப்படுத்தியுள்ள ஒரே சமூகம் முஸ்லிம் சமூகம்தான். "நீங்கள்தான் சிறந்த சமூகம்" كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ என அல்லாஹ் திருமறையில் அதனைத் தெளிவாகப் பறைசாற்றி விட்டான்.

முஸ்லிம் சமூகம் தனக்குள்ள கௌரவத்தையும் மரியாதையையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால், அச்சமூகம் தனக்குள் ஒன்றுபட்டு சகோதரத்துவ வாஞ்சையையும் பரஸ்பர புரிந்துணர்வையும் பேணுவது மிக அவசியமான விடயமாகும். இவ்விடத்திலேதான் சமூக ஒற்றுமை என்பது அவசியமாகின்றது.

புனித இஸ்லாம் மார்க்கம், தன்னைப் பின்பற்றும் முஸ்லிம்களைப் பார்த்து அடிக்கடி வலியுறுத்தும் ஒரு விடயம் இந்த ஒற்றுமையாகும். நீங்கள் ஒற்றுமையாக இருங்கள், உங்களுக்குள் பிளவுபடாதீர்கள், பிரிந்து விடாதீர்கள் என்ற வலியுறுத்தல்களை குர்ஆனிலும் ஹதீஸிலும் அடிக்கடி நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

அல்குர்ஆன் எம்மைப் பார்த்து இவ்வாறு கூறுகின்றது:

وَاعْتَصِمُوا بِحَبْلِ اللهِ جَمِيعًا وَلاَ تَفرَّقُوا ، وَاذْكُرُوا نِعْمَةَ اللهِ عَلَيْكُمْ إِذْ كُنْتُمْ أَعْدَاءً فَأَلَّفَ بَيْنَ قُلُوبِكُمْ فَأَصْبَحْتُمْ بِنِعْمَتِهِ إِخْوَانًا ، وَكُنْتُمْ عَلَى شَفَا حُفْرَةٍ مِنَ النَّارِ فَأَنْقَذَكُمْ مِنْهَا ، كَذَلِكَ يُبَيِّنُ اللهُ لَكُمْ آيَاتِهِ لَعَلَّكُمْ تَهْتَدُونَ .

“மேலும், நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ்வுடைய (வேதமாகிய) கயிற்றைப் பலமாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். (உங்களுக்குள் கருத்து வேறுபட்டு) நீங்கள் பிரிந்து விட வேண்டாம். மேலும், உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருளை நினைத்துப் பாருங்கள். நீங்கள் (ஒருவர் மற்றவருக்கு) விரோதிகளாக இருந்த சமயத்தில் அவன் உங்கள் இதயங்களுக்கிடையே அன்புப் பிணைப்பை உண்டாக்கினான். ஆகவே, அவனுடைய பேரருளால் நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள். (அதற்கு முன்னர்) நீங்கள் நரக நெருப்புக் குழியின் விளிம்பின் மீதிருந்தீர்கள். அதிலிருந்தும் அவன் உங்களை ஈடேறச் செய்தான். நீங்கள் நேர்வழி பெறுவதற்காக அல்லாஹ் தன் வசனங்களை உங்களுக்கு இவ்வாறு தெளிவுபடுத்துகின்றான்” *(03:103)*

இந்த அல்குர்ஆன் வசனம் முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை வலியுறுத்துகின்றது. முஸ்லிம் சமூகம் தங்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாதென்றும், இஸ்லாத்தின் அடிப்படையிலான சகோதரத்துவ உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறுகின்றது. ஒற்றுமை இழந்து வேற்றுமை பெருகும் போது, அச்சமூகம் பல வழிகளிலும் பலவீனப்பட்டு விடுகின்றது. ஏனைய சமூகங்கள் இச்சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலையும் உருவாகி விடுகின்றது என்பதனையும் இவ்வசனம் தெளிவுபடுத்துகின்றது.

மற்றோர் இடத்தில் அல்குர்ஆன் கூறுகின்றது:

وَاَطِيعُوا اللهَ وَرَسُولَهُ وَلاَ تَنَازَعُوا فَـتَفْشَلُوا وَتَذْهَبَ رِيْحُكُمْ وَاصْبِرُوا

“அன்றியும் நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் வழிப்படுங்கள். மேலும், உங்களுக்குள் பிணங்கிக் கொள்ளாதீர்கள். அவ்வாறாயின் நீங்கள் தைரியத்தை இழந்து விடுவீர்கள். மேலும் உங்கள் வலிமை குன்றி விடும்” (8:46) என்று குறிப்பிடுகின்றது.

அன்புக்குரிய அல்லாஹ்வின் நல்லடியார்களே! சகோதரர்களே!

இஸ்லாத்தின் முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்று அது ஒற்றுமையை வலியுறுத்துவதாகும். அதேவேளை, வெறுமனே ஒற்றுமையாக இருங்கள், ஒற்றுமையாக இருங்கள் என்று கட்டளையிடுவதை மட்டும் தனது பண்பாக இஸ்லாம் கொண்டிருக்கவில்லை. மாறாக, ஒற்றுமையை வலியுறுத்தும் இஸ்லாம் அத்தகைய ஒற்றுமையைக்

கட்டியெழுப்புவதற்குத் தேவையான சமூக ஒழுங்குகளையும் வாழ்க்கை விதிமுறைகளையும் கூட விபரித்துத் தந்துள்ளது. இவ்வகையில், முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்காக இஸ்லாம் எத்தகைய முயற்சிகளைச் செய்துள்ளது என்பதைப் பற்றி நாம் அறிந்து கொள்வது சிறப்புக்குரியதாகும்.

நபி (ஸல்) அவர்கள் எம்மனைவருக்கும் முதன்மையான முன்மாதிரி ஆவார்கள். அவர்கள், ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தக் கூடிய பல ஹதீஸ்களை எடுத்துக் கூறியுள்ளதுடன், அவ்வாறு வாழ்ந்து காட்டியும் இருக்கின்றார்கள். இஸ்லாத்திற்கு முந்திய காலத்திலேயே நபியவர்கள் இத்தகைய பணிகளை ஆற்றியிருக்கின்றார்கள். உதாரணமாக, கஅபா புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வேளையில், ஹஜருல் அஸ்வத் கல்லை யார் சுவரில் பதிப்பது என்ற சர்ச்சை எழுந்தது. ஒவ்வொரு கோத்திரத்தாரும் தமது பெருமைகளைக் கூறிக் கொண்டு அக்கல்லைச் சுவரில் பதிப்பதற்கு தாமே தகுதியானவர்கள் என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தனர். பெரும் பிரச்சினையும் சண்டையும் இரத்தக்களறியும் ஏற்பட இருந்த அச்சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள் தலையிட்டு, அப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைத்தார்கள். ஹஜருல்அஸ்வத் கல்லை ஒரு துணியில் வைத்து அத்துணியின் ஓரங்களை ஒவ்வொரு கோத்திரத் தலைவரையும் பிடித்துத் தூக்கச் செய்து, பின் அதனைச் சுவரில் பதித்தார்கள். தமது சாமர்த்தியத்தாலும் திறமையாலும், மிகப் பெரும் பிரச்சினையொன்றை தவிர்த்து அம்மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குச் சென்ற வேளையில், அங்கே அவ்ஸ்-கஸ்ரஜ் எனும் இரு கோத்திரத்தினர் பன்னெடுங்காலமாகத் தமக்குள் பிளவுபட்டு சண்டைகளிலும் யுத்தங்களிலும் ஈடுபட்டு வந்தார்கள். நபியவர்கள் மதீனாவுக்குச் சென்ற பின் அவசரமாகச் செய்த பணி, இஸ்லாத்தின் பெயரால் அம்மக்களை ஒற்றுமைப்படுத்தியமையாகும். அதன்பின், மதீனாவாசிகளான அன்சார்களுக்கும் மக்காவாசிகளான முஹாஜிர்களுக்கும் இடையிலே பரஸ்பர புரிந்துணர்வையும் இஸ்லாமிய சகோதரத்துவத்தையும் அவர்கள் ஏற்படுத்தினார்கள். இத்தகைய செயற்பாட்டின் காரணமாகவே, மதீனா நகர் முஸ்லிம் சமூகத்தின் பெரும் அரசாக வளர்ச்சி கண்டது. எதிர்ப்பட்ட எல்லாத் தடைகளையும் எதிர்ப்புகளையும் முறியடித்து வெற்றி கொண்டது.

மதீனாவுக்கு வந்த பின், நபி (ஸல்) அவர்கள் பல யுத்தங்களுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அல்லாஹ்வின் அருளால் எல்லா யுத்தங்களிலும் நபியவர்களுக்கே வெற்றி கிடைத்தது. இவ்வெற்றிக்கு முக்கிய காரணியாய் அமைந்தது முஸ்லிம்கள் மத்தியில் இருந்த ஒற்றுமையும் சகோதரத்துவ உணர்வுமாகும். சொற்பமான எண்ணிக்கையாயிருந்த போதிலும், தம்மை விட பலமடங்கு அதிகமான எதிரிகளை இந்த ஒற்றுமையின் மூலமாகவே முஸ்லிம்கள் வெற்றி கொண்டார்கள். ஏனெனில், ஒற்றுமையாயிருக்கும் சமூகத்தின் மத்தியில் அல்லாஹ்வின் அருள் இறங்கிக் கொண்டேயிருக்கும்.

அன்பார்ந்த சகோதரர்களே! பெரியோர்களே! அல்லாஹ்வின் நல்லடியார்களே!

முஸ்லிம்கள் மத்தியில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்காக நபியவர்கள் மேற்கொண்ட முக்கியமான உபாயம், இஸ்லாமிய சகோதரத்துவத்தை ஏற்படுத்தியமையாகும். அதாவது முஸ்லிம்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் என்ற பிரகடனத்தை நபியவர்கள் முன்வைத்தார்கள். இதனையே அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

إِنَّمَا الْمُؤْمِنُونَ إِخْوَةٌ فَأَصْلِحُوا بَيْنَ أَخَوَيْكُمْ

“மூமின்கள் அனைவரும் சகோதரர்கள். எனவே, உங்களது சகோதரர்களுக்கு மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள்” (49:10)

இந்த சகோதரத்துவமானது, பொருளாதாரத்தையோ, பிரதேசத்தையோ, குடும்ப சமூக அந்தஸ்தையோ அடிப்படையாகக் கொண்டதாக அல்லாமல், இஸ்லாத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதாவது, ஒருவர் முஸ்லிமாகி விட்டால், ஏனைய முஸ்லிம்கள் அனைவருக்கும் அவர் சகோதரராக ஆகிவிடுவார். எனவே, ஒரு சகோதரர் மற்ற சகோதரருடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமோ, எத்தகைய அன்புப் பரிமாற்றத்தையும் விட்டுக்கொடுப்பையும் வழங்க வேண்டுமோ அத்தகைய அன்பையும் விட்டுக்கொடுப்பையும் அவர் வழங்க வேண்டும்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எத்தகைய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பவை பற்றியும் நபியவர்கள் விபரித்துள்ளார்கள். ஒரு முஸ்லிமின் பண்புகளாக, கடமைகளாக நபியவர்கள்

பிரகடனப்படுத்திய அனைத்து விடயங்களும் சமூக ஒற்றுமையை ஏற்படுத்தும் சிறந்த கருவிகளாக விளங்குகின்றன. நபியவர்கள் கூறினார்கள்: "ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்குச் சகோதரனாவான். அவன் அடுத்த முஸ்லிமுக்கு அநியாயம் இழைக்க மாட்டான்: அவனை எதிரியிடம் ஒப்படைத்துவிட மாட்டான். தனது சகோதரனின் தேவையை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றவரின் தேவையை நிறைவேற்றுவதில் அல்லாஹ் ஈடுபடுகிறான். எவர் ஒருவர் ஒரு முஸ்லிமின் ஒரு கஷ்டத்தை நீக்கினாரோ அவரது மறுமையின் கஷ்டங்களுள் ஒன்றை அல்லாஹ் அவரை விட்டும் நீக்கி விடுவான். ஒரு முஸ்லிமின் மானத்தை மறைத்தவரின் மானத்தை அல்லாஹ் மறுமை நாளில் மறைத்து விடுவான்" (புஹாரி, முஸ்லிம்)

இந்த ஹதீஸ், ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை மிக அழகாக விபரித்துக் கூறுகின்றது. இதனை நாம் விளக்கமாக நோக்கும் போது, இதில் குறிப்பிடப்படும் ஒவ்வொரு நடவடிக்கையும் முஸ்லிம்களுக்கிடையில் நல்லுறவையும் அன்பையும் ஏற்படுத்துகின்ற, ஒற்றுமையைக் கட்டியெழுப்புகின்ற அம்சங்களாக விளங்குவதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

அதாவது, ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அநியாயம் புரியக் கூடாது. நீதியாக நடந்து கொள்ளும் எவருடனும் மற்றவர்கள் நேசம் கொள்வது இயல்பு என்பது போலவே, அநீதியாக நடந்து கொள்ளும் எவருடனும் மற்றவர்கள் பகைமை கொள்வதும் இயல்பாகும். எனவே, நாம் நீதியாக நடந்து கொண்டால், மற்ற முஸ்லிம்கள் எம்மீது அன்பு காட்டுவார்கள். நேசம் கொள்வார்கள். இதனால் எம்மிடையே ஒற்றுமை செழிக்கும்.

மற்ற முஸ்லிமுக்கு அநீதி இழைக்கக் கூடாது என்று கூறிய நபியவர்கள், இத்தகைய அநீதி எவ்வகையில் இடம்பெறலாம் என்றும் கூறியிருக்கின்றார்கள். அதாவது, "ஒரு முஸ்லிமுக்கு மற்ற முஸ்லிமின் மீது ஹராமான விடயங்கள், அவனது இரத்தம், அவனது மானம், அவனது செல்வம் என்பவையாகும்" என்றார்கள். (புஹாரி)

அதாவது, ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமை அநியாயமாகக் கொலை செய்வது ஹராமாகும். ஒரு முஸ்லிமை மானபங்கப்படுத்துவது ஹராமாகும். ஒரு முஸ்லிமுடைய சொத்துகளை அபகரிப்பது ஹராமாகும். இவற்றுக்கு மாற்றமாக, முஸ்லிமுடைய உயிரைப் பாதுகாக்க வேண்டும்: அவனது மானத்தைக் காப்பாற்ற வேண்டும். அவன் தவறு செய்திருந்தாலும் அதைப் பகிரங்கப்படுத்தாது,

இரகசியமாக அதைத் திருத்த வேண்டும். அவனது சொத்துகளைப் பாதுகாக்க வேண்டும். அவற்றைக் கொள்ளையிட முயற்சிக்கக் கூடாது.

இன்றைய காலத்தில் பணத்திற்காக எதையும் செய்யத் துணியும் ஒரு போக்கு முஸ்லிம்களிடமும் தொற்றிக் கொண்டுள்ளது. உலக நாடுகளில் முஸ்லிம் சமூகம் அடைந்து வரும் துயருக்கும் இழப்புக்கும் இந்த பொருளாதார மோகமே காரணமாகும். சில முஸ்லிம்கள், தமது பக்கட்டை நிரப்பிக் கொள்வதற்காக தமது சகோதர முஸ்லிம்களைப் படுகொலை செய்யவும், அவர்களைப் பிற சமூகத்துக்குக் காட்டிக் கொடுக்கவும் முனைகின்றனர். இவ்வாறு காட்டிக் கொடுப்பதன் மூலமாக, அல்லது மறைமுகமாகக் கொலை செய்வதன் மூலமாக, அல்லது அவர்களது உறுப்புகளைச் சிதைப்பதன் மூலமாக, எமது சட்டைப் பைகளில் பணம் நிரம்பி விடலாம். ஆனால், எமது சமூகத்தின் நிலை என்ன? எமது சமூகத்தின் ஒற்றுமையின் நிலை என்னவாகும்? சகோதர முஸ்லிம்களைக் காட்டிக் கொடுத்து பணம் சம்பாதிப்பவர்கள், தமக்கும் இதேவிதமான அநியாயம் ஒன்று எதிர்காலத்தில் இடம்பெறும் என்பதை மறந்து விடக் கூடாது. இவ்வாறான காட்டிக் கொடுப்புகளும் கழுத்தறுப்புகளும் எமது சமூகத்தை சின்னாபின்னமாக்கி அதன் ஒற்றுமையையும் அழித்து விடுகின்றன. எனவேதான், நபி (ஸல்) அவர்கள், ஓர் உண்மையான முஸ்லிம் அடுத்த முஸ்லிமை எதிரியிடம் ஒப்படைத்துவிட மாட்டான். அதாவது எதிரியிடம் காட்டிக் கொடுக்க மாட்டான் என்று கூறியிருக்கின்றார்கள்.

அதுமட்டுமன்றி, ஒரு முஸ்லிம் ஏதேனும் பிரச்சினையில் மாட்டிக் கொள்கின்ற போது, ஏதேனும் தேவை ஏற்பட்டு சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்ற போது, அதை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அந்த முஸ்லிமுக்கு உதவி செய்து, அவனது தேவையை நிறைவு செய்து, அவனது கஷ்டத்தைப் போக்க முயற்சிக்க வேண்டும்.

மற்ற முஸ்லிமுடைய தேவையைத் தீர்த்து வைப்பதால் எங்களுக்கு என்ன நன்மை கிடைக்கும் என்று நாம் சிந்திக்கக் கூடும். அதற்காகத்தான் நபியவர்கள் கூறியிருக்கின்றார்கள். நீங்கள் அடுத்த முஸ்லிமுடைய தேவையொன்றைத் தீர்த்து வைத்தால், மறுமையில் உங்களது தேவையை அல்லாஹ் தீர்த்து வைப்பான் என்றார்கள். நீங்கள் அடுத்த முஸ்லிமுடைய கஷ்டமொன்றை நீக்கினால், மறுமையில் உங்களது கஷ்டத்தை அல்லாஹ் நீக்கி வைப்பான் என்றார்கள்.

அன்பார்ந்த இஸ்லாமிய சகோதரர்களே! பெரியோர்களே! அல்லாஹ்வின் நல்லடியார்களே!

ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுடன் வாய்மையுடன் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். மோசடி, ஏமாற்று என்பவற்றின் மூலமாக அந்த முஸ்லிமை வஞ்சிக்கக் கூடாது. நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்: "ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு சகோதரனாவான். ஒரு முஸ்லிம் தனது சக முஸ்லிமுக்கு செய்து வந்த உதவியை இடைநிறுத்திக் கைவிடமாட்டான்" (திர்மிதீ)

மேலும் நபியவர்கள் கூறியிருக்கின்றார்கள்:

مَثَلُ الْمُؤْمِنِ فِى تَوَادِّهِمْ وَتَرَاحُمِهِمْ وَتَعَاطُفِهِمْ مَثَلُ الْجَسَدِ اِذَا اشْتَكَى مِنْهُ عُضْوٌ تَدَاعَى لَهُ سَائِرُ الْجَسَدِ بِالسَّهْرِ وَالْحُمَّى

"பரஸ்பர அன்பு, இரக்கம், பாசம் முதலானவற்றில் ஒரு மூமினுக்கு உதாரணம், ஓர் உடலைப் போன்றாகும். உடலின் ஏதேனும் ஒரு பாகத்துக்கு ஆபத்து ஏற்படுகின்ற போது, ஏனைய உறுப்புகள் காய்ச்சல், வலி என்பவற்றை வெளிக்காட்டுகின்றன"

اَلْمُؤْمِنُ لِلْمُؤْمِنِ كَالْبُنْيَانِ يَشُدُّ بَعْضُهُ بَعْضًا ثُمَّ شَبَّكَ بَيْنَ اَصَابِعِهِ

"ஒரு மூமின் மற்ற மூமினுக்கு, ஒன்றோடு ஒன்று பொருந்தியுள்ள ஒரு கட்டடத்தைப் போன்றாவான்" என்று கூறியவாறு தமது கைவிரல்களை இணைத்துக் காட்டினார்கள் நபி (ஸல்) அவர்கள்.

ஒவ்வொரு முஸ்லிமும் தமக்கிடையே நல்லுறவைப் பேண வேண்டும். அவர்கள் கூட்டாக இணைந்து வியாபாரமோ ஏனைய தொழில் முயற்சிகளிலோ ஈடுபட்டால், அதனை நேர்மையாகவும் தொடராகவும் மேற்கொள்ள வேண்டும். திடீரென யாரும் யாரையும் கைவிட்டு விடாது பரஸ்பர புரிந்துணர்வோடு அவற்றை மேற்கொள்ள வேண்டும். ஒரு முஸ்லிம் பாதிக்கப்படுவான் என்று தெரிந்தால், அந்தப் பாதிப்பிலிருந்து அவனைப் பாதுகாப்பதற்கு அடுத்த முஸ்லிம் பாடுபட வேண்டும். அதற்காக சில தியாகங்களையும் செய்ய அவர் முன்வர வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள், மக்காவாசிகளான முஹாஜிர்களையும் மதீனாவாசிகளான அன்சார்களையும் சகோதரத்துவப்படுத்திய போது, அன்சார்கள் என்ன செய்தார்கள்? முஹாஜிர்களின் துயர்

துடைப்பதற்காக, தமது சொத்துகளைப் பாதியாகப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். தமது வியாபாரத்தில் பங்காளியாக இணைத்துக் கொண்டார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட மனைவி இருந்தால், அவர்களில் ஒருவரை திருமணமும் செய்து கொடுத்தார்கள். இது எவ்வளவு மகத்தான தியாகம் என்பதை நாம் உணர வேண்டும்.

இன்று துரதிஷ்டவசமாக, இத்தகைய உன்னதப் பண்புகளை முஸ்லிம்களிடத்தில் காண முடியாதுள்ளது. வியாபார கொடுக்கல் வாங்கலின் போதும், நட்பைப் பரிமாறிக் கொள்கின்ற வேளையிலும், குடும்ப உறவின் போதும், அண்டை அயலாருடன் உறவாடும் போதும் ஒரு முஸ்லிமை நம்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பொய், அநீதி, மோசடி, வஞ்சம், நம்பிக்கைத் துரோகம் போன்ற துர்க்குணங்கள் குடிகொண்ட பயங்கரமான மனிதனாக ஒரு முஸ்லிம் வாழ்வது கவலையளிக்கின்றது.

முஸ்லிம் என்பது உண்மையில் ஒரு பண்புப் பெயராகும். அதாவது ஒரு முஸ்லிம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நபியவர்கள் கூறியிருக்கின்றார்களோ அவ்வாறு இருப்பவரே முஸ்லிமாவார். வெறுமனே கலிமாவைச் சொன்னதனால் மட்டும் அவர் முழுமையான முஸ்லிம் ஆகி விட முடியாது. நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்:

اَلْمُسْلِمُ مَنْ سَلِمَ الْمُسْلِمُونَ مِنْ لِسَانِهِ وَيَدِهِ

“எவரது நாவிலிருந்தும் கையிலிருந்தும் ஒரு முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெற்றார்களோ அவரே உண்மை முஸ்லிமாவார்” (புஹாரி)

இதன்படி, ஒரு முஸ்லிம் என்பவர், ஏனைய முஸ்லிம்களுக்கு தனது உடலுறுப்புகளைப் பயன்படுத்தி கஷ்டம் விளைவிக்காதவராக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் அவர் முஸ்லிமாவார். இந்த நிலையிலிருந்து மாறும் போது அவர் தனது முஸ்லிம் எனும் அந்தஸ்தை இழந்து விடுகின்றார். உதாரணமாக, ஒரு முஸ்லிமுடைய பொருளாதாரத்தை அநியாயமாகச் சுரண்டுபவர், ஒரு முஸ்லிமைப்ப ற்றி குறைகூறுபவர், ஒரு முஸ்லிமைக் கொலை செய்பவர் இவ்வாறு செய்பவர்களெல்லாம் உண்மையில் முஸ்லிம்களாக இருக்க முடியாது.

அன்புக்குரிய சகோதரர்களே! பெரியோர்களே! அல்லாஹ்வின் நல்லடியார்களே!

تَعَاوَنُوا عَلَى الْبِرِّ وَالتَّقْوَى

“நன்மைக்கும் இறையச்சத்திற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள்” என்று அல்குர்ஆன் எங்களுக்குக் கட்டளையிடுகின்றது. எனவே, அடுத்த முஸ்லிமுக்கு உதவி செய்வது அவசியம் என்பது போலவே, அந்த உதவி அவர்களை நல்வழியில் ஈடுபடுத்த வேண்டும் என்பதும் அவசியமாகும். எமது உதவி, ஒரு முஸ்லிமை தவறான வழியில் இட்டுச் செல்லுமானால், நிச்சயமாக அது எமக்கு பெரும் பாவமாக ஆகிவிடும். “நன்மைக்குக் காரணமாக இருப்பவன் அதைச் செய்தவனைப் போன்றாவான். அவ்வாறே தீமைக்குக் காரணமாக இருப்பவனும் அதைச் செய்தவன் போன்றாவான்” என நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். எனவே, நல்ல விடயங்களுக்கு மட்டுமே நாம் உதவி புரிய வேண்டும். தீய விடயங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

اُنْصُرْ اَخَاكَ ظَالِمًا أوْ مَظْلُومًا

“உனது சகோதரன் அநீதியிழைக்கப்பட்டவனாக இருந்தாலும் அநீதியிழைப்பவனாக இருந்தாலும் அவனுக்கு உதவி செய்” என நபி (ஸல்) அவர்கள் கூறிய போது, “அநீதியிழைக்கப்பட்டவனுக்கு உதவி செய்யலாம், அநீதி இழைத்தவனுக்குமா நாங்கள் உதவி செய்ய வேண்டும்?” என ஸஹாபாக்கள் வினவினார்கள். அதற்கு நபியவர்கள், “அநீதியிழைப்பதை விட்டும் தடுத்து நிறுத்துவதே அவனுக்கு நீங்கள் செய்யும் உதவியாகும்” என்றார்கள். (புஹாரி)

சிலவேளை, ஒரு முஸ்லிம் சகோதரனின் தேவையைப் பரிபூரணமாக நிறைவேற்றுவது எமக்கு சிரமமான விடயமாக அல்லது பொருளாதாரத்தின் அடிப்படையில் கஷ்டமான விடயமாக இருக்கலாம். ஆனால், அடுத்த சகோதரனின் தேவையை நிறைவேற்ற வேண்டும் என்ற நல்ல மனோநிலையும் அதற்கான முயற்சிகளும் முக்கியமானவையாகும். அதாவது அல்லாஹ் எமது வெளித்தோற்றச் செயல்களைப் பார்ப்பதில்லை, எமது உள்ளத்தையே பார்க்கின்றான். எனவே, கஷ்டப்படுகின்ற முஸ்லிமுக்கு முடிந்தவரை உதவி செய்ய வேண்டும், அல்லது உதவி செய்ய வேண்டும் என்ற உறுதியான எண்ணமாவது எமக்கு இருக்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்:

“ஒரு முஸ்லிமின் தேவையை நிறைவேற்றுவதற்காக எழுந்து செல்வது, மஸ்ஜிதுந் நபவியில் இஹ்திகாப் இருப்பதை விட மேலானதாகும்”

எனவே, ஒரு முஸ்லிமுக்கு உதவுவது மட்டுமன்றி அவ்வாறு உதவ வேண்டும் என்று எண்ணுவதும் கூட மிகப் பெரும் நன்மைகளை எமக்குப் பெற்றுத் தருகின்றது. ஒரு முஸ்லிமின் கஷ்டங்கள் பொருளாதார ரீதியானதாக அமைந்திருந்தால், பணம், பொருள் கொடுத்து உதவ வேண்டும். அல்லது நோய், உளச்சிக்கல், குடும்பப் பிரச்சினை, தொழில் பிரச்சினை, உயிரிழப்பு, இயற்கை-செயற்கை அனர்த்தம் போன்ற பிரச்சினைகளாக இருந்தால், ஆலோசனைகளையும் ஆறுதல் வார்த்தைகளையும் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான வழிகாட்டல்களையும் அவர்களுக்கு வழங்க வேண்டும். இதுவும் உதவிதான். எனவே, பணம் கொடுத்துத்தான் அடுத்த முஸ்லிமுக்கு உதவ முடியும், பணம் இல்லாதவர்கள் உதவி செய்ய முடியாது என்ற நிலைப்பாடு எம்மில் இருக்கக் கூடாது.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

முஸ்லிம்களிடையே சகோதரத்துவத்தை ஏற்படுத்துவதற்காகவே அல்லாஹ் பெரும்பாலான குற்றச் செயல்களையும் தடுத்துள்ளான். குறிப்பாக, புறம் பேசுதல், கோள் மூட்டுதல், பரிகாசம் செய்தல், பட்டப் பெயர் சூட்டுதல், அவதூறு கூறுதல், ஏசுதல் போன்ற விடயங்களை பாவச்செயல்களென அல்லாஹ் விலக்கியுள்ளான். இவற்றை ஆழமாகச் சிந்திக்கும் போது, இப்பாவச் செயல்கள் முஸ்லிம் சகோதரத்துவத்தை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

இது தொடர்பாக அல்லாஹ் குறிப்பிடுகின்றான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اجْتَنِبُوا كَثِيرًا مِنَ الظَّنِّ إِنَّ بَعْضَ الظَّنِّ إِثْمٌ وَلاَ تَجَسَّسُوا وَلاَ يَغْتَبْ بَعْضُكُمْ بَعْضًا أَيُحِبُّ أَحَدُكُمْ أَنْ يَأْكُلَ لَحْمَ أَخِيهِ مَيْتًا فَكَرِهْتُمُوهُ وَاتَّقُوا اللهَ إِنَّ اللهَ تَوَّابٌ رَحِيمٌ .

“ஈமான் கொண்டவர்களே! அதிகமான சந்தேகங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். நிச்சயமாக சில சந்தேகங்கள்

பாவங்களாகும். நீங்கள் (பிறரின் குறைகளைத்) துருவித் தருவி ஆராய வேண்டாம். உங்களில் சிலர் சிலரைப் பற்றி புறம் பேச வேண்டாம். உங்களில் ஒருவர் தனது சகோதரன் மரணித்துள்ள நிலையில், அவரது இறைச்சியைப் புசிக்க விரும்புவாரா? நிச்சயமாக நீங்கள் அதை வெறுப்பீர்கள். அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பாவமன்னிப்பளிப்போனும் அன்புடையோனுமாவான்" *(49:12)*

எனவே, முஸ்லிம்களுக்கிடையே பிரச்சினைகளையும் மனக்கசப்பையும் ஏற்படுத்தும் எல்லா விடயங்களையும் நாம் தவிர்ந்து கொள்ள வேண்டும். சிலவேளை, தெரிந்தோ தெரியாமலோ அவ்வாறான தவறுகளை நாம் செய்து விட்டால், அதற்காக மன்னிப்புக் கோர வேண்டும். ஆனால், பிற முஸ்லிமுடைய விடயத்தில் நாம் செய்த தவறுக்கு அல்லாஹ் மன்னிப்பளிக்க வேண்டுமானால், முதலில் குறித்த அந்த முஸ்லிம் எம்மை மன்னிக்க வேண்டும். அதன் பிறகே அல்லாஹ்வின் மன்னிப்பை நாம் எதிர்பார்க்க முடியும்.

உதாரணமாக, நாம் ஒரு முஸ்லிமைப் பற்றிப் புறம் பேசி விட்டோம் என்றால், புறம் பேசுவது பாவம் என்ற வகையில் நாம் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரவேண்டும். ஆனால், அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருவதற்கு முன்பதாக, நாம் யாரைப் பற்றி புறம் பேசினோமோ அந்த நபரைச் சந்தித்து, அவரைப் பற்றி புறம் பேசியதை ஒப்புக் கொண்டு, அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவர் அதனை மன்னித்தால்தான் அல்லாஹ் எம்மை மன்னிப்பான்.

எனவே, அன்புக்குரிய சகோதரர்களே! முஸ்லிம் சமூகத்தை ஒற்றுமைப்படுத்தவும், அவர்களை இஸ்லாத்தின் நிழலில் சகோதரத்துவப்படுத்தவும் அல்லாஹ்வும் நபி (ஸல்) அவர்களும் பல கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் எமக்கு வழங்கியுள்ளனர். அந்த கட்டளைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் ஏற்ப நாம் செயற்பட்டால், நிச்சயமாக அல்லாஹ்வின் உதவியை நாம் பெறலாம். இம்மையிலும் மறுமையிலும் வெற்றியும் ஈடேற்றமும் பெற்ற சமூகமாகவும் மாறலாம். அத்தகைய பாக்கியம் பெற்ற சமூகமாக எமது சமூகத்தை அல்லாஹ் ஆக்கியருள்வானாக.

## *குத்பா:06*
## *சர்வதேச குத்ஸ் தினம்*

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ .

اَلْحَمْدُ لِلّهِ ، اَلْحَمْدُ لِلّهِ رَبِّ الْعَالَمِيْنَ ، وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ ، وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلَى اَشْرَفِ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ سَيِّدِنَا مُحَمَّدْ رَسُوْلِ الْعَالَمِيْنَ ، وَعَلَى آلِهِ الطَّيِّبِيْنَ الطَّاهِرِيْنَ وَصَحَابَتِهِ الْمُنْتَجَبِيْنَ ، اَمَّا بَعْدُ ، فَقَدْ قَالَ اللهُ تَعَالَى فِى قُرْآنِهِ الْكَرِيْمِ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ، بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ ، سُبْحَانَ الَّذِى اَسْرَى بِعَبْدِهِ لَيْلاً مِنَ الْمَسْجِدِ الْحَرَامِ اِلَى الْمَسْجِدِ الْاَقْصَا الَّذِى بَارَكْنَا حَوْلَهُ لِنُرِيَهُ مِنْ آيَاتِنَا اِنَّهُ هُوَ السَّمِيْعُ الْبَصِيْرُ ، صَدَقَ اللهُ الْعَلِيُّ الْعَظِيْمُ .

*எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ். இறுதித் தூதர், அகில உலகுக்கும் அருட்கொடை, அண்ணலெம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்ந்த ஆருயிர் குடும்பத்தினர், அருமை ஸஹாபாக்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் என்றென்றும் உண்டாவதாக.*

*அல்லாஹ் விதித்துள்ள கடமையை நிறைவேற்று முகமாக அவனில்லத்தில் வந்தமர்ந்திருக்கின்ற அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! அல்லாஹ் ஏவியவற்றை ஏற்று விலக்கியவற்றைத் தவிர்ந்து எல்லா நிலைகளிலும் அவனைப் பயந்து தக்வாவோடு வாழுமாறு ஆரம்பமாக எனக்கும் பின்னர் உங்களுக்கும் நான் நல்லுபதேசம் செய்கின்றேன்.*

*அன்புக்குரிய சகோதரர்களே! பெரியோர்களே!*

ரமழான் மாதம் அல்லாஹ்வின் அருள்பெற்ற மாதமாகும். புனித அல்குர்ஆன் இறங்கிய மாதம் என்ற வகையிலும், ஒரு மாதம் முழுவதும் நோன்பு நோற்பதற்கான வாய்ப்பை வழங்குகின்றது என்ற வகையிலும் அது மிகவும் சிறப்புப் பெறுகின்றது. ரமழான் மாதத்தின் மற்றொரு முக்கிய சிறப்பு, அது முஸ்லிம்களிடையே சர்வதேச ரீதியான ஒற்றுமையையும், பரஸ்பர அறிமுகத்தையும் ஏற்படுத்துவதாகும். உலகின் எந்தவொரு மூலையில் முஸ்லிம்கள் வாழ்ந்தாலும், அவர்கள் இஸ்லாத்தின் பெயரால் ஒன்றுபடுகின்றார்கள். ஒருவர் மற்றவரது கஷ்டங்களில் பங்கு கொள்கின்றார்கள். மற்றவரது தேவைகளை நிவர்த்தி செய்வதற்குத் தம்மால் இயன்ற பங்களிப்புகளை வழங்க முன்வருகின்றார்கள். இவ்வகையில், புனித ரமழான் மாதம் முஸ்லிம்களிடையே உலகளவிலான ஒற்றுமைக்கும், ஒவ்வொருவரதும் கஷ்டங்களையும் துன்பங்களையும் ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கு முயற்சிப்பதற்குமான வாய்ப்பை எமக்கு வழங்குகின்றது.

இன்று உலகில் பெரும் கஷ்டத்திற்கும் அழிவுக்கும் அநீதிக்கும் உள்ளாக்கப்படும் சமூகம் ஒன்று உண்டென்றால், அது பலஸ்தீனில் வாழுகின்ற எமது முஸ்லிம் சகோதரர்கள்தான். அவர்களது இளைஞர்கள் அநீதியாகப் படுகொலை செய்யப்படுகின்றார்கள், அவர்களது பெண்கள் மானபங்கப்படுத்தப்படுகின்றார்கள். முதியோர்கள் அகதிகளாக்கப்படுகின்றார்கள், சிறுவர்கள் அநாதைகளாக்கப்படுகின்றார்கள். ஒட்டுமொத்தமாக பலஸ்தீனில் வாழுகின்ற எமது முஸ்லிம் சகோதரர்கள் தமது உயிரைத் தக்க வைத்துக் கொள்ளும் வாழ்வாதாரப் போராட்டத்தில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஈடுபட்டு சொல்லொணா துயரங்களையும் துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களது சொத்துகள் அழிக்கப்படுகின்றன. அவர்களது நிலம் ஆக்கிரமிக்கப்படுகின்றது. அவர்களது வீடுகள், கட்டடங்கள், கடைத் தொகுதிகள் குண்டு போட்டு நிர்மூலமாக்கப்படுகின்றன. எந்த நிமிடமும் மௌத் வந்து விடலாம் என்ற அச்சத்தோடும், நிம்மதியற்ற நிலையோடும்தான் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

முஸ்லிம்களின் பொது எதிரியான யூதர்கள், முஸ்லிம்களுக்குச் சொந்தமான பலஸ்தீன மண்ணை ஆக்கிரமித்துள்ளதோடு மட்டுமன்றி, அங்கு இன அழிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். விமானத்திலிருந்து குண்டுகளை மழையாகப் பொழியச் செய்கின்றனர். பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் கொண்டு பலஸ்தீன மக்களது உயிர்களைக்

குடிக்கின்றனர். அந்தக் கொடுங்கோலர்களான யூதர்கள், வீடு என்று பார்ப்பதில்லை, பள்ளிவாயல் என்று பார்ப்பதில்லை, அகதி முகாம் என்று பார்ப்பதில்லை, மய்யித்து வீடென்று பார்ப்பதில்லை, வைத்தியசாலை என்று பார்ப்பதில்லை, திருமண நிகழ்வென்று பார்ப்பதில்லை, பெருநாள் தினம் என்று பார்ப்பதில்லை. அவர்களுக்கு எப்போதெல்லாம் வெறி அதிகரிக்கின்றதோ, அப்போதெல்லாம் குண்டுகளைப் பொழிந்து எமது முஸ்லிம் சகோதரர்களின் உயிர்களைக் குடிப்பார்கள், அவர்களை அங்கவீனர்களாக்குவார்கள், அவர்களது உடல்களை சின்னாபின்னமாக்கி மகிழ்வார்கள்.

பலஸ்தீன முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் இந்த அநீதிகள், அக்கிரமங்களைப் பற்றி கேள்வி கேட்பதற்கு யாருமில்லை. மனித உரிமைக்காக குரல் கொடுக்கக் கூடிய எத்தனையோ நாடுகள் இருக்கின்றன. அவை இஸ்ரேலின் இந்த அக்கிரமங்களைக் கண்டிப்பதுமில்லை: பலஸ்தீன முஸ்லிம்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதுமில்லை. அந்த நாடுகள் ஒரு புறமிருக்க, எத்தனையோ முஸ்லிம் நாடுகள் இருக்கின்றன. ஒரு சில நாடுகளைத் தவிர, வேறெந்த முஸ்லிம் நாடும், தமது சகோதர முஸ்லிம்களுக்கு பலஸ்தீனில் இழைக்கப்படுகின்ற இந்தத் தொடர் கொடுமைகளைக் கண்டிப்பதுமில்லை, அவர்களுக்கு உதவ முன்வருவதுமில்லை. குறிப்பாக பெரும்பாலான அரபு நாடுகள் வெறும் ஆடம்பரங்களிலும் சுகபோகங்களிலுமே மூழ்கிக் கிடக்கின்றன. இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவோ, முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்புக்காகவோ அவை எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்வதில்லை. அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கான எத்தகைய முயற்சிகளிலும் ஈடுபடுவதில்லை.

இந்தத் தவறான முன்னுதாரணத்தை நாம் பின்பற்றக் கூடாது. நாம் முஸ்லிம்கள். இஸ்லாத்தின் கொள்கைகளை ஏற்றுப் பின்பற்றுபவர்கள். ஒரு முஸ்லிம் கஷ்டத்தில் உழலுகின்ற போது, அதைப் பார்த்துக் கொண்டு எந்த உதவியும் செய்யாதிருப்பவன் உண்மை முஸ்லிமாக இருக்க முடியாது. ஒரு தீமை நடைபெறுகின்ற போது, அதை எமது கைகளால் தடுக்க வேண்டும். முடியாவிட்டால் நாவினால் தடுக்க வேண்டும். அதுவும் முடியாவிட்டால் எமது உள்ளத்திலாவது அது தீமை என்று எண்ணி ஒதுங்கிக் கொள்ள வேண்டும்.

அன்பார்ந்த முஸ்லிம்களே! சகோதரர்களே! அருமைப் பெரியோர்களே! பலஸ்தீன முஸ்லிம்களது விடயத்தில் நம்மால் என்ன செய்ய முடியும். இஸ்ரேலுக்கு எதிராக நாம் கோஷங்கள்

எழுப்பலாம். இஸ்ரேலின் அக்கிரமத்தை உலகறியச் செய்ய முயற்சிக்கலாம். பலஸ்தீன மக்களுக்காக பொருளுதவிகளை அனுப்பலாம். அவர்களுக்கு எமது ஆறுதல் வார்த்தைகளைக் கூறலாம். குறைந்த பட்சம், பலஸ்தீன முஸ்லிம்கள் நிம்மதி பெறுவதற்காகவும், இஸ்ரேல் அல்லாஹ்வின் சாபம் பெற்று அழிந்து நாசமாகுவதற்காகவும் அல்லாஹ்விடம் நாம் பிரார்த்திக்கலாம். ஏனெனில், நாம் முஸ்லிம்கள். எமது பிரார்த்தனைகள் அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் அணுவாயுதங்களை விட வலிமை மிக்கவையாகும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

பலஸ்தீன மக்களுக்கு விடிவையும் நிம்மதியையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கின் அடிப்படையில் முஸ்லிம் தலைவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட தினமே சர்வதேச குத்ஸ் தினமாகும். இத்தினம், ரமழான் மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமையில் நினைவுகூரப்படுகின்றது. பலஸ்தீன முஸ்லிம்கள் இஸ்ரேலிய யூதர்களால் அனுபவித்து வரும் துன்பங்கள், துயரங்கள், வேதனைகள் என்பவற்றை நினைவுகூர்ந்து, அத்தகைய வேதனைகளிலிருந்து பலஸ்தீன முஸ்லிம்களுக்கு விடுதலையளிப்பதும், இஸ்ரேலை சர்வதேச அளவில் கண்டிக்கும் செயற்பாட்டுக்கான வாய்ப்பை வழங்குவதும் இத்தினத்தின் நோக்கமாகும்.

முஸ்லிம்களின் முதற் கிப்லா அமைந்துள்ள பகுதியாகவும் அல்லாஹ்வின் தூதர்களான நபிமார்கள் பலர் வாழ்ந்த புனித ஸ்தலமாகவும் பலஸ்தீனப் பிரதேசம் விளங்குகின்றது. நபி இப்ராஹீம் (அலை) அவர்களது சந்ததியில் தோன்றிய நபி சுலைமான் (அலை) அவர்களால், ஈஸா நபியின் பிறப்புக்குப் பல்லாண்டுகளுக்கு முன்பு ஜெரூசலத்தில் நிர்மாணிக்கப்பட்டதே புனித மஸ்ஜிதுல் அக்ஸா எனப்படுகின்ற பைத்துல் முகத்தஸ் பள்ளிவாயலாகும்.

நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை அறிமுகப்படுத்திய ஆரம்ப காலகட்டங்களில் பைத்துல் முகத்தஸை நோக்கியே தமது தொழுகைகளை நிறைவேற்றி வந்தார்கள். அப்போது பைத்துல் முகத்தஸ் யூதர்களின் ஆக்கிரமிப்பில் இருந்தது. எனினும், ஹிஜ்ரி 15ஆம் ஆண்டு, இரண்டாம் கலீபா ஹஸ்ரத் உமர் (ரழி) அவர்களின் தலைமையில் முஸ்லிம்கள் பலஸ்தீனத்தையும் பைத்துல் முகத்தஸையும் மீட்டெடுத்ததன் மூலம், அப்புனித பூமி மீண்டும் இறை நல்லடியார்களுக்குச் சொந்தமானது.

இதற்குப் பிறகு, இப்புனித பூமியை மையமாக வைத்து பல சண்டைகளும் சிலுவை யுத்தங்களும் இடம்பெற்றன. இந்த

யுத்தங்களின் விளைவாக கிறிஸ்தவர்கள் பைத்துல் முகத்தஸைக் கைப்பற்றிய போதும், சுல்தான் சலாஹ்தீன் அய்யூபியின் ஆட்சியின் போது, முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களை வெற்றி கொண்டு பைத்துல் முகத்தஸை மீட்டெடுத்தனர். எனினும், அதற்குச் சில நூற்றாண்டுகளின் பின், மேற்குல சதியினாலும், யூதர்களின் வன்முறைகளினாலும் மத்திய கிழக்கில் இஸ்ரேல் எனும் ஒரு யூத நாடு திட்டமிட்டு உருவாக்கப்பட்டு, பைத்துல் முகத்தஸின் புனிதத்துவத்திற்கு இழுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதே நிலையே இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இஸ்லாமிய கண்ணோக்கில், உலகிலுள்ள பள்ளிவாயல்களுள் முக்கியத்துவமும் புனிதத்துவமும் சிறப்பும் கொண்ட மூன்று பள்ளிவாயல்களில் ஒன்றாக மஸ்ஜிதுல் அக்ஸா அமைகின்றது. “மூன்று நகரங்களுக்கு மாத்திரமே நன்மையை நாடி யாத்திரை செல்ல முடியும். அவை மஸ்ஜிதுல் ஹரம், என்னுடைய மதீனா பள்ளிவாயல் மற்றும் மஸ்ஜிதுல் அக்ஸா என்பனவாகும்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும், “மூன்று பள்ளிவாயல்களே விசேட தொழுகைக்கான சிறப்பான இடங்களாகும். அவை மஸ்ஜிதுல் ஹரம், மஸ்ஜிதுந் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா என்பனவாகும்” என்றும் நபியவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

எனவே, மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாயல் உலகில் சிறப்பும் மதிப்பும் புனிதமுமிக்க இஸ்லாமியப் பள்ளிவாயல் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. எனவே இப்பள்ளிவாயலைப் பாதுகாப்பதும், அதன் புனிதத்துவத்துக்கு ஏற்படும் இழுக்குகளைக் களைவதும் உலகிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.

நபி (ஸல்) அவர்களது வாழ்வில் மிகவும் முக்கியமானதொரு நிகழ்வு அவர்கள் மேற்கொண்ட மிஃராஜ் எனும் விண்ணுலக யாத்திரையாகும். இது பற்றி புனித அல்குர்ஆன் குறிப்பிடும் போது,

سُبْحَانَ الَّذِى اَسْرَى بِعَبْدِهِ لَيْلاً مِنَ الْمَسْجِدِ الْحَرَامِ اِلَى الْمَسْجِدِ الْاَقْصَا
الَّذِى بَارَكْنَا حَوْلَهُ لِنُرِيَهُ مِنْ آيَاتِنَا اِنَّهُ هُوَ السَّمِيْعُ الْبَصِيْرُ

“அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். அவன்தான் தன் அடியாரை மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான். நாம் அந்த மஸ்ஜிதுல் அக்ஸாவைச்

சூழவுள்ள பகுதிகளைத் தூய விருத்தி செய்து ஆசீர்வதித்துள்ளோம்" எனப் பிரஸ்தாபிக்கின்றது.

மஸ்ஜிதுல் அக்ஸாவும் அதனைச் சூழவுள்ள பலஸ்தீனும் அல்லாஹ்வின் ஆசீர்வாதத்திற்கும், அபிவிருத்திக்கும் உட்பட்டவை என்பதையே இவ்வசனம் தெளிவுபடுத்துகின்றது. அதுமட்டுமன்றி, அல்லாஹ்வின் தூதர்களான நபிமார்கள் பலர் வாழ்ந்த பூமியாகவும் இதனை அல்குர்ஆன் சித்திரித்துக் காட்டுகின்றது. நபிமார்களான இப்ராஹீம், இஸ்ஹாக், யாகூப், யூசுப், லூத், தாவூத், சுலைமான், ஸக்கரிய்யா, யஹ்யா, ஈஸா (அலைஹிமுஸ்ஸலாம்) போன்ற பல நபிமார்கள் அங்கு வாழ்ந்துள்ளார்கள். இவ்வகையில், முஸ்லிம்களுக்கும் அப்புனித பூமிக்கும் இடையிலே ஓர் இறுக்கமான பிணைப்பு இருப்பதை உணர முடிகின்றது. ஏனெனில், நபிமார்களின் தூதைச் சுமந்தவர்களாகவும், அதன் பிரசாரகர்களாகவும் முஸ்லிம்களே விளங்குகின்றனர்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

இன்றைய நிலையில், யூதர்களே பலஸ்தீன் மீது ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இஸ்லாத்தின் மூன்றாவது பரிசுத்தத் தலமான பைத்துல் முகத்தஸையும் அவர்களே தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றனர். தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரிலும், அபிவிருத்தி என்ற பெயரிலும் பலஸ்தீன பூமியையும் பைத்துல் முகத்தஸையும் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டிருக்கின்றனர். அங்குள்ள மக்களை சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள், இளைஞர்கள் என்ற பாரபட்சம் எதுவுமின்றிக் கொன்று குவித்துக் கொண்டிருக்கின்றனர். எனவே, இஸ்ரேலையும் யூதர்களையும் எதிர்த்துப் போராடுவதென்பது பலஸ்தீன மக்களுக்கு இன்றியமையாத கடமையாக மாறிவிட்டது. அவர்கள் தம்மால் முடியுமான வரை, எதிரியின் ஆக்கிரமிப்பையும் கொடுமையையும் எதிர்த்துப் போராடுகின்றார்கள். ஆயுதங்களாலும், கற்களாலும், தற்கொலைத் தாக்குதல்களாலும் தமது போராட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றார்கள்.

சகோதரர்களே! பெரியோர்களே! பலஸ்தீன பூமி இத்தகைய ஒரு போராட்ட பூமியாக மாறும் என்பதை இஸ்லாத்தின் தூதர் நபி (ஸல்) அவர்கள் ஏற்கனவே முன்னறிவிப்புச் செய்து விட்டார்கள் என்பதை அவர்களது ஹதீஸ்கள் மூலமாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

பலஸ்தீனும் அதைச் சூழவுள்ள பிரதேசங்களும் ஒரு போராட்ட நிலமாக அமையும் எனவும், அதில் வாழ்பவர்களும் அதன் போராட்ட நிலைகளில் தரிப்பவர்களும் ஜிஹாதில் இருக்கிறார்கள் எனவும் நபி (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் விளக்கியுள்ளார்கள்.

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள், "எனது சமூகத்தின் ஒரு பிரிவினர் தமது எதிரிகளை அடக்கியவர்களாக இறைகட்டளை வரும் வரை சத்தியத்தில் நிலைத்து நிற்பார்கள்" எனக் கூறிய போது, "அவர்கள் யார்?" என ஸஹாபாக்கள் வினவினர். "அவர்கள் பைத்துல் முகத்தஸிலும் அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் வாழ்பவர்கள்" என நபி (ஸல்) அவர்கள் விளக்கமளித்தார்கள். (முஸ்னத் அஹ்மத்)

எனவே, பைத்துல் முகத்தஸை மீட்பதற்காக பலஸ்தீனர்கள் மேற்கொண்டு வரும் போராட்டம் பலஸ்தீன மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் அல்ல, அது முழு உலக முஸ்லிம்களுக்கும் சொந்தமான இஸ்லாமியப் போராட்டமாகும். மார்க்கத்தோடும் அல்குர்ஆன் வசனங்களோடும் தொடர்புபடுகின்ற போராட்டமாகும். இப்போராட்டத்தின் அவசியம் பற்றி பேராசிரியர் யூசுப் கர்ளாவி அவர்கள் வெளியிட்டுள்ள மார்க்கத் தீர்ப்பு இங்கு குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. அதாவது, "ஒரு பிரிவினர் முஸ்லிம்களை இனப்படுகொலைக்கு உட்படுத்தி அவர்களது கௌரவத்தையும் சுய உரிமையையும் பறிக்க முற்படுவார்களானால், அப்பிரிவினருக்கு எதிராக ஜிஹாத் எனும் புனிதப் போரைப் பிரகடனம் செய்வது முஸ்லிம்கள் ஒவ்வொருவர் மீதும் கட்டாயக் கடமையாகும். ஏனைய முஸ்லிம்கள் அவர்களுக்கு உதவ வேண்டும். குறிப்பாக, அவர்களுக்கு இராணுவத் தொழில்நுட்பங்களை வழங்கி, பொருளாதார ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் அவர்களுக்கு உதவ வேண்டும்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அன்புக்குரிய இஸ்லாமிய சகோதரர்களே! பெரியோர்களே! அல்லாஹ்வின் நல்லடியார்களே!

1948ஆம் ஆண்டுக்கு முன் உலக வரைபடத்தில் இஸ்ரேல் எனும் ஒரு நாடு இல்லை. அப்படி இல்லாதிருந்த ஒரு நாடொன்றை பல காலமாகத் திட்டமிட்டு, சதி செய்து, பலஸ்தீன மக்களைக் கொன்றும், நாட்டை விட்டு விரட்டியும் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளின் ஆதரவுடன் சியோனிசவாதிகள் அமைத்துக் கொண்டனர்.

உலகில் பின்பற்றப்படுகின்ற நீதி, நியாயங்கள், மனித உரிமைகள் அனைத்தையும் சாகடித்துக் கொண்டு பிழையான வழியில் பிறந்த இந்த இஸ்ரேல், அன்று தொட்டு இன்று வரை செய்து வரும் கொடுமைகள் அனந்தம். பல யுத்தங்கள் நடந்து விட்டன. ஆயிரமாயிரம் பலஸ்தீன முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டு விட்டார்கள். பலஸ்தீன முஸ்லிம்கள் தத்தமது இல்லங்களிலிருந்து விரட்டப்பட்டார்கள். அவர்களது உடமைகளை யூதக் கொள்ளையர்கள் கொள்ளையடித்துக் கொண்டார்கள். எண்ணற்ற முஸ்லிம்கள் அகதிகளாகிப் போனார்கள். அகதிகளாகப் போன இடத்தில் கூட அவர்களை அந்த யூதர்கள் நிம்மதியாக வாழவிடவில்லை. அகதி முகாம்களில் குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் மக்களைக் கொன்று குவித்தனர். எஞ்சியவர்களுக்கு உணவு விநியோகத்தைத் தடைசெய்து பட்டினியால் சாகடித்தனர். அகதி முகாம்களில் உள்ளவர்களில் இளைஞர்களையும் சிறுவர்களையும் தேடித் தேடிக் கொன்றனர். யாரும் பிள்ளைககள் பெற்றுக் கொள்ளக் கூடாது எனத் தடை விதித்தனர். இவையெல்லாம் பலஸ்தீனை முழுமையாக ஆக்கிரமிக்கும் யூதர்களின் நீண்டகாலத் திட்டங்களாகும். அமெரிக்கா என்ற வல்லரசின் பின்னணியில், பலஸ்தீன மக்களுக்கு இத்தனை கொடுமைகளையும் அநியாயங்களையும் இஸ்ரேல் செய்து வருகின்றது.

துரதிஷ்டவசமாக, அயலில் உள்ள அரபு நாடுகள், பலஸ்தீனுக்கு இழைக்கப்படுகின்ற இத்தகைய அநீதிகளைக் கண்டும் காணாமல் தமது சுகபோகங்களில் மூழ்கிக் கிடக்கின்றன. பலஸ்தீன முஸ்லிம் சிறுவர்களின், பெண்களின், வயோதிபர்களின் அழுகைச் சத்தங்களும் அபயக் குரல்களும் ஒருபோதும் அவர்களது காதுகளை எட்டுவதில்லை. அமெரிக்காவுக்கு முதுகு சொறிவதிலும், இஸ்ரேலை தாலாட்டுவதிலுமே அவை கண்ணுங் கருத்துமாக இருக்கின்றன. அமெரிக்கத் தலைவர்களுக்கும் அமெரிக்கப் பெண்களுக்கும் மதுக் கோப்பைகளையும் மாலைகளையும் பரிசளித்து தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள முனைகின்றனர் இந்த அரபு நாட்டு மன்னர்கள். உண்மையில், இந்த அரபு நாடுகளும் அரபு நாட்டு மன்னர்களும் தமது சுயநலன்களைப் புறந்தள்ளி இஸ்லாத்தின் பெயரால் ஒன்றுபட்டால், பலஸ்தீனத்தில் மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற அநியாயங்கள், அழிவுகளிலிருந்து அவர்களுக்கு நிரந்தர விடுதலை கிடைக்கும் என்பது உறுதி.

புனித அல்குர்ஆன் கூறுகின்றது:

أُذِنَ لِلَّذِينَ يُقَاتَلُونَ بِأَنَّهُمْ ظُلِمُوا وَاِنَّ اللهَ عَلَى نَصْرِهِمْ لَقَدِيرُ ، الَّذِينَ أُخْرِجُوا مِنْ دِيَارِهِمْ بِغَيْرِ حَقٍّ اِلاَّ اَنْ يَقُولُوا رَبُّنَا اللهُ

"(நிராகரிப்போரால்) அநீதிக்குட்படுத்தப்பட்டவர்களுக்கு (அவர்களை எதிர்த்து) யுத்தம் செய்ய அனுமதியளிக்கப்பட்டு விட்டது. நிச்சயமாக அல்லாஹ் இவர்களுக்கு உதவி செய்ய பேராற்றலுடையோனாக இருக்கின்றான். இவர்கள் (எத்தகையோரென்றால்) நியாயமின்றித் தங்கள் வீடுகளிலிருந்து (விரோதிகளால்) துரத்தப்பட்டார்கள். எங்களுடைய இறைவன் அல்லாஹ் ஒருவன்தான் என்று கூறியதுதான் இவர்கள் செய்த குற்றம்" *(22:39,40)*

*அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!*

அண்மைக் காலமாக, பலஸ்தீனைச் சூழவுள்ள பகுதிகளில் ஆரோக்கியமான ஒரு சூழல் ஏற்பட்டு வருவதை நாம் அவதானிக்க முடிகின்றது. அதாவது இஸ்ரேலுக்கு எதிரான உணர்வுகளும், போராட்டங்களும் வலுவடைந்து வருகின்றன. ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் எனும் இஸ்லாமிய ஜிஹாத் இயக்கங்கள் இஸ்ரேலுக்கு எதிரான போராட்டங்களை ஜிஹாதாகப் பிரகடனப்படுத்தி, மிகவும் பக்தியுடனும் உத்வேகத்துடனும் போராட்டங்களை முன்கொண்டு வருகின்றன. அண்மையில், இஸ்ரேலியர்கள் லெபனானை நோக்கி மேற்கொண்ட யுத்தமும், அப்போது ஹிஸ்புல்லாக்கள் கொடுத்த அடியில் இஸ்ரேலியருக்கு ஏற்பட்ட படுதோல்வியும் நல்ல செய்தியை உலகுக்கும் உலக முஸ்லிம்களுக்கும் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.

அமெரிக்கா பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் வீழ்ச்சியடைந்து வரும் இன்றைய நிலையில், இஸ்ரேலின் ஆதிக்கத்துக்கும் அராஜகத்துக்கும் முடிவு கட்டப்படும் நாள் நெருங்கி வருவதை நம்மால் உணர முடிகின்றது. உலகின் இறுதி சீர்திருத்தவாதியாக இமாம் மஹ்தி (அலை) அவர்களின் வருகையால், முஸ்லிம்களும் முஸ்லிம் உலகும் செழிப்படையப் போகின்றன. அப்போது இஸ்ரேல் உள்ளிட்ட இஸ்லாத்துக்கெதிரான எல்லா சக்திகளும் அழிந்து மண்ணோடு மண்ணாகி விடப் போகின்றன. முஸ்லிம்கள் தமது சுயகெளரவத்தோடு வாழவும் உலகை ஆளவும் தகுதியும் வாய்ப்பும் பெறப் போகின்றார்கள். இஸ்லாத்தை நசுக்க

மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளும் படுதோல்வியடையப் போகின்றன இன்ஷா அல்லாஹ்.

எனவே, பலஸ்தீன விவகாரத்தில் நாங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதை நாம் அடையாளம் காண வேண்டும். அதாவது எமது உள்ளங்கள் எப்போதும் பலஸ்தீனப் பிரச்சினையுடன் தொடர்புபட்டிருக்க வேண்டும். பலஸ்தீன மக்களுக்காகப் பிரார்த்தனைகளில் நாம் ஈடுபட வேண்டும். அங்குள்ள மக்கள் பற்றியும் அவர்களது பிரச்சினைகள் பற்றியும் பேசவும் எழுதவும் வேண்டும்.

இஸ்ரேலுக்கெதிரான பாரிய ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் இஸ்ரேலை எதிர்ப்போரும் பலஸ்தீன முஸ்லிம்களுக்கு ஆதரவு தெரிவிப்போரும் உலகெங்குமுள்ளனர் என்பதை உலகறியச் செய்ய வேண்டும். இத்தகைய செயற்பாடுகள் மூலமாக பலஸ்தீனை மீட்பதற்கும், அதனை யூதர்களின் பிடியிலிருந்து தூய்மைப்படுத்துவதற்குமான சாத்தியத்தை நாம் ஏற்படுத்த முடியும்.

அன்பின் இஸ்லாமிய சகோதரர்களே! பெரியோர்களே! கடந்த சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன்பு வரையும், பலஸ்தீனப் பிரச்சினை அந்நாட்டு முஸ்லிம்களின் உள்நாட்டுப் பிரச்சினையொன்றாகவே இருந்து வந்தது. அதனை சர்வதேச அளவில் பிரபல்யப்படுத்தி, அங்கு முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் அநீதிகளையும் அக்கிரமங்களையும் உலகுக்குத் தெரியப்படுத்தி, இஸ்ரேலுக்கு எதிரான எதிர்ப்பலைகளையும், இஸ்ரேலின் கொடுமைகளுக்கான ஒரு கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தியது சர்வதேச குத்ஸ் தினமாகும் எனில் மிகையன்று.

சர்வதேச குத்ஸ் தினம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்பே பலஸ்தீன முஸ்லிம்கள் பற்றி உலகம் ஆழமாக நோக்கத் தொடங்கியது. இஸ்ரேலின் காட்டுமிராண்டித்தனப் போக்கையும், கொடுமைகளையும் வன்மையாகக் கண்டிக்க ஆரம்பித்தது. இவ்வகையில், இந்த குத்ஸ் தினம் பலஸ்தீன முஸ்லிம்களுக்குக் கிடைத்த மிகப் பெரும் வெற்றியாக அமைகின்றது. அது பலஸ்தீன முஸ்லிம்களது விதியைப் பற்றி உலக முஸ்லிம்களுக்கு எடுத்துணர்த்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு தினமாகும். எனவே, இத்தினத்தை நாமும் சிறப்பிக்க முனைய வேண்டும். ஒவ்வொரு வருடமும் புனித ரமழான் மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமை சர்வதேச குத்ஸ் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இத்தினத்தில் நாம் பலஸ்தீன் தொடர்பான பேச்சுகளையும் உரையாடல்களையும் கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஒழுங்கு செய்து, பலஸ்தீன முஸ்லிம்களின் விடுதலைக்காகவும், அவர்களது அமைதியான வாழ்க்கைக்காகவும் உலக முஸ்லிம்கள் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றிய ஆலோசனைகளையும் கருத்துகளையும் பகிர்ந்து கொள்வது மிகப் பயனுள்ளதாக அமையும். அது, முஸ்லிம்களின் எதிர்காலம் குறித்த சந்தேகங்களுக்கான தீர்வை முன்மொழிவதாகவும் அமையும்.

எனவே, குத்ஸ் தினம் பலஸ்தீன முஸ்லிம்களதும் உலக முஸ்லிம்களதும் சர்வதேச தினமாகும். இத்தினத்தில் பலஸ்தீனத்தில் வாழும் எமது முஸ்லிம் சகோதர, சகோதரிகளை நினைவு கூர்ந்து அவர்களது போராட்டம் வெற்றியடைய நாம் பிரார்த்திக்க வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ், ஜெரூசலத்தையும் பைத்துல் முகத்தஸையும் முஸ்லிம்களின் கரங்களுக்கு மீட்டுக் கொடுப்பானாக. பலஸ்தீன முஸ்லிம்களது போராட்டம் உயிரோட்டமுள்ள போராட்டமாக அமைந்து, அதில் அவர்கள் பூரண வெற்றி காணவும், கொடுங்கோலர்களான யூதர்களும் சியோனிஸ்டுகளும் தோல்வியுற்று அழிந்து போகவும் அல்லாஹ் தௌபீக் செய்வானாக.

# குத்பா:07
# இஸ்லாமும் சமாதானமும்

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ .

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ . اَلْحَمْدُ لِلّٰهِ ، اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ، وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ ، وَالصَّلاَةُ وَالسَّلاَمُ عَلَى اَشْرَفِ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ سَيِّدِنَا مُحَمَّدْ رَسُوْلِ الْعَالَمِيْنَ ، وَعَلَى آلِهِ الطَّيِّبِيْنَ الطَّاهِرِيْنَ وَصَحَابَتِهِ الْمُنْتَجَبِيْنَ ، اَمَّا بَعْدُ ، فَقَدْ قَالَ اللهُ تَعَالَى فِى قُرْآنِهِ الْكَرِيْمِ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ، بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ ، « يَا اَيُّهَا النَّاسُ اِنَّا خَلَقْنَاكُمْ مِنْ ذَكَرٍ وَاُنْثَى وَجَعَلْنَاكُمْ شُعُوبًا وَقَبَائِلَ لِتَعَارَفُوا اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللهِ اَتْقَاكُمْ اِنَّ اللهَ عَلِيْمٌ خَبِيرٌ » صَدَقَ اللهُ الْعَلِيُّ الْعَظِيْمُ .

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ். இறுதித் தூதர், அகில உலகுக்கும் அருட்கொடை, அண்ணலெம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்ந்த ஆருயிர் குடும்பத்தினர், அருமை ஸஹாபாக்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் என்றென்றும் உண்டாவதாக.

அல்லாஹ் விதித்துள்ள கடமையை நிறைவேற்று முகமாக அவனில்லத்தில் வந்தமர்ந்திருக்கின்ற அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! அல்லாஹ் ஏவியவற்றை ஏற்று விலக்கியவற்றைத் தவிர்ந்து எல்லா நிலைகளிலும் அவனைப் பயந்து தக்வாவோடு வாழுமாறு ஆரம்பமாக எனக்கும் பின்னர் உங்களுக்கும் நான் நல்லுபதேசம் செய்கின்றேன்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

உலகிலே அமைதியையும் மனிதர்களிடையே நிம்மதியான ஒழுங்கமைக்கப்பட்ட வாழ்வையும் வழங்குவதற்காகவே அல்லாஹ்வினால் இஸ்லாம் எனும் பூரண வாழ்க்கைத் திட்டம் மனிதர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் போதனைகளும் கட்டளைகளும் முழுமையாகவும் முறையாகவும் பேணப்பட்டு வரும் ஒரு சமூகத்தில் ஒரு நாட்டில் எப்போதும் நிம்மதியும் அமைதியும் மகிழ்ச்சியும் நிரம்பியிருக்கும் என்பது உறுதி. ஏனெனில், இவ்விதமான நோக்கங்களுக்காகவே அல்லாஹ் இஸ்லாத்தை எமக்கு வழங்கியுள்ளான்.

இஸ்லாம் என்ற அரபுச் சொல்லுக்கு சமாதானம் என்ற கருத்தே பிரதானமானதாகும். தனது கோட்பாடுகள், நடைமுறை ஒழுங்குகள், சட்டதிட்டங்கள் அனைத்திலும் சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் இஸ்லாம் தன்னைப் பின்பற்றும் முஸ்லிம்கள் அனைவரும் பிற சமூகங்களுடன் எப்போதும் நல்லுறவைப் பேண வேண்டுமென்று கட்டளையிடுவதனூடாக சமாதானத்தையும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது.

புனித இஸ்லாம் மார்க்கம், வன்முறையற்ற, சமாதானத்தை நிலைநிறுத்தக் கூடிய எண்ணற்ற நடைமுறைச் சாத்தியக் கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளதோடு, அத்தகைய கருத்துக்களை முஸ்லிம்கள் தமது வாழ்வில் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற கடமையையும் வலியுறத்தியுள்ளது. அடக்குமுறைக்கெதிரான போராட்டம், தேவையுள்ளோருக்கு உதவுதல், பரஸ்பர புரிந்துணர்வு என்பன இஸ்லாம் சமாதானத்தின் தோற்றக் காரணிகளென பரிந்துரைத்துள்ள முயற்சிகளுள் முக்கியமானவையாகும். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் உடலியல், உளவியல், சமூகவியல் முதலான பல துறைகளிலிருந்தும் மேற்கொள்ளப்பட வேண்டுமென இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. சமாதானத்தையும் அதற்காகப் பேச்சுவார்த்தையையும் மேற்கொள்வது, ஆக்கிரமிப்பையும் வன்முறையையும் விட அதிக பயன்தரவல்லது என்ற கொள்கையில் இஸ்லாம் எப்போதும் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

இவ்வயில், இஸ்லாம் சமாதானத்திற்கான மார்க்கம் என்பதை நிறுவும் இஸ்லாமிய கொள்கைத் தரவுகள் சிலவற்றை சுருக்கமாக நோக்குவோம்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

இஸ்லாம் தற்காப்புத் தவிர்ந்த ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தனிமனிதர்களுக்கெதிரான வன்முறைகள், ஆக்கிரமிப்புகள் போன்ற தீவிர முயற்சிகளை முற்றாகத் தடுத்துள்ளது. உண்மையில், இஸ்லாம், மனித வாழ்வின் அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்குச் சந்தர்ப்பமளிக்கும் நடைமுறைச் சாத்தியமான சிறந்த மார்க்கமாகும்.

இஸ்லாம், நீதிக்கு மிகுந்த முக்கியத்துவமளித்துள்ளதோடு வன்முறைகளையும் ஆக்கிரமிப்புகளையும் மேற்கொள்ளும் மனிதர்கள் தமது நடவடிக்கைகளுக்காக உரிய முறையில் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தி வருகின்றது. அதேவேளை, தவறிழைத்தவர்களை முடியுமான வரை மன்னிப்பினாலேயே திருத்த வேண்டுமென்ற கொள்கையை இஸ்லாம் அதிகமாக ஊக்குவிக்கும் பண்பையும் கொண்டுள்ளது.

இந்தச் சிந்தனையை வலியுறுத்தக் கூடிய கருத்துக்கள் பலவற்றை புனித வேதமான அல்குர்ஆனிலும், நபி (ஸல்) அவர்களது முன்மாதிரிகளிலும் பரவலாகக் காண முடிகின்றது. எடுத்துக் காட்டாக சில அல்குர்ஆன் வசனங்களை நாம் நோக்குவோம். அல்குர்ஆன் கூறுகின்றது:

وَقَاتِلُوا فِى سَبِيلِ اللهِ الَّذِينَ يُقَاتِلُونَكُمْ وَلاَ تَعْتَدُوا ، اِنَّ اللهَ لاَ يُحِبُّ الْمُعْتَدِينَ .

“உங்களுடன் போர் புரிபவர்களோடு அல்லாஹ்வுடைய பாதையில் நீங்களும் போரிடுங்கள். நீங்கள் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிக்க மாட்டான்” (02:190)

فَاِنِ انْتَهَوْا فَإِنَّ اللهَ غَفُورٌ رَحِيمٌ .

“எனவே, (உங்களுடன் போரிடாது) அவர்கள் விலகிக் கொண்டால், நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிக்கிறவன்: மிகக் கிருபையுடையவன்” (02:192)

وَاِنْ جَنَحُوا لِلسَّلْمِ فَاجْنَحْ لَهَا وَتَوَكَّلْ عَلَى اللهِ ، اِنَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ

.

“அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்தால், அப்பொழுது நீங்களும் அதன் பக்கம் சாய்வீர்களாக. அல்லாஹ்வின் மீதே நம்பிக்கையும் வைப்பீர்களாக. நிச்சயமாக அவன் செவியுறுவோனும் நன்கறிந்தோனுமாவான்” *(08:61)*

முஸ்லிம்கள் தம்மைத் தாக்க வரும் எதிரிகளுடனேயே போரிட வேண்டும்: மாறாக, எந்நிலையிலும் சண்டையைத் துவக்குபவர்களாக முஸ்லிம்கள் இருக்கக் கூடாது. சண்டையை முதலில் துவக்குபவர்கள் பெரும் ஆக்கிரமிப்பாளர்கள். ஆகையால் அத்தகையோரை அல்லாஹ் சற்றும் நேசிப்பதில்லை. மேலும், எதிரிகள் போர் நிறுத்தத்திற்கு முன்வந்தால், அது உண்மையாய் இருக்கும் பட்சத்தில், முஸ்லிம்கள் அதனை ஏற்று அவர்களுடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டும். இக்கருத்துக்களை அழுத்தமாக வலியுறுத்தும் போக்கை மேலே நான் ஓதிக் காட்டிய வசனங்களிலிருந்து நாம் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

அல்குர்ஆன் கூறுகின்றது:

فَمَنِ اعْتَدَى عَلَيْكُمْ فَاعْتَدُوا عَلَيْهِ بِمِثْلِ مَا اعْتَدَى عَلَيْكُمْ وَاتَّقُوا اللهَ

وَاعْلَمُوا اَنَّ اللهَ مَعَ الْمُتَّـقِينَ .

“எவரேனும் அத்துமீறி உங்கள் மீது (போர் புரிய வந்தால், அவர்கள் உங்கள் மீது மீறியது போன்று நீங்களும் அவர்கள் மீது மீறிச் சென்று போர் புரியுங்கள். மேலும், நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியாளர்களுடன் இருக்கின்றான் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்” *(02:194)*

எதிரிகள் அத்துமறீ நடந்தால் மாத்திரமே ஆயுத முனையில் அவர்களுக்குப் பதிலிறுக்க வேண்டும். இத்தகைய நிலைகளில் அல்லாஹ்வை முழுமையாக அஞ்சி நடப்பதும் அவசியமாகும்.

அல்குர்ஆன் கூறுகின்றது:

"கண்ணியமான மஸ்ஜிதுக்குச் செல்லவிடாது உங்களைத் தடுத்துக் கொண்ட சமூகத்தார் மீது உங்களுக்குள்ள பகைமை அவர்கள் மீது நீங்கள் வரம்பு மீறும்படி உங்களைத் தூண்டிவிடவும் வேண்டாம். இன்னும் நன்மைக்கும் பயபக்திக்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள், பாவத்திலும் பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர்து உதவியாக இருக்க வேண்டாம். இன்னும் அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள். ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் மிகக் கடினமானவன்" (05:02)

முஸ்லிம்கள் தற்போது எதிர்ப்பு நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளாதிருக்கும் ஒரு கூட்டத்தினரை, அவர்கள் புரிந்த கடந்த காலப் பகைமை நடவடிக்கைகளுக்காக வெறுக்கக் கூடாது. அவர்களுடன் கடினத் தன்மையோடு நடக்க எத்தனிக்கக் கூடாது. மேலும், அத்தகையோருடன் நேர்மையான நீதியான வழிமுறையைக் கையாள வேண்டும். அத்துமீறல், தீமை போன்ற விடயங்களைத் தவிர்த்து, பயனுள்ள நன்மையான விடயங்களில் அவர்களுக்கு உதவி புரிவதும் அவசியமாகும்.

அல்குர்ஆன் கூறுகின்றது:

நன்மையும் தீமையும் சமமாகிவிடாது. (ஆதலால் நபியே!) எது மிக அழகானதோ அதைக் கொண்டு (தீமையைத்) தடுத்துக் கொள்வீராக. அப்பொழுது எவருக்கும் உமக்குமிடையே பகைமை இருந்ததோ அவர் உம்முடைய உற்ற சிநேகிதரைப் போல் ஆகிவிடுவார்" (41:34)

அல்லாஹ் வலியுறுத்தியுள்ள நன்மைகள் சமுதாயத்திற்கு எல்லா வகையிலும் பயனளிப்பவை. அல்லாஹ் விலக்கியுள்ள தீமைகள் சமுதாயத்தை எல்லா வகையிலும் பாதிப்பவை. எனவே, நன்மைகளும் தீமைகளும் ஒரு போதும் சமமாக முடியாது. முஸ்லிம்கள் தீமைகளை முற்றாகத் தவிர்த்து நன்மைகளை மட்டும் புரிய வேண்டுமென்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும். ஒருவர் பகைமை நோக்குடன் தீமைகளைப் புரிய வந்தாலும் நற்செயல்களால் அவரது நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டுமென வலியுறுத்தும் இஸ்லாம் அவ்வாறு செய்வது அம்மனிதரின் தீய பண்பை நீக்கி அவரை நல்லவராய் மாற்றிவிடும் எனவும் உற்சாகமூட்டுகின்றது.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

அல்குர்ஆன் கூறுகின்றது:

“விசுவாசங் கொண்டவர்களே! உங்களுக்கோ, அல்லது உங்கள் பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாகஇருந்த போதிலும் நீதியை நிலைநிறுத்தியவர்களாக அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாக இருங்கள். அவர் பணக்காரராக இருந்தாலும் சரி, அல்லது ஏழையாக இருந்தாலும் சரி, அல்லாஹ்அவ்விருவருக்கும் அவர்களைக் காப்பாற்றுவதற்கு மிக உரியவன். இன்னும் நீங்கள் நியாயம் வழங்குவதில் உங்கள் மனோ இச்சையைப் பின்பற்றாதீர்கள். நீங்கள் சாட்சியத்தை மாற்றிக் கூறினாலும், அல்லது புறக்கணித்தாலும் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்குணர்பவனாக இருக்கின்றான்” (04:135)

நீதியை நிலைநாட்டுவது ஒவ்வொரு முஸ்லிமினதும் சமய முக்கியத்துவம் வாய்ந்த அடிப்படைக் கடமைகளுள் ஒன்றாகும். இதன் போது தமக்கோ தமது குடும்பத்திற்கோ சமூகத்தில் செல்வாக்குப் பெற்றவர்களுக்கோ பாதிப்புகள் ஏற்படும் என்றிருந்தாலும் நீதியை நிலைநாட்டுவதற்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதில் இஸ்லாம் மிகக் கண்டிப்பான போக்கைக் கொண்டுள்ளது.

நபி (ஸல்) அவர்களது காலத்தில், ஒரு கோத்திரத்தைச் சேர்ந்த பெண்யொருத்தி திருடி விட்டாள். அவளுக்கு இஸ்லாமிய சட்டப்படி கை துண்டிக்கப்பட வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. அப்போது அக்குழுவினர் நபிகளாரிடம் வந்து முறையிட்டனர். தாம் சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற குடும்பமெனவும், தமது புதல்விக்கு சலுகை வழங்குமாறும் தண்டனையை நீக்குமாறும் கோரினர். அப்போது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “எனது மகள் பாத்திமா திருடியிருந்தாலும் நான் இதே தீர்ப்பைத்தான் கூறியிருப்பேன்” என்றார்கள்.

எனவே, நீதி என்பது எல்லோருக்கும் பொதுவானது. மனிதர்களின் செல்வாக்கு, செல்வம், அந்தஸ்து, கௌரவம் என்பவற்றுக்கேற்ப மாற்றமடையக் கூடிய நீதி உண்மையான நீதியல்ல. எனவேதான் உண்மையான நீதி அமுல்ப்படுத்தப்பட வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துவதுடன், உலகில் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கான முக்கிய காரணியாகவும் அதனைக் குறிப்பிடுகின்றது.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

அல்குர்ஆன் கூறுகின்றது:

“மானக்கேடான காரியங்கள், மார்க்கத்தில் மறுக்கப்பட்டவை, வரம்பு மீறுதல் ஆகியவற்றை விட்டும் உங்களை அவன் விலக்குகிறான். (இவைகளை) நீங்கள் நினைவில் வைத்துக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு உபதேசிக்கிறான்” (16:90)

நீதியை நிலைநாட்டும் படியாகவும், அதற்குப் புறம்பான அனைத்துக் காரியங்களையும் முற்றாகத் தவிர்ந்து கொள்ளும்படியாகவும் வலியுறுத்தும் அல்லாஹ்வின் கட்டளை மிக அழுத்தமானதாக வெளிப்பட்டுள்ளது. மேலும், தீமைகள் புரிவதையும் ஆக்கிரமிப்புகள், அபகரிப்புகள் போன்ற குற்றச் செயல்களை மேற்கொள்வதையும் அல்லாஹ் கண்டிப்பாகத் தடுத்துள்ளான்.

அல்குர்ஆன் கூறுகின்றது:

“விசுவாசிகளே! நீங்கள் தண்டிப்பதாக இருந்தால் எந்தளவிற்கு நீங்கள் தண்டிக்கப்பட்டீர்களோ அது போன்ற அளவிற்கே தண்டியுங்கள். (தண்டிக்காது) பொறுத்துக் கொள்வீர்களானால், நிச்சயமாக அது பொறுமையாளர்களுக்கு மிகச் சிறந்ததாகும்” (16:126)

ஒருவர் இழைத்த குற்றச் செயலுக்காகத் தண்டிக்கப்படுவதானால், தண்டனைகளின் சமநிலை முறையாகப் பேணப்பட வேண்டும். அதாவது பழிவாங்கும் ஒருவர் தான் பெற்ற தண்டனையை விட அதிகமாக ஒருவரைப் பழிவாங்கக் கூடாது. இது பொதுவான கொள்கையாயினும், தண்பதற்குப் பதிலாக, மன்னித்து விடுவதே மிகச் சிறந்த மனிதாய வழிமுறையென இஸ்லாம் சிபாரிசு செய்கின்றது. மன்னிப்பதென்பது இஸ்லாத்தில் மிக உயர்ந்த பண்பாக அடையாளப்படுத்தப்படுவதோடு மனிதாபிமான உணர்வின் முக்கியக் கூறாகவும் அது விபரிக்கப்பட்டுள்ளது. தண்டிப்பதன் மூலமாகச் சாதிப்பதை விட மன்னிப்பதன் மூலமாக அதிகம் சாதிக்க முடியும் என்பது இஸ்லாமிய வரலாறு கூறும் உண்மையாகும்.

நபி (ஸல்) அவர்கள், இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் தமக்குப் பலவகையிலும் தொல்லையாக இருந்து, தம்மையும் தமது தோழர்களையும் சித்திரவதைக்குள்ளாக்கிய குறைஷிக் காபிர்கள்

அனைவருக்கும், மக்கா வெற்றியின் போது பொதுமன்னிப்பளித்தார்கள். தமது சிறிய தந்தை ஹம்ஸா (ரழி) அவர்களின் ஜனாஸாவை உருக்குலைத்து அவர்களது நெஞ்சைப் பிளந்து ஈரலைக் கடித்துக் குதறிய முஆவியாவின் தாய் ஹிந்தாவையும் மன்னித்தார்கள். ஹம்ஸா (ரழி) அவர்களைக் கொலை செய்த வஹ்ஷியையும் மன்னித்தார்கள். தாயிப் நகர மக்கள் சிறுவர்களை விட்டுக் கல்லால் அடித்து நபிகளாரைக் காயப்படுத்திய போது, மலக்குகள் வந்து கேட்டார்கள், யாரசூலல்லாஹ் நீங்கள் ஆணையிடுங்கள், இந்த ஊரின் இரு பக்கங்களிலுமுள்ள மலைகளைக் கொண்டு நெருக்கி, இந்த மக்களைக் கொன்றொழித்து விடுகின்றோம் என்று. நபிகளார் அதற்கு அனுமதிக்கவில்லை, அம்மக்களை மன்னித்தார்கள். தம்மைத் தூற்றிய வசைபாடிய அனைவரையும் நபியவர்கள் மன்னித்தார்கள். அவர்கள் யாரையும் பழிவாங்கவில்லை. பழிவாங்கும்படியாகத் தூண்டவுமில்லை.நபிகளாரின் மிகப் பெரிய முன்மாதிரி மன்னிக்கும் மனப்பாங்காகும். இந்த மனப்பாங்கினால்தான் இஸ்லாம் குறுகிய காலத்திற்குள் மிகப் பெரும் வளர்ச்சி கண்டது என்பதை வரலாற்றாய்வாளர்கள் எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

மேலே நான் ஓதிக் காட்டிய அல்குர்ஆன் வசனங்களிலிருந்து, சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக இஸ்லாம் வலியுறுத்தியுள்ள கருத்தியல்களாகப் பின்வரும் அம்சங்களை நாம் அடையாளப்படுத்தலாம்.

1. தனிமனிதர்களிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் அன்பையும் பெரும் சமுதாய சக்தியாக வளர்த்தெடுக்க வேண்டும். தற்காப்பு, நீதியை நிலைநிறுத்தல் ஆகிய நோக்கங்களிற்காக அன்றி, முஸ்லிம்கள் பிற சமூகங்களுடன் எந்நிலையிலும் போரிடக் கூடாது.

2. எப்போதும் நீதியை நிலைநிறுத்தப் போராடுவதும், எதிரிகளாயிருந்தாலும் அவர்களுக்கெதிராக ஆக்கிரமிப்பைத் துவங்காதிருப்பதும் அவசியமாகும்.

3. கடின நெஞ்சுடையவர்களை நற்பண்புள்ள உற்ற தோழர்களாய் மாற்றியமைப்பதற்காக தீய செயல்களை நற்பண்புகள் மூலமாகத் தடுத்து நிறுத்த முயல வேண்டும்.

4. குற்றத்திற்கான தண்டனையை சமமாக வழங்க வேண்டும். முடியுமாயின் பழிவாங்குவதற்குப் பதிலாக குற்றத்தை மன்னித்து விடுவது மிகச் சிறந்த நற்செயலாகும்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான மற்றொரு முக்கிய வழி, சகல இனங்களுடனும் மக்களுடனும் விட்டுக்கொடுத்து புரிந்துணர்வோடு வாழ்தலாகும் என இஸ்லாம் சிபாரிசு செய்கின்றது.

அல்குர்ஆன் கூறுகின்றது:

يَا اَيُّهَا النَّاسُ اِنَّا خَلَقْنَاكُمْ مِنْ ذَكَرٍ وَاُنْثَى وَجَعَلْنَاكُمْ شُعُوبًا وَقَبَائِلَ لِتَعَارَفُوا اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللهِ اَتْقَاكُمْ اِنَّ اللهَ عَلِيْمٌ خَبِيرٌ .

"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், பெண்ணிலிருந்தே படைத்தோம். இன்னும் ஒருவருக்கொருவர் நீங்கள் அறிமுகமாகிக் கொள்வதற்காக உங்களை கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உங்களில்மிகக் கண்ணியமுள்ளவர் உங்களில் மிகவும் பயபக்தியுடையவர்தான். நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிந்தவன், நன்குணர்பவன்" (49:13)

மனிதர்கள் இன,மத, மொழி சார்ந்த வெவ்வேறு அடையாளங்களுடன் வாழும் இயல்பு கொண்டவர்கள். இத்தகைய வேறுபாடுகள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காகவும், பரஸ்பரஅ ன்பு வெளிப்பாட்டுக்காகவுமே பயன்படுத்தப்பட வேண்டும். பகைமைகளைடேயா குரோதங்களையோ வளர்த்துக் கொள்வதற்குப் பயன்படுத்தக் கூடாது. மேலும், இத்தகைய வேறுபாடுகள் மூலமாக மட்டும் மனிதர்கள் உயர்வையோ தாழ்வையோ அல்லாஹ்விடத்தில் பெற முடியாது.அல்லாஹ்வின் மீதுள்ள பற்று, பயபக்தி என்பவையே ஒவ்வொருவரதும் தரத்தை நிர்ணயம் செய்கின்றன என்பதை இவ்வசனம் தெளிவுபடுத்துகின்றது.

மேலும், ஒவ்வோர் இனமும் மற்ற இனத்துடன் சமாதானமாக வாழ வேண்டுமென்பதையும் மற்ற இனங்களின் கலாசாரம், பண்பாடு, நாகரிகம், சமயம் என்பவற்றை மதித்து நடக்க வேண்டுமென்பதையும்,இன உறவைப் பலப்படுத்தும் வகையிலேயே உரையாடல்களும் ஏனைய தொடர்புகளும் அமைந்திருக்க வேண்டுமென்பதையும் இவ்வசனம் சுருக்கமாக விபரிக்கின்றது.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

இஸ்லாம் தனிமனிதர்களின் விருப்பையும் தேவைகளையும் ஆதரிக்கின்ற ஒரு மார்க்கமாகும். இஸ்லாத்தை ஒருவர் விரும்பி ஏற்க வேண்டும். இஸ்லாத்தை ஏற்கும்படியாக யாரும் யாரையும் வற்புறுத்துவது கூடாது.அவ்வாறு வற்புறுத்தலின் பேரில் உண்டாகும் இஸ்லாம் பூரணமான இஸ்லாமாக இருக்கவும் முடியாது.இதனால்தான் இஸ்லாத்தில் வற்புறுத்தல் இல்லை என்பதை அல்குர்ஆன் பிரகடனம் செய்கின்றது.

“இஸ்லாம் மார்க்கத்தில் எத்தகைய நிர்ப்பந்தமுமில்லை.வழிகேட்டிலிருந்து நேர்வழி திட்டமாகத் தெளிவாகி விட்டது. ஆகவே, எவர் தீமையை நிராகரித்து விட்டு, அல்லாஹ்வை விசுவாசிக்கின்றாரோ அவர், திட்டமாக அறுந்து போகாத பலமான கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டார். மேலும், அல்லாஹ் செவியேற்பவனும் நன்கறிபவனுமாவான்” (02:256)

முஸ்லிம்கள் தமது இஸ்லாத்தைப் பின்பற்ற முடியும், அதனைப் பிறருக்குத் தெளிவுபடுத்தவும் போதிக்கவும் முடியும். ஆனால், பிற சமயத்தவர்கள் தமது சமயத்துள் வருமாறு வற்புறுத்துவதோ, சமய,கலாசார, பண்பாட்டு நடைமுறைகளைத் திணிப்பதோ கூடாது. அது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதுமல்ல. பின்பற்றும் சமயம் தொடர்பாகத் தீர்மாதனிக்கும் உரிமை ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரியது என இஸ்லாம் தெளிவாகக் கூறிவிட்டது. எனவே,இஸ்லாத்தைப் பரப்புவதற்காக போர் செய்வதோ, மற்றவர்களை நிர்ப்பந்திப்பதோ தகாம செயல்களாகும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இஸ்லாத்தின் யுத்தக் கொள்கை, உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முக்கிய வழிமுறையாகக் கொள்ளப்படத்தக்கதாகும். ஏனெனில், இஸ்லாம் எப்போது யுத்தம் புரிவதற்கு அனுமதியளிக்கின்றது, யுத்தத்தின் போது எத்தகைய ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும், யுத்தம் முடிவுற்ற பின், சிறைப்பிடிக்கப்பட்ட கைதிகளுடன் எவ்வாறு டந்து கொள்ள வேண்டும் போன்ற இஸ்லாத்தின் கட்டளைகள், மிக மனிதாபிமானமுள்ளவையாக விளங்குகின்றன.

யுத்தம் புரிவதற்கான அனுமதி முஸ்லிம்களுக்கு எப்போது வழங்கப்படுகின்றது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்? அதாவது தற்காப்பு, அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாத்தல், அநீதியைத் தடுத்து நிறுத்தி நீதியை நிலைநாட்டுதல், தமது

உரிமைகளும் சுதந்திரங்களும் பறிக்கப்படும் போது அதனைத் தடுத்து அவற்றைப் பாதுகாத்தல் போன்ற முக்கிய காரணங்களுக்காகவே யுத்தத்தை இஸ்லாம் அனுமதித்துள்ளது. மாறாக, இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காகவோ, நாடுபிடிப்புகளுக்காகவோ யுத்தம் புரியுமாறு இஸ்லாம் கட்டளையிடவில்லை, அதனை அனுமதிக்கவுமில்லை. அல்குர்ஆன் கூறுகின்றது:

"நிராகரிப்போரால் போர் தொடுக்கப்பட்டோருக்கு அவர்கள் அநீதமிழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால், போர் தொடுத்தோரை எதிர்த்து யுத்தம் செய்ய அனுமதியளிக்கப்பட்டு விட்டது. நிச்சயமாக அல்லாஹ்வோ இவர்களுக்கு உதவி செய்ய மிக்க ஆற்றலுடையவன். அவர்கள் எத்தகையோரென்றால், நியாயமின்றித் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள். எங்களுடைய இரட்சகன் அல்லாஹ் ஒருவன்தான் என்று கூறியதைத் தவிர வேறெதுவும் அவர்கள்புரியவில்லை. மேலும், மனிதர்களில்அநியாயம் செய்யும் சிலரை மற்ற சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருந்தால், மடங்கள், கிறிஸ்தவர்களின் வணக்கஸ்தலங்கள், யூதர்களின் வழிபாட்டுத்தலங்கள், மஸ்ஜிதுகள் - இவற்றில் அல்லாஹ்வின் பெயர் அதிகமாகக் கூறப்படுபவை யாவும் இடிக்கப்பட்டுப் போயிருக்கும். அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கின்றானோ அவனுக்கு நிச்சயமாக அல்லாஹ் உதவி செய்கிறான். நிச்சயமாக அல்லாஹ் வலிமை மிக்கவன், யாவரையும் மிகைத்தவன்" *(22:39,40)*

இவ்வாறே யுத்தத்தின் போது பொதுமக்களைக் கொல்லக் கூடாதெனவும், அவர்களது சொத்துகளை அழிக்கக் கூடாதெனவும், நன்மை தருகின்ற மரங்கள், பொதுச்சொத்துகள் முதலானவற்றை நாசம் செய்யக் கூடாதெனவும் இஸ்லாம் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளது. அத்துடன் யுத்தம் முடிவுற்ற பின், சிறைப்பிடிக்கப்பட்ட எதிரிகளைத் துன்புறுத்துவது, பழிவாங்குவது, அநீதியாக நடந்து கொள்வது போன்ற அனைத்து வன்முறைகளையும் இஸ்லாம் முற்றாகத் தடைசெய்துள்ளமை,இஸ்லாம் சமாதானத்திற்கான மார்க்கம் என்பதைத் தெளிவுபடுத்தும் சான்றுகளாக உள்ளன. மேலும், எதிரிகளை வெற்றி கொண்டபின், சுதேச மக்களின் பொருளாதார வளங்களில் ஆதிக்கம் செலுத்த முனைவதோ,காலனித்துவ ஆட்சியை நிலைநிறுத்துவதோ இஸ்லாத்தில் விலக்கப்பட்ட தீயசெயற்பாடுகளாகும். நீதியும் சுதந்திரமும் நிலைநாட்டப்படுவதே அவசியமானது.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

உலகில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான எல்லா வகையான சாத்திங்களையும் அறிமுகப்படுத்தி ஊக்குவித்துள்ள இஸ்லாம், உலகில் முழுமையாகப் பின்பற்றப்படுமானால், சமாதானத்திற்கான ஒரே வழி இஸ்லாத்தைப் பின்பற்றுவதுதான் என்ற யதார்த்தத்தை எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் ஆரோக்கியமான சூழல் புவியில் தோன்றும்.அத்தகைய சூழலே உலகில் நிம்மதியையும் அமைதியையும் மனிதர்கள் எல்லோரும் விரும்பும் சமாதானத்தையும் கொண்டு வந்து சேர்க்கும் என்பது மகிழ்ச்சி தரும் உண்மையாகும்.

எனவே, சமாதானத்தை ஏற்படுத்தும் இஸ்லாமிய வழிமுறைகளை இனங்கண்டு,அவற்றை நாமும் பின்பற்றி, மற்ற இனங்களுக்கும் எடுத்துக் கூறும் எமது கடமையை முழுமையாக மேற்கொண்டு இஸ்லாத்தை உலகில் பாதுகாப்பதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் எம்மனைவருக்கும் நல்லருள் புரிவானாக. ஆமீன்.

## குத்பா:08
## இஸ்லாமும் உடல் ஆரோக்கியமும்

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ .

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ . اَلْحَمْدُ لِلهِ ، اَلْحَمْدُ لِلهِ رَبِّ الْعَالَمِيْنَ ، وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ ، وَالصَّلاَةُ وَالسَّلاَمُ عَلَى اَشْرَفِ اْلاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ سَيِّدِنَا مُحَمَّدْ رَسُوْلِ الْعَالَمِيْنَ ، وَعَلَى آلِهِ الطَّيِّبِيْنَ الطَّاهِرِيْنَ وَصَحَابَتِهِ الْمُنْتَجَبِيْنَ ، اَمَّا بَعْدُ ، فَقَدْ قَالَ اللهُ تَعَالَى فِي قُرْآنِهِ الْكَرِيْمِ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ، بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ ، وَاَعِدُّوا لَهُمْ مَااسْتَطَعْتُمْ مِنْ قُوَّةٍ وَمِنْ رِبَاطِ الْخَيْلِ تُرْهِبُونَ بِهِ عَدُوَّ اللهِ وَعَدُوَّكُمْ وَآخَرِينَ مِنْ دُوْنِهِمْ لاَ تَعْلَمُونَهُمْ اَللهُ يَعْلَمُهُمْ ، وَمَا تُنْفِقُوا مِنْ شَيْءٍ فِي سَبِيْلِ اللهِ يُوَفَّ اِلَيْكُمْ وَاَنْتُمْ لاَ تُظْلَمُونَ » صَدَقَ اللهُ الْعَلِيُّ الْعَظِيْمُ . قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ ، « نِعْمَتَانِ مَغْبُونٌ فِيْهِمَا كَثِيرٌ مِنَ النَّاسِ اَلصِّحَّةُ وَالْفَرَاغُ » صَدَقَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ .

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ். இறுதித் தூதர், அகில உலகுக்கும் அருட்கொடை, அண்ணலெம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்ந்த ஆருயிர் குடும்பத்தினர், அருமை ஸஹாபாக்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் என்றென்றும் உண்டாவதாக.

அல்லாஹ் விதித்துள்ள கடமையை நிறைவேற்று முகமாக அவனில்லத்தில் வந்தமர்ந்திருக்கின்ற அல்லாஹ்வின்

நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! அல்லாஹ் ஏவியவற்றை ஏற்று விலக்கியவற்றைத் தவிர்ந்து எல்லா நிலைகளிலும் அவனைப் பயந்து தக்வாவோடு வாழுமாறு ஆரம்பமாக எனக்கும் பின்னர் உங்களுக்கும் நான் நல்லுபதேசம் செய்கின்றேன்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

உலக வாழ்க்கை என்பது மனிதனுக்கு முக்கியமானதாகும். ஏனெனில், நிரந்தரமான மறுமை வாழ்க்கைக்குத் தேவையான ஆயத்தங்களை இவ்வுலகிலேயே நாம் செய்ய வேண்டியுள்ளது. உலகில் அல்லாஹ்வினால் அள்ளி வழங்கப்பட்டிருக்கக் கூடிய அனைத்து அருட்கொடைகளும் மனிதனுக்காகவே வழங்கப்பட்டுள்ளன. மனிதன் அந்த அருட்கொடைகளை அனுபவிக்க வேண்டும். அவற்றுக்காக அல்லாஹ்வுக்கு நன்றி கூற வேண்டும். அதேசமயம், அல்லாஹ்வின் வரையறைகளுக்கு உட்பட்டு, அவனது கட்டளைகளுக்கு அடிபணிந்து வாழவும் வேண்டும் என்பதே அல்லாஹ்வின் எதிர்பார்ப்பாகும்.

وَلاَ تَنْسَ نَصِيبَكَ مِنَ الدُّنْيَا

“இவ்வுலகில் உனக்குள்ள பங்கை மறந்து விடாதே!” என்று அல்லாஹ் கூறுகின்றான். அதாவது மனிதனின் இலக்கு மறுமையில் வெற்றி பெறுவதுதான் என்ற போதிலும், அதற்காக இவ்வுலகை முற்றாக வெறுத்து ஒதுக்கி மனிதன் வாழ முடியாது. எனவே, அல்லாஹ் உலகில் வழங்கியுள்ள எல்லா அருட்கொடைகளையும் மறுமைக்காகப் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும். இவ்வகையில், அல்லாஹ்வின் அருட்கொடைகளுள் முக்கியமான ஒன்றாக விளங்கும் உடல் ஆரோக்கியத்தையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

சகோதரர்களே! பெரியோர்களே! உடல் ஆரோக்கியம் என்பது உண்மையில் மிகப் பெரும் ஓர் அருட்கொடையாகும். அது மனிதர்கள் எல்லோரும் எதிர்பார்க்கின்ற மாபெரும் செல்வமுமாகும். “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பது எமது பழமொழி. ஒருவருக்கு எவ்வளவுதான் பணமும் அந்தஸ்தும் இருந்தாலும், அவரது உடல் ஆரோக்கியமாக இல்லையென்றால், அவரது வாழ்வில் நிம்மதியோ மகிழ்ச்சியோ இருக்காது. அதேவேளை, ஒருவருக்கு எவ்வளவு பொருளாதார நெருக்கடியோ, கஷ்டமோ இருந்தாலும் அவரது உடல் ஆரோக்கியமாக

இருக்கின்றதென்றால் அவரால் நிம்மதியாகக் காலந் தள்ள முடியும். எனவேதான், உடல் ஆரோக்கியம் என்பது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத தேவையாகின்றது.

மனித வாழ்க்கைக்குத் தேவையான எல்லா விடயங்களையும் தெளிவுபடுத்தியுள்ள இஸ்லாம், உடல்ஆரோக்கியம் சம்பந்தமாகவும் பயனுள்ள பல அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. மனிதாபிமானத்தை வலியுறுத்தும் ஒரு மார்க்கம் என்ற வகையில், இஸ்லாம், மனிதர்கள் ஆரோக்கியமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. இஸ்லாத்தின் ஏவல்கள் அனைத்தும் மனிதனுக்கு ஆரோக்கியத்தை வழங்கக் கூடியவையாக அமைந்துள்ள அதேவேளை, இஸ்லாத்தின் விலக்கல்கள் அனைத்தும் மனிதனை ஆபத்துகளிலிருந்து பாதுகாக்கக் கூடியவையாகவும் அமைந்துள்ளன.

உடல் ஆரோக்கியம் என்பது எவ்வளவு முக்கியமானது என்பது பற்றிச் சொல்ல வந்த நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

نِعْمَتَانِ مَغْبُونٌ فِيْهِمَا كَثِيرٌ مِنَ النَّاسِ اَلصِّحَّةُ وَالْفَرَاغُ

“இரண்டு பெரும் அருட்கொடைகள் உள்ளன. அவை பற்றி அதிகமானோர் அலட்சியமாகவே இருக்கின்றனர். அவை உடல் ஆரோக்கியமும் ஓய்வு நேரமுமாகும்” என்றார்கள்.

எனவே,உடல் ஆரோக்கியம் என்பது அல்லாஹ்வின் பெரும் அருட்கொடைகளுள் ஒன்று. ஆனால், மனிதர்கள் அதைப் பெரிதாக, பெறுமதி வாய்ந்ததாக மதிப்பதில்லை. உதாரணமாக, எமது கண்பார்வை இருக்கின்றது. இது எமக்கு அல்லாஹ் வழங்கியுள்ள மிகப் பெரும் அருட்கொடையாகும். ஆனால், தெளிவான கண்பார்வை உள்ள எமக்கு, அந்த நிஃமத்தின் பெறுமதி விளங்குவதில்லை. அதேவேளை, பார்வைக்குறைவு உள்ளவர்களிடம், அல்லது பார்வையே இல்லாதவர்களிடம் சென்று கேட்டால், அது எவ்வளவு பெறுமதியானது என்பது பற்றி அவர்கள் கூறுவார்கள். இதுபோன்று உடலின் எல்லா உறுப்புகளும் ஆரோக்கியமாக இருக்கும் போது, அது எமது வாழ்வில் அல்லாஹ் வழங்கிய மிகப் பெரும் அருட்கொடை என்றுணர்ந்து அதற்காக நாம் அல்லாஹ்வுக்கு நன்றி கூற வேண்டும்.

அதேவேளை, ஏதாவது நோயின் காரணமாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டிருப்பவர்கள், தமது நோயைக் குணப்படுத்தும் படியாக முதலில் அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும். அதன்

பிறகே ஏனைய பரிகார வேலைகளில் ஈடுபட வேண்டும். நபியவர்கள் கூறியுள்ளார்கள்: “துஆக்களில் சிறந்தது உடல் ஆரோக்கியத்தைக் கேட்கும் துஆவாகும்” என்று.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! சகோதரர்களே! உடல் ஆரோக்கியம் என்பது மிகப் பெரும் அருட்கொடை என்பதன் அடிப்படையில் அதனை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டியது எமது கடமையாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اِغْتَنِمْ خَمْسًا قَبْلَ خَمْسٍ ... صِحَّتَكَ قَبْلَ سَقْمِكَ

“ஐந்து விடயங்கள் வருமுன் ஐந்து விடயங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அதில் ஒன்று நோய் வருமுன் ஆரோக்கியத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்”

அதுமட்டுமல்ல, இவ்வுலகில் வழங்கப்பட்ட உடல் ஆரோக்கியம் பற்றி மறுமையில் கேள்வி கேட்கப்படும். “உனது உடல் ஆரோக்கியத்தை எவ்வாறு பயன்படுத்தினாய்?” என்று வினவப்படும். அதற்குத் திருப்தியான பதில் கூறும் வரை அவ்விடத்தை விட்டு சற்றும் நகர முடியாது என்பதாகவும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

உடல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் கூறுவதோடு மட்டும் இஸ்லாம் நிறுத்திக் கொள்ளவில்லை. மாறாக, அந்த உடல் ஆரோக்கியத்தை எவ்வாறு பெறுவது, எவ்வாறு பேணுவது என்பது பற்றியும் தெளிவான விளக்கங்களை எமக்கு முன்வைத்துள்ளது. இவ்வகையில், உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக இஸ்லாம் வழங்கியுள்ள அறிவுறுத்தல்கள் பற்றி நாம் அறிந்து வைத்திருப்பது அவசியமாகின்றது.

சகோதரர்களே! பெரியோர்களே! உடல் ஆரோக்கியம் பேணுவதற்கான முக்கிய வழிமுறையாக உணவுக் கட்டுப்பாட்டை இஸ்லாம் பரிந்துரை செய்கின்றது. அதாவது நாம் உணவுண்ணும் போது, தேவையை விடக் கூடாமலும் குறையாமலும் அளவாக உண்பது அவசியமாகும். அல்குர்ஆன் கூறுகின்றது,

وَكُلُوا وَاشْرَبُوا وَلاَ تُسْرِفُوا اِنَّ اللهَ لاَ يُحِبُّ الْمُسْرِفِينَ

*“நீங்கள் உண்ணுங்கள் பருகுங்கள், வீண் விரயம் செய்யாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வீண் விரயம் செய்வோரை நேசிப்பதில்லை” (07:31)*

அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதும் ஒரு வகையில் வீண் விரயம்தான். கூடுதலாக சமைத்து விட்டு, பின் அதை சாப்பிட முடியாமல் குப்பையில் கொட்டுவதும் வீண் விரயம்தான்.

*நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: “ஒரு மனிதன் வயிறு நிறை சாப்பிடுவதை விட உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கக் கூடியது வேறொன்றுமில்லை”*

எனவே, உடல் ஆரோக்கியத்தைக் கெடுப்பவை பல இருக்கின்றன. அவற்றுள் மிகப் பாரதூரமானது அளவுக்கதிகமாக சாப்பிடுவதாகும். இந்த ‘அளவு’ என்பது நிரந்தரமாக நிர்ணயிக்கப்பட்ட ஒன்றல்ல. ஒவ்வொருவரது உடலமைப்பைப் பொறுத்து, தொழிலைப் பொறுத்து தேவையான உணவின்அளவு என்பது வேறுபடுகின்றது. உதாரணமாக, குளுமையான ஓர் அலுவலகத்தில் சௌகரியமான ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டு சாதாரண எழுத்து வேலைகளில் ஈடுபடும் ஒருவரை விட, விறகு வெட்டி உழைப்பவர், அல்லது விவசாயம் செய்பவருக்கு அதிக உணவு தேவைப்படும். ஒவ்வொருவருக்கும் அவரவரது தொழிலின் போது எவ்வளவு சக்தி இழக்கப்படுகின்றதோ அதற்குப் பதிலீடான அளவு உணவு அவர்களுக்குத் தேவைப்படும். எனவே, போதுமான அளவு என்றால் எவ்வளவு என்பதை அவரவர்தான் தீர்மானிக்க வேண்டும். எனினும், நபியவர்கள் இதற்குப் பொதுவான அளவீடொன்றைக் கூறியிருக்கின்றார்கள். “வயிற்றில் மூன்றிலொரு பகுதியை உணவுக்கும், மூன்றிலொரு பகுதியை தண்ணீருக்கும், ஏனைய மூன்றிலொரு பகுதியை வெறுமையாகவும் விட்டு வையுங்கள்” என்று கூறியுள்ளார்கள். எனவே, இஸ்லாத்தின் கட்டளைப்படி அளவோடு சாப்பிட்டு ஆரோக்கியமாக வாழ்வது எம்மீது கடமையாகும்.

அத்தோடு உணவுப் பழக்க வழக்கங்கள் தொடர்பாகவும் இஸ்லாம் எமக்கு ஒழுங்குவிதிகளை வகுத்துள்ளது. குறிப்பாக ஹராமான உணவுகளை உட்கொள்ளக் கூடாதெனவும், ஹலாலான உணவுகளையே உட்கொள்ள வேண்டுமெனவும் இஸ்லாம் பணிக்கின்றது. இஸ்லாம் விலக்கியுள்ள ஒவ்வொரு உணவு வகையும் மனித ஆரோக்கியத்தைப் பாதிக்கக் கூடியவையாகவே இருக்கின்றன. உதாரணமாக, மதுபானம் இருக்கின்றது. மதுபானம்

பாவிப்பதை இஸ்லாம் முற்றாகத் தடைசெய்துள்ளது. குர்ஆன் கூறுகின்றது:

يَسْئَلُونَكَ عَنِ الْخَمْرِ وَالْمَيْسِرِ قُلْ فِيهِمَا اِثْمٌ كَبِيرٌ وَمَنَافِعُ لِلنَّاسِ
وَاِثْمُهُمَا اَكْبَرُ مِنْ نَفْعِهِمَا

"அவர்கள் மதுபானம், சூதாட்டம் பற்றி உம்மிடம் வினவுகின்றனர். நீர் கூறும், அவ்விரண்டிலும் பெரும் தீங்கு இருக்கின்றது. சில நன்மைகளும் இருக்கின்றன. எனினும், அதன் தீமை அதன் நன்மையை விடப் பெரியது" (02:219)

எனவே, மதுபானம் மனித உடலுக்குத் தீங்கானது. உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கக் கூடியது. மதுபானத்திலுள்ள அற்கஹோள் நுரையீரலைப் பாதிக்கின்றது. இரத்த ஓட்டத்தைத் தடுக்கின்றது. இரைப்பையை பலவீனமடையச் செய்கின்றது. மதுபானம் எண்ணற்ற நோய்களுக்கும் வியாதிகளுக்கும் காரணமாக அமைகின்றது.

அது போன்றே பன்றி இறைச்சி சாப்பிடுவதை இஸ்லாம் முற்றாக ஹராமாக்கியுள்ளது. இஸ்லாத்தின் இந்த விலக்கலுக்கமைய முஸ்லிம்கள் யாரும் பன்றி இறைச்சியை உண்பதில்லை. ஆனால், மாற்று மதத்தவர்கள் அதனை விரும்பி உண்கின்றார்கள். அவர்களுக்கு ஏற்படும் பெரும்பாலான உடல் ஆரோக்கியக் குறைபாடுகளுக்கு இந்த இறைச்சியும் ஒரு காரணம்.

அண்மையில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தீவிரமான ஒரு வகைக் காய்ச்சல் பரவியது. அந்தக் காய்ச்சலினால் பலர் உயிரிழந்தனர். பலர் வைத்தியசாலைகளில் முடங்கினர். அந்தக் காய்ச்சல் பற்றி ஆய்வு செய்த வைத்தியர்கள், ஓர் உண்மையைக் கண்டறிந்தார்கள். அதாவது இந்தக் காய்ச்சலுக்குக் காரணம் பன்றி இறைச்சியில் உள்ள கிருமிகளே என்பதுதான் அவ்வுண்மை. அதனால் அந்தக் காய்ச்சலுக்கு பன்றிக் காய்ச்சல் என்று பெயர் வைக்கப்பட்டது. அதன் இறைச்சியை சாப்பிட வேண்டாம் என்று வைத்தியர்கள் கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். ஆச்சரியம் என்னவென்றால், இதே விடயத்தை 1400 ஆண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் தெளிவாகக் கூறிவிட்டது. பன்றி இறைச்சியை சாப்பிட வேண்டாம் என்று தெளிவாகத் தடுத்து விட்டது.

எனவே, இஸ்லாம் விலக்கியுள்ள எல்லா உணவு வகைகளும் மனிதனின் உடல் ஆரோக்கியத்தைப் பாதிப்பவையாகும். அது

ஆகுமாக்கியுள்ள எல்லா உணவு வகைகளும் உடல் ஆரோக்கியத்தை ஏற்படுத்துபவையாகும் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

இஸ்லாம், நெகிழ்வுத் தன்மையுள்ள மார்க்கம். எந்தவொரு சட்டத்தையும் அது திணிப்பதில்லை. உயிரை விட சட்டங்களை மேலாகக் கருதுவதுமில்லை. உதாரணமாக, கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ள ஒருவருக்கு மதுபானம்தான் மருந்து, வேறு எந்த மருந்தும் பயனளிக்காது என்ற நிலை வந்தால், அந்த மதுபானத்தை தேவையான அளவு அருந்துவதற்கு இஸ்லாம் அனுமதி வழங்குகின்றது. அவ்வாறே மிகக் கொடூரமாகப் பசியால் ஒருவர் வாடிக் கொண்டிருக்கின்றார். பசியின் கொடுமையால் அவரது உயிர் பிரியப் போகின்றது. உண்பதற்கு அவ்விடத்தில் பன்றி இறைச்சியைத் தவிர வேறொன்றும் இல்லை என்றால், அதனை உண்டு தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்வது அவருக்குக் கடமையாகும். எனவே, இஸ்லாம் மனிதர்களின் நலனில் மிகுந்த அக்கறை உள்ள ஒரு மார்க்கம், அது கண்மூடித்தனமான சட்டங்கள் எவற்றையும் கொண்டிருக்கவில்லை என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

அன்புக்குரிய அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக இஸ்லாம் முன்வைத்துள்ள மற்றொரு திட்டம் திருமணமாகும். திருமணமானது மனிதர்களுக்கு சமூக கௌரவத்தையும், மனோ உறுதியையும், பக்குவப்பட்ட உணர்வையும் வழங்குவதோடு, உடல் ஆரோக்கியத்தையும் வழங்குகின்றது. ஏனெனில், எல்லா மனிதர்களுக்கும் அல்லாஹ் இச்சையை ஏற்படுத்தியுள்ளான். ஆணுக்குப் பெண்ணின் மீதும் பெண்ணுக்கு ஆணின் மீதும் இச்சை ஏற்படுவதென்பது இயல்பானதாகும். அந்த இச்சையை முறையாகத் தீர்த்துக் கொள்வது அவசியமானது. அவ்வாறு இச்சையைத் தீர்த்துக் கொள்ளும் போது உடல் புத்துணர்ச்சியும் ஆரோக்கியமும் பெறுகின்றது. மாறாக, இச்சைகளைப் பலவந்தமாகக் கட்டுப்படுத்தி அடக்கி வைக்கும் போது, அல்லது முறை தவறி இச்சையைத் தீர்த்துக் கொள்ள முனையும் போது உடலும் உள்ளமும் சோர்வும் பலவீனமும் அடைகின்றன.

இதனால்தான், இஸ்லாம் திருமணத்தை வலியுறுத்தி, துறவறத்தைத் தடைசெய்துள்ளது. “ஒருவர் திருமணம் முடித்தால் அவர் தனது மார்க்கத்தின் பாதிக் கடமையைப் பூர்த்தி செய்து

விட்டார். மீதிக்கடமைக்காக அவர் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளட்டும்'' என்றுநபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அது மட்டுமன்றி, திருமணமானது சமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு தேவையாகவும் அமைந்துள்ளது. அதனால்தான் நபியவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள்:

اَلنِّكَاحُ مِنْ سُنَّتِى فَمَنْ رَغِبَ عَنْ سُنَّتِى فَلَيْسَ مِنِّى

"திருமணம் என்பது எனது வழிமுறையாகும். எனது வழிமுறையைப் புறக்கணிப்பவர் என்னைச் சார்ந்தவரல்லர்'' என்றார்கள். எனவே, திருமணம் என்பது இஸ்லாத்தின் கடமைகளுள் ஒன்றெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! சகோதரர்களே! பெரியோர்களே!

உடல் ஆரோக்கியத்தை ஏற்படுத்துவதற்கான மற்றொரு வழிமுறையாக இஸ்லாம் முன்வைப்பது உடற்பயிற்சியாகும். உடலின் உள்ளக வெளியக செயற்பாடுகள் சரியாகவும் முறையாகவும் நடைபெறுவதற்கு இந்த உடற்பயிற்சி அவசியமானதாகின்றது. நடப்பது, ஓடுவது, அளவோடு சிரிப்பது, உரையாடுவது என்பனவும் உடற்பயிற்சிகளாகும். நபியவர்களது காலத்தில் குதிரைச் சவாரி என்பது முக்கிய உடற்பயிற்சியாகக் கருதப்பட்டது. இது பற்றி அல்குர்ஆன் கூறுகின்றது:

وَاَعِدُّوا لَهُمْ مَااسْتَطَعْتُمْ مِنْ قُوَّةٍ وَمِنْ رِبَاطِ الْخَيْلِ تُرْهِبُونَ بِهِ عَدُوَّ اللهِ وَعَدُوَّكُمْ وَآخَرِينَ مِنْ دُوْنِهِمْ لاَ تَعْلَمُونَهُمْ اَللهُ يَعْلَمُهُمْ ، وَمَا تُنْفِقُوا مِنْ شَىْءٍ فِى سَبِيْلِ اللهِ يُوَفَّ اِلَيْكُمْ وَاَنْتُمْ لاَ تُظْلَمُونَ .

"மேலும் அவர்களுக்காக (அவர்களோடு போர் செய்வதற்காக) உங்களுக்கு பலத்தால் சாத்தியமானதையும், (திறமையான) போர்க் குதிரைகளைக் கட்டிவைப்பதையும் நீங்கள் தயார்படுத்தி வையுங்கள். இதனால் அல்லாஹ்வுடைய விரோதியையும் உங்களுடைய விரோதியையும், இவர்களல்லாத மற்றவர்களையும் பயப்படச் செய்வீர்கள். அவர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள்: அல்லாஹ்தான் அவர்களை அறிவான். (இதற்காக) அல்லாஹ்வுடைய பாதையில் நீங்கள் எதைச் செலவு செய்த

போதிலும் (அதன் கூலி) உங்களுக்குப் பூரணமாகவே வழங்கப்படும். (அதில் ஒரு சிறிதும்) நீங்கள் அநீதியிழைக்கப்பட மாட்டீர்கள்” (08:60)

உடற்பயிற்சி செய்யும் நோக்கோடு விளையாட்டுக்களில் ஈடுபடுவதும் பயனுள்ளதாகும். விளையாட்டுக்கள் உடலுக்கும் உள்ளத்துக்கும் பயனளிப்பவையாக இருக்கும் பட்சத்தில் அது அல்லாஹ்வினால் அங்கீகரிக்கப்படும். மாறாக, விளையாட்டுக்கள் உயிரைப் பறிக்கக் கூடியவையாக, உடலுக்கும் உள்ளத்துக்கும் பயனளிக்காதவையாக அல்லது அவற்றைப் பாதிப்பவையாக இருந்தால், அல்லது மற்றவர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் நோக்கமாக இருந்தால், அத்தகைய விளையாட்டுக்களை இஸ்லாம் அங்கீகரிப்பதில்லை. எனவே, விளையாட்டுக்களில் ஈடுபடும் போது உடற்பயிற்சியை நோக்காகக் கொண்டு விளையாட்டைத் தெரிவு செய்வது அவசியமாகும்.

உடற்பயிற்சிகளின் வரிசையில் தூக்கமும் முக்கிய இடம் பிடிக்கின்றது. ஏனெனில், தூக்கம் என்பது உடலுக்கு ஓய்வையும் புத்துணர்ச்சியையும் தரும் முக்கிய வழிமுறையாகும். மனித உடலுக்கு ஓய்வு அவசியம் என்பதற்காகவே அல்லாஹ் தூக்கத்தை ஏற்படுத்தியுள்ளான். மனிதன் இடைஞ்சல்கள் இன்றி நிம்மதியாகத் தூங்க வேண்டும் என்பதற்காகவே இரவு நேரத்தையும் அமைத்துள்ளான். ஒரு நாளின் பகல் நேரத்தை உழைப்புக்கும் இரவு நேரத்தை ஓய்வுக்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அல்லாஹ் வழிகாட்டியுள்ளான்.

அல்குர்ஆன் கூறுகின்றது:

وَجَعَلْنَا نَوْمَكُمْ سُبَاتًا وَجَعَلْنَا اللَّيْلَ لِبَاسًا وَجَعَلْنَا النَّهَارَ مَعَاشًا

“நாம் தூக்கத்தை உங்களுக்கான ஓய்வாக ஆக்கியுள்ளோம். மேலும் இரவை ஆடையாக ஆக்கியுள்ளோம், பகலை வாழ்க்கைக்குரிய(வற்றைத் தேடிக் கொள்ளும்) நேரமாக ஆக்கியுள்ளோம்” (78:9,10,11)

எனவே, தூக்கம் என்பது மிகச் சிறந்த ஓய்வாகும். அது ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானது. அதேவேளை, எந்தவொரு விடயமும் அளவுக்கு அதிகமாகி விட்டால் பாதிப்பாகும் என்ற பொது விதிக்கமைய, தூக்கமும் அளவோடு இருக்க வேண்டியது அவசியமாகும். ஒரு மனிதன் நாளொன்றுக்கு குறைந்தது ஆறு மணித்தியாலங்கள் தூங்க வேண்டும் என்பதாக மருத்துவ

ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஆகவே, மந்த புத்தி ஏற்படுகின்ற அளவுக்கு, உடல் சோர்ந்து விடும் அளவுக்குத் தூங்குவது கூடாது. பகலில் ளுஹருக்குச் சற்று நேரத்துக்கு முன்பு தூங்குவது கைலூலாதூக்கம் எனப்படுகின்றது. இது சுன்னத்தான தூக்கமாகும். உடலுக்குப் புத்துணர்ச்சியையும் உள்ளத்துக்கு ஆறுதலையும் வழங்கும் தூக்கமுமாகும். இரவில் எல்லோரும் அவசியம் தூங்க வேண்டும். இரவு நேரத் தொழுகைகளில் தஹஜ்ஜுத் தொழுகை மிகச் சிறப்புக்குரியது. ஆனால், இந்தத் தஹஜ்ஜுத் தொழுகையை தொழ வேண்டுமானால், அதற்குரிய முக்கிய நிபந்தனை அவர்தூங்கி எழுந்திருக்க வேண்டும். அதாவது சிறிதளவாவது தூங்கி பின் விழித்தால்தான் அவர் தஹஜ்ஜுத் தொழ முடியும். உதாரணமாக, இஷாவுக்குப் பின்னிருந்து சுபஹ் வரையும் ஒருவர் விழித்திருந்து அமல் செய்வாரானால் அவர் தஹஜ்ஜுத் தொழ முடியாது. ஏனெனில், அவர் சற்று நேரமேனும் தூங்கவில்லை. எனவே, அளவோடு தூங்க வேண்டும் என்று இஸ்லாம் எம்மைப் பணிப்பதுடன், அது உடல் ஆரோக்கியத்துக்கு மிகத் தேவையானது என்றும் இயம்புகின்றது.

அன்புக்குரிய அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

உடல் ஆரோக்கியத்தை ஏற்படுத்துவதற்காக இஸ்லாம் முன்வைத்துள்ள மற்றொரு அறிவுறுத்தல் நல்லமல்களாகும். அதாவது இஸ்லாம் விதியாக்கியுள்ள மார்க்கக் கடமைகள் அனைத்தும் ஆன்மீக நன்மைகளைத் தருவது மட்டுமன்றி, உடல் ஆரோக்கியத்தையும் தருகின்றன.

உதாரணமாக, தொழுகையை எடுத்துக் கொண்டால், தொழுகையானது உடல் ஆரோக்கியத்திற்கு மிகச் சிறந்த பங்களிப்பை வழங்குகின்றது. தொழுகையிலுள்ள சீரான அசைவுகள் உடலுக்கு சிறந்த உடற்பயிற்சியாக அமைகின்றன. இரத்த ஓட்டம் சீராகின்றது. இதயமும் மூளையும் சிறப்பாகத் தொழிற்படுகின்றன. கண்பார்வை கூர்மையடைகின்றது. நாசிப்பிரச்சினைகள் இல்லாதொழிகின்றன. எனவே, தொழுகை உடல் ஆரோக்கியத்திற்கு மிகச்சிறந்த பயிற்சியாக அமைகின்றது.

அவ்வாறே, நோன்பை எடுத்துக் கொண்டால், நோன்பு அல்லாஹ்வின் நெருக்கத்தை ஏற்படுத்தித் தரும் அதேவேளை, உடல் ஆரோக்கியத்திற்கும் சிறந்த வழிகாட்டலாக அமைகின்றது. நோன்பு நோற்பதன் மூலமாக இரைப்பைக்கு ஓய்வு கிடைக்கின்றது.

இரத்தம் சுத்திகரிக்கப்படுகின்றது. பல்வேறு உடலியல் பிரச்சினைகளுக்கு நோன்பு நல்ல தீர்வாக அமைகின்றது.

எனவே, அல்லாஹ் விதியாக்கியுள்ள ஒவ்வொரு கடமையும் மனிதனுக்கு உடல் ஆரோக்கியத்தைத் தரும் சிறந்த பயிற்சிகளாக அமைவதை நாம் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்:

اَلْعَقْلُ السَّلِيمُ فِى الْجِسْمِ السَّلِيمِ

“ஆரோக்கியமான புத்தி, ஆரோக்கியமான உடலில்தான் உள்ளது”

எனவே, எமது புத்தி ஆரோக்கியமாக இருக்க வேண்டுமாயின், எமது உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். எமது உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமாயின், அதற்காக இஸ்லாம் வழிகாட்டியுள்ள வழிமுறைகளை நாம் முறையாகவும் ஒழுங்காகவும் மேற்கொள்ள வேண்டியது அவிசயமாகும்.

அன்புக்குரிய அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! உடல் ஆரோக்கியம் என்பது மிகப் பெரும் அருட்கொடை என்ற போதிலும், ஒரு நோய் ஏற்படுகின்ற வரைக்கும் அதன் பெறுமதி எமக்கு விளங்குவதில்லை. உடல் ஆரோக்கியம் அல்லாஹ்வின் நிஃமத்தாக உள்ளது போலவே நோயும் சில வேளைகளில் அல்லாஹ்வின் நிஃமத்தாக எங்களுக்கு அமையக் கூடும். நோயை அனுப்புபவனும் அல்லாஹ்தான், அதைக் குணப்படுத்துபவனும் அல்லாஹ்தான் என்பதை அறிந்துள்ளோம். அல்லாஹ் ஒரு மனிதனுக்கு நோயை இறக்குகின்ற போது, அந்த நோய் அல்லாஹ்வின் சோதனையாகவும் இருக்கலாம், அல்லது எமது பாவங்களை அழிப்பதற்காக அல்லாஹ் வழங்கிய நிஃமத்தாகவும் அது அமையலாம். எனவே, எமக்கு ஒரு நோய் ஏற்பட்டு விடுகின்ற போது, நாம் அல்லாஹ்வை குறை கூறக்கூடாது. மாறாக, அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோர வேண்டும். பிறகு, நோயிலிருந்து சுகத்தைத் தருமாறு அவனிடம் பிரார்த்திக்க வேண்டும். இவற்றோடு எமது கடமை முடிந்து விடுவதில்லை. அதன் பிறகு, அந்த நோயைக் குணப்படுத்துவதற்கான முயற்சிகளில் நாம் இறங்க வேண்டும். நோயை அல்லாஹ்தான் குணப்படுத்துகின்றான். ஆனால், அதற்காக முயற்சிக்க வேண்டியது எமது கடமை. அதேவேளை, நாம் எத்தகைய முயற்சிகளை எடுத்தாலும் அல்லாஹ் நாடினால்தான் அந்த நோய் எம்மை விட்டு அகலும்.

எனவே, நோயொன்று ஏற்படுகின்ற போது, அல்லாஹ்விடம் துஆச் செய்வதும் அவசியம், அதன் பிறகு மருந்துகளைப் பெற்றுப் பாவிப்பதும் அவசியம். ஏனெனில், இந்த உலகு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட பௌதீக விதிகளின் அடிப்படையிலேயே நகர்ந்து கொண்டிருக்கின்றது. அந்த பௌதீக விதிகளை மீறி நாம் எதனையும் சாதிக்க முடியாது.

எனவே, அன்புக்குரிய சகோதரர்களே! பெரியோர்களே! இஸ்லாம் ஏவியுள்ள கட்டளைகளை முழுமையாகப் பின்பற்றி, எப்போதும் உடல் ஆரோக்கியத்துடன் வாழ்வோமாக. நோய்களிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருவோமாக. எல்லாம் வல்ல அல்லாஹ் நோயற்ற வாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும் எம்மனைவருக்கும் ஈருலகிலும் தந்தருள்வானாக. ஆமீன்

# குத்பா:09
# ரமழான் நோன்பின் தத்துவமும் சிறப்பும்

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ .

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ . اَلْحَمْدُ لِلّهِ ، اَلْحَمْدُ لِلّهِ رَبِّ الْعَالَمِيْنَ ، وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ ، وَالصَّلاَةُ وَالسَّلاَمُ عَلَى اَشْرَفِ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ سَيِّدِنَا مُحَمَّدْ رَسُوْلِ الْعَالَمِيْنَ ، وَعَلَى آلِهِ الطَّيِّبِيْنَ الطَّاهِرِيْنَ وَصَحَابَتِهِ الْمُنْتَجَبِيْنَ ، اَمَّا بَعْدُ ، فَقَدْ قَالَ اللهُ تَعَالَى فِى قُرْآنِهِ الْكَرِيْمِ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ، بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ ، « يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِينَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ » صَدَقَ اللهُ الْعَلِيُّ الْعَظِيْمُ . قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ ، وَالصِّيَامُ جُنَّةٌ ، لِلصَّائِمِ فَرْحَتَانِ: فَرْحَةٌ عِنْدَ فِطْرِهِ وَفَرْحَةٌ عِنْدَ لِقَاءِ رَبِّهِ » صَدَقَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ .

*எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ். இறுதித் தூதர், அகில உலகுக்கும் அருட்கொடை, அண்ணலெம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்ந்த ஆருயிர் குடும்பத்தினர், அருமை ஸஹாபாக்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் என்றென்றும் உண்டாவதாக.*

*அல்லாஹ் விதித்துள்ள கடமையை நிறைவேற்று முகமாக அவனில்லத்தில் வந்தமர்ந்திருக்கின்ற அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! அல்லாஹ் ஏவியவற்றை ஏற்று விலக்கியவற்றைத் தவிர்ந்து எல்லா*

*நிலைகளிலும் அவனைப் பயந்து தக்வாவோடு வாழுமாறு ஆரம்பமாக எனக்கும் பின்னர் உங்களுக்கும் நான் நல்லுபதேசம் செய்கின்றேன்.*

*அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!*

*புனித ரமழான் மாதம் மீண்டும் எம்மை நோக்கி வந்துள்ளது. எமது உடலிலும் உள்ளத்திலும் உள்ள குறைகளை நீக்கி, சரியான முஸ்லிமாக முழுமையான விசுவாசியாக வாழ்வதற்கான உந்துசக்தியைப் பெற்றுக் கொள்ள அல்லாஹ் மீண்டும் எமக்கொரு சந்தர்ப்பத்தைத் தந்துள்ளான். அல்லாஹ் முஸ்லிம்கள் மீது விதியாக்கியுள்ள இஸ்லாமியக் கடமைகளில் ரமழான் மாதத்து நோன்பு முக்கியமானதாகும். இஸ்லாமிய வருடத்தின் ஒன்பதாவது மாதமான ரமழான் மாதத்தில் சக்தியுள்ளவர்கள் அனைவரும் நோன்பு நோற்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் கண்டிப்பான கட்டளையாகும்.*

*புனித அல்குர்ஆன் இதுபற்றி இவ்வாறு கூறுகின்றது:*

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِينَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ .

*“ஈமான் கொண்டவர்களே! உங்களுக்கு முன்பிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டது போல உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நீங்கள் பயபக்தியாளர்களாக ஆகலாம்” (02:183)*

وَأَنْ تَصُومُوا خَيْرٌ لَكُمْ إِنْ كُنْتُمْ تَعْلَمُونَ .

*“நீங்கள் அறிந்திருப்போராயின், நீங்கள் நோன்பு நோற்பதே உங்களுக்குச் சிறந்தது (என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்)” (02:184)*

شَهْرُ رَمَضَانَ الَّذِى أُنْزِلَ فِيهِ الْقُرْآنُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنَاتٍ مِنَ الْهُدَى وَالْفُرْقَانِ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ

“ரமழான் மாதம் எத்தகையதெனில், அம்மாதத்தில்தான் மக்களுக்கு நேர்வழிகாட்டியாகவும், நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும், நன்மை தீமையைப் பிரித்தறிவிக்கக் கூடியதாகவும் உள்ள குர்ஆன் இறக்கி அருளப்பட்டது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்கட்டும்” *(02:185)*

இவை ரமழான் மாதம் பற்றியும் அதில் நோன்பு நோற்க வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தும் அல்குர்ஆன் வசனங்களாகும். இதனை நாம் அதிகமாக செவிமடுத்திருக்கின்றோம், அறிந்திருக்கின்றோம்.

நோன்பின் மகத்துவங்கள், சிறப்புகள் பற்றி நபி (ஸல்) அவர்களும் பல ஹதீஸ்களை எடுத்தியம்பியுள்ளார்கள். அல்லாஹ் கூறியதாக நபியவர்கள் அறிவிக்கின்றார்கள்.

قَالَ اللهُ عَزَّوَجَلَّ: كُلُّ عَمَلِ ابْنِ آدَمَ لَهُ إلاَّ الصِّيَامَ فَإِنَّهُ لِى وَأَنَا اَجْزِى بِهِ

“அல்லாஹ்தஆலா கூறுகின்றான்: ஆதமுடைய மகனின் அமல்கள் அனைத்தும் அவனுக்குரியவையே, நோன்பைத் தவிர. நிச்சயமாக நோன்பு எனக்குரியதாகும். நானே அதற்குக் கூலி கொடுக்கின்றேன்” (புஹாரி)

وَالصِّيَامُ جُنَّةٌ ، لِلصَّائِمِ فَرْحَتَانِ: فَرْحَةٌ عِنْدَ فِطْرِهِ وَفَرْحَةٌ عِنْدَ لِقَاءِ رَبِّهِ

“நோன்பு பாவங்களைத் தடுக்கும் கேடயமாகும். நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன. நோன்பு திறக்கும் போதுள்ள

*மகிழ்ச்சி, தனது இறைவனைச் சந்திக்கும் போதுள்ள மகிழ்ச்சி" (புஹாரி)*

مَامِنْ عَبْدٍ يَصُومُ يَوْمًا فِى سَبِيْلِ اللهِ إلاَّ بَاعَدَ اللهُ بِذَلِكَ الْيَوْمِ وَجْهَهُ عَنِ النَّارِ سَبْعِينَ خَرِيفًا

*"யார் அல்லாஹ்வின் பாதையில் சென்றிருக்கும் பொழுது ஒரு நாள் நோன்பு வைக்கிறாரோ அந்த ஒரு நாள் நோன்பிற்குப் பகரமாக அல்லாஹ் அவரின் முகத்தை எழுபது ஆண்டுகாலம் நரக நெருப்பை விட்டும் தூரமாக்கி விடுகின்றான்" (புஹாரி)*

اِذَا جَاءَ رَمَضَانُ فُتِحَتْ اَبْوَابُ الْجَنَّةِ وَغُلِّقَتْ اَبْوَابُ النَّارِ وَصُفِّدَتِ الشَّيَاطِينُ

*"ரமழான் மாதம் வந்து விட்டால், சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன. நரகின் வாயில்கள் மூடப்படுகின்றன. ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன" (புஹாரி)*

*அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!*

*றமழான் மாதத்தில் நோன்பு நோற்றல் கட்டாயக் கடமையாக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அவ்வாறு நோன்பு நோற்பது பெரும் நன்மையையும் சிறப்பையும் எமக்குப் பெற்றுத் தருவதுடன், எமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், எமது துன்பங்கள், கஷ்டங்கள் அகற்றப்படுவதற்கும், இம்மையிலும் மறுமையிலும் நாம் வெற்றி பெறுவதற்குமான மிகச் சிறந்த வழிமுறையாகவும் விளங்குகின்றது.*

*ரமழான் மாதம் ஒவ்வொரு வருடமும் அல்லாஹ்வின் ஆசீர்வாதத்தை மக்களிடையே பரப்புவதற்காக வந்து செல்கின்றது. உடலியல், உளவியல் ஆரோக்கியப் பயன்பாடுகளைக் கொண்ட சிறந்த நடைமுறையொன்றை முஸ்லிம்கள் மீது அல்லாஹ் கடமையாக்கியுள்ளதென்பது அவனது பேரருளின் பிரதிபலனாகும். மனித சமுதாயத்தின் ஆன்மீகம்,*

இலௌகீகம் சார்ந்த ஒழுக்கவியல் உயர்வுக்கான சிறந்த வழிகாட்டல்களை இம்மாதம் கொண்டுள்ளது. இவ்வகையில், ரமழான் மாதத்தில் நாம் ஆற்ற வேண்டிய கடமைகளை, பொறுப்புகளைப் பற்றி நோக்குவோம்.

ரமழான் மாதத்தில்தான் புனித அல்குர்ஆன் நபி (ஸல்) அவர்கள் மீது முதன் முதலாக அருளப்பட்டது. இதன்படி ரமழான் மாதத்தை அல்குர்ஆனின் பிறந்த தினம் என்று கூறலாம். இத்தினத்தைக் கொண்டாடும் முகமாக இம்மாதத்தில் நாம் அதிகமாக அல்குர்ஆனை ஓத வேண்டும். இம்மாதத்தில் சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நபியவர்களின் இக்கூற்று, ரமழானில் நோன்பு நோற்பவர்களுக்கு சுவர்க்கத்தில் உயர்தரமான பரிசு இருக்கின்றது என்பதை ஊர்ஜிதம் செய்வதாக அமைந்துள்ளது.

மேலும், இம்மாதத்தில் நாம் தொழுகையுடன் எப்போதும் தொடர்பாக இருக்க வேண்டும். குறிப்பாக இரவு நேரத் தொழுகையில் நாம் அதிகம் ஈடுபட வேண்டும். "ரமழான் மாதத்தில் யார் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் இரவு நேரம் நின்று வணக்கம் புரிகின்றாரோ அவரது முந்திய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இரவு நேர வணக்கம் என்பது தஹஜ்ஜுத் தொழுகையைக் குறிக்கின்றது. இதன்படி ரமழான் மாத தஹஜ்ஜுத் தொழுகை, பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான விசேட அமலாக விளங்குகின்றது.

ரமழான் மாதத்தில் நாம் அதிகமாக தானதர்மங்கள் கொடுக்க வேண்டும். "நபி (ஸல்) அவர்கள் மனிதர்களில் மிகச் சிறந்த கொடைவள்ளலாவார்கள். ரமழான் மாதம் வந்து விட்டால் அவர்கள் மிகவும் அதிகமாகவும் தாராளமாகவும் ஸதகா செய்வார்கள்" என்பதாக இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். ரமழானில் செய்யும் நற்செயலுக்கு பன்மடங்கான கூலிகள் வழங்கப்படுகின்றன. இதன்படி இம்மாதத்தில் வழங்கப்படும் தானதர்மமும் அல்லாஹ்வின் விசேட கவனிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன என்பதையே நபி (ஸல்) அவர்களின் செயல் தெளிவுபடுத்துகின்றது.

ரமழான் மாதத்தில் பொதுவாக எல்லா அமல்களையும் நாம் அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், இம்மாதத்தில் செய்யப்படும் அமல்கள் ஏனைய மாதங்களில் செய்யப்படும் அமல்களை விடச் சிறந்தவையாகும். அதுமட்டுமன்றி, இம்மாதத்தில் மனிதர்கள் அமல்களில் அதிகமாக ஈடுபட வேண்டும்

என்பது அல்லாஹ்வின் எதிர்பார்ப்பாக உள்ளது. நபி (ஸல்) அவர்கள் இதுபற்றிக் குறிப்பிடும் போது, “ரமழான் மாதத்தில் அல்லாஹ் மனிதர்களைப் பார்த்துக் கூறுகின்றான்: என்னை வணங்குபவர்கள் யாருமுள்ளனரா? அவர்களது அமலை நான் ஏற்றுக் கொள்கின்றேன். என்னிடம் தமது தேவைகளைக் கேட்பவர்கள் யாருமுள்ளனரா? அவர்களது பிரார்த்தனைகளை நான் ஏற்றுக் கொள்கின்றேன். என்னிடம் பாவமன்னிப்புத் தேடுபவர்கள் யாருமுள்ளனரா? அவர்களது பாவங்களை நான் மன்னித்து விடுகின்றேன்” என்று கூறுகின்றான். எனவே, இம்மாதத்தில் நாம் பாவங்களை முற்றாகத் தவிர்த்து, அமல்களில் ஈடுபட வேண்டும், அதிகமாக துஆக்களில் ஈடுபட வேண்டும், பாவங்களுக்காக தௌபாச் செய்வதிலும் அதிகமாக ஈடுபட வேண்டும். இவ்விடயங்கள் அல்லாஹ் எம்மிடம் எதிர்பார்க்கும் முக்கிய விடயங்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

ரமழான் மாதத்தின் மிகப் பிரதானமான சிறப்பு அதிலுள்ள லைலதுல் கத்ர் எனும் கண்ணியமிக்க இரவாகும். இவ்விரவில் அமல் செய்வது அல்லாஹ்விடமிருந்து மிகப் பெரும் கூலிகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. லைலதுல் கத்ர் என்பது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது என்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. அதாவது இவ்விரவில் அமல் செய்வது ஆயிரம் மாதங்கள் அமல் செய்வதை விடச் சிறப்புக்குரியதாகும். ஆயிரம் மாதம் என்பது சுமார் 83 ஆண்டுகளாகும். இவ்வாறு 83 ஆண்டுகள் தொடர்ச்சியாக எவராலும் அமல் செய்ய முடியாது. ஆனால் அவ்வாறு அமல் செய்த நன்மை மட்டும் எமக்குக் கிடைக்கின்றதென்றால் அதற்குக் காரணம் இந்த லைலதுல் கத்ர் இரவாகும். எனவே, ஆசீர்வதிக்கப்பட்ட புனித ரமழான் மாதத்தில் அதன் சிறப்புப் பண்புகளை விளங்கி, அமல் செய்ய வேண்டியது எமது கடமையாக இருக்கின்றது.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

நோன்பு நோற்பதனால் உடலுக்கும் உளத்துக்கும் சமூகத்துக்கும் ஏற்படும் நன்மைகளைப் பலர் உணர்வதில்லை. இந்த நன்மைகளைப் பெற வேண்டும் என்று நோன்பு நோற்போரும் மிகச் சிலரே. இந்த நோக்கங்களை மனதிற் கொண்டு நோன்பு நோற்பின் கூடிய பயனை அடையலாம். அதனால் தனிமனித வாழ்வும் சமூக வாழ்வும் சிறப்படையும் என்பதிற் சிறிதளவும் ஐயமில்லை. நோன்பு நோற்பதால் உடலுக்கு நன்மை ஏற்படுகிறது என்பதை இக்கால மருத்துவஞானிகள் ஏற்றுக் கொள்கின்றனர். இரத்த அழுத்தம்,

இருதயக் கோளாறு போன்ற வியாதிகளுக்கு நோன்பு நோற்றல் நல்ல பரிகாரமென வைத்தியர்கள் கூறுகின்றனர். புகைத்தல் முதலிய பழக்கங்கள் விடுபடுவதும் உடலுக்கு நன்மை பயப்பதே. இதனையே ஹஸ்ரத் அலீ (ரழி) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: "ஒவ்வொரு பொருளுக்கும் ஸக்காத் இருக்கின்றது. உடலின் ஸக்காத் நோன்பாகும்"

உலகிலே காணப்படும் எந்த இயந்திரமும் ஓய்வின்றி சதா வேலை செய்வதில்லை. உயிரற்ற இயந்திரங்களுக்குக் கூட ஓய்வு அவசியமாகின்றது. அப்போதுதான் அவை சிறப்பாகவும் நீண்ட காலத்துக்கும் உழைக்கும் திறனைப் பெறும். அது போலவே மனித உடலுக்கும் ஓய்வு அவசியமாகின்றது. மனித உடலிலே சதா இயங்கிக் கொண்டிருக்கும் உறுப்புகளில் வயிறும் ஒன்றாகும். அதற்கு நோன்பு நோற்குக் காலங்களில் போதிய ஓய்வு கிடைப்பதால் அது திறமையாகத் தொழிற்பட ஏதுவாகின்றது.

நோன்பு நோற்றலை, பட்டினி கிடத்தல் என்று எண்ணுபவர் பலர். ஆயினும், அது பட்டினி கிடத்தலுடன் நின்று விடக் கூடாது. உலக ஆசாபாசங்களிலிருந்து விடுபடுதலே நோன்பு நோற்றலின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே பட்டினி கிடத்தல் கடமையாக்கப்பட்டுள்ளது. மிருக உணர்வுகளை அடக்கி மனித உணர்வுகளை மேம்படச் செய்யப் பட்டினி இருத்தல் மிகவும் உதவியாகின்றது. நோன்பு காலத்திலே ஒரு கிராமத்திலுள்ள எல்லோரும் நோன்பு நோற்பதாலும் ஏனைய வணக்கங்களில் அதிகமாக ஈடுபடுவதாலும் ஆசாபாசங்களை அடக்கி வாழ ஏற்ற சூழல் ஏற்படுகிறது. பொய் பேசல், புறங்கூறல், களவு எடுத்தல், வீண் வார்த்தை பேசல் போன்ற கருமங்களிலிருந்து விலகி இருக்குமாறு மக்களுக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது. இக்கட்டளையை நிறைவேற்ற நோன்பு சிறந்த ஒரு சாதனமாகும். நோன்பினால் இச்சைகள் தானாகவே அடங்கி விடுகின்றன. அதனால் மனிதன் இறைவனுக்கு நெருங்கியவனாகின்றான்.

சமூக அடிப்படையில் நோக்கும் போது நோன்பு நோற்றல் சமூக அபிவிருத்திக்குப் பெரும் பயனுள்ளதாய் அமைகின்றது. பணக்காரர், ஏழைகள், பெரியோர், சிறியோர், ஆண், பெண் என்ற பாகுபாடின்றி எல்லோர் மீதும் நோன்பு கடமையாகின்றது. எனவே, ஏழைகளைப் போல் பணக்காரரும் நோன்பு வைப்பார். அப்பொழுது பட்டினி என்பது என்ன என்று அறியாத பணக்காரரும் ஏழைகளின் பசியை அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அதனால் ஏழைகள் மீது அன்பும் இரக்கமும் உண்டாகின்றது. மேலும் வழக்கமாக ஐந்து நேரமும் தொழாதவர்களும் றமழான் மாதத்தில்

தொழ ஆரம்பிக்கின்றார்கள். அத்துடன் தறாவீஹ், கியாமுல் லைல் போன்ற கூட்டுத் தொழுகைகளில் அதிகமாகப் பங்கெடுக்கின்றார்கள். ஹிஸ்பு ஓதுவதற்காகப் பள்ளிகளில் கூடுகின்றார்கள். அதனால் அதிகமாகச் சந்தித்துக் கொள்ளாத பலர் சந்தித்துக் கொள்ளவும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கின்றது. அதனால் பரஸ்பர அன்பு வளருகின்றது. எல்லோரும் இறை எண்ணத்துடன் இருப்பதால் ஆத்மீக வழி உயர்வு பெற்ற ஒரு சமுதாயம் உருவாகின்றது.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

ஒரு முஸ்லிமுக்கு நோன்பு நோற்றல் என்பது சாப்பிடுதல், குடித்தல் என்பவற்றைத் தவிர்ப்பது என்பதுடன் நின்று விடாது, மேலதிகமாக வணக்க வழிபாடு, உளவியல் ஆறுதல், இறைசட்டம் என்ற சிறப்பம்சங்களையும் வழங்குகின்றது. அது உண்மையில் ஒருவரது நடத்தையை, இச்சையைக் கட்டுப்படுத்தி, சமூக அறிவியல் ஆக்கங்களுக்குத் தூண்டுதல் வழங்கும் ஒன்றாகும்.

மேலும் நோன்பு நோற்றலானது அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிதல், அடிபணிதல், அடிமையாதல் ஆகியவற்றின் அடையாளங்களாகும். நோன்பை நோற்பதால் ஒரு முஸ்லிம் அல்லாஹ்வுடைய கட்டளைக்கு முழுமையாக அடிபணிதலை வெளிப்படுத்தி, அல்லாஹ்வுடைய நாட்டத்திற்குப் பதிலளித்து, அல்லாஹ்வுடைய கட்டளைக்கு அமைவாக தனது இச்சைகளையும் விருப்புகளையும் கட்டுப்படுத்தி நடந்து கொள்கின்றான். ரமழான் மாதத்தில் ஒரு முஸ்லிம் உண்ணாமலும் பருகாமலும் இருந்து கொள்வது, படைத்த இரட்சகனின் நாட்டத்திற்கு அவனது படைப்பு கீழ்ப்படிந்து நிற்றலை வெளிப்படுத்துகின்றது.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்தல், அல்லாஹ்வுடைய நேசம், இணக்கப்பாடு ஆகியவற்றுக்காக இச்சைகளையும் ஆசைகளையும் களியாட்டங்களையும் வெறுத்தொதுக்கும் சுயகட்டுப்பாட்டை அடையாளங் காட்டி நிற்கின்றது. அது நிலையற்ற இவ்வுலக இன்ப சுகங்களை அல்லாஹ்வினால் வாக்குறுதியளிக்கப்பட்ட சுவர்க்கத்துச் சுகத்திற்காகக் கட்டுப்படுத்தலை விளக்குகின்றது.

நோன்பு நோற்பதன் மூலம் ஒருவர் தன்னை இன்ப நுகர்வுகளிலிருந்து தூரமாக்கி, எவ்வித தடைகளும் இடையூறுகளுமின்றி அல்லாஹ்வுக்கு அடிபணிதலிலும் அவனது கட்டளைகளுக்கு உண்மையான பக்தியை வெளிக்காட்டுவதிலும் தன்னை அர்ப்பணிக்கிறார்.

நோன்பு நோற்கும் முஸ்லிம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெருக்குகின்ற மானசீக இன்பத்தையும் அல்லாஹ்வின் அருளையும் அனுபவிக்கின்றார். அல்லாஹ்வுடைய திக்ரிலும் கட்டளைக்குக் கீழ்ப்படிதலிலும் ஆர்வம் காட்டும் மனநிறைவான வாழ்வுக்கான உணர்வுகளை நோன்பு அவனது உள்ளத்தில் படிப்படியாக உரமேற்றுகிறது.

நோன்பு பிடிக்கும் முஸ்லிம் ஆன்மீத உணர்வுகளையும் ஆழமான பேரின்ப உணர்வுகளையும் அனுபவிக்கிறார். அவர் தனது உணர்வுகளையெல்லாம் ஒன்று திரட்டி தனது மனப்பலத்தைத் தன் இரட்சகனைத் திருப்திப்படுத்துவதற்காகத் திசை திருப்புவதன் மூலம் தான் பூரணத்துவத்தை நோக்கி நகர்வதாக நம்புகிறார்.

நோன்பு நோற்பதால் ஏற்படும் பயன் ஆத்மாவைச் சாந்தப்படுத்துவதோடு நின்று விடுவதில்லை. அது சமூகத்திற்கு ஒன்றிணைந்த வகையில், சமூகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் சமூக பயன்பாடுகளையும் கொண்டுள்ளது.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

துரதிஷ்டவசமாக, முஸ்லிம்களாகிய நம்மில் பலர் இம்மாதத்தை வெறும் நோன்பு நோற்கும் மாதமாகக் கருதி, இப்தார் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல், அல்லது அவற்றில் பங்கு பற்றல் மற்றும் நோன்புப் பெருநாளுக்கு ஆயத்தம் செய்தல் போன்றவற்றில் நாட்களைக் கடத்தி இப்புனித மாதத்தில் அல்லாஹ் எமக்கு அருளியுள்ள அளவற்ற செல்வங்களை முழுமையாக அனுபவிக்காது வரையறை செய்து கொள்கின்றோம். மேலும் தற்காலிக நன்மைகளை மட்டுமன்றி நுட்பமான தெய்வீக வெகுமதிகளையும் ஆசீர்வாதத்தினையும் பெற்றுக் கொள்வதற்காக ஒருவரை உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் தயார் செய்யும் இப்புனித மாதத்தின் முக்கியத்துவங்களும் அது வழங்கும் ஆற்றல்களும் உணரப்படாமல் முற்றாக உதாசீனம் செய்யப்படுகின்றது.

இந்த விசேட மாதத்திலிருந்து முழுமையான நன்மைகளை நாம் பெற்றுப் பயனடைய வேண்டுமாயின், இம்மாதத்தில் வெளிப்படையாகவும் மறைபொருளாகவும் உள்ள மகத்துவத்தினை அறிவதிலும் கற்பதிலும் அதிகமாக உழைத்தல் வேண்டும்.

ரமழான் மாதத்தில், மலக்குகள் நோன்பாளிகளுக்காக அவர்கள் நோன்பு திறக்கும் வரை அல்லாஹ்விடம் மன்னிப்பை வேண்டி

நிற்கின்றார்கள். இம்மாதத்தில் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று கஷ்டத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கும் அவனது நல்லடியார்களுக்காக அல்லாஹ் அவர்களது சுவர்க்கத்தை ஒவ்வொரு நாளும் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றான்.

நோன்பு நோற்பதன் சிறப்புகளைப் பற்றி இப்போது பரவலாக ஆராயப்பட்டு வருகின்றது. நவீன விஞ்ஞான உலகில் நோன்பின் உடல் ரீதியான பயன்பாடுகள் பற்றி நாள்தோறும் புதிய விடயங்கள் கண்டறியப்படுகின்றன. இன்று பெரும்பாலான அபிவிருத்தியடைந்த நாடுகளில் பிரபலமான வைத்தியர்கள் மிகவும் சிக்கலானதும் குணப்படுத்த முடியாததுமான சில நோய்களுக்குப் பரிகாரமாக நோன்பு நோற்கும்படி ஆலோசனை கூறுகின்றனர். மேலும், இஸ்லாத்தில் பரிந்துரைக்கப்பட்டிருப்பது போல் நீண்டகாலம் நோன்பு நோற்பது முழு உடற்தொகுதியையும் இளமையுடன் வைத்திருக்கவும் பல்வேறுபட்ட நோய் நொடிகளைத் துரத்தியடிக்கவும் உதவுகின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வகையில், ஒருவனின் ஆரோக்கியத்துக்கு அவசியமான ஆக்கபூர்வமான நிவாரணங்களை நோன்பு வழங்குகின்றது. பல்வேறு உடல் ஒழுங்கீனங்களை அது சரிசெய்கின்றது. குறிப்பாக, ஜீரணம், குருதிச் சுற்றோட்டம், உயிரணுக்களின் விருத்தி போன்றவற்றில் கணிசமான பங்களிப்பை அது செய்கின்றது.

நோன்பு, சாந்தமான உணர்வையும் மன அமைதியையும் ஏற்படுத்தி மனதை சமநிலையில் வைத்திருக்க உதவுகின்றது. அது பொறுமையையும் முயற்சியையும் விருத்தி செய்து தனிப்பட்ட குரோதங்களையும் ஆக்கிரமிப்பு நடத்தைகளையும் செயலிழக்கச் செய்து விடுகின்றது.

உணவு உட்கொள்ளாமலிருக்கும் போது, மிகவும் வறுமையில் வாடும் மக்களின் பசியையும் துயரையும் எம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. மனித துன்பங்களின் நேரடியான புரிந்துணர்வை நோன்பு எமக்கு அளிக்கின்றது. நோன்பு விசுவாசிகள் மீதான எமது இதயத்தை இளக வைத்து முஸ்லிம் சமூகத்துள் எமது சகோதரத்துவத்தைப் பலப்படுத்துகின்றது. அத்துடன் நோன்பு அல்லாஹ்வின் ஆசீர்வாதத்தைப் பெற்று அதற்கு நன்றி செலுத்தி ஏழை எளியவர்களுடன் அதனைப் பகிர்ந்து கொள்ளும் மனோநிலையை எமக்களிக்கின்றது.

நோன்பு நோற்கும் ஒரு மனிதனுக்கு சமய நெருக்கம் அதிகரிக்கின்றது. ஒரு விசுவாசி நோன்பு நோற்கும் போது உண்மையிலேயே தமது சொந்த நலன்களுக்கு மேலாக தமது

சமயத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் பக்குவத்தைப் பெறுகின்றார். இதன் மூலம் அவர் குறுகிய சிற்றின்ப வலைக்குள் சிக்காமல் காப்பாற்றப்படுகின்றார். இது விசுவாசிகளிடையே தௌஹீத் எனும் ஏகத்துவ உணர்வை ஏற்படுத்தி அல்லாஹ்வை அண்மிக்க வழிசெய்கின்றது.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

நம்மில் பெரும்பாலானோர் வீட்டிலோ சமூகத்திலோ நடைபெறும் பல்வேறு வைபவங்களுக்காக எமது நேரத்தையும் காலத்தையும் வீணாகச் செலவிடுகின்றோம். உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் அதற்காகப் பாடுபடுகின்றோம். ஆனால், இவ்வளவு பெரும் மாண்பும் மகத்துவமும் மிக்க ரமழான் மாதத்தின் வருகைக்கான ஆயத்தங்களைச் செய்வதற்கு யாரும் முன்வருவதில்லை. சிலவேளைகளில் உணவுவகைகளைத் தெரிவு செய்வதிலும், ஆடம்பரமாக இப்தார் வைபவங்களை ஒழுங்கு செய்வதிலும், அதில் ஆடம்பரமாகப் பங்கேற்பதிலும் காலத்தை வீணடிக்கின்றனர். மனித இனத்துக்கு அல்லாஹ் வழங்கிய அளவற்ற அருட்கொடைகளை இவ்வாறு உதாசீனம் செய்வதா? நாம் இந்த மாதத்தின் மகிமை பற்றிய அறிவைப் பூரணமாகப் பெற்றுக் கொள்வதன் மூலமே அல்லாஹ் எமக்கு வாக்களித்துள்ள தெய்வீக வெகுமதிகளுக்கு உரித்துடையவர்களாக முடியும்.

அறியாமைக் கறைபடிந்த எமது உள்ளத்தையும் உடலையும் ஆன்மாவையும் தூய்மைப்படுத்திக் கொள்ளும் ஒரு மாபெரும் வாய்ப்பை ரமழான் மாதம் எமக்கு வழங்கியுள்ளது. எமக்குத் தீமை செய்தவர்களை மன்னித்து, அவர்களது தவறுகளைத் திருத்திக் கொள்வதற்காகவும் நாம் மற்றவர்களுக்குச் செய்த தீங்குகளுக்காகவும் மன்னிப்பை வேண்டியும் பிரார்த்தனை செய்வதன் மூலமும் நாம் இந்தப் புனித மாதத்தினுள் பிரவேசிக்க வேண்டும். நாம் நமது கடந்த காலப் பாவச் செயல்களுக்காக வருந்தி மீண்டும் அவ்வாறு செய்யாமல் காப்பாற்றும்படி அல்லாஹ்வைப் பிரார்த்திக்க வேண்டும். ரமழானின் காலம், எமது ஆன்மீக வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் எல்லாத் தீமைகளிலிருந்தும் எமது இதயத்தைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வதற்கும் சுயதூய்மைக்குமான காலமாகும்.

இஸ்லாமிய கருத்தோட்டத்தின் படி, உடல் ரீதியான உபாதைகளுக்கப்பால், காலத்துக்குக் காலம் நம்மில் பெரும்பாலானோர் பல்வேறு வகையான ஆன்மீக உபாதைகளுக்கும் உள்ளாகின்றனர். இது சரியான முறையில்

இனங்காணப்பட்டு பரிகாரம் காணப்படாதவிடத்து பெரும் பிரச்சினைகள் ஏற்பட இடமுண்டு. பாசாங்கு, அகந்தை, புறம் பேசுதல், அசாதாரண நடத்தை, பொய்யுரைத்தல் போன்றவை நம்மைப் பீடித்துள்ள மிக அபாயகரமான ஆன்மீக நோய்களாகும். இத்தகைய நோய்களைப் போக்கும் நிவாரணியாக ரமழான் மாதத்து நோன்பு விளங்குகின்றது. எனவே, இம்மாதத்தில் தூய எண்ணத்துடன் நோன்பு நோற்பவர், அத்தகைய பாவச் செயல்களை விட்டும் தன்னைத் தூரப்படுத்திக் கொள்வார். அவற்றை தானும் செய்யாது பிறரையும் செய்ய விடாது சிறந்த சமூகப் பற்றுள்ள மனிதராக முஸ்லிமாக வாழ்வார்.

தற்கால உலகின் கவர்ச்சிகளுக்கு மதிமயங்கி விடாமல் நாம் நமது இறப்பையும் அதற்குப் பின்னரான வாழ்வு பற்றியும் நினைத்துப் பார்க்க வேண்டும். இந்த வாழ்வு நிலையில்லாதது, மிகவும் குறுகியது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த வாழ்வு மறுமை வாழ்வுக்கான ஒரு குறுகிய தூரப் பயணம் மட்டுமேயாகும். மறுமை வாழ்வே உண்மையானதும் நிலையானதுமாகும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

இந்த ரமழான் மிகச் சிறந்த ரமழானாக இருக்க வேண்டுமென நாம் விரும்பினால், அதற்கான பிரார்த்தனைகளில் நாம் ஈடுபட வேண்டும். எமக்கு முன் இருந்தவர்களும் அதற்கு முன் வாழ்ந்தவர்களும் பிரார்த்தனை மூலமாகவே இந்தப் புனித மாதத்தின் உச்சப் பயனைப் பெற்றார்கள். ஏனைய மாதங்களை விட இம்மாதத்தில் மேற்கொள்ளப்படும் வணக்க வழிபாடுகள் சிறப்பு மிக்கவை மட்டுமல்ல, அல்லாஹ்வுடன் எம்மை நெருக்கமாக்கி வைக்கக் கூடியவையும் கூட. எனவே, வாய்ப்பைத் தவறவிடாது அதிகமதிகமாக நாம் பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும்.

தியானமும் ஆழ்ந்த சிந்தனையும்தான் மனிதனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. இந்த மனித ஆற்றலை விருத்தி செய்து கொள்வதில் நாம் கூடிய நேரத்தைச் செலவிட வேண்டும். எமது சொல், செயல், நடத்தை என்பன பற்றியும் விசுவாசம், விழுமியங்கள் பற்றியும் ஆழ்ந்து சிந்தனை செய்ய வேண்டும். ஆழ்ந்து சிந்திப்பதன் மூலமும் தியானிப்பதன் மூலமும் மட்டுமே அவற்றுக்கான விடைகள் கிடைக்கும். நாம் வாசிக்கக் கூடிய நூல்களை மிகவும் அவதானத்துடன் தேடிப் பெறுவது மிக முக்கியமானதாகும். பின்னர் அவற்றை வாசித்து

ஆழமாகச் சிந்தித்து அவற்றுள் புதைந்துள்ள கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக, ரமழான் மாதத்தில் நாம் அல்குர்ஆனை ஓதுவதுடன் அது தொடர்பான அறிவையும் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில், குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பது மட்டும் எமது கடமையல்ல. அதில் புதைந்துள்ள அறிவியல், ஒழுக்கவியல் கருத்துக்களையும் நாம் கண்டறிய வேண்டும். அவற்றைப் பிறருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். அது உலகப் பொதுமறையாகும். எனவே, அதனை ஓதுவது அவசியம். அவ்வாறே அதனை விளங்கிக் கொள்ள முயற்சிப்பதும், விளங்கியவற்றைப் பின்பற்ற முயற்சிப்பதும், பின்பற்றுபவற்றை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்க முயற்சிப்பதும் எமது கடமையாகும். இக்கடமைகள் ரமழான் மாதத்தில் மேற்கொள்ளப்படும் போது, பன்மடங்கு நன்மைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே. அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! புனித ரமழான் மாதத்தின் சிறப்புகளை முழுமையாக உணர்ந்து, அவற்றைக் கடைப்பிடித்து அல்லாஹ்வின் அருளையும் ரமழானின் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள முயற்சிப்போமாக. எல்லாம் வல்ல அல்லாஹ் எம்மனைவருக்கும் அதற்கு நல்லருள் புரிவானாக. ஆமீன்

## *குத்பா:10*

## *மனிதாபிமானத்தை வலியுறுத்தும் இஸ்லாம்*

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ .

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ . اَلْحَمْدُ لِلهِ ، اَلْحَمْدُ لِلهِ رَبِّ الْعَالَمِيْنَ ، وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ ، وَالصَّلاَةُ وَالسَّلاَمُ عَلَى اَشْرَفِ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ سَيِّدِنَا مُحَمَّدْ رَسُوْلِ الْعَالَمِيْنَ ، وَعَلَى آلِهِ الطَّيِّبِيْنَ الطَّاهِرِيْنَ وَصَحَابَتِهِ الْمُنْتَجَبِيْنَ ، اَمَّا بَعْدُ ، فَقَدْ قَالَ اللهُ تَعَالَى فِى قُرْآنِهِ الْكَرِيْمِ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ، بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ ، « لاَيَنْهَاكُمُ اللهُ عَنِ الَّذِينَ لَمْ يُقَاتِلُوكُمْ فِى الدِّينِ وَلَمْ يُخْرِجُوكُمْ مِنْ دِيَارِكُمْ اَنْ تَبَرُّوهُمْ وَتُقْسِطُوا اِلَيْهِمْ اِنَّ اللهَ يُحِبُّ الْمُقْسِطِينَ » صَدَقَ اللهُ الْعَلِيُّ الْعَظِيْمُ . قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ ، « سِبَابُ الْمُسْلِمِ فُسُوقٌ وَقِتَالُهُ كُفْرٌ » صَدَقَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ .

*எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ். இறுதித் தூதர், அகில உலகுக்கும் அருட்கொடை, அண்ணலெம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்ந்த ஆருயிர் குடும்பத்தினர், அருமை ஸஹாபாக்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் என்றென்றும் உண்டாவதாக.*

*அல்லாஹ் விதித்துள்ள கடமையை நிறைவேற்று முகமாக அவனில்லத்தில் வந்தமர்ந்திருக்கின்ற அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!*

அல்லாஹ் ஏவியவற்றை ஏற்று விலக்கியவற்றைத் தவிர்ந்து எல்லா நிலைகளிலும் அவனைப் பயந்து தக்வாவோடு வாழுமாறு ஆரம்பமாக எனக்கும் பின்னர் உங்களுக்கும் நான் நல்லுபதேசம் செய்கின்றேன்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!உலக மக்களுக்கு நேர்வழி காட்டவும் அவர்களது வாழ்வை நெறிப்படுத்தவுமே இஸ்லாம் மனிதர்களுக்கு அருளப்பட்டுள்ளது. எனவே, உலக வாழ்க்கையில் நிம்மதியும் மறுமை வாழ்வில் வெற்றியும் அடைவதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் இஸ்லாம் அவசியமாகும். ஒரு சமூகத்தைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதற்குத் தேவையான எல்லா வழிமுறைகளையும் சட்டதிட்டங்களையும் இஸ்லாம் கொண்டுள்ளது. ஆயினும், இஸ்லாம் மிகக் கடுமையான போக்குள்ள மார்க்கமல்ல. தேவைக்கேற்ப நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய மென்மையான இயல்புடன்தான் இஸ்லாத்தை அல்லாஹ் எமக்கு அறிமுகப்படுத்தியுள்ளான். ஏனெனில், இஸ்லாத்தின் கட்டளைகள் எல்லாம் மனிதர்களின் நலன் பேணுவதையே இலக்காகக் கொண்டுள்ளன. இம்மையில் மனிதன் அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு ஒழுக்கத்துடன் வாழ்ந்து மறுமையில் உயர்தரமான சுவர்க்கத்தை அடைய வேண்டும் என்பதே இஸ்லாத்தின் இலக்காகும். அதற்கான பணியையே இஸ்லாம் உலகில் ஆற்றிக் கொண்டிருக்கின்றது. இவ்வகையில், இஸ்லாம் மனிதாபிமானத்தையும் மானுட நேயத்தையும் வலியுறுத்தும் ஒரு மார்க்கமாகும்.

உலகிலுள்ள எல்லா சமயங்களிலும் மனித சமுதாயத்தின் மீது அன்பும் இரக்கமும் கொண்ட ஒரே மார்க்கமாக இஸ்லாம் விளங்குகின்றது. இஸ்லாம்தான் மிக உயர்ந்த கௌரவத்தையும் மதிப்பையும் மனித சமுதாயத்திற்கு வழங்கியிருக்கின்றது. மனிதன் குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்தான் என்றும், மனிதன் இல்லாமையிலிருந்து தோன்றினான் என்றும், மனிதன் மிருகங்களுக்கு ஒப்பானவன் என்றும் வெவ்வேறு சமயங்களும் கோட்பாடுகளும் கூறிக் கொண்டிருக்க, இஸ்லாம் கூறுகின்றது: மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாவான் என்று.

அல்குர்ஆன் கூறுகின்றது:

إِنِّى جَاعِلٌ فِى ٱلْأَرْضِ خَلِيفَةً

---

*“நிச்சயமாக நான் பூமியில் எனது பிரதிநிதியை அமைக்கப் போகின்றேன்” (02:30)*

எனவே, அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற அந்தஸ்து உலகில் வேறு எந்தவொரு படைப்புக்கும் இல்லை. மலாயிக்காமார், ஜின்கள் இருக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் அடிமைகள் மட்டுமே. அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற அந்தஸ்து மனித சமுதாயத்துக்கு மட்டும்தான் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இது இஸ்லாம் மனித சமுதாயத்துக்கு வழங்கியுள்ள மிகப் பெரும் கௌரவமும் மரியாதையுமாகும். அதுமட்டுமன்றி, மனிதன் பற்றிய சரியான வரைவிலக்கணத்தையும் இஸ்லாம்தான் முன்வைக்கின்றது. இது பற்றி அல்குர்ஆன் என்ன கூறுகின்றதென்றால்,

اَلَّذِى اَحْسَنَ كُلَّ شَىْءٍ خَلَقَهُ وَبَدَاَ خَلْقَ الْاِنْسَانِ مِنْ طِيْنٍ ، ثُمَّ جَعَلَ نَسْلَهُ مِنْ سُلٰلَةٍ مِنْ مَاءٍ مَهِينٍ ، ثُمَّ سَوّٰاهُ وَنَفَخَ فِيهِ مِنْ رُوحِهِ وَجَعَلَ لَكُمُ السَّمْعَ وَالْاَبْصَارَ وَالْاَفْئِدَةَ قَلِيلاً مَا تَشْكُرُونَ .

*“(அவன்) எத்தகையவனென்றால், எதனை அவன் படைத்தானோ அந்த ஒவ்வொரு பொருளையும் மிக அழகாக்கி வைத்தான். மேலும், அவன் மனிதனின் படைப்பைக் களிமண்ணிலிருந்து ஆரம்பித்தான். பின்னர் வடிகட்டி எடுக்கப்பட்ட அற்ப நீரிலிருந்து அவனுடைய சந்ததியை உண்டாக்கினான். பின்னர். அதனைச் சரியாக உருவாக்கி, தன்னுடைய ரூஹ் (ஆன்மா)விலிருந்து அதில் ஊதி (மனிதனை உண்டாக்கி)னான். இன்னும் உங்களுக்குச் செவிப்புலனையும், பார்வை(ப்புலன்)களையும், இதயங்களையும் அவனே அமைத்தான். (இவ்வாறிருந்தும்) நீங்கள் மிகக் குறைவாகவே நன்றி செலுத்துகிறீர்கள்” (32:7-9)*

எனவே, மனிதன் அல்லாஹ்வினால் உருவாக்கப்பட்டவன், அல்லாஹ்வின் ரூஹினால் உயிர் பெற்றவன். அதாவது தெய்வீகச் சிறப்பும் தெய்வீகப் பண்பும் கொண்டவன். அவன் விலங்குகளாகவோ, பறவைகளாகவோ அன்றி, மனிதனாகவே உருவாக்கப்பட்டுள்ளான். அவனுக்கென்று தனித்துவமான மரியாதையும் வாழ்க்கையும் இருக்கின்றது என்பதை இவ்வசனம் எமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

ஒருமுறை நபி (ஸல்) அவர்களைக் கடந்து ஒரு ஜனாஸா ஊர்வலம் சென்ற போது, நபியவர்கள் அதைக் கண்டு எழுந்து நின்றார்கள். அப்போது அவர்களிடம், “அது யூதனின் ஜனாஸா” எனக் கூறப்பட்டது. அதற்கு நபியவர்கள், “அவரும் ஒரு மனிதரல்லவா?” என்றார்கள். (புஹாரி)

எனவே, மனிதன் என்ற வகையில், எல்லோரும் சமம்தான். அவர்கள் சமயத்தால், இனத்தால், மொழியால், பிரதேசத்தால் வேறுபட்டிருந்தாலும் எல்லா மனிதர்களுக்கும் தனித்துவமான மதிப்பும் மரியாதையும் இருக்கின்றது என்று இஸ்லாம் கூறுகின்றது. இஸ்லாத்தில் இணைந்து கொள்ளும் போதே அந்த மதிப்பும் மரியாதையும் பூரணத்துவமடைகின்றன. ஒருவரைக் கௌரவித்தல் என்பது உண்மையில் மிகப் பெரும் மனிதாபிமானமும் மானுட நேயமுமாகும். அத்தகைய ஓர் அழகிய பண்பை இஸ்லாத்தில் நாம் காண்கின்றோம். இதற்கு மாற்றமாக, ஒருவரை அவமதித்தல் என்பது மனிதாபிமானமற்ற செயலாகும். இவ்வாறு அவமதிப்பதென்பது அவரை உளவியல் ரீதியாகப் பாதிக்கின்றது. அவர் தற்கொலை செய்யும் நிலைகளுக்குத் தள்ளப்படுகின்றார். இதனால்தான் இவ்வாறு அநியாயமாக ஒருவரை அவமானப்படுத்துவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

இஸ்லாத்தின் வரையறைக்குள் வந்து விட்டால், அவர்கள் பின்பற்ற வேண்டிய பண்புகள், நடத்தைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி இஸ்லாம் தெளிவாக விளக்கியுள்ளது. அதாவது ஒரு முஸ்லிம், மற்றவரைத் துன்புறுத்தக் கூடாது, மற்றவரது சொத்து, மரியாதை, உயிர் என்பவற்றுக்குச் சேதம் விளைவிக்கக் கூடாது, மற்றவரது உரிமைகளையும் சுதந்திரத்தையும் பறிக்கக் கூடாது. மாறாக, மற்றவர்களுக்கு உதவி புரிய வேண்டும், அவர்களது தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும், அவர்கள் மீது அன்பு காட்ட வேண்டும். அவர்களுக்கு உணவளிக்க வேண்டும், அவர்களை நன்மையின் பால் அழைத்து, தீமையிலிருந்து தடுக்க வேண்டும். தனது தேவைகளை விட பிறர் தேவைகளை முதன்மைப்படுத்த வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்: “நீங்கள் பூமியில் உள்ள மனிதர்கள் மீது இரக்கம் காட்டுங்கள். வானத்திலுள்ள இறைவன் உங்கள் மீது இரக்கம் காட்டுவான்” (புஹாரி)

ஒருவர் மீது இரக்கம் காட்டுவதென்பது அவருக்கு இருக்கின்ற மிகப் பெரிய மனிதாபிமானத் தேவையாகும். மனிதர்கள் மீது இரக்கம் காட்டுவதனூடாக அல்லாஹ்வின் அன்பைப் பெற முடியும் என்ற கூற்றானது மனிதர்கள் மீது இரக்கம் காட்டும்படியாக உற்சாகமூட்டுகின்ற முயற்சியாக அமைந்துள்ளது.

நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: "சிறுவர் மீது இரக்கம் காட்டாதவரும் பெரியோர் மீது மரியாதை செலுத்தாதவரும் எம்மைச் சார்ந்தவரல்லர்" சிறுவர்கள் மீது இரக்கம் காட்டுவதென்பது ஒரு சமூகத்தை வரவேற்பது போன்றதாகும். பெரியோரை மரியாதை செய்வதென்பது பிறிதொரு சமூகத்தை வழியனுப்புவது போன்றதாகும். இந்த இரண்டு அம்சங்களும் சிறப்பாக அமைகின்ற போது. அவற்றுக்கிடைப்பட்ட சமூகம் மிகச் சிறப்பான பண்பையும் பயன்பாட்டையும் கொண்டிருக்கும் என்பது உறுதி. இவ்விரண்டு அம்சங்களும் மற்றொரு வகையில் முக்கியத்துவமிக்க மனிதாபிமான நடவடிக்கையாகவும் அமைகின்றன.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

மனிதாபிமான நடவடிக்கைகளில் ஒன்றாக இஸ்லாம் அறிமுகப்படுத்துவது மத சகிப்புத்தன்மையாகும். அதாவது, ஏனைய மதங்களையும் மதிக்க வேண்டும். அவர்களது சமய அனுஷ்டானங்களையும் அவர்களது மதவழிபாட்டுத் தலங்களையும் இழிவுபடுத்தவோ அழிக்கவோ கூடாது, அவர்களது சமய நூல்களை மரியாதைக் குறைவாக நடத்தக் கூடாது என இஸ்லாம் கண்டிப்பாக வலியுறுத்தியுள்ளது. பல்லின மக்கள் வாழும் ஒரு சமூகத்தில் ஒரு முஸ்லிமின் வாழ்வு இத்தகைய பண்புகளைக் கொண்டதாகவே அமைய வேண்டும் என் இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இதன்மூலம், ஒரு முஸ்லிமின் நற்பண்பாடு, நன்னடத்தை, ஒழுக்க விழுமியம் போன்றவை சமாதானத்திற்கான இணைப்புப் பாலங்களாக அமைதல் வேண்டும்.

இஸ்லாம் பண்பாட்டால் வளர்ந்த வாழ்க்கை நெறியாகும். பலத்தாலும் பலாத்காரத்தாலும் தன்னை நிலைப்படுத்திக் கொண்ட ஒரு கொள்கையல்ல. இஸ்லாம் தன்னகத்தே ஓர் ஒழுக்க மாளிகையைக் கொண்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நிச்சயமாக நான் நற்பண்பாடுகளைப் பூரணப்படுத்தவே அனுப்பப்பட்டுள்ளேன்"

நபியவர்கள் ஒருபோதும், ஏனைய மதத்தினரைத் துன்புறுத்தியதில்லை, அவர்களது சமயக் கிரியைகளை அலட்சியப்படுத்தியதில்லை, அவர்களது வழிபாடுகளையோ வழிபாட்டுத்தலங்களையோ அழித்தொழித்ததில்லை, எந்தவொரு சந்தர்ப்பத்திலும், யுத்தமாக இருந்தாலும் கூட, மற்றவர்களது மத அனுஷ்டானங்களுக்கும், அவர்களது மதவழிபாட்டுத் தலங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்றே அவர்கள் போதித்தார்கள்.

மதசகிப்புத்தன்மை தொடர்பாக புனித அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

لاَيَنْهَاكُمُ اللهُ عَنِ الَّذِينَ لَمْ يُقَاتِلُوكُمْ فِى الدِّينِ وَلَمْ يُخْرِجُوكُمْ مِنْ دِيَارِكُمْ اَنْ تَبَرُّوهُمْ وَتُقْسِطُوا اِلَيْهِمْ اِنَّ اللهَ يُحِبُّ الْمُقْسِطِينَ .

*“(விசுவாசிகளே!) மார்க்கத்தில் உங்களுடன் எதிர்த்துப் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அத்தகையோருக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்கள் பால் நீங்கள் நீதமாக நடந்து கொள்வதையும் அல்லாஹ் உங்களுக்குத் தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கின்றான்” (60:08)*

எனவே, இஸ்லாம் விதியாக்கியுள்ள ஒவ்வோர் ஒழுங்குவிதியும் மனிதாபிமானத்தை வலியுறுத்தும் அம்சங்களாக விளங்குகின்றன. ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவமான மதிப்பும் கௌரவமும் இருக்கும். அந்த கௌரவத்துக்கும் மதிப்புக்கும் இழுக்கு ஏற்படுத்துவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இதற்காகவே ஒருவரைப் பற்றி அவர் இல்லாத சந்தர்ப்பங்களில் குறையாகப் பேசுகின்ற புறம்பேசலை இஸ்லாம் ஹராமாக்கியுள்ளது. ஒருவரது மனம் புண்படும்படியாக பட்டப் பெயர் சூட்டுவதை இஸ்லாம் தடை செய்துள்ளது. ஒருவரை அவமானப்படுத்தும்படியாக உரையாற்றுவதையும் குறைகூறுவதையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. எனவே, ஒருவரது மானம் பாதுகாக்கப்பட வேண்டும், அது அவரது முக்கிய மனிதாபிமானத் தேவையாகும் என்பதை இஸ்லாம் தெளிவுபடுத்தியுள்ளது.

*அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!*

உலகில் வாழும் மனிதர்கள், பொருளாதார ரீதியாக பெரும் ஏற்றத்தாழ்வுகளுக்கு மத்தியில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிலர் தம்மிடமுள்ள பணத்தை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டே செல்கின்றனர். அவற்றைத் தம்மிடம் பதுக்கி வைத்துக் கொள்கின்றனர். இதனால், ஏழைகள், வறியவர்கள் தொடர்ந்தும் பசியோடும் பட்டினியோடும் வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இத்தகைய நிலையை இஸ்லாம் கண்டிக்கின்றது. செல்வந்தர்கள் தமது சொத்துகளிலிருந்து குறிப்பிட்ட தொகையை ஏழைகளுக்கு வழங்க வேண்டும் என்றும், ஏழைகள் பிச்சையெடுத்தல், திருடுதல், கொள்ளையடித்தல் போன்ற தீய செயல்களில் ஈடுபடாமல், ஹலாலான முறையில் உழைத்து தமது சீவியத்தை நடத்த வேண்டுமென்றும் இஸ்லாம் கட்டளையிடுகின்றது. உண்மையில், இது மனிதர்களுக்கிடையே மனிதாபிமான உணர்வையும் மனித நேயத்தையும் ஏற்படுத்துகின்ற மிக முக்கிய வழிமுறையாக விளங்குகின்றது.

அது மட்டுமன்றி, இஸ்லாம் மிகச் சிறந்த ஒழுக்கக் கட்டுக்கோப்பையும் கட்டுப்பாட்டையும் கொண்டுள்ளது. முக்கியமாக, கொலை செய்தல், விபசாரம் புரிதல், வட்டி வாங்குதல் போன்ற செயல்களை மிகப் பெரும் குற்றச் செயல்களென இஸ்லாம் தடைசெய்துள்ளது. இத்தகைய குற்றச் செயல்கள், சம்பந்தப்பட்ட மனிதர்களின் வாழ்வைச் சீரழிப்பதோடு, சுற்றியுள்ளவர்களின் வாழ்வையும் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன. எனவே, மனிதர்கள் உலகில் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் பரஸ்பர புரிந்துணர்வோடும் அன்புப் பரிமாற்றத்தோடும் வாழ வேண்டுமானால், இத்தகைய குற்றச் செயல்கள் முற்றாகக் களையப்பட வேண்டியது அவசியமாகும் என்பதை இஸ்லாம் விளக்கியுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்:

سِبَابُ الْمُسْلِمِ فُسُوقٌ وَقِتَالُهُ كُفْرٌ

“ஒரு முஸ்லிமுக்கு ஏசுவது கெட்ட செயலாகும். அவனைக் கொலை செய்வது குப்ராகும்” என்றார்கள். அதாவது ஒரு முஸ்லிமை வீணாகக் கொலை செய்பவன் காபிராகி விடுகின்றான். அவனது ஈமான் செயலற்று விடுகின்றது. முஸ்லிம் என்ற அந்தஸ்தையும் அவன் இழந்து விடுகின்றான். எனவே, ஒரு

முஸ்லிமை வீணாக ஏசுவதையும் குறைகூறுவதையும் கொலை செய்வதையும் நாம் கண்டிப்பாகத் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

ஆனால், இன்று எம்மத்தியிலே இடம்பெறுவது என்ன? சின்னச்சின்ன விடயங்களுக்கெல்லாம் சண்டையிடுகின்றோம். தாறுமாறாக ஏசிக் கொள்கின்றோம். பல மாதங்களாக பல வருடங்களாக முகம் பார்த்துப் பேசாத அளவுக்கு வெறுப்பையும் கோபத்தையும் மனதுக்குள் தேக்கி வைத்துக் கொள்கின்றோம். சில முஸ்லிம் நாடுகளிலே இடம்பெறும் நிகழ்வுகள் இன்னும் கவலையளிக்கின்றன.

வெறும் கொள்கை முரண்பாடுகளுக்காக ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமைக் கொலை செய்வதையும், அவ்வாறு கொலை செய்வது ஆகுமெனவும் நன்மை தருமெனவும் மார்க்க அறிஞர்களே பத்வாக் கொடுத்து தூண்டி விடுவதையும் நாம் பார்க்கின்றோம். எமது நாட்டிலும் இந்நிலை கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வருவது பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது முற்றாகத் தவிர்ந்து கொள்ளப்பட வேண்டிய பெரும் பாவச் செயலாகும்.

ஏனெனில், “லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்” என்ற திருக்கலிமாவை, ஷஹாதாவை ஏற்றுக் கொண்டால் அவர் முஸ்லிமாகி விடுகின்றார். அவர் எமது சகோதரர். அவரை நாம் ஒதுக்கி வைக்க முடியாது, புறக்கணிக்க முடியாது, அவருடைய நடவடிக்கைகளில் தவறுகளோ பிழையோ தென்பட்டால், அதைத் திருத்த வேண்டுமேயன்றி, அதற்காக அவரைக் கொலை செய்வதோ துன்புறுத்துவதோ அவருடன் சண்டை பிடிப்பதோ கூடாது.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை ஒருவரைக் கொலை செய்வதென்பது மூன்று சந்தர்ப்பங்களில் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றது. 1. பழிக்குப்பழி வாங்குவதற்காக. 2. இஸ்லாத்தின் கடமைகளில் ஒன்றை மறுத்து அதை அலட்சியப்படுத்துவதற்காக. 3. ஜிஹாதிய நடவடிக்கைகளுக்காக.

அதிலும், ஜிஹாதின் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் பற்றி இஸ்லாம் கண்டிப்பாக வலியுறுத்தியுள்ளது. இஸ்லாத்தின் போரியல் ஒழுங்குகள், அதன் மனிதாபிமானக் கொள்கைகளுக்குச் சிறந்த உதாரணங்களாக விளங்குகின்றன. அதாவது போர் புரியும் போது சிறுவர்களைக் கொல்லக் கூடாது, பெண்களைக் கொல்லக் கூடாது, முதியோர்களைக் கொல்லக் கூடாது, அவர்களைத் துன்புறுத்தவோ அவமானப்படுத்தவோ கூடாது. மரங்களை வெட்டக் கூடாது, கிணறுகளை மூடக் கூடாது, பயிர்களை

அழிக்கக் கூடாது என தொடரான பல கட்டுப்பாடுகளை இஸ்லாம் விதித்துள்ளது.

இன்று நடப்பது என்ன? மேற்குலகம் இஸ்லாத்தின் மீது குறை காண முயன்று வருகின்றது. இஸ்லாத்தின் எல்லாக் கடமைகளையும் புறந்தள்ளுகின்றது. அதன் கொள்கைகள் மனிதாபிமானத்துக்குப் புறம்பானதென வர்ணிக்க முயல்கின்றது. உண்மையில், மனிதாபிமானம் என்பது இஸ்லாத்தில்தான் உள்ளது, மேற்குலகில் அது கிடையாது என்பதற்கு இஸ்லாத்திலும் மேற்குலகின் அண்மைக்கால நடவடிக்கைகளிலும் அதிக சான்றுகளையும் ஆதாரங்களையும் நாம் காண முடியும்.

உதாரணமாக, இஸ்லாத்தின் மீது குறை கூறுவதில் முதலிடத்தில் இருக்கும் அமெரிக்காவை எடுத்து நோக்கினால், உலகில் முதலாவதாக அணுகுண்டை வீசிய நாடு அமெரிக்காதான். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது, ஜப்பானின் இரு நகரங்கள் மீது அமெரிக்கா இந்த அணுகுண்டை வீசியது. இதனால், அந்த நகரங்களில் வாழ்ந்த இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தார்கள், இலட்சக்கணக்கான மக்கள் அங்கவீனர்களாக்கப்பட்டார்கள், ஆட்கொல்லி நோய்களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். எப்படிச் செத்தோம் என்று அறியாமலேயே அம்மக்கள் தூங்கிக் கொண்டிருக்கும் போதே படுகொலை செய்யப்பட்டார்கள்.

எல்லா வகையான போர் தர்மங்களையும் சர்வதேச சட்டங்களையும் மனித நாகரிகங்களையும் மீறி, உலகிற்குத் தன் வல்லமையை நிரூபிக்க வேண்டும் எனும் ஒரே காரணத்திற்காக நடத்தப்பட்ட கொடூரம் அது. அன்று வீசப்பட்ட அணுகுண்டுகளின் வீச்சினால் இன்றைக்கும் அந்த மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். நுரையீரல் கோளாறுகள், புற்றுநோய், பிறவியிலேயே ஊனம் போன்ற பல நோய்கள் அவர்களை வாட்டி வருகின்றன.

இவ்வாறு இலட்சக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த அந்நாட்டின் ஜனாதிபதி டிரூமனை பத்திரிகை நிருபர்கள் சந்தித்து, “ஜனாதிபதி அவர்களே! நேற்று இரவு நன்றாகத் தூங்கினீர்களா?” எனக் கேட்டனர். “ஆம். எப்போதையும் விட நான் நேற்று அமைதியாகத் தூங்கினேன். எங்கள் பரிசோதனை வெற்றி பெற்று விட்டது. இந்த உலகத்தில் நாங்கள்தான் இப்போது பலம் வாய்ந்தவர்கள்” என்று அமெரிக்க ஜனாதிபதி பதில் கூறினார்.

இதேபோல், ஈராக்கிலே, ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள், சிறுவர்கள், குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டார்கள், சிறையில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டார்கள், பசியாலும் பட்டினியாலும் மரணித்தார்கள், அமெரிக்காவின் துப்பாக்கிகள் அம்மக்களின் உயிர்களைக் குடித்தன. அவர்களது பீரங்கிகள் அம்மக்களது உடமைகளை அழித்தன. ஆப்கானிஸ்தானிலே, தலிபான்களை அழிக்கும் போர்வையில் முஸ்லிம்களின் பொருளாதாரங்களை அமெரிக்கா நாசமாக்கியது. தாம் உற்பத்தி செய்த ஆயுதங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு ஆப்காஸ்தானை ஒரு தளமாகப் பயன்படுத்திக் கொண்டது.

இவ்வாறு ஆயிரக்கணக்கான இலட்சக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றொழிப்பதும் அவர்களது உடமைகளைச் சூறையாடுவதும் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகளாக இருக்கின்றன. இத்தகையக் குரூரமான, மனித நாகரிகமற்ற அமெரிக்கா சொல்கிறது, இஸ்லாம் மனிதாபிமானமற்ற மார்க்கமாம், முஹம்மது (ஸல்) அவர்கள் மனிதாபிமானமற்ற தலைவராம். உலகின் மிகப் பெரிய நகைச்சுவை இதுவாகத்தான் இருக்கும்.

ஆனால், இஸ்லாத்தின் வரலாற்றையும் நபி (ஸல்) அவர்களின் வரலாற்றையும் எடுத்து நோக்கும் போது, உண்மையில், உலகின் மிக உன்னதமான மனிதாபிமானமுள்ள மார்க்கம் இஸ்லாம்தான் என்பதையும், உலகின் உன்னதமான மனிதாபிமானமுள்ள தலைவர் முஹம்மது (ஸல்) அவர்கள்தான் என்பதையும் எல்லோரும் ஏற்றுக் கொள்வர். ஏனெனில், போர்க் காலங்களில் நபி (ஸல்) அவர்கள் எவ்வளவு மனிதாபிமானத்தோடு நடந்து கொண்டார்கள் என்பதற்கு இஸ்லாத்தில் அனேக ஆதாரங்கள் உள்ளன.

உதாரணத்திற்காக சிலவற்றை நோக்குவோம். அது ஒரு போர்க்களம். அந்தக் களத்தில் ஒரு பெண்ணின் பிணம் கிடப்பதாகச் செய்தி வந்தது. அந்தச் செய்தியைக் கேட்டதும் நபி (ஸல்) அவர்கள் பெரும் கவலை கொண்டார்கள். அந்த இடத்துக்கு விரைந்தார்கள். அந்தப் பெண்ணின் உடலைப் பார்த்தார்கள். பிறகு முகம் சிவக்க, தம்மைச் சுற்றி இருப்பவர்களிடம் கேட்கிறார்கள், "இவள் போர் செய்யவில்லையே! பிறகு ஏன் இவள் கொலைக்கு ஆளானாள்?" எனக் கேட்கிறார்கள். இவ்வாறு கேட்டு, போர் சமயத்திலும் கூட அப்பாவி மக்கள் கொல்லப்படுவதைக் கடுமையாகக் கண்டித்தார்கள்.

மனிதத் தன்மைகள் அனைத்தும் மண்ணோடு மண்ணாகி விடும் கொடுரமான போர்க்களத்திலும் இஸ்லாம் மனிதாபிமானத்தையும் மனித நாகரிகத்தையும் கடைப்பிடித்தது. 1400 ஆண்டுகளுக்கு முன்பே அது மிக உயர்வான போர் ஒழுங்கு முறைகளை வகுத்துத் தந்து விட்டது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "போரில் பங்கு கொள்ளாத வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகள், பெண்கள் ஆகியோரைக் கொல்லாதீர்கள்"

"மடங்களில் உள்ள துறவிகளையும், வணக்கஸ்தலங்களில் இருக்கும் மக்களையும் கொல்லாதீர்கள்"

"நெருப்பால் தண்டனை வழங்குவதற்கு நெருப்பின் அதிபதியான அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் உரிமை கிடையாது"

"விளைநிலங்களையும், மக்கள் வாழும் பகுதிகளையும் அழிக்காதீர்கள்"

இவ்வாறு யுத்தம் தொடர்பாக பல கட்டளைகளையும் நெறிமுறைகளையும் இஸ்லாம் வகுத்தளித்துள்ளது. இவை எல்லாவற்றையும் விட புனித அல்குர்ஆனில் ஓர் அழகான அருமையான வசனமுள்ளது. மனித உயிர்களை இஸ்லாம் எந்தளவுக்கு மதிக்கின்றது என்பதை இதன் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

مَنْ قَتَلَ نَفْسًا بِغَيْرِ نَفْسٍ اَوْ فَسَادٍ فِى الْاَرْضِ فَكَأَنَّمَا قَتَلَ النَّاسَ جَمِيعًا ، وَمَنْ أَحْيَاهَا فَكَأَنَّمَا أَحْيَا النَّاسَ جَمِيعًا

"நியாயமின்றி ஒருவன் மற்றவனைக் கொலை செய்து விட்டால், அவன் மனிதர்கள் அனைவரையும் கொலை செய்தவன் போலாவான். எவனொருவன் மற்றவனுக்கு வாழ்வளிக்கின்றானோ அவன் எல்லா மனிதர்களுக்கும் வாழ்வளித்தவன் போலாவான்" (5:32)

எனவே, இஸ்லாம் மனிதாபிமானத்தை வலியுறுத்தும் ஒரு மார்க்கமாகும். அது எந்த சந்தர்ப்பத்திலும் மனித உயிர்களைக் கொல்லும்படியாகத் தூண்டவில்லை, குற்றம் புரிந்தவர்களுக்கும்

*தண்டனையளிக்குமுன் அவர்களைத் திருத்த வேண்டுமென்றும், மன்னிப்பளிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளது. பிறர் தமக்குத் தீங்கிழைத்தாலும், அவர்களை முதலில் மன்னிக்க வேண்டுமென்றும், அதற்காக பொறுமை காக்க வேண்டுமென்றும் இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது. நபி (ஸல்) அவர்களது வாழ்க்கையில் இதற்குப் பல ஆதாரங்களை நாம் காண முடியும்.*

*நபி (ஸல்) அவர்களுக்கு எப்போதும் தொந்தரவாக இருந்து, அவர்கள் பாதையில் நடந்து வரும் போது, குப்பைகளைத் தலையில் கொட்டி வந்த ஒரு குறைஷிப் பெண்மணி, நோய்வாய்ப்பட்ட போது, நபியவர்கள் சென்று அவளை நோய் விசாரித்தார்கள். அவளது உடல் நலத்துக்காகப் பிரார்த்தித்தார்கள்.*

*இஸ்லாத்தின் ஆரம்பம் தொடக்கம், முஸ்லிம்களுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்து வந்த அபூசுப்யான், மக்கா வெற்றியின் போது நபியவர்களின் முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார். நபியவர்க்ள அவரை மன்னித்தார்கள். அதுமட்டுமன்றி, அவரது மகன் முஆவியாவுக்கு தமது சபையில் இடமும் கொடுத்தார்கள்.*

*உஹத் யுத்தத்தின் போது, நபி (ஸல்) அவர்களின் அன்புக்குரிய சிறிய தந்தை ஹஸ்ரத் ஹம்ஸா (ரழி) அவர்களின் ஜனாஸாவைக் கூறுபோட்டு, அவர்களது நெஞ்சைப் பிளந்து ஈரலைக் கடித்துத் துப்பிய முஆவியாவின் தாய் ஹிந்தாவையும் நபியவர்கள் மன்னித்தார்கள்.*

*இவ்வாறு, நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை முழுவதிலும் மன்னிப்பின் சரித்திரத்தைக் காண முடியும். நபியவர்கள் இவ்வாறு அன்பும் அறிவும் பிறரை மதிக்கும் பண்பும், மாண்பும் கொண்டிருந்ததனாலேயே இஸ்லாம் குறுகிய காலத்திற்குள் பெருவிருட்சமாகத் தழைத்தோங்கியது. நபி (ஸல்) அவர்களின் பண்பு பற்றி அல்குர்ஆன் பல இடங்களில் பிரஸ்தாபிக்கின்றது:*

وَاِنَّكَ لَعَلَى خُلُقٍ عَظِيمٍ .

*“(நபியே!) நிச்சயமாக நீர் மகத்தான நற்குணத்திலிருக்கின்றீர்கள்” (68:04)*

فَبِمَا رَحْمَةٍ مِنَ اللهِ لِنْتَ لَهُمْ وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيظَ الْقَلْبِ لاَ نْـفَضُّوا مِنْ حَوْلِكَ

"(நபியே!) அல்லாஹ்வுடைய அருளின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக நடந்து கொள்கிறீர். மேலும், சொல்லில் கடுகடுப்பானவராக, இரக்கமற்ற இதயமுள்ளவராக நீர் இருந்திருப்பீரானால் உம்மிடமிருந்து அவர்கள் பிரிந்து சென்றிருப்பார்கள்" *(03:159)*

எனவே, நபி (ஸல்) அவர்கள் உலகின் முதற்தரமான மனிதாபிமானி, அவர்கள் அறிமுகப்படுத்திய புனித இஸ்லாம் மார்க்கமும் மனிதாபிமானத்தை வலியுறுத்தும் உலகின் முதற்தர மார்க்கமாகும். அது மனிதர்களின் நலன்கள் மீது அதிக அக்கறை கொண்டுள்ளது. இம்மையிலும் மறுமையிலும் மனிதர்கள் வெற்றி பெற்று சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதையே இஸ்லாம் தன் இலக்காகக் கொண்டுள்ளது.

மனிதர்களின் வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களை மேற்கொண்டு பரஸ்பர உதவியாக ஒத்துழைப்பாக இருக்கும் அனைத்து சந்தர்ப்பங்களையும் இஸ்லாம் வரவேற்கின்றது, ஊக்குவிக்கின்றது. உதாரணமாக, மரங்கள் மனிதர்களின் உயிர்வாழ்வுக்கு அவசியமான ஒரு பௌதீகக் காரணியாகும். இதனால்தான், அவசியமின்றி கனிதரும் மரங்களை வெட்டுவதைத் தடைசெய்துள்ள இஸ்லாம் அத்தகைய மரங்களை உருவாக்குவதை ஊக்குவித்துமுள்ளது. மரங்களை நடுவதை ஒரு ஸதகாவெனப் பிரகடனப்படுத்தியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

مَا مِنْ مُسْلِمٍ يَغْرِسُ غَرْسًا إلاَّ كَانَ مَا أُكِلَ مِنْهُ لَهُ صَدَقَةً ، وَمَا سُرِقَ مِنْهُ لَهُ صَدَقَةً ، وَلاَ يَرْزَؤُهُ أَحَدٌ إلاَّ كَانَ لَهُ صَدَقَةً .

"ஒரு முஸ்லிம் ஒரு மரத்தை நட்டால், அதன் கனிகளை பிறர் சாப்பிடும் போது அது ஸதகாவாகும். அந்த மரத்தில் திருடப்பட்ட கனிகளும் ஸதகாவாகும். அந்த மரத்தின் கனிகளை பிறர் எடுத்துக் கொண்டு அதன் கனிகள் குறைந்தாலும் அதுவும்

ஸதகாவாகும். (மரம் நட்டவர் ஸதகாவின் நன்மைகளைப் பெறுவார்)” (முஸ்லிம்)

மேலும், அநியாயமாக மனித இரத்தம் சிந்தப்படுவதை இஸ்லாம் விரும்பவில்லை. ஆனால் தவிர்க்க முடியாத நிலையில் போர் மேகங்கள் சூழுமேயானால், அப்பொழுதும் கூட அப்பாவி மக்கள் கொல்லப்படக் கூடாது என்பதில் இஸ்லாம் உறுதியாகவுள்ளது. ஜிஹாத் - புனிதப் போர் என்றெல்லாம் கூறிக் கொண்டிருப்பவர்களும் சரி, பன்னாட்டுத் தலைவர்களும் சரி, இஸ்லாம் கூறும் இந்த மனிதாபிமானத்தையும் மானுட தர்மத்தையும் பின்பற்றினால் உலகம் எப்போதும் அமைதிப் பூங்காவாக மாறிவிடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எனவே, இஸ்லாம் மனிதாபிமானத்தை வலியுறுத்தும் உன்னதமான ஒரு மார்க்கம் என்பதை விளங்கி, இஸ்லாத்தின் கோட்பாடுகளையும் கட்டளைகளையும் பின்பற்றி, மற்றவர்களுக்கும் அதனைக் கற்றுக் கொடுக்க எல்லாம் வல்ல அல்லாஹ் எம்மனைவருக்கும் நல்லருள் புரிவானாக. ஆமீன்.

## *குத்பா:11*
## *ஹஜ்ஜின் ஆன்மீக இலௌகீகப் பயன்பாடுகள்*

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ .

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ . اَلْحَمْدُ لِلّٰهِ ، اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ، وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ ، وَالصَّلاَةُ وَالسَّلاَمُ عَلَى اَشْرَفِ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ سَيِّدِنَا مُحَمَّدْ رَسُوْلِ الْعَالَمِيْنَ ، وَعَلَى آلِهِ الطَّيِّبِيْنَ الطَّاهِرِيْنَ وَصَحَابَتِهِ الْمُنْتَجَبِيْنَ ، اَمَّا بَعْدُ ، فَقَدْ قَالَ اللهُ تَعَالَى فِى قُرْآنِهِ الْكَرِيْمِ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ، بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ ، « اِنَّ اَوَّلَ بَيْتٍ وُضِعَ لِلنَّاسِ لَلَّذِى بِبَكَّةَ مُبَارَكًا وَهُدًى لِلْعَالَمِينَ ، فِيْهِ آيَاتٌ بَيِّنَاتٌ مَقَامُ اِبْرَاهِيمَ وَمَنْ دَخَلَهُ كَانَ آمِنًا وَلِلّٰهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ اِلَيْهِ سَبِيلاً وَمَنْ كَفَرَ فَإِنَّ اللهَ غَنِيٌّ عَنِ الْعَالَمِينَ » صَدَقَ اللهُ الْعَلِيُّ الْعَظِيْمُ . قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ ، مَنْ حَجَّ فَلَمْ يَرْفُثْ وَلَمْ يَفْسُقْ رَجَعَ كَيَوْمِ وَلَدَتْهُ اُمُّهُ» صَدَقَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ .

*எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ். இறுதித் தூதர், அகில உலகுக்கும் அருட்கொடை, அண்ணலெம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்ந்த ஆருயிர் குடும்பத்தினர், அருமை ஸஹாபாக்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் என்றென்றும் உண்டாவதாக.*

அல்லாஹ் விதித்துள்ள கடமையை நிறைவேற்று முகமாக அவனில்லத்தில் வந்தமர்ந்திருக்கின்ற அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! அல்லாஹ் ஏவியவற்றை ஏற்று விலக்கியவற்றைத் தவிர்ந்து எல்லா நிலைகளிலும் அவனைப் பயந்து தக்வாவோடு வாழுமாறு ஆரம்பமாக எனக்கும் பின்னர் உங்களுக்கும் நான் நல்லுபதேசம் செய்கின்றேன்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

அல்லாஹ்தஆலா மனிதர்கள் மீது விதியாக்கியுள்ள அனைத்து கடமைகளும் அற்புதமானவையாகவும் ஆழ்ந்த தத்துவம் கொண்டவையாகவும் விளங்குகின்றன. இவ்வகையில் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றாகத் திகழும் ஹஜ் கடமையும் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்துள்ளது. குறிப்பிட்ட ஒரு காலத்தில், புனித இடமான மக்காவை நாடிச் சென்று இறைவனுக்காக என்ற தூய எண்ணத்துடன் நபியவர்கள் காட்டிய பிரகாரம் செய்கின்ற கடமைகளையே ஹஜ் என்பது குறிக்கின்றது.

புனித கஅபாவானது முஸ்லிம்களுக்கென அல்லாஹ்வினால் கிப்லாவாகத் தெரிவு செய்யப்பட்டு அவனாலேயே சங்கைப்படுத்தப்பட்ட புனித இல்லமாகும். வணக்க வழிபாடுகளுக்காக பூமியில் நிர்மாணிக்கப்பட்ட முதல் வீடு இதுவாகும். மேலும், இது ஏகத்துவத்தின் தந்தையான நபி இப்ராஹீம் (அலை) அவர்களது வீடாகும். அதிலே அவரின் நிர்மாணத்திற்கான சான்றுகள் பல நினைவுச் சின்னங்களாக உள்ளன. மனிதர்களுக்கு நேர்வழியை வழங்கக் கூடிய, பூமியில் உள்ள எல்லாப் பொருட்களுக்கும் அபயமளிக்கக் கூடிய எல்லா முஸ்லிம்களினாலும் முதன்மையாக நோக்கப்படுகின்ற வீடாகவும் இப்புனித மிகு கஅபா காணப்படுகின்றது.

அல்குர்ஆன் கூறுகின்றது:

اِنَّ اَوَّلَ بَيْتٍ وُضِعَ لِلنَّاسِ لَلَّذِى بِبَكَّةَ مُبَارَكًا وَهُدًى لِلْعَالَمِينَ ، فِيْهِ آيَاتٌ بَيِّنَاتٌ مَقَامُ اِبْرَاهِيمَ وَمَنْ دَخَلَهُ كَانَ آمِنًا وِلله عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ اِلَيْهِ سَبِيلاً وَمَنْ كَفَرَ فَإِنَّ اللهَ غَنِيٌّ عَنِ الْعَالَمِينَ .

“(இவ்வுலகில் அல்லாஹ்வை வணங்குவதற்கென) மனிதர்களுக்கு வைக்கப்பட்ட முதல் வீடு நிச்சயமாக பக்கா (மக்கா) வில் இருப்பதுதான். அது பரக்கத்துச் செய்யப்பட்டதாகவும், அகிலத்தார்க்கு நேர்வழியாகவும் இருக்கின்றது. அதில் தெளிவான அத்தாட்சிகளும் மகாமு இப்ராஹீமும் இருக்கின்றன. மேலும் எவர் அதில் நுழைகின்றாரோ அவர் அச்சமற்றவராகி விடுகின்றார். ஆகவே எவர் அங்கு யாத்திரை செல்லச் சக்தியுடையவராக இருக்கின்றாரோ அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று அவ்) வீட்டை ஹஜ் செய்வது கடமையாகும். எவரேனும் (இதை) நிராகரித்தால், அப்போது (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை. ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட்டும் தேவையற்றவன்” *(03: 96,97)*

*அபூதர் கிப்பரி (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் நபியவர்களிடம், “இப்பூமியிலே முதலாவது நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாயல் எது?” எனக் கேட்டேன். அதற்கு நபியவர்கள், “மஸ்ஜிதுல் ஹராம்” என்றார்கள். “அடுத்து எது?” எனக் கேட்டேன். அதற்கு நபியவர்கள், “மஸ்ஜிதுல் அக்ஸா” என்றார்கள். “இரண்டுக்கும் எத்தனை ஆண்டுகள் வித்தியாசம்?” எனக் கேட்ட போது, “40 ஆண்டுகள்” என்றார்கள். “பின்னர் எது நிர்மாணிக்கப்பட்டது?” எனக் கேட்டேன். அதற்கு நபியவர்கள், “நீர் எங்கு தொழுகையின் நேரத்தை அடைந்து கொள்கிறீரோ அங்கு தொழுது கொள்ளவும். அவை யாவும் பள்ளிவாயல்களாகும்” என்றார்கள் (புஹாரி, முஸ்லிம்)*

*அல்குர்ஆன் கூறுகின்றது:*

وَأَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلَّهِ

“ஹஜ்ஜையும் உம்ராவையும் அல்லாஹ்வுக்காகப் பூரணப்படுத்துங்கள்” *(02:196)*

*நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: “மனிதர்களே! நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது ஹஜ்ஜை கடமையாக்கியுள்ளான். ஆகவே நீங்கள் ஹஜ் செய்யுங்கள்” (முஸ்லிம்)*

எனவே, பிரயாணம் செய்வதற்கான உடல் ஆரோக்கியமும், பொருளாதார வசதியும், பிரயாணப் பாதை அச்சமற்றதாகவும் இருப்பின் ஒருவருக்கு ஹஜ் கடமையாகி விடும். அத்தகைய சந்தர்ப்பம் அமைகின்ற போது அவ்வருடமே ஒருவர் ஹஜ் செய்ய வேண்டும். ஹஜ் செய்யாது புறக்கணிப்பதோ, அல்லது அதனைத் தாமதப்படுத்துவதோ பாவமான ஹராமான விடயங்கள் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அதேவேளை, ஹஜ் என்பது பெரும் நன்மைகளையும் சிறப்புகளையும் எமக்கு அள்ளித் தருகின்ற அற்புதமான வணக்க வழிபாடாக விளங்குகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

وَالْحَجُّ الْمَبْرُورُ لَيْسَ لَهُ جَزَاءٌ اِلاَّ الْجَنَّةَ

“அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜுக்கு சுவனத்தைத் தவிர வேறு கூலியில்லை” (புஹாரி, முஸ்லிம்) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

مَنْ حَجَّ فَلَمْ يَرْفُثْ وَلَمْ يَفْسُقْ رَجَعَ كَيَوْمِ وَلَدَتْهُ اُمُّهُ

“யார் இல்லற உறவு கொள்ளாது, பாவங்கள் செய்யாது (பரிசுத்தமாக) ஹஜ் செய்கிறாரோ, அவர் அவரது தாய் அவரை ஈன்றெடுத்த நாளில் உள்ளவரைப் போன்று (அதாவது அன்று பிறந்த பாலகனைப் போன்று) திரும்புகிறார்” (புஹாரி, முஸ்லிம்) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

اَفْضَلُ الْجِهَادِ حَجٌّ مَبْرُورٌ

“ஜிஹாதில் மிகச் சிறந்தது அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜாகும்” (முஸ்லிம்)

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

ஹஜ் வணக்கமானது முஸ்லிம்களின் வருடாந்த சர்வதேச மாநாடாகும். இவ்வணக்கம் பல ஆன்மீக அம்சங்களினால் நிரப்பப்பட்டுள்ளது. ஒருவர் ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது

அவரிடம் அல்லாஹ் மீதான அச்சம் அதிகரிக்கின்றது. அவனுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற எண்ணம் மேலிடுகின்றது. பாவங்களுக்காக கவலையுறும் நிலை அவரிடம் உற்பத்தியாகிறது. அல்லாஹ்வால் விதியாக்கப்பட்ட தூதர் காட்டிய ஒரு புனிதக் கடமையை நிறைவு செய்கிறேன் என்ற பதிவு அவரிடத்தில் அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதுமுள்ள அன்பைப் பிரலாபிக்கச் செய்கின்றது.

இந்தப் புனிதக் கடமையை ஒழுங்காக நிறைவேற்றும் ஒருவரின் உள்ளத்தில் தீன் மீதுள்ள ஆர்வம் தூண்டப்படும். அதன் கிரியைகளைப் பேணுகின்ற துடிப்பு உற்சாகப்படுத்தப்படும். அந்தத் தூய்மையான பூமியின் மீதும் அதிலுள்ள ஞாபகப்படுத்தல்கள், ஹஜ் கிரியைகள், அதனால் ஏற்படும் உளமாற்றம் என்பனவே இந்த உன்னத நிலைக்கு மனிதனைக் கொண்டு வர வழிகோலுகின்றன.

இந்த ஹஜ்ஜின் மூலம் கூட்டுப்பலம் மற்றும் அதற்கான சிந்தனைகள் என்பன ஒவ்வொருவரது உள்ளத்திலும் பதியப்படுகின்றன. சகோதரத்துவ உணர்வு கட்டியெழுப்பப்படுகின்றது. மொத்தத்தில் தீமைகளுக்கு முன்னால் சுட்டெரிக்கும் தீப்பொறியாக அது மாற்றம் பெறுகிறது.

இந்தப் பாக்கியங்களை அடைந்து கொள்வதற்காக நபி இப்ராஹீம் (அலை) அவர்களைப் பார்த்து அல்லாஹ் கட்டளையிடுகின்றான்.

*“இன்னும் ஹஜ்ஜுக்கு வருமாறு மனிதர்களுக்கு நீர் அழைப்பு விடுப்பீராக. அவர்கள் நடந்தவர்களாக உம்மிடம் வருவார்கள், இன்னும் இளைத்த ஒட்டகங்களின் மீது வெகுதூரத்திலிருந்தும் (உம்மிடம்) அவர்கள் வருவார்கள்” (22:27)*

*அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!*

அல்லாஹ் விதியாக்கியுள்ள ஒவ்வொரு அமலும் ஒவ்வொரு வகையில் சிறப்புடையவையாக விளங்குகின்றன. தொழுகையை எடுத்துக் கொண்டால், அது உடலால் மட்டும் செய்ய முடியுமான அமலாகும். நோன்பும் அவ்வாறே உடலால் மட்டும் செய்ய முடியுமான அமலாகும். ஸக்காத்தை எடுத்துக் கொண்டால், அது பொருளால் மட்டும் செய்ய முடியுமான அமலாகும். ஆனால் ஹஜ்ஜை எடுத்துக் கொண்டால், அது உடலாலும், பொருளாலும் இணைத்து செய்யப்படக் கூடிய அமலாக விளங்குகின்றது. இதனடிப்படையில் ஹஜ்ஜுக்கு தனிப்பெரும் சிறப்பு இஸ்லாத்தில் காணப்படுகின்றது என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

ஹஜ் செய்வதன் முக்கிய நோக்கம் அல்லாஹ்தஆலாவின் கட்டளைக்குப் பூரணமாக அடிபணிதலைக் காட்டுதலேயாகும். நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வைத் தவிர வேறு எதையும் நேசிக்கவில்லை என்று கூறினார்கள். அதனைச் சோதிப்பதற்காக அல்லாஹ் அவர்களுடைய மகனை குர்பான் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிதல் வேண்டும் என்பதற்காக நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது அருமை மகனைத் தியாகம் செய்ய முன்வந்தார்கள். இத்தியாக நிகழ்ச்சியை நினைவுறுத்தி ஹஜ் செய்யப் போவோர் ஓர் ஆட்டுக் குட்டியைக் குர்பான் செய்கிறார்கள். அதனால் தியாக மனப்பான்மை ஏற்படுகின்றது.

எனவே, தூய எண்ணத்தோடும் நன்மையை நாடியும் ஹஜ் செய்து விட்டு வந்தவர்கள், அல்லாஹ்வுக்காகத் தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் தியாகம் செய்யப் பின்னிற்க மாட்டார்கள். தமது சகோதர முஸ்லிம்களுக்காகச் சிறு சிறு தியாகங்களைச் செய்வதற்கு ஏற்ற மனப்பக்குவம் அவர்களுக்கு ஏற்படுகின்றது. மேலும், அல்லாஹ்வின் வழியிலிருந்து நம்மைத் திருப்ப முனையும் உலக ஆசாபாசங்களை விரட்டியடிக்கும் மனப்பாங்கும் ஏற்படுகின்றது.

சமூக அடிப்படையில் நோக்கும் போது, ஹஜ் என்னும் இபாதத் இஸ்லாமிய சகோதரத்துவத்தை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டும் செயலாகும். உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வரும் முஸ்லிம்கள் எல்லோரும் ஒரே உடையிலே ஒரே மனதுடன் ஒன்றுகூடி ஒரே வணக்கத்தைப் புரிகிறார்கள். இன, மொழி, நிற, பிரதேச வேறுபாடு எதுவும் அங்கு காணப்படுவதில்லை. அல்லாஹ்தஆலாவின் வீடாகிய கஅபாவைக் கண்டவுடன் அல்லாஹ்வின் மீது பயபக்தி பன்மடங்கு அதிகரிக்கின்றது. எல்லோரும் அல்லாஹ்வின் அடியார்கள், எல்லோரும் இவ்வாறே இறுதிநாளில் சந்திப்போம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. செய்த பாவங்களுக்கெல்லாம் மன்னிப்புக் கேட்டு, அன்று பிறந்த பாலகனைப் போல் ஹஜ்ஜாஜிகள் மக்காவை விட்டுப் புறப்படுகிறார்கள். புனித மனிதனாகத் தம் ஊருக்குத் திரும்பும் ஹாஜிமார், தமது ஊர் மக்களை அல்லாஹ்வின் பக்கம் திருப்பும் பணியிலேயே முழுமையாக ஈடுபட வேண்டும். அது அவர்களது கடமையுமாகும்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

சக்தி படைத்த முஸ்லிம்கள் எல்லோர் மீதும் ஹஜ் கடமையாகும் என்பதில் எல்லா ஆலிம்களும் உடன்பட்டுள்ளனர். இந்த ஹஜ் வணக்கத்தைப் புறக்கணிப்பவன் இஸ்லாத்தின் வரையறையை விட்டும் வெளியேறி விடுகின்றான். ஹஜ் வணக்கத்தைப் புரியுமாறு அதனது நன்மைகளைச் சொல்லி ஆர்வமூட்டும் இஸ்லாம், அதனை விடுபவர்களுக்குரிய பயங்கரத்தையும் எடுத்துக் கூறியுள்ளது.

இப்னுஅப்பாஸ் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை நபியவர்கள் எங்களுக்குப் பின்வருமாறு உபதேசித்தார்கள்: “மனிதர்களே! நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது ஹஜ் செய்வதனை விதியாக்கியுள்ளான்” என்று கூறினார்கள். அப்போது எங்களுடன் இருந்த அக்ரா இப்னு ஹாபிஸ் என்பவர் எழுந்து, “அல்லாஹ்வின் தூதரே! அதனை நாம் ஒவ்வொரு வருடமும் செய்ய வேண்டுமா?” எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள், “நான் உங்களுக்கு ஆம் எனக் கூறினால், அது உங்கள் மீது கடமையாகி விடும். அப்படிக் கடமையானால் நீங்கள் அதனைச் செய்ய மாட்டீர்கள். நீங்கள் அதனைச் செய்ய முடியாமல் போய்விடுவீர்கள். எனவே, ஹஜ் என்பது ஒரு தடவைதான் (கடமையாகும்) யார் அதிகமாக செய்கிறாரோ அது அவருக்கு மேலதிக நன்மை பயக்கும் செயலாகும்” என்று பதிலளித்தார்கள். (முஸ்லிம்)

ஹஜ் வணக்கத்தை தாமதப்படுத்தக் கூடாது என்பது இஸ்லாம் கூறும் உபதேசமாகும். இதுபற்றி நபியவர்கள் குறிப்பிடும் போது, “யார் ஹஜ் செய்ய நாடுகிறாரோ அவர் அதனை அவசரப்படுத்திக் கொள்ளட்டும்” என்றார்கள். (அபூதாவுத்)

ஹஜ் செய்ய சக்தி படைத்திருந்தும் அதனைச் செய்யாமல் அலட்சியம் செய்வது யூதர்களுடையவும் நஸாராக்களுடையவும் செயல்களுக்கு ஒப்பானது. எனவே, யார் ஹஜ் செய்வதை மறுக்கிறாரோ, அவர் இறைநிராகரிப்பாளர் போன்றாவார். அவரை விட்டும் அல்லாஹ் தேவையற்றவன்.

எனவே, அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

ஹஜ் வணக்கமானது ஆன்மீக ரீதியாகவும் இலௌகீக ரீதியாகவும் மனிதர்களுக்குப் பயனளிக்கக் கூடிய மிகச் சிறந்த வணக்க வழிமுறையாக விளங்குகின்றது. ஒருவர் ஹஜ்ஜுடைய கிரியைகளின் போது அல்லாஹ்விடமிருந்து மன்னிப்பைப் பெறுவதற்கும் அவனது அருளைப் பெறுவதற்குமான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்கின்றார். மேலும் தனது சுய

ஆன்மீக சக்தியைப் பெறுவதற்கான வாய்ப்பையும் அடைந்து கொள்கின்றார். அத்தோடு அவர் அல்லாஹ்வுடனான நெருங்கிய தொடர்புக்கான வாய்ப்பையும் பெறுகின்றார். இஸ்லாமியத் தலைவர்கள் இச்சந்தர்ப்பத்தை ஏனையவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கானதொரு வாய்ப்பாகவும் கருத்துப் பரிமாற்றத்திற்கானதொரு சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்வதோடு, முஸ்லிம்களது பொது விவகாரங்கள் பற்றி விளங்கி முஸ்லிம் உலகுக்கான பொதுவான முறைமைகளை ஏற்படுத்தவும் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

ஹஜ்ஜின் போது ஹஜ்ஜாஜிகள் நான்கு விதமான அனுபவங்களைப் பெறுகின்றனர்.

முதலாவதாக, அவர்கள் நபி இப்ராஹீம் (அலை) அவர்களைப் பற்றியும் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களைப் பற்றியும் அவர்களது வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட ஞாபகச் சின்னங்களையும் காண்கின்றனர்.

இரண்டாவதாக, அவர்கள் ஹஜ்ஜுடைய நிலைப்பாட்டைக் காண்கின்றனர். இது அந்த இறைத்தூதர்களது முன்மாதிரிக்கும் உயிரோட்டத்திற்கும் சிறந்த அத்தாட்சியாக விளங்குகின்றது.

மூன்றாவதாக, முஸ்லிம்களென்ற வகையில் அவர்களது பொறுப்பையும் முஸ்லிம்களது முதல் வணக்கஸ்தலம் என்ற வகையில் மக்காவில் உள்ள கஅபாவில் ஒன்றுகூடுவதையும் காண்கின்றனர்.

இறுதியாக, அவர்கள் தம்முடைய பொறுப்புக்களும் ஒன்றிணைதலும் மேம்படுவதையும் அதன் விளைவாக ஏற்படும் தொடர்புகளையும் அதிற் தமது பங்களிப்பையும் காண்கின்றனர்.

ஹஜ்ஜுக் கிரியைகளின் போது நாம் பெறும் அனுபவங்களில் மிக முக்கிய இடத்தை வகிப்பது நபி இப்ராஹீம் (அலை) அவர்களது வாழ்க்கையும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட செயல்களுமேயாகும். எனவே, ஒரு ஹஜ்ஜாஜியின் அனுபவங்கள் அனைத்துக்கும் மையமாக அமைவது நபி இப்ராஹீம் (அலை) அவர்களது முன்மாதிரியும் அவர்களது பரம்பரை வழக்கங்களுமாகும். எனவேதான் அல்குர்ஆனில் காணப்படும் பொருத்தமான திருவசனமொன்று பின்வருமாறு கூறுகின்றது.

“(நபியே!) நீர் கூறும். (இவைகளைப் பற்றி) அல்லாஹ் உண்மையையே கூறியுள்ளான். ஆகவே, (விசுவாசிகளே! இவர்களைப் புறக்கணித்து விட்டு) நேரான வழியில் சென்ற

இப்ராஹீமுடைய மார்க்கத்தையே பின்பற்றுங்கள். அவர் இணைவைத்து வணங்குவோரில் இருக்கவில்லை. (இவ்வுலகில் இறைவனை வங்குவதற்கென) மனிதர்களுக்கு அமைக்கப்பெற்ற ஆலயங்களுள் முதன்மையானது நிச்சயமாக பக்காவில் (மக்காவில்) இருப்பதுதான். (அது) ஆசீர்வதிக்கப்பட்டதாகவும் அகிலத்தாருக்கு நேரான வழிகாட்டியாகவும் இருக்கின்றது" *(03:96,97)*

இத்திருவசனத்தினூடாக ஹஜ்ஜாஜிகள் காணும், உலகில் முதன் முதலாக மானிடர்களுக்கு அபயமளிக்கும் தளமாக அமைக்கப்பட்ட இடம் வெறுமனே கடந்த காலச் சரிதையை மாத்திரம் எடுத்துக் கூறும் ஒரு தலமன்று. மாறாக, அது மக்களுக்கோர் நேர்வழிகாட்டியாக அமைந்துள்ளது. இது எதிர்காலத்தைப் பற்றியதும் தொடர்ந்து நிலைத்திருக்கும் சம்பந்தத்தை எடுத்துக் காட்டும் ஒரு விடயமுமாகும். இப்ராஹீம் (அலை) அவர்களது மார்க்கத்துக்கு அது ஒரு வழிகாட்டியாகத் திகழ்கின்றது. அத்தோடு அதனைத் தொடர்ந்தும் நிலைத்திருக்கும் ஒரு மார்க்கமாகவும் பரிணமிக்கச் செய்கின்றது. இவ்வாறாக எதிர்காலச் சந்ததியினர் இப்ராஹீம் (அலை) அவர்களது வழியைப் பின்பற்றுமாறு கட்டளையிடப்படுகின்றனர். எனவே, ஹஜ்ஜின் போது ஹஜ்ஜாஜிகள் காணும் காட்சிகள் அல்லது அனுபவிக்கும் மரபு முறைகள் யாவும் அவர்களை இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தின் பால் இட்டுச் செல்வதற்கு ஏற்ற வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

அல்குர்ஆன் கூறுகின்றது:

"அன்றி (நபியே!) நீர் எங்கிருந்து புறப்பட்டாலும் (தொழும் போது) மஸ்ஜிதுல் ஹராமின் பக்கமே உம்முடைய முகத்தைத் திருப்புவீராக. (விசுவாசிகளே!) அவர்களில் வரம்பு மீறியவர்களைத் தவிர மற்ற மனிதர்கள் உங்களுடன் (வீண்) விவாதம் செய்ய இடங்கிடைக்காதிருக்கும் பொருட்டு, நீங்களும் எங்கிருந்த போதிலும் அதன் பக்கமே உங்களுடைய முகங்களைத் திருப்புவீர்களாக. அன்றி அவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். எனக்கே நீங்கள் பயப்படுங்கள். (கிப்லாவைப் பற்றிய இக்கட்டளை மூலம்) என்னுடைய அருட்கொடையை நான் உங்கள் மீது பூரணமாக்கி வைப்பேன். (அதனால்) நீங்கள் நேரான வழியை அடையலாம்" *(2: 150)*

முஸ்லிம்கள் தொழுகையின் போது முன்னோக்க வேண்டிய கிப்லாவாக கஅபா ஏற்படுத்தப்பட்டுள்ளதன் நோக்கம் மேற்கையோ கிழக்கையோ அல்லது வேறு எந்தத் திசையையோ

நோக்கித் தொழுவதால் எவ்வித விஷேடத்துவமும் ஏற்பட்டுவிடும் என்பதல்ல. ஆனால் அவர்கள் தமது பொறுப்புக்களையும் நடத்தையையும் ஒருமுகப்படுத்துவதற்காகவேயாகும். அவர்கள் தமது அவதானத்தை கஃபாவை மையப்படுத்தி நிலை நிறுத்துவதன் மூலம் தமது வாழ்க்கைக்கானதொரு தூண்டலைப் பெறுகின்றனர். இதுவே கஃபா ஏற்படுத்தப்பட்டமைக்கான அடிப்படை நோக்கமாகும். மேலும் அது ஒற்றுமை மற்றும் சகோதரத்துவம் பற்றிய செய்தியை உலகின் மூலை முடுக்குகள் தோறும் பரவவும் செய்கின்றது.

இவ்வுயர் தியாகமும் ஹஜ்ஜின் ஏனைய அனைத்து சடங்குகளையும் போன்று மனிதன் அல்லாஹ்வின்பால் தனது அடிபணிதலையும் அடக்க ஒடுக்கத்தையும் வெளிப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் ஒரு கிரியையாகும். அத்தோடு அது இப்றாஹீம் (அலை) அவர்களின் முன்மாதிரிகளை நினைவு கூர்வதற்கும் அவற்றைப் புதுப்பிப்பதற்கும் வழிகோலுகின்றது. அத்தோடு அது அவ்வுயர் திருத்தூதரது பாரம்பரியத்திலும் அன்னாரது கொள்கைகளிலும் எம்மை அவாவுறச் செய்கிறது. எனவே அது வெறுமனே வரலாறு சம்பந்தமான நிகழ்வுகளை நினைவ கூரும் ஒரு கிரியையல்ல. அது ஒவ்வொரு ஹஜ்ஜாஜியும் அல்லாஹ்வுக்குக் கடமைப்பட்டுள்ள, தனக்கு பயன்தரக்கூடிய கீழ்ப் படிதல், கடைப்பிடித்தல் போன்றவை சம்பந்தமான ஒழுக்க நெறி முறைகளைத் தெடர்ந்து நிலைத்திருக்கச் செய்வதோடு, அவற்றை உறுதிப்படுத்தவும் செய்கின்றது.

ஹஜ் கடமைகளால் நினைவு கூரப்பட்டு புத்துயிரளிக்கப்படும் மற்றொரு விடயமும் இத் தொடர்பில் காணப்படுகின்றது. அவ் விடயத்தின் முக்கியத்துவமும் எந்த அளவிலும் குறைந்ததொன்றல்ல. அது அல்லாஹ்வின் வல்லமையின் பூரணத்துவம் பற்றியதாகும். அல்லாஹ்வின் தெய்வீக வல்லமைக்கு எல்லையேயில்லை. எவ்வித மட்டுப்படுத்தலும் தடைகளும் அவனது வல்லமையையும் அதிகாரத்தையும் கட்டுப்படுத்துவதில்லை. அவனுடைய கட்டளைகளில் நீதியும் நியாயமும் திணிக்கப்படுவதில்லை. ஆனால் அவை அக்கட்டளைகளில் இருந்து தாமாகவே வெளிப்படுகின்றன. நல்லது எது? கட்டது எது? சரியானது எது? பிழையானது எது? என்பது அவனது கோட்பாடுகளிலிருந்தே தீர்மானிக்கப்படுகின்றன. ஆனால் அவன் அவற்றைத் தீர்மானித்தே வழங்குவதில்லை.

மேலும் ஹஜ்ஜாஜிகள் ஹஜ்ஜின் உண்மைத் தாத்பரியத்தை இங்கு அவதானிக்கின்றனர். உலகின் பல கோணங்களிலுமிருந்து பல

இலட்சக்கணக்கான ஆண்களும் பெண்களும் கஅபாவில் ஒன்று கூடுவதைக் காண்கின்றனர். இம் மக்களிடையே அவர்களின் மனிதத்துவத்தையும் ஏகனான இறைவன் மீது தமது பொறுப்பையும் அவர்களது நோக்கத்தையும் அவர்களது ஒரே வகையில் அமைந்துள்ள கிரியைகளையும் தவிர்த்து வேறு எதுவுமே பொதுத்தன்மையுடையதாக இல்லை. ஏனெனில், அவர்களைத் தமது இரத்த உறவுகள் கலாசாரம் சமுதாயம் போன்றவற்றினூடாக எடுத்து நோக்குமிடத்து ஒருவருக்கொருவர் புதியவர்களாகவும் நூதனமானவர்களாகவும் திகழ்கின்றனர். எனினும் அவர்கள் தமக்கிடையில் சகோதர பாசத்தைப் போன்று உறுதியானதொரு பந்தம் இருப்பதை உணர்கின்றனர். இங்கு அல்லாஹ்வுக்கும் மனிதர்களுக்குமிடையேயுள்ள சர்வ வல்லமை படைத்தவன் - அவனது அடிமை என்ற பந்தம் சர்வ வியாபக ரீதியாகக் காட்சியளிக்கின்றது. எனவே, அதன் பூரண நிலையில் அல்லாஹ்வின் கட்டளையைத் தவிர்ந்த வேறு எந்தவொரு சட்டமும் அங்கு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. வேறு எந்தவொரு சக்தியும் அங்கு இயங்குவதுமில்லை. எந்தவொரு போலியுமோ அரசனுமோ அங்கு அதிகாரம் செலுத்த முடியாது. அனைத்து ஹஜ்ஜாஜிகளும் எந்தவொரு இணைப்புமற்ற புகலிடங்களையும் பெற்ற அல்லாஹ்வின் சேவைக்குத் தம்மை அர்ப்பணிப்பதற்காகவே அங்கு கூடியுள்ளனர் என்ற உண்மையை அவ்விடத்தில் வெளிப்படுத்துகின்றனர். ஹஜ்ஜாஜிகள் ஹஜ்ஜுக் கடமைகள் முடிவுற்றதன் பின்னர் வீடுகளுக்குத் திரும்பிய பின்பும் இப்பொறுப்புக்களைக் கடைப்பிடித்தல் அவசியமாகும். அதிற் காணப்படும் கடமைகள் யாவும் மிக நுணுக்கமாக நிறைவேற்றப்படல் அவசியம்.

எனவே, அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! ஹஜ் இஸ்லாத்தில் முக்கியத்துவம் மிக்க பெரும் கடமை என்பதை உணர்ந்து கொள்வோமாக. அதனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோமாக. எல்லாம் வல்ல அல்லாஹ் எம்மனைவருக்கும் ஹஜ் செய்யும் பாக்கியத்தையும், செய்த ஹஜ் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜாக அமையும் பாக்கியத்தையும் தந்தருள்வானாக. ஆமீன்

# குத்பா:12
# இஸ்லாமியத் தண்டனைகளும் சமூகப் பாதுகாப்பும்

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ .

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ . اَلْحَمْدُ لِلّٰهِ ، اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ، وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ ، وَالصَّلاَةُ وَالسَّلاَمُ عَلَى اَشْرَفِ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ سَيِّدِنَا مُحَمَّدٍ رَسُوْلِ الْعَالَمِيْنَ ، وَعَلَى آلِهِ الطَّيِّبِيْنَ الطَّاهِرِيْنَ وَصَحَابَتِهِ الْمُنْتَجَبِيْنَ ، اَمَّا بَعْدُ ، فَقَدْ قَالَ اللهُ تَعَالَى فِى قُرْآنِهِ الْكَرِيْمِ اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ، بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ ، « يَااَيُّهَا الَّذِينَ آمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الْقِصَاصُ فِى الْقَتْلَى ، اَلْحُرُّ بِالْحُرِّ وَالْعَبْدُ بِالْعَبْدِ وَالْاُنْثَى بِالْاُنْثَى فَمَنْ عُفِيَ لَهُ مِنْ اَخِيهِ شَىْءٌ فَاتِّبَاعٌ بِالْمَعْرُوفِ وَاَدَاءٌ اِلَيْهِ بِاِحْسَانٍ »

صَدَقَ اللهُ الْعَلِيُّ الْعَظِيْمُ

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்ஹம்துலில்லாஹ். இறுதித் தூதர், அகில உலகுக்கும் அருட்கொடை, அண்ணலெம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்ந்த ஆருயிர் குடும்பத்தினர், அருமை ஸஹாபாக்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் என்றென்றும் உண்டாவதாக.

அல்லாஹ் விதித்துள்ள கடமையை நிறைவேற்று முகமாக அவனில்லத்தில் வந்தமர்ந்திருக்கின்ற அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே! அல்லாஹ் ஏவியவற்றை ஏற்று விலக்கியவற்றைத் தவிர்ந்து எல்லா நிலைகளிலும் அவனைப் பயந்து தக்வாவோடு வாழுமாறு

ஆரம்பமாக எனக்கும் பின்னர் உங்களுக்கும் நான் நல்லுபதேசம் செய்கின்றேன்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

இஸ்லாம் மார்க்கம் உலகிற்கு வழங்கப்பட்டுள்ள மிகப் பெரும் அருட்கொடையாகும். அல்லாஹ்வுடைய அனைத்து அருட்கொடைகளிலும் முதன்மையான அருட்கொடையாக அது விளங்குகின்றது. இந்த இஸ்லாம்தான் உலகில் ஒரு கட்டுக்கோப்பான வாழ்க்கைக்கு மனிதர்களை இட்டுச் செல்கின்றது. மனிதர்களின் மறுமை வாழ்வின் வெற்றியையும் தீர்மானிக்கின்றது. எனவே, இஸ்லாத்தைப் புறக்கணித்து விட்டு எந்தவொரு மனிதனும் இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெற முடியாது என்பது உறுதியான விடயமாகும்.

இவ்வகையில், இஸ்லாம் என்பது ஒரு பூரணமான வாழ்க்கைத் திட்டமாகும். அதிலுள்ள எல்லா சட்டங்களும் மனிதர்களுக்குத் தேவையானதும் பொருத்தமானதும் காலத்தால் அழியாததுமாகும். எல்லாக் காலத்துக்கும் பொருத்தமான, எல்லா மனிதர்களுக்கும் பொருத்தமான, எல்லாப் பிரதேசத்துக்கும் பொருத்தமான ஒரே மார்க்கம் இஸ்லாம்தான். எனவே, அதன் சட்டதிட்டங்களும் அற்புதமானவை, ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டவை. எல்லா வகையிலும் சாத்தியமானவை. இதனடிப்படையிலேயே இஸ்லாமிய தண்டனைச் சட்டங்களும் மனித சமூகத்துக்குப் பொருத்தமானவையாகவும் பாதுகாப்பானவையாகவும் அவசியமானவையாகவும் விளங்குகின்றன. மனித சமுதாயத்தைப் பாதுகாப்பதற்காகவே இஸ்லாமிய தண்டனைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

மனித குலம் படைக்கப்பட்ட காலத்திலிருந்தே குற்றங்களும் ஆரம்பமாகிவிட்டன. அது போல் குற்றங்களுக்கான தண்டனைகளும் பிறந்துவிட்டன. நபி ஆதம் (அலை) அவர்களையும் ஹவ்வா (அலை) அவர்களையும் அல்லாஹ்தஆலா படைத்து சுவர்க்க வாழ்வில் திளைக்க வைத்தான். அவர்களிருவரும் செய்யக் கூடாத நிபந்தனையொன்றையும் விதித்தான். அது மீறப்பட்ட போது அவ்விருவருக்கும் அல்லாஹ்தஆலா தண்டனையாக சொர்க்க வாழ்விலிருந்து உலக வாழ்வையளித்தான். அது போல ஷைத்தானைப் படைத்த அல்லாஹ்தஆலா தனது ஏவலுக்கு அடிபணியவில்லையென்ற

காரணத்தால், சபிக்கப்பட்டவனாக ஷைத்தானை ஆக்கினான். எனவே இறைவனின் கட்டளைகளுக்கு அடிபணியத் தவறும் போது தண்டனைகளையும் அனுபவிப்பதற்கு எவரும் பாத்திரமாகக்கூடிய நிர்ப்பந்தம் எப்போதோ ஏற்பட்டுவிட்டது. எனவே மனிதன் நல்வழியில் நடப்பதற்குரிய விதிமுறைகளை அல்லாஹ்தஆலா தனது றசூல்மார்களின் மூலம் தந்துள்ளான். அதேவேளை அவ்விதி முறைகள் மீறப்படும் போது அளிக்கப்பட வேண்டிய தண்டனைகள் எவை என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றான். அத்தண்டனைகளை கூட்டவோ குறைக்கவோ அல்லது காலத்துக்கேற்றவாறு மாற்றியமைக்கவோ மனிதனுக்கு எவ்வித அதிகாரமுமில்லை.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

குற்றமென்றாலென்ன? ஒரு தனிமனிதனோ அல்லது ஒரு குழுவினரோ பிறருக்குப் பாதகம் ஏற்படுத்தக்கூடிய காரியங்களைச் செய்வதோ அல்லது செய்யத்தூண்டுவதோ குற்றச்செயல்களாக கணிக்கப்படுகின்றன. ஒழுக்கமுள்ள சமூக வாழ்வுக்கு ஊறையோ, இழுக்கையோ ஏற்படுத்துவனவாக அமைந்தால் அவைகள் கண்டிக்கப்பட வேண்டியவையென்பதை நாம் ஒத்துக்கொள்கின்றோம். எனவே அத்தகைய குற்றச்செயல்கள் நடைபெறாமல் தடுப்பதற்காகவே தண்டனைகள் தேவைப்படுகின்றன.

குற்றச் செயல்கள் மற்றும் தண்டனைகள் சம்பந்தமாக இன்று உலகில் பல்வேறு விதமான விளக்கங்களும், நடைமுறைகளும் நிலவி வருகின்றன. குற்றங்கள் யாவும் மனிதனின் ஆசாபாச உணர்ச்சிகளினாலும், பலவீனங்களினாலும் ஏற்படுகின்றனவென்பது ஒரு சாராரின் கருத்தாகும். எனவே குற்றஞ் செய்தவனை அனுதாபத்துடன் நோக்கி அவனை சீர்திருத்தம் செய்வதற்குரிய முறைகளை ஏற்படுத்த வேண்டுமென அவர்கள் கூறுகின்றார்கள். அதை இன்னொரு முறையாகக் கூறினால் ஒரு தனி மனிதனின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய ஆட்சியாளனின் உரிமையை விட்டுக் கொடுக்க வேண்டுமென அதைச் சொல்லலாம். ஆகவே ஒரு தனி மனிதன் செய்யக்கூடிய குற்றங்களைத் தடுத்து நிறுத்தும் கடமையிலிருந்து பின்னிற்க வேண்டிய நிலைமை உருவாகின்றது.

ஒருவனுக்கு எவ்வளவுதான் ஆசாபாசங்களும், உணர்ச்சிகளும், இயல்பூக்கங்களும், பலவீனங்களும் இருந்தாலும் அவைகளைக் கட்டுப்படுத்தும் மனோநிலையும் இயற்கையாகவே

அமைந்துள்ளதென்பதை மறுப்பதற்கில்லை. சிறுவயதில் படுக்கையில் சிறுநீர் கழித்த ஒரு பிள்ளை பொறுப்புள்ள பெரியவனாகிய பின் அதிலிருந்து தவிர்ந்து கொள்வதை அவதானிக்கவில்லையா? எனவே கட்டுப்பாடான வாழ்க்கை முறையை நாட்டில் வளர்ப்பதில் கண்டிப்பான நடைமுறைகள் பின்பற்றப்படல் அவசியமானதாகும். தனி நபரின் சுதந்திரம் எனும் போர்வையில் தன்னிச்சையான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கும் நாடுகளில் இருந்து வரும் அவல நிலையை நாம் நிதர்சனமாகக் காண்கின்றோமே! அங்கு குற்றங்கள் குறைந்துள்ளனவா? நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையே காண்கின்றோம்.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளே உலகில் குற்றங்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளன என்பது இன்னொரு சாராரின் கூற்றாகும். அதனால், சோஸலிச, பொதுவுடமை நாடுகளில் பொருளாதார சமத்துவத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கூறுகின்றனர். அப்படியாயின் அந்நாடுகளில் குற்றங்கள் குறைந்துள்ளனவா? மறியற் சாலைகளும் நீதி மன்றங்களும் அங்கில்லையா? தண்டணைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லையா? சர்வ சாதாரணமாக குற்றங்களும், அதற்குரிய தண்டனை முறைகளும் நிலவி வருவதையே காண்கின்றோம்.

இச் சந்தர்ப்பத்தில் குற்றங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு இஸ்லாம் இயம்பும் நடைமுறைகள் என்னவென்பதை பார்ப்பது பொருத்தமுடையதாகும்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

மறுமைக்காக மனிதனைத் தயார்படுத்தும் உயர்ந்த நோக்கத்தைக் கொண்டுள்ள இஸ்லாம், இவ்வுலகில் மனித வாழ்வை ஒழுங்கமைப்பதில் மிகவும் கவனம் செலுத்துகின்றது. மனிதர்கள் தாம் விரும்பும் படியெல்லாம் வாழ்வதோ, தமது இச்சைகளின் தூண்டல்களுக்கேற்ப தமது நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வதோ கூடாதென இஸ்லாம் தடுத்துள்ளது. ஏனெனில், சில செயற்பாடுகள், குறித்த மனிதனுக்கும், அவனைச் சூழவுள்ள மனிதர்களுக்கும் தீங்காக அமைகின்றன. அவர்களது எதிர்காலத்தைப் பாழடிக்கின்றன. அவர்களது மறுமை வாழ்வைப் பயங்கரமாக்கி விடுகின்றன. எனவேதான், இஸ்லாம் மனிதர்களின் இம்மை வாழ்வைச் சீரமைத்து மறுமை வாழ்வை

மகிழ்ச்சிகரமானதாக மாற்றியமைப்பதில் அக்கறை கொண்டுள்ளது.

இஸ்லாம் சில செயற்பாடுகளைப் பாவச் செயல்களெனக் கூறி அவற்றைத் தடுக்கின்றது. சில செயற்பாடுகளை நற்செயல்களெனக் கூறி அவற்றை மேற்கொள்ளுமாறு தூண்டுகின்றது. உண்மையில், இஸ்லாம் தடுத்துள்ள ஒவ்வொரு செயலும் மனிதனுக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவைதான். அவ்வாறே இஸ்லாம் தூண்டியுள்ள ஒவ்வொரு செயற்பாடும் மனிதனுக்கு நன்மை தருபவைதான் என்பதை நாம் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தடுக்கப்பட்ட செயல்களைப் புரிவது பாவச் செயலாகும், அது ஒரு குற்றமாகும். இவ்வாறு குற்றம் இழைப்பவர்களுக்கு இஸ்லாம் தண்டனைகளைப் பிரகடனம் செய்துள்ளது. இத்தகைய தண்டனைகள் இரண்டு விதமாக அமைகின்றன. ஒன்று - இவ்வுலகில் வழங்கப்பட வேண்டிய தண்டனைகள். இரண்டு - மறுமையில் வழங்கப்படவுள்ள தண்டனைகள். இவ்வுலகில் வழங்கப்படும் தண்டனைகள் இங்குள்ள முஸ்லிம் சமூகத் தலைவர்களால் வழங்கப்படும். மறுமையில் வழங்கப்படவுள்ள தண்டனைகள் அல்லாஹ்வின் கட்டளையின் பேரில் மலக்குகளால் வழங்கப்படும்.

எல்லாக் குற்றங்களுக்கும் இவ்வுலகில் தண்டனைகள் வழங்க முடியாது. அதாவது இவ்வுலகில் தண்டனை வழங்குவதற்கெனக் குறிப்பிட்ட சில குற்றச் செயல்கள் இருக்கின்றன. செய்த குற்றத்திற்கு இவ்வுலகில் தண்டனை பெற்றுக் கொண்டால் அவர் மறுமையில் தப்பி விடுவார். இவ்வுலகில் அவருக்கு தண்டனை வழங்கப்படவில்லையெனில், அல்லது வழங்கப்படவிருந்த தண்டனையிலிருந்து அவர் தப்பித்து விட்டார் எனில், அவருக்கு மறுமையில் தண்டனை வழங்கப்படும். மதம் மாறுதல், கொலை செய்தல், விபசாரம் புரிதல், திருடுதல், அவதூறு கூறுதல், மதுவருந்துதல் போன்ற குற்றங்கள் இவ்வகையைச் சேர்ந்தவையாகும்.

அத்தோடு, சில குற்றச் செயல்களுக்கு அல்லாஹ் மறுமையிலேயே தண்டனை வழங்கவிருக்கின்றான். அத்தகைய குற்றச் செயல்களுக்கு இவ்வுலகில் முஸ்லிம் சமூகத் தலைவர்களால் தண்டனைகள் வழங்க முடியாது. தொழுகையைத் தவற விடுதல், ஸக்காத் கொடுக்க மறுத்தல், ஹஜ் செய்யாது தவிர்த்தல், புறம் கூறுதல், கோள் சொல்லுதல் போன்ற குற்றங்கள் இவ்வகையைச் சேர்ந்தவையாகும்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

இவ்வுலகில் மனிதர்கள் புரிகின்ற குற்றங்களுக்கான தண்டனைகள் பற்றி இஸ்லாம் தெளிவாகக் கூறியுள்ளது. உதாரணமாக, கொலைக் குற்றம் புரிந்தவர்களுக்கான தண்டனை பற்றி அல்குர்ஆன் கூறியுள்ளது. அதாவது, ஒருவன் இன்னொருவனை அநீதியாகக் கொலை செய்து விட்டால், அதற்குரிய தண்டனை அவனைக் கொலை செய்ய வேண்டும். அல்லது கொலை செய்யப்பட்டவரின் உறவினர்கள் விரும்பினால், அவனை மன்னித்து கொலைக்குப் பதிலாக அவனிடமிருந்து நட்ட ஈடு கோரலாம். அப்போது கொலையாளி அவர்கள் கேட்கும் நட்ட ஈட்டைக் கொடுக்க வேண்டும். இதுவே கொலைக்குரிய தண்டனையாகும். இது பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும் போது,

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الْقِصَاصُ فِى الْقَتْلَى ، اَلْحُرُّ بِالْحُرِّ وَالْعَبْدُ بِالْعَبْدِ وَالْاُنْثَى بِالْاُنْثَى فَمَنْ عُفِيَ لَهُ مِنْ اَخِيهِ شَىْءٌ فَاتِّبَاعٌ بِالْمَعْرُوفِ وَاَدَاءٌ اِلَيْهِ بِاِحْسَانٍ

“விசுவாசங் கொண்டவர்களே! கொலைக்காகப் பழிவாங்குவது உங்கள் மீது விதிக்கப்பட்டிருக்கின்றது. (ஆகவே, கொலை செய்தவன்) சுதந்திரமுள்ளவனாயின் சுதந்திரமுள்ளவனையே, அடிமையாயின் அடிமையையே, பெண்ணாயின் பெண்ணையே (நீங்கள் கொலை செய்து விடுங்கள். ஆயினும், பழிவாங்குவதற்குப் பதிலாக) ஒரு சிறிதேனும் அ(க்கொலையுண்ட)வனுடைய சகோதரர்களால் எவரும் மன்னிக்கப்பட்டு விட்டால், மிகக் கண்ணியமான முறையைப் பின்பற்றி (அவனைக் கொலை செய்யாது விட்டு) விட வேண்டும். (பழிவாங்குவதற்குப் பதிலாக கொலைசெய்தவன் ஒரு தொகையைத் தருவதாக ஒப்புக் கொண்டிருந்தால், அந்த நட்ட ஈட்டைத் தயக்கமின்றி) நன்றியோடு அவன் செலுத்திவிட வேண்டும்” (02:178)

இவ்வாறே, விபசாரத்திற்கான தண்டனை பற்றியும் அல்குர்ஆன் கூறுகின்றது. திருமணம் புரியாதவர்கள் விபசாரம் செய்தால், அவர்களுக்கு நூறு கசையடிகள் அடிக்க வேண்டும். திருமணம் புரிந்தவர்கள் விபசாரம் செய்தால், அவர்களைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும். அதாவது மரண தண்டனை விதிக்க வேண்டும்.

இவ்வாறு தண்டனை விதிக்கப்படுவதை முஸ்லிம்களில் ஒரு குழுவினர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது இஸ்லாமிய சட்டமாகும். அதேவேளை, விபசாரம் செய்தமை நிரூபிக்கப்படுவதற்கான சில நிபந்தனைகளும் இருக்கின்றன. அதாவது, விபசாரம் நடைபெறுவதை நேரடியாகக் கண்டதாக நான்கு ஆண்கள் சாட்சி கூற வேண்டும். அவ்விருவரும் கண் பார்வை தெளிவுள்ளவர்களாகவும் நீதமானவர்களாகவும் இருக்க வேண்டும் என்பவை அந்நிபந்தனைகளில் முக்கியமானவையாகும்.

திருமணம் புரியாதவர்கள் விபசாரம் செய்தால் அதற்கான தண்டனை பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும் போது,

اَلزَّانِيَةُ وَالزَّانِى فَاجْلِدُوا كُلَّ وَاحِدٍ مِنْهُمَا مِائَةَ جَلْدَةٍ وَلاَ تَأْخُذْكُمْ بِهِمَا رَأْفَةٌ فِى دِينِ اللهِ اِنْ كُنْتُمْ تُؤْمِنُونَ بِاللهِ وَالْيَوْمِ الْآخِرِ وَلْيَشْهَدْ عَذَابَهُمَا طَائِفَةٌ مِنَ الْمُؤْمِنِينَ .

“விபசாரம் செய்த பெண், விபசாரம் செய்த ஆண் - இவர்களில் ஒவ்வொருவரையும் நூறு கசையடி அடியுங்கள். மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால், அல்லாஹ் விதித்த இக்கட்டளையை நிறைவேற்றுவதில் அவ்விருவர்களுடைய விஷயத்தில் உங்களுக்கு இரக்கம் ஏற்படக் கூடாது. அவ்விருவர்களுக்கு(த் தண்டனையாக) வேதனை கொடுக்கும் சமயத்தில், விசுவாசிகளில் ஒரு குழுவினர் (அதற்குச்) சாட்சியாக அங்கு இருக்கவும்” *(24:02)*

இவ்வாறே திருட்டுக் குற்றத்திற்கான தண்டனை திருடியவரின் கையைத் துண்டிப்பதாகும். இது பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும் போது,

وَالسَّارِقُ وَالسَّارِقَةُ فَاقْطَعُوا اَيْدِيَهُمَا جَزَاءً بِمَا كَسَبَا نَكَالاً مِنَ اللهِ ، وَاللهُ عَزِيزٌ حَكِيمٌ

“ஆணோ பெண்ணோ எவர் திருடினாலும் இச்செயலுக்குத் தண்டனையாக அவர்களின் கைகளைத் துண்டித்து விடுங்கள். (இது) அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட எடுத்துக் காட்டான தண்டனையாகும். அல்லாஹ் மிகைத்தோனும் ஞானமுடையோனும் ஆவான்” *(05:38)*

இவ்வாறே அவதூறுக் குற்றத்திற்கான தண்டனை எண்பது கசையடிகளாகும். இது பற்றி அல்குர்ஆன் கூறும் போது,

وَالَّذِينَ يَرْمُونَ الْمُحْصَنَاتِ ثُمَّ لَمْ يَأْتُوا بِأَرْبَعَةِ شُهَدَاءَ فَاجْلِدُوهُمْ ثَمَانِينَ جَلْدَةً وَلاَ تَقْبَلُوا لَهُمْ شَهَادَةً أَبَدًا وَأُولَئِكَ هُمُ الْفَاسِقُونَ .

“எவர்கள் கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூறி, (அதற்கு வேண்டிய) நான்கு சாட்சிகளை அவர்கள் கொண்டு வராவிட்டால், அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். பின்னர் அ(த்தகைய)வர்கள் கூறும் சாட்சியத்தை எக்காலத்திலும் ஒப்புக் கொள்ளாதீர்கள். (ஏனெனில்) நிச்சயமாக அவர்கள் தீயவர்கள்” *(24:04)*

இவ்வாறு அல்லாஹ் விதியாக்கியுள்ள தண்டனைகள் மனித சமூகத்தை ஆபத்துகளிலிருந்தும் அழிவுகளிலிருந்தும் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சிறந்த மனிதாபிமான நடவடிக்கைகளாகும். இத்தண்டனைகள் மூலம் இஸ்லாம் எதிர்பார்ப்பது, இத்தகைய குற்றங்களையும் பாவங்களையும் முழுமையாகத் தவிர்ந்து கொண்டு வாழும் ஓர் ஆரோக்கியமான சமூகத்தின் தோற்றத்தையே என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதை விடுத்து, இவ்வாறு தண்டனை கொடுப்பதனால் அல்லாஹ்வுக்கு அதிலே எவ்வித நன்மையுமில்லை, தீமையுமில்லை.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

இவ்வுலகில் வழங்கப்படும் தண்டனைகளை விட மறுமையில் வழங்கப்படவுள்ள தண்டனைகள் மிகக் கொடியதும் கடுமையானதுமாகும். மனிதர்கள் இவ்வுலகில் வாழ்ந்த வாழ்க்கைக்கேற்ப அவர்களுக்கான தண்டனைகளும் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. மனிதன் அதிகமாகப் பாவம் புரிந்தவனாயிருந்தால், அவன் மரணித்ததும், அவனுக்கான

தண்டனை வழங்கல் கப்றிலிருந்து ஆரம்பமாகி விடுகின்றது. அதன் பின், மஹ்ஷர் வெளியில் நீண்ட காலம் தண்டனைகளை எதிர்கொள்வான். அங்கிருந்து சிராதுல் முஸ்தகீம் பாலத்தில் சில அச்சங்களை எதிர்கொண்டபின், நரகத்திற்கு அனுப்பப்படுவான். நரகம் அவன் உலகில் செய்த எல்லாத் தீங்குகளுக்குமான தண்டனைகளை அவனுக்கு வழங்கும். நரகின் வேதனைகளும் தண்டனைகளும் மிகக் கொடியவையாகும். அங்கு மனிதர்களை வேதனை செய்வதற்கென்றே பிரத்தியேகமான ஏற்பாடுகளை அல்லாஹ் வைத்திருக்கின்றான். நரகத்தில் மனிதர்களை வேதனைப்படுத்தும் முக்கிய கருவி நெருப்பாகும். அது தவிர, கொடிய விஷமுள்ள பல்வகை ஜந்துக்களும் அங்கே தயார்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

நரகைப் பற்றி அல்குர்ஆன் பல இடங்களில் பிரஸ்தாபிக்கின்றது. உதாரணமாக,

فَأَمَّا الَّذِينَ شَقُوا فَفِى النَّارِ لَهُمْ فِيهَا زَفِيرٌ وَشَهِيقٌ

“துர்ப்பாக்கியசாலிகள், நரகத்தில் (வீழ்த்தப்படுவார்கள், வேதனையைத் தாங்க முடியாது) அதில் அவர்கள் பெரும் கூச்சலிட்டுக் கதறுவார்கள்” (11:106)

اِنَّهُ مَنْ يَأْتِ رَبَّهُ مُجْرِمًا فَاِنَّ لَهُ جَهَنَّمَ لاَ يَمُوتُ فِيهَا وَلاَ يَحْيَى

“மெய்யாகவே எவன் குற்றவாளியாகத் தன் இறைவனிடம் வருகின்றானோ அவனுக்கு நிச்சயமாக நரகந்தான். அதில் அவன் சாகவும் மாட்டான். (சுகத்துடன்) வாழவும் மாட்டான். (வேதனையை அனுபவித்துக் கொண்டு குற்றுயிராகவே கிடப்பான்)” (20:74)

اِنَّ الَّذِينَ كَفَرُوا بِآيَاتِنَا سَوْفَ نُصْلِيهِمْ نَارًا ، كُلَّمَا نَضِجَتْ جُلُودُهُمْ
بَدَّلْنَاهُمْ جُلُودًا غَيْرَهَا لِيَذُوقُوا الْعَذَابَ ، اِنَّ اللهَ كَانَ عَزِيزًا حَكِيمًا .

“எவர்கள் நம்முடைய (இவ்வேத) வசனங்களை நிராகரித்தார்களோ அவர்களை நிச்சயமாக நாம் (மறுமையில்) நரகத்தில் சேர்த்து விடுவோம். அவர்கள், வேதனையைச் சதா

அனுபவிப்பதற்காக அவர்களுடைய தோல் கருகி விடும் போதெல்லாம் மற்றொரு புதிய தோலை மாற்றிக் கொண்டே இருப்போம். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தோனும் ஞானமுடையோனுமாயிருக்கின்றான்" (04:56)

يَوْمَ يُحْمَى عَلَيْهَا فِى نَارِ جَهَنَّمَ فَتُكْوَى بِهَا جِبَاهُهُمْ وَجُنُوبُهُمْ وَظُهُورُهُمْ هَذَا مَا كَنَزْتُمْ لِأَنْفُسِكُمْ فَذُوقُوا مَا كُنْتُمْ تَكْنِزُونَ .

"அந்நாளில், (பொன் வெள்ளியாகிய) அவற்றை நரக நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அவற்றைக் கொண்டு அவர்களுடைய நெற்றிகளிலும் விலாக்களிலும் அவர்களுடைய முதுகுகளிலும் சூடிட்டு, உங்களுக்காக நீங்கள் சேகரித்து வைத்திருந்தவை இவைதாம். ஆகவே, நீங்கள் சேகரித்து வைத்திருந்த இவற்றை சுகித்துப் பாருங்கள் என்று (அவர்களுக்குக்) கூறப்படும்" (09:35)

எனவே, அத்தகைய கொடிய நரகத்திற்குச் செல்லும் நிலையிலிருந்து அல்லாஹ்விடம் நாம் பாதுகாப்புத் தேடிக் கொள்ள வேண்டும்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

இஸ்லாமிய தண்டனை முறைகள் மிகவும் கடுமையானவை: பயங்கரமானவை: அநாகரீகமானவை என்ற குற்றச்சாட்டை இஸ்லாமிய விரோதிகள் முன்வைத்துப் பிரசாரம் செய்து வருகின்றனர். இக்குற்றச்சாட்டு போதியளவு ஆழமாக ஆராயாமல் கூறும் வீண் புகாரேயாகும்.

திருடியவனின் கையை வெட்டவேண்டுமென்பதும், விபசாரம் செய்தவர்களை கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்பதும், கசையடி கொடுக்க வேண்டுமென்பதும் இஸ்லாம் கூறும் தண்டனைகளில் கொடூரமானவைகளெனச் சுட்டிக் காட்டப்படுகின்றன. ஆனால், அத்தண்டனைகள் நிறைவேற்றப்படும் எல்லையை விளக்கிக் காட்ட அவர்கள் விரும்புவதில்லை. ஒரு குற்றவாளியை தண்டிப்பதற்கு முன்பு, செய்த குற்றத்துக்கு அவன் எவ்வளவு தூரத்துக்கு பொறுப்பாளியாக இருக்கின்றான் என்பதை இஸ்லாம் ஆராய்கின்றது. உதாரணமாக ஒருவன் திருடியதற்கு அவனுடைய உயிர் பிரியும் அளவுக்குள்ள பசியே காரணமாக இருக்குமென்றால்

அவனின் கையைத் துண்டிக்கும் தண்டனை அளிக்கப்படுவதில்லை. பாதுகாப்பாக வைக்கப்படாதிருந்த பொருளையோ, குறைந்த பெறுமதியுள்ள பொருளையோ களவாடியமைக்காகவும் கை துண்டிக்கப்படுவதில்லை. களவு செய்தவன் சித்த சுவாதீனமற்றவனாக, பருவமடையாதவனாக இருப்பினும் கை துண்டிக்கப்படுவதில்லை. களவு எடுத்தமை பற்றி, நன்னடத்தையுள்ள முஸ்லிம் ஆண்களிருவர் சாட்சி கூறமுடியாதிருக்கும் நிலையிலும் கை துண்டிக்கும் தண்டனை நிறைவேற்றப்படமாட்டாது.

விபசாரம் செய்த குற்றத்தில் சம்பந்தப்பட்ட இருவர் விவாகமானவர்களாக இருந்து, அவர்கள் குற்றம் புரிவதை நேரடியாகக் கண்ட உண்மையான நடத்தையுள்ள நால்வர் சாட்சி கூறினாலொழிய அவர்களைக் கல்லெறிந்து கொல்ல முடியாது.

இதுவரை கூறியவற்றிலிருந்து இஸ்லாம் கண்மூடித்தனமான தண்டனை வழங்க கட்டளையிடவில்லை என்பதனையும், தண்டனைகள் வழங்கப்படுவதற்கு முன் எச்சரிக்கையாக நன்கு விசாரித்துத் தெளிவாக்கப்படவேண்டுமென்பதனையும் நாம் அறிய வேண்டும்.

எவ்வித குற்றங்களுக்கும் தண்டனை வழங்கப்படும் பொழுது சாதி, நிற, குல கோத்திர வித்தியாசம் பாராட்டுவது இஸ்லாத்திலில்லை. குடி மக்கள் சகலருக்கும் இன வேறுபாடின்றிச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவர், யூதர், மஜூஸிகள் ஆகியோருக்கு அவரவர் சமய பிரமாணங்களின் படி அவ்வம்மதத்தைச் சேர்ந்தோரால் நீதி வழங்கப்படும். வித்தியாசமான இனங்களைச் சேர்ந்தோரிடையே ஏற்படும் சச்சரவுகள் இஸ்லாமிய பொதுச்சட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்படும்.

இஸ்லாமிய நீதி பரிபாலனத்தில் சாட்சிகளைச் சுத்தப்படுத்தல் என்னும் ஒரு அமைப்பு இருந்து வந்தது. இதனால் சாட்சிகளின் உண்மை நிலையை அறிந்துகொள்ளக் கூடியதாய் இருந்தது. ஒரு பெண் கற்பிழந்தாள் எனப் பழிசுமத்தப்பட்டு நிரூபிக்கப்படாவிடின் பழி சுமத்தினவனுக்குத் தண்டனை கொடுப்பது மாத்திரமின்றி அவனது சாட்சியும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

“சந்தேகத்தின் அடிப்படையில் தண்டனைகள் அளிப்பதை விலக்கிக் கொள்ளுங்கள்” என எங்கள் நபிகள் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறியதையும் நாங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமைப் பெரியோர்களே! சகோதரர்களே!

குற்றங்கள் ஏற்பட்ட பின் தண்டனைகளைத் தேடி ஆராய்வதை விட அந்த குற்றங்கள் நடைபெறாத ஒரு சமூக அமைப்பை உருவாக்குவதே இஸ்லாம் காணும் வழியாகும். குற்றங்களைத் தூண்டக் கூடிய சகல சூழ்நிலைகளையும் ஒழிக்கவேண்டுமென இஸ்லாம் கட்டளையிடுகின்றது. சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக ஸக்காத் என்ற கட்டாயக் கடமையை விதித்துள்ளது. அது சரியான முறையில் அமுல் செய்யப்பட்டபோது உமர் இப்னு அப்துல் அஸீஸ் (றழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஸக்காத் பெறுவதற்குத் தகுதியானவர்கள் இல்லாத நிலைமை ஏற்பட்டமை சரித்திரம் தரும் சான்றாகும்.

பாலியல் குற்றங்களைக் குறைப்பதற்காக உரிய வயதிலேயே திருமணம் செய்து கொள்வதையும், திருமணம் செய்ய வசதியில்லாதிருப்போருக்கு பைத்துல்மால் நிதியிலிருந்து உதவியளிப்பதையும் இஸ்லாம் விரும்புகின்றது. பலதார மணமுறைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. பாலியல் உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய காரணிகளை இஸ்லாம் தடை செய்துள்ளது. ஆண் பெண்கள் கலந்துறவாடுவது, ஆபாசமான இச்சைகளைத் தூண்டும் சினிமாப் படங்களைப் பார்ப்பது, பாடல்களை இசைப்பது, சமூக விரோத சக்திகளுக்குத் துணை போவது போன்ற தீய நடவடிக்கைகளை இஸ்லாம் தடைசெய்துள்ளது. இத்தகைய குற்றங்கள் நிகழாதிருக்கக் கூடிய முன் தடுப்பு முறைகளை அல்லாஹ்தஆலா அல்குர்ஆனிலே அருளியுள்ளான். அதேபோன்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தமது சொல் செயல்களால் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அவைகளை சமுதாயத்தில் முறையாகக் கடைப்பிடிக்கும் போது குற்றச் செயல்களெல்லாம் கணிசமாகக் குறைந்து போகும் என்பது உறுதியாகும்.

எனவே இஸ்லாமிய தண்டனை முறைகள் காட்டுமிராண்டித்தனமானவை அல்ல. தண்டனைகளுக்கு முன் மன்னிப்பே மிகவும் உயர்ந்தது என இஸ்லாம் கருதுகின்றது. அதன் பின்பே படிப்படியாக எச்சரிக்கை, கசையடி, சிறைத்தண்டனை என்பன விதிக்கப்படுகின்றன. முடியாத அளவிலேதான் கடுமையான குற்றமெனக் கண்டுபிடிக்கப்பட்டால் கரச்சேதமும், சிரச்சேதமும், கல்லெறிந்து கொல்லுதலும் அமுலாகும்.

இவ்வுயர்ந்த தண்டனைகள், நாம் நினைப்பது போன்று, நமது நாட்டில் நாளாந்தம் விதிக்கப்படும் சிறு சிறு தண்டனைகளைப்

போல் பரவலான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. உதாரணமாக, ஐக்கிய அரபுக் குடியரசில் களவுக்காகக் கை துண்டிக்கப்பட்ட தண்டனைகள் கடந்த நானூறு ஆண்டுகளில் ஆறு தடவைகள்தான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இத்தகைய தண்டனைகள் அச்சுறுத்தலுக்காகவே அன்றி அக்கிரமத்துக்காக அல்ல என்பதை நாம் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். குற்றம் புரிய முயலும் மக்களை அவர்களின் வழியில் செல்ல விடாமல் தடுக்க, அவர்களை நேர்வழிப்படுத்தவே இஸ்லாம் முயலுகின்றது

இஸ்லாமிய தண்டனை முறைகள் ஒழுங்காக அமுல் நடத்தப்படுமானால், உலகில் குற்றங்கள் நடைபெறுவது மிக அரிதாகவே நிகழும் என்பதில் ஐயமில்லை.

எனவே, இஸ்லாம் விதித்துள்ள குற்றவியல் சட்டங்கள், மனிதர்களின் வாழ்வை நெறிப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவுமே விதிக்கப்பட்டுள்ளன. அவை ஒரு சமூகத்தைப் பாதுகாப்பதை இலக்காகக் கொண்டுள்ளன. அவற்றை முழுமையாகவும் முறையாகவும் பேணி நடப்பதன் மூலம், உலகில் குற்றச் செயல்களற்ற சிறந்த சமூகமாக நாம் வாழ முடியும். அத்தகைய சிறப்பான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்துப் பயன்பெறுவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் எம்மனைவருக்கும் நல்லருள் புரிவானாக. ஆமீன்.